# ஏ.ஆர்.ரஹ்மான்



முன்னேர் பதிப்பகம்

என்.சொக்கன்

# A.R.Rahman

N.Chokkan

*Author E-mail :*
nchokkan@gmail.com

*Layout by*
***sukumar swaminathan***

முன்னேர் பதிப்பகம்

*Released In*
Attribution-NonCommercial-NoDerivatives 4.0 International

# ஏ.ஆர்.ரஹ்மான்


| | |
|---|---|
| 1 | ஜெய் ஹோ! |
| 2 | மெட்டுப் போடு |
| 3 | தெய்வம் தந்த பூவே |
| 4 | புத்தம் புது பூமி வேண்டும் |
| 5 | விடுகதையா, இந்த வாழ்க்கை? |
| 6 | விண்ணைத் தாண்டி வருவாயா? |
| 7 | சின்னச் சின்ன ஆசை |
| 8 | நேற்று இல்லாத மாற்றம் |


என்.சொக்கன்

# ஏ.ஆர்.ரஹ்மான்


| | |
|---|---|
| 9 | ஓர் அழகைக் கண்டேனே |
| 10 | ரங்கீலா ரே |
| 11 | தாய் மண்ணே வணக்கம் |
| 12 | இனி அச்சம், அச்சம் இல்லை |
| 13 | பூவுக்கென்ன பூட்டு |
| 14 | ஆயிரத்தில் நான் ஒருவன் |


என்.சொக்கன்

# 1

## ஜெய் ஹோ!

*‘And The Oscar Goes To …’*

அறிவிப்பாளர் ஒரு சின்ன இடைவெளி கொடுத்துவிட்டுத் தன் கையிலிருந்த உறையைப் பிரித்தார். அந்தச் சில விநாடிகளுக்குள், அந்த அரங்கில் காத்திருந்த ஐந்து இசை அமைப்பாளர்கள் தவிப்பின் உச்சத்திற்கே சென்றிருந்தார்கள்.

அந்த ஐந்து இசை அமைப்பாளர்களில் நான்கு பேர், ஏற்கெனவே பலமுறை ஆஸ்கர் விருதுக்குப் பரிந்துரை செய்யப்பட்டவர்கள். ஆனால் இதுவரை அவர்களுக்கு விருது கிடைத்திருக்கவில்லை.

ஆகவே, அவர்களைப்பொறுத்தவரை இது இன்னோர் ஆஸ்கர் முயற்சி. கிடைத்தால் சந்தோஷம், கிடைக்காவிட்டால் அடுத்த வருடம் பார்த்துக்கொள்ளலாம், அவ்வளவுதான்.

ஆனால், ஐந்தாவதாக உட்கார்ந்திருந்த அந்த இந்தியர், அவருக்கு இந்த அனுபவம் ரொம்பப் புதுசாக இருந்தது. எத்தனையோ வருடக் காத்திருப்புக்குப்பின் கிடைத்திருக்கிற முதல் வாய்ப்பு, இதைச் சரியாகப் பயன்படுத்திக்கொள்ளாவிட்டால், அப்புறம் இன்னொரு வாய்ப்புக்

கிடைக்குமோ கிடைக்காதோ, இறைவனுக்குதான் வெளிச்சம்.

அவர் பதற்றவில்லை, ஆனால் அந்தச் சில விநாடி மௌனம், சஸ்பென்ஸ் யாராலும் தாங்கமுடியாத அழுத்தமாக இருந்தது.

அமெரிக்காவில் அது ஞாயிற்றுக்கிழமை இரவு, இந்தியாவில் திங்கள்கிழமை காலை. பல லட்சம் இந்தியர்கள் அலுவலக வேலைகளைக்கூடத் தாற்காலிகமாக மறந்துவிட்டுத் தொலைக்காட்சிப் பெட்டிகளின்முன் தஞ்சம் புகுந்திருந்தார்கள்.

அவர்களில் பலருக்கு ‘ஆஸ்கர்’ என்கிற வார்த்தைக்கு அர்த்தம்கூடத் தெரியாது. ஆனால், என்றைக்காவது ஓர் இந்தியர் அந்த விருதை வாங்கிவிடவேண்டும் என்கிற எதிர்பார்ப்புமட்டும் அவர்களுக்கு

இருந்தது.

இந்தமுறை, அதற்கான வாய்ப்பு அதிகரித்திருக்கிறது. ஏ. ஆர். ரஹ்மான் என்கிற இந்தியர், மூன்று பிரிவுகளில் ஆஸ்கர் விருதுக்குப் பரிந்துரைக்கப்பட்டிருக்கிறார். மூன்றில் ஒன்றாவது கிடைத்துவிடாதா என்ன?

உண்மையில், அன்றைய இரவு ரஹ்மானுக்கு முன்பாகவே இன்னோர் இந்தியர் ஆஸ்கர் வென்றிருந்தார். அவர் பெயர் ரசூல் பூக்குட்டி.

ஆனால், நம் ஊர்ச் சினிமா ரசிகர்கள் மத்தியில் ரசூலைவிட, ரஹ்மான்தான் ரொம்பப் பிரபலம். அவர்மட்டும் ஆஸ்கர் ஜெயித்துவிட்டால், அது ஒட்டுமொத்தத் தேசத்தின் வெற்றியாகவே கருதப்படும்.

ரஹ்மானைப் பொறுத்தவரை,
இந்த விருது தனக்குக் கிடைக்குமா,
கிடைக்காதா என்பதை நினைத்து
அவர் பெரிதாகக் கவலைப்படவில்லை.
தனிப்பட்டமுறையில் எந்த முடிவையும்
மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்கிற
சமநிலையில்தான் அவர் இருந்தார்.

ஆனால் அதேசமயம், ஒருவேளை
இந்த விருது கிடைத்துவிட்டால்,
அது எப்பேர்ப்பட்ட சாதனையாக
இருக்கும் என்பதும் ரஹ்மானுக்கு
நன்றாகப் புரிந்திருந்தது. அந்த நேரத்தில்,
இந்தியத் திரைத்துறைப் பிதாமகர்
சத்யஜித் ரேவைப் பிரம்மிப்புடன்
நினைத்துக்கொண்டார் அவர்.

1992ம் ஆண்டு, சத்யஜித் ரேவுக்கு
கௌரவ ஆஸ்கர் விருது வழங்கப்பட்டது.
ஆனால், அப்போது அவர் உடல்நிலை
மிகவும் மோசமாகி, மருத்துவமனையில்

அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இதனால், ஆஸ்கர் கமிட்டி ரேயின் விருதைக் கொல்கத்தாவுக்கே அனுப்பிவைத்தது. மரணப் படுக்கையில் கிடந்தாலும், அந்த கௌரவத்தை ஏற்றுக்கொண்டபோது சத்யஜித் ரே முகத்தில் தெரிந்த அந்தப் பெருமிதம், ’இந்த நாளுக்காகதான் நான் வாழ்நாள்முழுக்கக் காத்திருந்தேன்’ என்று அவர் நெகிழ்ச்சியுடன் சொன்னது, எல்லாமே ரஹ்மானுக்கு நன்றாக நினைவிருந்தது.

ரஹ்மான் அப்போதுதான் சினிமாத்துறைக்குள் நுழைந்திருந்த நேரம். சத்யஜித் ரேக்குக் கிடைத்த அதே கௌரவம், பதினேழு ஆண்டுகள் கழித்துத் தனக்கும் கிடைக்கக்கூடும் என அன்றைக்கு அவர் கற்பனைகூடச் செய்திருக்க வாய்ப்பில்லை.

அதன்பிறகு, ரஹ்மான் ரொம்பத் தூரம் வந்துவிட்டார். பல தேசிய விருதுகள், உள்நாட்டு, வெளிநாட்டு கௌரவங்களையெல்லாம் பார்த்தாகிவிட்டது, இந்தச் சாதனைகளுக்கெல்லாம் முத்தாய்ப்பாக, ஆஸ்கர் கைக்கு எட்டிவிட்டது, வாய்க்கு எட்டுமா?

ஒருவழியாக, அறிவிப்பாளர் அந்த உறையைப் பிரித்துவிட்டார், உள்ளே இருக்கும் துண்டுக் காகிதத்தைக் கையில் எடுத்துப் பார்க்கிறார், குரலை உயர்த்தி, சிறந்த இசையமைப்பாளருக்கான ஆஸ்கர் விருதை அறிவிக்கிறார்:

‘ஏ. ஆர். ரஹ்மான் For Slumdog Millionaire’

ஹாலிவுட் கோடக் திரையரங்கம் நாசூக்காகக் கைதட்டுகிறது. ரஹ்மான்

மேடையேறி மெதுவாக நடக்கிறார், விருதைப் பெற்றுக்கொள்கிறார்.

அவருக்கு நன்றாகத் தெரியும். இங்கே அமெரிக்காவில் கேட்கிற கைதட்டல்களைப்போலப் பலமடங்கு உற்சாகம் இந்த விநாடியில் இந்தியா முழுக்கப் பொங்கிக்கொண்டிருக்கும். ரசிகர்கள்முதல் பிரபலங்கள்வரை எல்லோரும் ரஹ்மானுக்கு வாழ்த்து எழுதிக்கொண்டிருப்பார்கள்.

ஆனால், இவையெல்லாம் ரஹ்மானுக்கு முக்கியமாகத் தோன்றவில்லை. ஆஸ்கர் கௌரவத்தைவிட மிகப் பெரிய ஒரு சந்தோஷம் இப்போது அவருக்குக் கிடைத்திருந்தது. அமைதியான குரலில் பேசத் தொடங்குகிறார்.

’இங்கே வருவதற்குமுன்னால், ரொம்ப உற்சாகமாகவும்பயமாகவும் இருந்தது,

கடைசியாக நான் இப்படி உணர்ந்தது, என்னுடைய கல்யாணத்தின்போதுதான்'

அசட்டு ஜோக்தான். ஆனால் எல்லோரும் லேசாகச் சிரிக்கிறார்கள். ரஹ்மான் கொஞ்சம் ரிலாக்ஸாகி தொடர்ந்து பேசுகிறார்.

'நான் இந்த விருதை வாங்கும்போது அதை நேரில் பார்ப்பதற்கு, என்னை வாழ்த்துவதற்கு என் அம்மா இங்கே வந்திருக்கிறார், அதைத்தான் நான் பெரிய சந்தோஷமாக நினைக்கிறேன்'

தன்னுடன் பணிபுரிந்த இசைக் கலைஞர்கள், கவிஞர்கள், பாடகர்கள், இன்னும் ஸ்லம்டாக் மில்லியனர் படத்துடன் தொடர்புடைய எல்லோரையும் குறிப்பிட்டு நன்றி சொல்கிறார் ரஹ்மான். கடைசியாக, 'எல்லாப் புகழும் இறைவனுக்கே' என்று

சொல்லி முடிக்கிறார்.

ஆஸ்கர் மேடையில் ஒரு தமிழ்க் குரல்!

அன்றைக்குக் கோடக் அரங்கத்தில் கூடியிருந்த ஹாலிவுட் பெரும்புள்ளிகள் யாருக்கும் அந்தத் தமிழ் வாக்கியத்தின் அர்த்தம் புரிந்திருக்காது. ஆனால் தொலைக்காட்சி வழியே அந்தக் காட்சியைப் பார்த்துக்கொண்டிருந்த லட்சக்கணக்கான தமிழர்கள், அப்படியே நெகிழ்ந்துபோனார்கள்.

‘தமிழ்ப் பையன்’ என்கிற அடையாளத்துடன் மும்பைக்கு இசையமைக்கச் சென்ற ரஹ்மான், அங்கிருந்து ரொம்பத் தூரம் வந்துவிட்டார். ஆனால் இன்றைக்கும், அவர் தன்னுடைய வேர்களை மறக்கவில்லை.

சில நிமிடங்கள் கழித்து, ரஹ்மானுக்கு இன்னொரு ஆஸ்கர் விருது கிடைத்தது. இந்தமுறை, 'ஜெய் ஹோ' என்கிற பாடலுக்காக.

ஹாலிவுட்டில் பலருக்கு, ரஹ்மான் என்கிற பெயர் புதிது, அவருடைய இசை புதிது. ஆனால் ஒரே நாளில் இரண்டு ஆஸ்கர் விருதுகளைப் பெறுகிறார் என்றால், அவரிடம் ஏதோ விசேஷமாக இருக்கவேண்டும்தானே? எல்லோரும் ஆர்வமாக நிமிர்ந்து பார்க்கிறார்கள்.

தனது இரண்டாவது ஆஸ்கர் விருதைப் பெற்றுக்கொண்ட ரஹ்மான், தன்னுடைய தனிப்பட்ட வாழ்க்கையைப்பற்றி ஒரு வரி குறிப்பிட்டார்:

'வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும், என்முன்னே இரண்டு பாதைகள் இருந்தன, வெறுப்பு,

அல்லது அன்பு, நான் எப்போதும் அன்பைமட்டுமே தேர்ந்தெடுத்தேன், அதனால்தான் இன்றைக்கு இங்கே வந்து நின்றுகொண்டிருக்கிறேன்'

# 2

# மெட்டுப் போடு

‘ஏ. ஆர். ரஹ்மான்’ என்கிற அல்லா ரக்கா ரஹ்மானின் தாத்தா பெயர், கீழானூர் ராஜகோபால பாகவதர்.

இந்த இரண்டு பெயர்களையும் இணைத்துப் பார்ப்பது நமக்குக் கொஞ்சம் சிரமமாக இருக்கலாம். ஆனால், இவர்கள் இருவருக்கும் நடுவில் இருக்கும் ஒருவரை, அதாவது ரஹ்மானின் அப்பாவைப்பற்றிப்

பார்த்துவிட்டால் விஷயம் தெளிவாகிவிடும்.

ரஹ்மானின் அப்பா, ஆர். குலசேகர். திரை உலகில் ஆர். கே. சேகர் என்கிற பெயரில் பிரபலமானவர். இசைக் கலைஞர்கள், ரசிகர்கள் அவரை 'சேகர் மாஸ்டர்' என்று அன்புடன் அழைத்தார்கள், தரமான, அதேசமயம் எல்லோருக்கும் பிடிக்கக்கூடிய ஜனரஞ் சகமான பல பாடல்களைத் தந்து புகழ் பெற்றவர் அவர்.

கொஞ்சம் பொறுங்கள். ஆர். கே. சேகர் என்கிற பெயரில் ஓர் இசையமைப்பாளரை நாம் கேள்விப்பட்டதே கிடையாதே?

உண்மைதான். அதற்குக் காரணம், தமிழகத்தில் பிறந்து வளர்ந்த ஆர். கே. சேகருக்கு, கேரளத் திரை உலகம்தான்

ஆதரவு கொடுத்தது. அவர் பங்கு பெற்ற எல்லாப் படங்களும் மலையாள மொழியில் உருவானவைதான்.

ஆகவே. ஆர். கே. சேகரின் அற்புதமான பல பாடல்களை நீங்களும் நானும் கேட்டிருக்க வாய்ப்புக் குறைவு. ஆனால் நாற்பது வருடங்களுக்கு முன்னால் கேரள இசைப் பிரியர்கள் சேகரின் பாடல்களைக் கொண்டாடிக்கொண்டிருந்தார்கள், இன்றைக்கும் அவருடைய மெல்லிசைப் பாடல்களைக் கேட்டு மெய் மறக்கும் ரசிகர்கள் ஏராளம்.

ஆர். கே. சேகருக்கு இசை ஆர்வம் ஏற்படக் காரணம், அவருடைய தந்தை ராஜகோபால பாகவதர். சென்னை அருகே உள்ள கீழானூரைச் சேர்ந்த இவர், ஹரிகதை விற்பன்னர்.

’ஹரிகதை’ என்றால், பேச்சும் பாட்டும் இணைந்த ஒரு வடிவம், கோவில்கள், திருவிழாக்களின்போது ராமாயணம், மகாபாரதம் போன்ற புராண, ஆன்மிகக் கதைகளைச் சொல்வதற்கு இந்த வடிவத்தைப் பயன்படுத்துவார்கள். நாலு வார்த்தை கதை சொல்வது, அப்புறம் ஒரு பாட்டுப் பாடுவது, பிறகு மீண்டும் கதை, மீண்டும் பாட்டு என்று தொடர்வதால், கேட்கிறவர்களுக்கு அலுப்புத் தட்டாது.

அதேசமயம், ஹரிகதை சொல்கிறவர்களுக்கு வெறுமனே விஷயம்மட்டும் தெரிந்தால் போதாது. இசை ஞானம் வேண்டும். மணிக்கணக்காகப் பேசினாலும், சட்டென்று பாடத் தொடங்கும்போது சுருதி விலகாமல், கேட்கிறவர்கள் முகம் சுளித்துவிடாதபடி பார்த்துக்கொள்ளவேண்டும்.

கீழானூர் ராஜகோபால பாகவதருக்கு இந்த நுட்பங்களெல்லாம் தலைகீழ்ப் பாடம். அவருடைய ஹரிகதை நிகழ்ச்சிகளுக்கு மக்கள் கூட்டம் கூட்டமாக வந்து குவிந்தார்கள்.

ஏனோ, பாகவதர் தன்னுடைய மகன் குலசேகரை இந்தத் துறையில் ஈடுபடுத்தவில்லை. அவரைப் படிக்கவைத்து அரசாங்க உத்தியோகத்தில் சேர்த்துவிட்டார் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் எலக்ட்ரீஷியன் வேலை!

ஆனால், குலசேகருக்கு இந்த வேலையில் கொஞ்சம்கூட விருப்பம் இல்லை. அவருடைய ஆர்வம் முழுக்க இசையில்தான் குவிந்திருந்தது.

அப்பாவுக்கு ஹரிகதை என்றால், மகனுக்கு ஓர் இசை அமைப்பாளராகவேண்டும் என்கிற

ஆசை. அரசாங்க வேலையை ராஜினாமா செய்துவிட்டு, சினிமாவில் சேர்வதாக முடிவெடுத்துவிட்டார்.

ஆனால், திரைப்பட இசையில் எந்த முன் அனுபவமும் இல்லாத ஆர். கே. சேகர், நேரடியாக ஒரு படத்துக்கு இசை அமைப்பது என்றால் மிகவும் சிரமம். ஆகவே, முதலில் பிரபலமான ஓர் இசையமைப்பாளரிடம் வேலைக்குச் சேர்ந்து தொழில் நுணுக்கங்களைப் புரிந்துகொள்ளலாம், அதன்பிறகு சொந்தமாக இசையமைப்பதற்கான வாய்ப்புகளைத் தேடலாம் என்று முடிவு செய்துகொண்டார்.

அன்றைய கேரளாவின் புகழ் பெற்ற இசையமைப்பாளர்களில் ஒருவர், வி தட்சிணாமூர்த்தி. அவரிடம் உதவியாளராகச் சேர்ந்துகொண்டார் ஆர். கே. சேகர்.

ஏற்கெனவே நல்ல இசை ஞானம், ஆர்வம் கொண்டவராக இருந்த சேகருக்கு, தட்சிணாமூர்த்தியின்கீழ் வேலை செய்யும் அனுபவம் ஒரு மிகப் பெரிய உந்துதலாக அமைந்தது. கர்நாடக சங்கீதம், சினிமா இசை தொடர்பான பல அடிப்படை விஷயங்களை அவரிடம்தான் நன்றாகக் கற்றுக்கொண்டார் அவர்.

அதன்பிறகு கொஞ்ச காலம் தேவராஜன் மாஸ்டரிடம் உதவியாளராகப் பணிபுரிந்தார் ஆர். கே. சேகர். இந்தச் சில ஆண்டு சினிமா அனுபவம், அவரை ஒரு தேர்ந்த இசைக் கலைஞராக உருவாக்கியிருந்தது, அவருக்குள் இருந்த படைப்பு ஆர்வமும் கொஞ்சம் கொஞ் சமாக மெருகேறிக்கொண்டிருந்தது.

இந்தக் காலகட்டத்தில், கதைச்

சூழ்நிலைக்கு ஏற்ப மெட்டுப் போடுவது, அதற்குப் பொருத்தமான பாடல் வரிகளை எழுதி வாங்குவது, அதை யார் பாடினால் சிறப்பாக இருக்கும் என்று தேர்ந்தெடுப்பது, பாடல் வரிகளுக்கு இடையில் வருகிற இசைக் கோர்வைகளை உருவாக்குவது, அதனை முறைப்படி அந்தந்த வாத்தியக் கலைஞர்களுக்குப் பிரித்துத் தருவது, பிறகு அந்தத் தனித்தனி இசைகளைத் தொகுத்துக் கலவையாக்குவது, துல்லியமான ஒலியில் பதிவு செய்வது, புதிய பாடகர்கள், கவிஞர்கள், இசைக் கலைஞர்களின் திறமையை எடை போட்டுப் பொருத்தமான வகையில் பயன்படுத்திக்கொள்வது என்று பல விஷயங்களை நேருக்கு நேர் பார்த்துப் புரிந்துகொண்டார் சேகர்.

ஆனால், இன்னும் எத்தனை நாளைக்குதான் மாதச் சம்பளம்

வாங்கிக்கொண்டு மற்ற இசையமைப்பாளர்களின் நிழலில் ஒதுங்கி வாழ்வது? சொந்தமாக இசையமைக்கவேண்டும், மக்கள் ரசிக்கும்படியான பாடல்களைத் தரவேண்டும் என்று ஆசைப்பட்டார் சேகர்.

தட்சிணாமூர்த்தி, தேவராஜன் மாஸ்டரிடம் ஆர். கே. சேகர் வேலை பார்த்த நேரத்தில், பல பாடகர்கள், கவிஞர்கள், இயக்குனர்கள், தயாரிப்பாளர்கள், இசைக் கலைஞர்கள் அவருடைய திறமையை நேருக்கு நேர் பார்த்து வியந்திருக்கிறார்கள், ‘உங்களுக்கு நல்ல எதிர்காலம் இருக்கு’ என்று மனம் திறந்து பாராட்டியிருக்கிறார்கள்.

ஆனால், இதுபோன்ற பாராட்டுகளால் என்ன பெரிய பிரயோஜனம்? ஆர். கே. சேகரின் திறமை முழுவதும்

அந்த ரெகார்டிங் ஸ்டூடியோவுக்குள் முடிந்துபோய்விடும். வெளியே அவருடைய பெயர்கூட யாருக்கும் தெரியாது.

இந்த ஒரு காரணத்துக்காகதான், சொந்தமாக இசையமைக்கவேண்டும் என்று முடிவு செய்தார் ஆர். கே. சேகர். பல ஆண்டுகள் இசை உதவியாளராகப் பெற்ற அனுபவம் தனக்குக் கை கொடுக்கும் என்பது அவருடைய நம்பிக்கை.

1964ம் ஆண்டு, ஆர். கே. சேகர் இசையமைப்பாளராக அறிமுகமானார். அவருடைய முதல் படமான ‘பழசி ராஜா’வின் பாடல்களுக்குக் கேரள இசை ரசிகர்கள் மத்தியில் பிரமாதமான வரவேற்பு.

அந்தப் படத்தில் ஆர். கே. சேகரின்

மெட்டுகளுக்குப் பாடல் எழுதியிருந்தவர், புகழ் பெற்ற மலையாளக் கவிஞர் வயலார் ராமவர்மா. கூடவே, கே. ஜே. யேசுதாஸ், ஏ. எம். ராஜா, பி. சுசீலா, பி. லீலா, எஸ். ஜானகி என்று பிரமாதமான பாடகர், பாடகிகளின் கூட்டணி.

ஆனால், இதையெல்லாம்விட முக்கியம், தமிழரான சேகர், கேரள மண்ணின் தன்மையைப் புரிந்துகொண்டு அதற்கு ஏற்ற பாடல்களை உருவாக்கியிருந்தார். அதனால்தான், ‘பழசி ராஜா’வின் பாடல்கள் இன்றைக்கும் ‘க்ளாசிக்’குகளாகக் கொண்டாடப்படுகின்றன.

’பழசி ராஜா’ வெளியான அதே வருடம், ‘ஆயிஷா’ என்கிற இன்னொரு படத்துக்கும் இசையமைத்தார் ஆர். கே. சேகர். இந்தப் படத்தின் பாடல்களும் நன்கு பேசப்பட்டன.

சில மாதங்களுக்கு முன்புவரை இசை உதவியாளராக இருந்த ஆர். கே. சேகர், இப்போது ஒன்றுக்கு இரண்டு படங்கள் இசையமைத்துவிட்டார். இனிமேல் என்ன? வரிசையாகப் படங்கள் வந்து குவியும், அட்வான்ஸை வாங்கிப் போட்டுக்கொண்டு பேங்க் பேலன்ஸை உயர்த்தவேண்டியதுதானே?

சேகர் விஷயத்தில் அது நடக்கவில்லை. பழசி ராஜா, ஆயிஷா படங்களின் பாடல்கள் நன்கு பிரபலமானபோதும்கூட, அடுத்து வேலை செய்வதற்கு அவர் கையில் ஒரு படம்கூட இல்லாத நிலைமை.

இப்படி ஒரு வருடம், இரண்டு வருடம் இல்லை, முழுசாக ஏழு வருடம் காத்திருந்தார் ஆர். கே. சேகர். 1964ல் வெளியான 'ஆயிஷா'வுக்குப்பிறகு,

அவருடைய அடுத்த படம் 1971ல்தான் வெளியானது.

நடுவில் ஏழு ஆண்டுகள் சேகர் என்ன செய்தார்? வீட்டில் சும்மா உட்கார்ந்திருந்தாரா?

அதுதான் இல்லை, சேகர் சொந்தமாக இசை அமைத்துக்கொண்டிருந்த காலகட்டத்தைவிட, இந்த ஏழு வருடங்களில்தான் ரொம்ப பிஸியாக இருந்தார். அநேகமாக அன்றைய கேரளாவின் புகழ் பெற்ற தயாரிப்பாளர்கள், இசைக் கலைஞர்களெல்லாம் அவர் வீட்டு வாசலில் தேவுடு காத்திருந்தார்கள்.

இந்தப் பரபரப்புக்குக் காரணம், அதுவரை இசை உதவியாளராக, இசையமைப்பாளராக இருந்த சேகர், இப்போது இசை நடத்துனராக

மாறியிருந்தார்.

அதென்ன இசை நடத்துனர்?

ஆங்கிலத்தில் Music Conductor அல்லது Music Arranger என்று சொல்வார்கள். ஒரு பாடலை ஒழுங்குபடுத்தி, பிறகு அதைப் பிரித்துப் போட்டுக் குடலாப்ரேஷன் செய்து, பாடகர்கள், வெவ்வேறு இசைக் கருவிகளை வாசிக்கிறவர்களுக்குத் தேவையான குறிப்புகளைத் தனித்தனியே சரியானமுறையில் பிரித்துத் தந்து, எதை எப்படி எப்போது வாசிக்கவேண்டும் என்று சொல்லித்தந்து வழிநடத்துகிற நுட்பமான கலை அது.

அந்தக் காலத்தில் (ஏன், இந்தக் காலத்திலும்தான்) பெரும்பாலான இசையமைப்பாளர்களுக்கு மெட்டுப் போடமட்டும்தான் தெரியும். கதையைக்

கேட்பார்கள், சூழ்நிலையைப் புரிந்துகொள்வார்கள், அதற்கு ஏற்பப் பல்லவி, அனுபல்லவி, சரணம் என்று மெட்டு உருவாக்கி வாசித்துக் காண்பிப்பார்கள், இயக்குனருக்குத் திருப்தி வந்ததும் எழுந்து போய்விடுவார்கள்.

அதன்பிறகுதான், சேகர் போன்ற இசை நடத்துனர்களின் வேலை தொடங்குகிறது. இசையமைப்பாளர் தந்திருக்கும் மெட்டை அப்படியே வைத்துக்கொண்டு, அதற்கு முன்பாரம், பின்பாரமாகப் பொருத்தமான வாத்திய இசையை உருவாக்கிச் சேர்ப்பது, பாடலுக்குத் தேவையான கூடுதல் ஒலித் துணுக்குகளைச் சேகரித்துத் தொகுப்பது, பாடகர்களுக்கு மெட்டுச் சொல்லித்தருவது, அவர்கள் தவறாகப் பாடினால் திருத்திச் சரி செய்து, வாத்திய இசையுடன் சேர்த்துப் பதிவு செய்து,

அதில் வரக்கூடிய குளறுபடிகளைக் கேட்டுக் கவனித்து ஒழுங்குபடுத்தி, கடைசியாக கேஸட்டில் வரப்போகிற இறுதிப் பாடல் வடிவத்தை உருவாக்கி 'ஓகே' வாங்கும்வரை மொத்தமும் இவர்களுடைய பொறுப்புதான்.

இதைப் படிக்கும்போதே நமக்கு மூச்சு வாங்குகிறது. நிஜத்தில் இத்தனை வேலைகளையும் ஒருவர் தொடர்ந்து ஒவ்வொரு பாடலுக்கும் திரும்பத் திரும்பச் செய்யவேண்டுமென்றால், அவருக்கு எப்பேர்ப்பட்ட இசை ஞானம், கடின உழைப்பு, தொழில்மீதான அக்கறை, பக்தி எல்லாம் இருக்கவேண்டும் என்று யோசித்துக்கொள்ளுங்கள்.

அதனால்தான், அன்றைய மலையாளத் திரைப் பாடல் வட்டாரங்களில் ஆர். கே. சேகருக்குச் செம கிராக்கி.

முக்கியமான இசையமைப்பாளர்கள் எல்லோரும், தங்களுடைய பாடல்களை 'கண்டக்ட்' செய்வதற்கு சேகர்தான் வேண்டும் என்று பிடிவாதம் பிடித்தார்கள்.

சேகரின் திறமைக்கு, அவர் தொடர்ந்து சொந்தமாக இசையமைதிருந்தால் இன்னும் பிரபலமாக வந்திருப்பார், நிறையப் பெயரும் புகழும் பணமும் சம்பாதித்திருப்பார், அதற்கான வாய்ப்புகள் கிடைக்காததால், தன்னுடைய ஏமாற்றத்தை மென்று விழுங்கிக்கொண்டு, மற்றவர்களுடைய இசைக்கு அலங்காரம் செய்யும் பணியைத் தொடர்ந்தார்.

இந்த வேலை, சேகர் விழித்திருக்கும் நேரத்தையெல்லாம் விழுங்கிக்கொண்டது. கொஞ்சம்கூட ஓய்வு, உறக்கம் இல்லாமல் ஒரே நாளில் அடுத்தடுத்து நான்கைந்து

ஸ்டூடியோக்களுக்கு ஓடி, வெவ்வேறு இசையமைப்பாளர்களின் பாடல்களுக்கு மெருகேற்றிக்கொண்டிருந்தார் அவர்.

அப்போதும், அவர் தனக்குள் இருந்த படைப்பாளியைப் பட்டினி போட்டுவிடவில்லை. மீண்டும் சொந்தமாக இசையமைப்பதற்கான வாய்ப்புகளைத் தொடர்ந்து தேடிக்கொண்டிருந்தார்.

1971ம் ஆண்டு, ஆர். கே. சேகரின் இசையமைப்பில் சுமங்கலி, ஆனந்த சில்பங்கள், யோகமுள்ளவள் போன்ற படங்கள் வெளிவந்தன. அடுத்த வருடம் மேலும் ஐந்து படங்களுக்கு இசையமைத்தார் அவர்.

மெல்ல, கேரளாமுழுக்க ஆர். கே. சேகருடைய சங்கீதத்துக்குத் தலையாட்ட ஆரம்பித்திருந்தது.

கடைசியாக, அவருடைய திறமைக்குத் தகுந்த கௌரவம் கிடைத்துவிட்டது என்று சேகரின் நண்பர்கள் மிகவும் மகிழ்ந்தார்கள்.

சேகர் இதைப்பற்றிப் பெரிதாக அலட்டிக்கொள்ளவில்லை. அவர் வழக்கம்போல் ராத்திரி பகலாக வேலை செய்துகொண்டிருந்தார். இசை ஒன்றுதான் அவருக்குச் சாப்பாடு, தூக்கம், தவம், பொழுதுபோக்கு, பிரார்த்தனை என எல்லாமுமாக இருந்தது.

பல வருடங்களாக ஓய்வில்லாமல் உழைத்துக்கொண்டிருந்த சேகர், இந்த நேரத்தில்தான் முதன்முறையாகக் கொஞ்சம் தயங்கி நிற்க ஆரம்பித்தார். அதற்குக் காரணம், சோம்பல் இல்லை, வலி!

அது என்ன வலி என்று கேட்டால், சாதாரண வயிற்று உபாதை, அல்ஸர் என்று தொடங்கி, கேன்ஸர்வரை ஆளாளுக்கு வெவ்வேறு பதில் சொல்கிறார்கள். சேகரின் அதிவேக வளர்ச்சியைப் பிடிக்காத எதிரிகள் அவருக்குச் சூனியம் வைத்துவிட்டதாகச் சொல்கிறவர்களும் உண்டு.

இதெல்லாம் நிஜமோ, பொய்யோ தெரியாது, சேகர் அனுபவித்த வேதனைமட்டும் நிச்சயம் உடலளவில்மட்டுமில்லை, மனத்தளவிலும்.

காரணம், இப்போது அவர் தனி மனிதர் இல்லை. அவரை நம்பி ஒரு குடும்பம் இருந்தது, மனைவி, நான்கு குழந்தைகள் இருந்தார்கள்.

’நாளைக்கே எனக்கு ஏதாவது

ஆகிவிட்டால், என் மனைவி, பிள்ளைகளுடைய கதி என்ன ஆகும்?' கவலையுடன் யோசித்தார் ஆர். கே. சேகர். அதற்குள், வியாதி அவரை மல்லத் தின்றுகொண்டிருந்தது.

# 3

# தெய்வம் தந்த பூவே

முப்பத்தொரு வயதில், ஆர். கே. சேகருக்குத் திருமணமானது. அவருடைய மனைவி பெயர் கஸ்தூரி.

கிட்டத்தட்ட இதே நேரத்தில்தான், மலையாளத் திரையுலகில் சேகர் ஓர் இசையமைப்பாளராக அறிமுகமானார். அவர் உருவாக்கிய பாடல்கள் கேரளாமுழுவதும் ஒலிக்க ஆரம்பித்திருந்தன.

அதன்பிறகும், சேகருக்கு இசையமைக்கிற வாய்ப்புகள் வராவிட்டால்கூட, வெற்றிகரமான ஓர் இசை நடத்துனராகப் பரபரப்புடன்தான் இயங்கிக்கொண்டிருந்தார். ஆகவே, வருமானத்துக்குக் குறைச்சல் இல்லை.

ஒரே பிரச்னை, ஆர். கே. சேகர் வாங்குகிற சம்பளத்தையெல்லாம் அப்படியே வீட்டுக்குக் கொடுத்துவிடமாட்டார். புதுப்புது இசைக் கருவிகள், தொழில்நுட்ப சாதனங்களையெல்லாம் தேடிப் பிடித்து வாங்குவதில் அவருக்கு அப்படி ஓர் ஆர்வம்.

மற்ற இசையமைப்பாளர்கள், இசை நடத்துனர்களெல்லாம், அதே பழைய வாத்தியங்களை வெவ்வேறு கலவையில் சேர்த்துப் பாட்டு

பண்ணிக்கொண்டிருக்கையில், சேகர்மட்டும் தொடர்ந்து வித்தியாசமாகச் சிந்தித்துக்கொண்டிருந்தார். திரைப் பாடல்களில் அதற்குமுன்னால் யாரும் கேட்டிருக்காத புதுசுபுதுசான ஒலித் துணுக்குகளைக் கொண்டுவருவது, வித்தியாசமான குரல் கொண்ட பாடகர்களைப் பயன்படுத்துவது, வெளிநாடுகளில் அறிமுகமாகும் எலக்ட்ரானிக் சாதனங்கள், இசைக் கருவிகளையெல்லாம் உடனுக்குடன் இங்கே கொண்டுவருவது என்று அவருடைய உலகமே அலாதியானது.

இதனால், அன்றைக்குக் கேரளா, தமிழகத்தில், ஏன் ஒட்டுமொத்த இந்தியாவிலும்கூட ஆர். கே. சேகர் அளவுக்கு லேட்டஸ்ட் இசை விஷயங்களைப்பற்றித் தெரிந்தவர்கள், அவற்றைக் காசு கொடுத்து வாங்கிப் பயன்படுத்தியவர்கள்

வேறு யாரும் கிடையாது. லட்சம் லட்சமாகச் சம்பாதித்த பெரிய இசையமைப்பாளர்களிடம்கூட இல்லாத அளவுக்குப் பிரம்மாண்டமான இசைக் கருவிகளின் 'கலெக்ஷன்' அவர் வீட்டில் இருந்தது.

இதற்காகச் செலவிடும் தொகையைப்பற்றி சேகர் எப்போதும் கவலைப்பட்டது கிடையாது. பின்னாள்களில், சேகரை இழந்து தவித்த அவருடைய குடும்பத்துக்கு, அவர் சேர்த்துவைத்த இந்த இசைக் கருவிகள்தான் சோறு போட்டன.

திருப்பதியில் திருமணம் செய்துகொண்ட சேகர் கஸ்தூரி தம்பதியினர், சென்னையில் சேர்ந்து வாழ்ந்தார்கள். அவர்களுக்கு ஒரு மகள் பிறந்தாள். அவளுக்குக் காஞ்சனா என்று பெயர் சூட்டினார்கள்.

அந்த நேரத்தில், சேகர் தனக்கு ஒரு மகன் பிறப்பான் என்றுதான் ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தார். அது மகளாக மாறிவிட்டதில் அவருக்குக் கொஞ்சம் வருத்தம்.

ஆகவே, காஞ்சனா பிறந்தபின்னர், சேகரும் கஸ்தூரியும் சில ஜோதிடர்களை அணுகினார்கள், ‘எங்களுக்கு ஒரு மகன் பிறப்பானா?’ என்று கேட்டார்கள்.

அப்போது அவர்கள் சந்தித்த எல்லா ஜோதிடர்களும், சொல்லிவைத்தாற்போல் ஒரே விஷயத்தைதான் அடித்துச் சொன்னார்கள், ‘சீக்கிரத்திலேயே, உங்களுக்கு ஓர் ஆண் குழந்தை பிறக்கும், அதுவும் சாதாரணக் குழந்தை இல்லை, உலகப் புகழ் பெறப்போகும் இசைக் குழந்தை’

அவர்கள் சொன்ன அருள்வாக்கு, 1966ம் ஆண்டு ஜனவரி 6ம் தேதி பலித்தது. அன்றுதான், சேகர் கஸ்தூரி தம்பதியருக்கு ஒரு மகன் பிறந்தான்.

தன்னுடைய மகனுக்கு ‘திலீப்’ என்று பெயர் சூட்டினார் சேகர். அவன் வளர்ந்து ஒரு பெரிய இசை மேதையாக வளரப்போகிறான் என்பதில் அவருக்கு எந்தச் சந்தேகமும் இல்லை.

திலீப் பிறந்து ஆறு மாதங்கள் கழித்து, ஏதோ ஒரு பெரிய வியாதியால் அவதிப்பட்டான். அவனைப் பரிசோதித்த மருத்துவர்கள், என்ன நடக்கிறது என்றே புரியாமல் கையை விரித்துவிட்டார்கள்.

மகனுக்கு இப்படி ஒரு பிரச்னை, அவன் உயிருக்கே ஆபத்து என்றதும் சேகர் துடித்துப்போய்விட்டார். ஆனால்,

‘எப்படியாவது என் குழந்தையைக் காப்பாத்து’ என்று கடவுளிடம் பிரார்த்திப்பதைத்தவிர, அவரால் வேறு எதுவும் செய்யமுடியாத நிலைமை.

சேகர் இந்த மன அழுத்தத்தைத் தாங்கமுடியாமல் தவித்துக்கொண்டிருந்தபோதுதான், யாரோ அவருக்கு ஆறுதலாகச் சொன்னார்கள், ‘நீ கவலைப்படாதே சேகர், நம்ம திலீப் ஞானக் குழந்தை, அவனுக்கு ஒண்ணும் ஆகாது’

அவர் சொன்னதுபோலவே, திலீப் மரணத்தின் பிடியிலிருந்து எப்படியோ தப்பிப் பிழைத்துவிட்டான். அதன்பிறகு, சேகருக்கு அவன்மேல் நம்பிக்கை அதிகரித்துவிட்டது.

அதனால்தான், மற்ற குழந்தைகளெல்லாம் ஒரு வார்த்தை, இரண்டு வார்த்தை

என்று பேசப் பழகிக்கொண்டிருந்த நேரத்தில், சேகர் தன் மகனுக்கு ஹார்மோனியம் கற்றுக்கொடுக்க ஆரம்பித்தார்.

அப்போது திலீபுக்கு ஒழுங்காக நடக்கக்கூடத் தெரியாது. ஆனால் அப்பா ஏதோ சொல்லித்தருகிறார் என்பதால் ஆர்வத்துடன் உட்கார்ந்து கேட்பான்.

சிறுவன் திலீபுக்கு அந்த ஹார்மோனியம் ஒரு பெரிய புதிர்ப் பெட்டியாகத் தோன்றியது. எந்தெந்த கட்டைகளை அழுத்தினால் என்னமாதிரியான சத்தம் வரும் என்பதை ஒரு விளையாட்டுபோலக் கற்றுக்கொண்டுவிட்டான் அவன்.

அவ்வப்போது, திலீப் எல்லாவற்றையும் ஒழுங்காகத் தெரிந்துகொண்டிருக்கிறானா

என்பதை உறுதிப்படுத்துவதற்காக சேகர் அவனுக்குப் பரீட்சை வைப்பார். அவர் ஒவ்வொரு ஸ்வரமாகச் சொல்ல, அது ஹார்மோனியத்தின் எந்தக் கட்டையிலிருந்து வருகிறது என்று திலீப் வாசித்துக் காண்பிப்பான்.

இப்படித் தொடர்ந்து பல நாள் பயிற்சி எடுத்தபிறகு, திலீப் அந்த ஹார்மோனியத்தை நன்றாக வாசிக்கப் பழகிவிட்டான். அப்போது அவனுக்கு வயது, வெறும் நான்கு!

இந்த வயதுப் பிள்ளை ஹார்மோனியம் வாசிக்கிறது என்று சொன்னால், யாரும் நம்பமாட்டார்கள். அவன் நிஜமாகவே வாசித்துக் காண்பித்தபிறகுதான் ஆச்சர்யம் தாங்காமல் வாயைப் பிளப்பார்கள்.

உண்மையில், அப்போது திலீபுக்குத்

தான் வாசிப்பது ஹார்மோனியமா, தில்ரூபாவா, அதிலிருந்து வருவது கர்நாடக சங்கீதமா, ஹிந்துஸ்தானியா என்பதெல்லாம்கூட ஒழுங்காகத் தெரிந்திருக்கவில்லை. அப்பா ஏதோ விளையாட்டு சொல்லித்தந்திருக்கிறார், அதன்படி வாசித்துக் காண்பித்தால் அவர் சந்தோஷப்படுகிறார், அதைப் பார்த்து அவனுக்கும் சந்தோஷம். அவ்வளவுதான்.

ஒருநாள், பிரபல இசையமைப்பாளர் சுதர்ஸனைச் சந்திக்கச் சென்றிருந்தார் சேகர். கூடவே தன்னுடைய மகன் திலீபையும் அழைத்துப்போயிருந்தார்.

’பையன் யாரு? உன் மகனா?’ செல்லமாக திலீப் கன்னத்தில் தட்டியபடி விசாரித்தார் சுதர்ஸன்.

’ஆமா மாஸ்டர்’, சேகர் குரலில்

நிறையப் பெருமிதம், ‘இப்பவே இவன் ஹார்மோனியமெல்லாம் வாசிக்கறான், தெரியுமா?’

சுதர்ஸன் திலீபைக் கூர்ந்து பார்த்தார், ‘இந்தப் பொடிப் பையனா? ஹார்மோனியம் வாசிப்பானா? சும்மா கதை அளக்காதேப்பா’

’இல்லை மாஸ்டர், நிஜமாதான் சொல்றேன்’ என்றார் சேகர், ‘நீங்க வேணும்ன்னா அவனைக் கொஞ்சம் டெஸ்ட் பண்ணிப் பாருங்களேன்’

’சரி, வா பார்க்கலாம்’ சுதர்ஸன் மாஸ்டர் ஹார்மோனியத்தின் முன்னால் உட்கார்ந்தார். சுறுசுறுவென்று சிக்கலான ஓர் இசையை வாசித்துக் காண்பித்தார்.

திலீப் அசரவில்லை. சட்டென்று அதே வேகத்தில் அவர் வாசித்ததை மறுபடியும்

இசைத்துக் காண்பித்துவிட்டான்.

சுதர்ஸன் அசந்துபோனார், அப்போதும் தோல்வியை ஒப்புக்கொள்ள அவருக்கு மனம் இல்லை, 'பையன் சும்மா ஹார்மோனியக் கட்டைகளைக் கணக்குப் பார்த்து, மனப்பாடம் செஞ்சு வாசிக்கிறான்' என்று நினைத்துக்கொண்டார்.

சட்டென்று ஒரு வேட்டியை எடுத்து விரித்து ஹார்மோனியக் கட்டைகளின்மீது போட்டு மறைத்தார் சுதர்ஸன், 'இப்போ வாசி, பார்க்கலாம்'

அப்போதும் திலீப் ஒரு நிமிடம்கூடத் தயங்கவில்லை. கேட்ட இசை காதில் இருக்கிறது, ஹார்மோனியத்தின் ஜாதகம் விரல் நுனியில் இருக்கிறது, அப்புறம் என்ன கவலை? மளமளவென்று அதே சிக்கலான இசையை மீண்டும்

துல்லியமாக வாசித்து முடித்துவிட்டான்.

சட்டென்று எழுந்து திலீபைக் கட்டிக்கொண்டார் சுதர்ஸன், ‘இந்த வயசில் என்ன ஒரு ஞானம்! என்ன ஒரு லாகவம்! இந்தப் பையன் ரொம்பப் பெரிசாக வருவான் சேகர்’ என்று மனதார வாழ்த்தினார்.

அதன்பிறகு, சேகர் எங்கே போனாலும் திலீபைத் தன்னுடன் அழைத்துச் செல்ல ஆரம்பித்தார். ரெகார்டிங் ஸ்டூடியோ தொடங்கி, இசைக் கருவிகளை வாங்கும் கடைகள்வரை எல்லா இடங்களிலும் சேகர், திலீப் இருவரையும் ஒன்றாகப் பார்க்க முடிந்தது.

கிட்டத்தட்ட இதே நேரத்தில்தான், ஆர். கே. சேகர் மீண்டும் சொந்தமாகப் படங்களுக்கு இசை அமைக்கத் தொடங்கினார். அதுவரை அவர்

கற்பனையில்கூட நினைத்திருக்காத அளவுக்குப் பெயரும் புகழும் வருமானமும் குவிந்தது.

இத்தனைக்கும் காரணம், மகன் திலீப்தான் என்று நினைத்தார் சேகர். குடும்பமே அவனை ஓர் அதிர்ஷ்டக் குழந்தையாகக் கொண்டாடியது.

அப்போதெல்லாம், ஆர். கே. சேகர் வீட்டு வராண்டாவில் இசைக் கலைஞர்களும், திரைப்பட இயக்குனர்களும் அவரைப் பார்த்துப் பேசுவதற்காகக் காத்திருப்பார்கள். அவர்களையெல்லாம் சிறுவன் திலீப் ஆச்சர்யத்துடன் கவனிப்பான். பின்னாள்களில் அவனுக்குள் பிறந்த இசை ஆர்வத்துக்கு, இந்த பிரம்மிப்பும் ஒரு முக்கியமான காரணம்.

காஞ்சனா, திலீபைத் தொடர்ந்து,

கஸ்தூரிக்கு இரண்டு பெண் குழந்தைகள் பிறந்தார்கள்: பாலா, மற்றும் ரேகா.

இந்த நான்கு பேரில், திலீப்தான் சேகருடைய செல்லப் பிள்ளை. அதேசமயம், அவர் தனது மகள்களையும் ஒதுக்கிவிடவில்லை. எல்லோரையும் நன்றாகப் படிக்கவைக்கவேண்டும் என்று விரும்பினார்.

புகழ் பெற்ற நாடகக் கலைஞரான வொய். ஜி. பார்த்தசாரதி, சேகரின் நல்ல நண்பர். வொய்.ஜி.பி.யின் மேடை நாடகங்கள் சிலவற்றுக்குச் சேகர் இசையமைத்திருக்கிறார்.

அந்த நட்பின் அடிப்படையில். வொய்.ஜி.பி.யின் குடும்பத்தினர் நடத்திவருகிற பத்மாசேஷாத்ரி பால்பவன் பள்ளியில் காஞ்சனா, திலீப் இருவருக்கும் இடம் கிடைத்தது. இனிமேல் தன்

பிள்ளைகளின் படிப்பைப்பற்றி எந்தக் கவலையும் படவேண்டியதில்லை என்று நிம்மதியடைந்தார் சேகர்.

ஆனால், திலீபுக்கு ஆரம்பத்திலிருந்தே படிப்பில் ஆர்வம் இல்லை. எப்போதும் அப்பாவின் இசைக் கருவிகளில் எதையாவது திறந்து போட்டுப் பரிசோதிக்கவேண்டும் என்றுதான் அவனுடைய கைகள் பரபரத்துக்கொண்டிருந்தன.

கவனியுங்கள், கருவிகளை வாசிப்பதில் அல்ல, அவற்றைத் திறந்து பார்த்துப் புரிந்துகொள்வதுதான் திலீபுக்கு ஆசை.

ஏனெனில், நாலு வயதில் ஹார்மோனியம் வாசிக்கப் பழகிவிட்ட அவனுக்கு, இன்னொரு புதுக் கருவியை இசைக்கப் பழகிக்கொள்வது ஒரு பெரிய விஷயமே இல்லை. ஆனால், அந்தக் கருவிகளுக்குள்

இருக்கும் சூட்சுமம் என்ன? அதிலிருந்து எப்படி இசை வருகிறது? அதை மாற்றினால் என்னமாதிரியான சத்தம் வெளிப்படும்? இதையெல்லாம் தெரிந்துகொள்ளவேண்டும் என்று துடித்தான் திலீப்.

குறிப்பாக, அப்பா வாங்கி வைத்திருந்த கீ போர்ட், சிந்தசைஸர், மற்ற எலக்ட்ரானிக் கருவிகள் திலீபின் கவனத்தை ஈர்த்தன. விதவிதமான சத்தங்களை எழுப்பும் அந்தக் கருவிகளின் ரகசியம் என்ன? அதை எப்படித் தெரிந்துகொள்வது?

மகனின் துடிப்பை அறிந்த சேகர், அவனைச் செல்லமாகக் கண்டித்தார், ‘திலீப், இதையெல்லாம் நீ தொடக்கூடாது, ஒழுங்கா அக்காவோட உட்கார்ந்து பாடத்தைப் படி!’

படிப்பா? திலீபா? சான்ஸே இல்லை.

அப்பா வீட்டில் உள்ளவரை ஏதோ ஒரு பாடப் புத்தகத்தைப் புரட்டிக்கொண்டிருப்பான். அதன்பிறகு, துள்ளிக் குதித்து ஓடிவிடுவான். டிவியைச் சத்தமாக வைத்து ஏதாவது பாட்டுக் கேட்டுக்கொண்டிருப்பான்.

'ஏய் திலீப், நான் படிச்சுகிட்டிருக்கேன்ல? அந்த டிவியை ஆஃப் பண்ணு' என்று அதட்டுவார் காஞ்சனா.

திலீப் கேட்டால்தானே? அக்காவை வெறுப்பேற்றவேண்டும் என்பதற்காகவே தொலைக்காட்சியை இன்னும் சத்தமாக ஒலிக்கச் செய்வான் அவன்.

வெறுத்துப்போன காஞ்சனா, எப்படியாவது திலீபை அம்மா, அப்பாவிடம் மாட்டிவிடவேண்டும் என்று காத்துக்கொண்டிருந்தார். விரைவில், அதற்கான வாய்ப்புக்

கிடைத்தது.

அன்றைக்கு, எதேச்சையாக திலீப் அறைக்குள் எட்டிப்பார்த்தார் காஞ் சனா. அவன் ஓர் எலக்ட்ரானிக் இசைக் கருவியைப் பிரித்துப் போட்டு மேய்ந்துகொண்டிருந்தான்.

’பய வசமா மாட்டிகிட்டான்’ என்று துள்ளினார் காஞ்சனா, நேராகக் கஸ்தூரியிடம் ஓடினார், ‘அம்மா அம்மா, இந்த திலீப் என்ன பண்றான்னு வந்து பாரேன்’

அம்மா வந்து பார்ப்பதற்குள் அந்த எலக்ட்ரானிக் சாதனத்தைப் பழையபடி மாட்டிவிட்டான் திலீப். அதைத் தொட்டுப் பார்த்தால் அது எந்தப் பிரச்னையும் இல்லாமல் சமர்த்தாக இயங்கிக்கொண்டிருந்தது.

காஞ்சனா திகைத்துப்போனார். இப்போதுதானே இந்தச் சாதனம் துண்டு துண்டாகக் கீழே கிடந்தது. எப்படி மறுபடியும் அதை இணைத்து ஒழுங்காக இயங்கவைத்தான் இவன்? ஆச்சர்யத்தில் வாயடைத்து நின்றார் அவர்.

அக்காவும் தம்பியும் இப்படி அடிக்கடி சண்டை போட்டாலும், காஞ்சனா, திலீப் இருவரையும் ஒன்றாகவே இசை வகுப்புகளுக்கு அனுப்பிவைத்தார் சேகர். அவர் நினைத்ததுபோலவே, திலீப் ஓர் அசாதாரணமான இசை மாணவனாக வளர்ந்துகொண்டிருந்தான்.

1975ம் ஆண்டு, ஆர். கே. சேகர் 'பென்படா' என்கிற மலையாளப் படத்துக்கு இசையமைத்துக்கொண்டிருந்தார். அதற்குப் பாடல்களை எழுதிய கவிஞர் பெயர், பரணிக்காவு சிவக்குமார்.

அந்தப் படத்துக்கு, மொத்தம் நான்கு பாடல்கள் தேவைப்பட்டன. அவற்றில் மூன்று தயாராகிவிட்டது, கடைசிப் பாடலின் மெட்டுக்காக எல்லோரும் காத்திருந்தார்கள்.

அப்போது திலீபுக்கு வயது எட்டோ, ஒன்பதோ. அப்பாவுடன் ரெகார்டிங் பார்க்க வந்திருந்த அவன், ஹார்மோனியத்தில் விளையாட்டாக ஏதோ வாசித்துக்கொண்டிருந்தான்.

அன்றைக்கு திலீப் வாசித்த அந்த இசை, அங்கே இருந்த எல்லோரையும் கவர்ந்தது, ‘தம்பி, அதைக் கொஞ்சம் மறுபடி வாசிச்சுக் காட்டு’ என்று யாரோ கேட்டார்கள்.

திலீப் மறுபடியும் வாசித்தான், ‘இந்த ட்யூன் ரொம்ப நல்லா இருக்கே’ என்று

பாராட்டினார் அவர், 'பேசாம இதையே நம்ம படத்துக்குப் பாட்டா வெச்சுட்டா என்ன?'

ஆர். கே. சேகருக்கு உற்சாகம். அதுவரை எத்தனையோ பேருக்கு இசை நடத்துனராக வேலை பார்த்திருக்கும் அவர், அன்றைக்குத் தன்னுடைய சொந்த மகனின் மெட்டுக்குச் சங்கீத ஒப்பனைகள் செய்து அலங்கரித்தார். 'வெள்ளித்தேன் கிண்ணம் போல்' என்று தொடங்கும் அந்தப் பாடலை பி. ஜெயச்சந்திரன் பாடினார்.

இந்தச் சம்பவம், எவ்வளவு தூரம் உண்மை என்பதை யாரும் நிச்சயமாகச் சொல்லமுடியாது. ஆனால், அந்தப் படத்தில் பாடல் எழுதிய பரணிக்காவு சிவக்குமார், பிரபல பாடகர் கே. ஜே. யேசுதாஸ் இருவரும், 'வெள்ளித்தேன் கிண்ணம் போல்தான் ஏ. ஆர்.

ரஹ்மானின் முதல் பாட்டு, ஒன்பது வயதில் அவர் அந்தப் பாடலுக்கு இசை அமைத்தார்' என்று அடித்துச் சொல்கிறார்கள்.

இது உண்மையா, பொய்யா என்கிற சர்ச்சைக்குள் நாம் நுழையவேண்டாம். அந்தச் சின்ன வயதிலேயே திரை இசை மெட்டுகளை அடையாளம் காணக்கூடிய வல்லமை ரஹ்மானுக்கு இருந்திருக்கலாம் என்றுமட்டும் ஒரு வரி குறித்துவைத்துக்கொண்டு, மேலே போகலாம்.

இந்தக் கருத்தை உறுதிப்படுத்துவதுபோல இன்னொரு சம்பவம். இதுவும் கிட்டத்தட்ட அதே காலகட்டத்தில் நடந்துதான்.

அப்போது ஆர். கே. சேகரிடம் உதவி இசையமைப்பாளராகப்

பணிபுரிந்துகொண்டிருந்தவர்களில் ஒருவர், ஆகுல அப்பல ராஜு. பின்னர் ஏ. ஏ. ராஜு என்ற பெயரில் சில படங்களுக்கு இசையமைத்தவர், தமிழில் மிகப் பிரபலமான 'ஒரு தலை ராகம்' படத்தில்கூட இவருடைய இசைப் பங்களிப்பு இருந்திருக்கிறது.

இந்த ஏ. ஏ. ராஜு, ஒருமுறை சேகரைப் பார்க்கச் சென்றிருந்தார். அவரிடம் தன்னுடைய மெட்டு ஒன்றை ஹார்மோனியத்தில் வாசித்துக் காண்பித்தார்.

அவருடைய கெட்ட நேரம், வாசிக்கும்போது ஒரு சின்னத் தவறு செய்துவிட்டார். அதை சேகர் கண்டுகொண்டாரோ இல்லையோ, பக்கத்தில் உட்கார்ந்திருந்த ஒன்பது வயது திலீப் கவனித்துவிட்டான், சட்டென்று சிரித்துவிட்டான்.

சேகருக்குப் பெருமை தாங்கவில்லை, ‘குறும்புக்காரப் பையன், நீங்க ஒரு சின்னத் தப்பு செஞ்சதும், உடனே சிரிச்சு மானத்தை வாங்கறான், பாருங்களேன்’ என்று விளையாட்டாகச் சொன்னார்.

திலீபின் இசைப் பிரியம் அதிகரிக்க அதிகரிக்க, அவருக்குப் படிப்பில் ஆர்வம் குறைந்துகொண்டே போனது. ’ஒவ்வொரு வருடக் கடைசியிலும், திலீபுடைய பாடப் புத்தகங்களைப் பார்த்தால், அந்த வருடம் முழுக்க இதை யாராவது படித்தார்களா, இல்லையா என்று சந்தேகமே வரும், அந்த அளவுக்குப் புத்தம்புதுசாகப் பாடப் புத்தகங்களை வைத்திருப்பார்’ என்று குறும்பாகச் சிரிக்கிறார் அவரது அக்கா.

இத்தனைக்கும், வகுப்பில் திலீப் எப்போதும் முதல் வரிசையில்தான் உட்கார்ந்திருப்பான். யாருடனும்

அநாவசியமாகப் பேசமாட்டான், கலாட்டா, கிலாட்டா எதுவும் கிடையாது, ஆனால் படிப்பு என்று வந்துவிட்டால்மட்டும் அரை கிலோமீட்டர் தூரம் ஓடிவிடுவான்.

திலீபிடம் ஆசிரியர்கள் சந்தித்த இன்னொரு பிரச்னை, அவனுடைய நீளமான முடி. முகத்தை மூடும் அளவுக்குக் கிட்டத்தட்ட அரையடிக் கூந்தலையே வளர்த்துவைத்திருந்தான் அவன்.

அந்த முடியைச் சிறியதாக வெட்டிக்கொள்ளும்படி கேட்டுக் கேட்டு ஆசிரியர்கள் சலித்துப்போனார்கள். 'ம்ஹூம், முடியவே முடியாது' என்று மறுத்துவிட்டான் திலீப்.

சரி, முடி வெட்டிக்கொள்ளதான் விருப்பம் இல்லை. குறைந்தபட்சம் அதை

ஒழுங்காக வாரிக்கொண்டு பள்ளிக்கு வரலாம்தானே?

திலீப் அதையும் செய்யமாட்டான். தலை முடி முன்னால் விழுந்து கண்ணை மறைக்கப் பள்ளிக்கு வருவதுதான் அவனுக்குப் பிடித்திருந்தது.

இத்தனைக்குப்பிறகும், பத்மாசேஷாத்ரி பால்பவன் பள்ளி ஆசிரியர்கள் திலீபைச் சகித்துக்கொண்டிருந்தார்கள் என்றால், அதற்கு ஒரே ஒரு காரணம்தான், அவனுடைய இசை ஞானம்!

அப்போதெல்லாம், பள்ளியில் எந்த விழா கொண்டாடினாலும், ஆசிரியர்கள் முதலில் திலீபைதான் தேடுவார்கள். கலை நிகழ்ச்சிப் பட்டியலில் முதலாவதாக, திலீபின் இசை நிகழ்ச்சிதான் இருக்கும்.

ஆரம்பத்தில் ஹார்மோனியம் வாசிப்பது, கீபோர்ட் வாசிப்பது என்று சிறிய அளவில் தொடங்கிய திலீப், கொஞ்சம் கொஞ்சமாக அவன் கற்றுக்கொண்ட இசை சமாசாரங்களையெல்லாம் பள்ளி விழாக்களில் அரங்கேற்ற ஆரம்பித்தான். தன்னந்தனி ஆர்க்கெஸ்ட்ராவாக மேடையை ஆக்கிரமித்த அவன், சீக்கிரத்திலேயே அந்தப் பள்ளிமுழுக்க ஒரு 'குட்டி ஸ்டார்' ஆகிவிட்டான்.

இத்தனைக்கும், திலீப் அப்போது குட்டிப் பையன். கீபோர்டைத் தூக்கிச் சுமக்கக்கூட முடியாது. யாராவது ஆசிரியர்கள்தான் உதவி செய்வார்கள். ஆனால் மேடை ஏறி வாசிக்கத் தொடங்கிவிட்டால், அவனுக்கு இந்த உலகமே மறந்துவிடும்.

பள்ளி மேடைகளில் திலீப் வெறுமனே அடுத்தவர்களுடைய இசையை வாசித்துக்

காட்டுவதோடு நிறுத்திக்கொள்ளவில்லை. ஆசிரியர்கள் எழுதிய குட்டிக் குட்டிப் பாடல்கள், கதைகளுக்கெல்லாம் சொந்தமாக ட்யூன் போட்டு அசத்தினான்.

இந்த இசைத் திறமை காரணமாக, திலீபுக்குப் படிப்பு வரவில்லையே என்று யாரும் அவ்வளவாகக் கவலைப்படவில்லை. ஏதோ பாஸ் செய்கிற அளவுக்குப் படித்தால் போதும் என்று கண்டுகொள்ளாமல் இருந்துவிட்டார்கள்.

ஆர். கே. சேகருக்குத் தன்னுடைய மகனின் இசை ஞானத்தைப்பற்றி நிறையப் பெருமை உண்டு. ஆனால் அதேசமயம், திலீப் தன்னைப்போல் ஓர் இசையமைப்பாளராக வரவேண்டும், சங்கீதத்தை நம்பிப் பிழைக்கவேண்டும் என்றெல்லாம் அவர் வற்புறுத்தவில்லை,

‘தாராளமா ம்யூசிக் கத்துக்கோ, ஆனா ஸ்கூல்ல நல்லாப் படிக்கணும்’ என்றுதான் திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிருந்தார்.

இந்தக் காலகட்டத்தில்தான், சேகருக்கு அந்த மர்மமான வயிற்று வலி வந்தது. எவ்வளவோ வைத்தியம் பார்த்தும் அதனைக் குணப்படுத்த முடியவில்லை.

ஆர். கே. சேகரின் உடல்நிலை கெடுவதற்கு ஒரு முக்கியமான காரணம், அவர் ஓய்வில்லாமல் உழைத்துக்கொண்டிருந்ததுதான். வேளாவேளைக்கு ஒழுங்காகச் சாப்பிடாமல், ரொட்டியும் பன்னும் விழுங்கிக்கொண்டு டீயைக் குடித்து உயிர் வாழ்ந்தால், வயிறு வம்பு செய்யாமல் இருக்குமா?

சேகர் இந்த விஷயத்தை உணர்ந்தபோது,

ரொம்பத் தாமதமாகிவிட்டது. வயிற்றுப் பிரச்னை மிகவும் தீவிரமாகி, ஒவ்வொரு மருத்துவமனையாக ஏறி இறங்க ஆரம்பித்தார்.

’நான் சிறுவனாக இருந்த பருவத்தை நினைக்கும்போது, எனக்குச் சட்டென்று ஞாபகம் வருவது அந்த ஆஸ்பத்திரி வாசனைகள்தான்’ என்கிறார் ஏ. ஆர். ரஹ்மான். பல மருத்துவமனைகள், வெவ்வேறு டாக்டர்கள், விதவிதமான பரிசோதனைகள், ஊரில் ஒரு மருந்து, சிகிச்சை பாக்கியில்லை, ஆனாலும் ஆர். கே. சேகரின் பிரச்னை தீரவில்லை.

அந்த நிலைமையிலும், ஆர். கே. சேகரால் அமைதியாக ஓய்வெடுக்கமுடியவில்லை. அவர் ஏற்கெனவே ஒப்புக்கொண்டிருந்த படங்களுக்கு இசைக் கோர்ப்பு வேலைகளைச் செய்வதற்காக, சேகரின்

உதவியாளர்கள் மருத்துவமனைக்கே வந்துவிடுவார்கள், 'நீங்க நோட்ஸ் சொன்னாதான் சார் எங்க படம் ரிலீஸாகும்' என்று தயாரிப்பாளர்கள் கெஞ்சுவார்கள்.

வேறு வழியில்லாமல், மருத்துவமனைப் படுக்கையில் இருந்தபடி இசைக் குறிப்புகளை எழுதுவார் சேகர். வலி பொறுக்கமுடியாமல் ஒவ்வொரு நிமிடமும் அவருக்கு நரகமாகச் சென்றுகொண்டிருந்தது.

சேகர் வேதனையால் துடிப்பதைப் பார்த்து அவருடைய குடும்பம் மொத்தமும் மௌனமாக அழுதது. அதற்குமேல் அவர்களால் என்ன செய்யமுடியும்?

ஒருகட்டத்தில், மருத்துவர்களிடம் இருந்த நம்பிக்கை போய், தெய்வத்தை

நம்ப ஆரம்பித்தார்கள். ஜோதிடம், பூஜை, பரிகாரம் என்று ஏதேதோ முயற்சி செய்து பார்த்தார்கள், கிறித்துவப் பாதிரியார்கள் வந்து ஜெபம் செய்தார்கள், இஸ்லாமியப் பெரியவர்களையும் அழைத்து வந்து பிரார்த்தனை செய்தார்கள், எதற்கும் பலன் கிடைக்கவில்லை.

1977ம் ஆண்டு, நாற்பத்து இரண்டு வயதான ஆர். கே. சேகர் மரணமடைந்தார். அவருடைய குடும்பம், அடுத்து என்ன செய்வது என்று புரியாமல் திகைத்து நின்றது.

# 4

# யுத்தம் புது பூமி வேண்டும்

ஆர். கே. சேகர் மரணமடைந்தபோது, திலீபுக்கு வயது பதினொன்று.

அதுவரை, சேகரின் மனைவி கஸ்தூரிக்கோ, அவருடைய குழந்தைகளுக்கோ எந்தக் குறையும் இல்லை. பெரிதாகச் செல்வம் வந்து குவியாவிட்டாலும், இருப்பதை வைத்துச் சந்தோஷமாக வாழ்ந்துகொண்டிருந்தார்கள்.

ஆனால் இப்போது, சேகர் இறந்ததும் அவர்களுக்குக் கிடைத்துக்கொண்டிருந்த வருமானம் அப்படியே நின்று போனது. சேமிப்பு என்று கையில் பெரிதாக எதுவும் இல்லை. நான்கு பிள்ளைகளை வைத்துக்கொண்டு இனிமேல் குடும்பத்தை எப்படி நகர்த்துவது என்று புரியாமல் திணறினார் கஸ்தூரி.

ஆர். கே. சேகர் தன்னுடைய வாழ்நாளில் எத்தனையோ சினிமாக்காரர்கள், இசைக் கலைஞர்களைக் கை தூக்கி விட்டிருக்கிறார். அவர்களெல்லாம் இப்போது சேகர் குடும்பத்துக்கு உதவ முன்வந்தார்கள். சேகர், கஸ்தூரியின் உறவினர்கள், நண்பர்களும் தங்களால் முடிந்த உதவிகளைச் செய்தார்கள்.

ஆனால் இதெல்லாம், எத்தனை

நாளைக்குப் போதும்?
வாழ்க்கைமுழுக்க அடுத்தவர்களை
நம்பிக்கொண்டிருக்கமுடியுமா?

அப்போதுதான், சில உறவினர்கள் கஸ்தூரியை அழைத்துப் பேசினார்கள், ‘உன் வீட்டுக்காரரு விதவிதமா என்னென்னவோ இசைக் கருவியெல்லாம் வாங்கிப் போட்டிருக்காரே, அது அத்தனையும் இனிமே வீணாத்தானே கிடக்கப்போவுது? பேசாம ஒரு நல்ல ஆளாப் பார்த்து இதையெல்லாம் வித்துடு, அதுல கிடைக்கிற பணத்தை பேங்க்ல போட்டா, வர்ற வட்டியில நீங்க எல்லோரும் நிம்மதியா உட்கார்ந்து சாப்பிடலாம்’

எதார்த்தமான, நல்ல யோசனைதான். ஆனால் ஏனோ, கஸ்தூரிக்கு இதில் சுத்தமாக விருப்பம் இல்லை.

ஏனெனில், அவருடைய கணவர் சேகர், காசு, பணம் சேமிக்கவில்லை. இந்த இசைக் கருவிகள்மட்டும்தான் அவருடைய சொர்க்கமாக இருந்தன, இது ஒன்றுதான் அவர் இந்த உலகத்தில் விட்டுச் சென்றிருக்கிற ஒரே சொத்து, இதைப்போய் இன்னொருவருக்கு விற்கமுடியுமா? கஸ்தூரி பிடிவாதமாக மறுத்துவிட்டார்.

'ஏம்மா, உனக்கென்ன பைத்தியமா பிடிச்சிருக்கு? இனிமே இந்த இசைக் கருவிகளையெல்லாம் வெச்சுகிட்டு நீ என்ன செய்யப்போறே?'

கஸ்தூரி அவர்களுக்குப் பதில் சொல்லி நேரத்தை வீணடிக்கவில்லை. நேராகத் தன் மகனிடம் வந்தார், 'அப்பாவோட தொழிலை நீ தொடர்ந்து செய்யணும் திலீப், பெரிய இசையமைப்பாளரா, திறமைசாலியாப் பெயர் வாங்கணும்,

அதுதான் என்னோட ஆசை,
உங்க அப்பா இப்போ உயிரோட
இருந்திருந்தா, அவரும் இதையேதான்
சொல்லியிருப்பார்'

திலீப் அம்மாவின் விருப்பத்தை
மறுக்கவில்லை. அவர்
கேட்டுக்கொண்டபடி இசைத்துறையில்
தீவிர கவனம் செலுத்த
ஒப்புக்கொண்டான்.

ஆர். கே. சேகர் இருந்தவரை,
இசை என்பது திலீபுக்கு ஒரு
சுவாரஸ்யமான விளையாட்டுமட்டுமே.
அதை ஒழுங்காக விளையாடினால்,
அப்பாவிடம், அவருடைய
நண்பர்களிடம், பள்ளி ஆசிரியர்கள், சக
மாணவர்களிடமெல்லாம் கைதட்டல்
வாங்கலாம். அவ்வளவுதான்.

இதனால், பள்ளியில் ஆனா, ஆவன்னா,

அல்ஜீப்ரா, ஜியாக்ரஃபியெல்லாம் படிப்பதுபோல, இசையையும் ஒரு பாடமாக நினைத்துதான் அவன் கற்றுக்கொண்டிருந்தான். மற்றபடி அதில் சாதனை செய்யவேண்டும், சரித்திரம் படைக்கவேண்டும், சம்பாதிக்கவேண்டும் என்றெல்லாம் அவன் கனவுகூடக் கண்டது இல்லை.

ஆனால் இப்போது, நிலைமை மாறிவிட்டது. அதுவரை பொழுதுபோக்காக இசையைத் தொட்டுக்கொண்டிருந்த திலீப், இப்போது அதனை ஒரு தொழிலாகச் செய்யவேண்டிய கட்டாயத்துக்குள் தள்ளப்பட்டான்.

முக்கியமான விஷயம், இப்போதும் திலீபுக்கு இசைமீது ஆழ்ந்த பற்றுதலெல்லாம் வரவில்லை. குடும்பத்தின் நிலைமை சரியில்லை,

வீட்டுச் செலவுகளைச் சமாளிப்பதற்காக, அவன் வேலைக்குப் போகவேண்டும், ஒரு கடையில் பொட்டலம் மடிப்பதுபோல, ஹோட்டலில் தோசை, இட்லி பரிமாறுவதுபோல, இசையும் அவனுக்கு ஒரு தொழில், காசு சம்பாதிப்பதற்கான ஒரு வாய்ப்பு. அவ்வளவுதான்.

’பாவம் திலீப், இந்தச் சின்ன வயதில் அவன் இப்படி வேலைக்குப் போய்ச் சம்பாதிக்கவேண்டியிருக்கிறதே’ என்று பலர் பரிதாப்பட்டு உச்சுக்கொட்டினார்கள். ஆனால் திலீப்மட்டும் அப்படி நினைத்து வருத்தப்படவில்லை, சேகருக்குப்பிறகு வீட்டில் அவன்மட்டும்தான் ஆண் பிள்ளை என்பதால், குடும்பத்துக்காகச் சம்பாதிப்பதை அவன் ஒரு கஷ்டமாகவோ, சுமையாகவோ நினைக்கவில்லை, தன் வயதுக்கு மீறிய முதிர்ச்சியுடன் அந்தப் பொறுப்பை

ஏற்றுக்கொண்டான்.

அது சரி, வெறும் பதினொரு வயதான ஒரு சிறுவனுக்கு இசைத்துறையில் என்ன வேலை கிடைக்கும்?

ஆர். கே. சேகர் தன் வீட்டில் ஒரு மினி ஸ்டூடியோவே உருவாக்கிவைத்திருந்தார். ஏகப்பட்ட இசைக் கருவிகள், நவீன எலக்ட்ரானிக் சாதனங்கள், பாடல் பதிவுக்கான உபகரணங்கள் அவரிடம் இருந்தன.

இதனால், சேகரின் மறைவுக்குப்பிறகு மற்ற இசையமைப்பாளர்கள் இந்தக் கருவிகளை வாடகைக்குக் கேட்டார்கள், கஸ்தூரியும் சம்மதித்தார்.

ஆனால், இதன்மூலம் அவருக்குக் கிடைத்த வாடகைத் தொகை ரொம்பக் குறைவு. அதை வைத்துக்கொண்டு

குடும்பச் செலவுகளையெல்லாம் அவரால் சமாளிக்கமுடியவில்லை.

இதனால், அப்பாவின் இசைக் கருவிகள், மற்ற சாதனங்களோடு திலீபும் ரெகார்டிங் ஸ்டூடியோக்களுக்குப் பயணம் செல்ல ஆரம்பித்தான். அங்கே உள்ள இசை அமைப்பாளர்கள், அவர்களுடைய உதவியாளர்கள், இசை நடத்துனர்களையெல்லாம் சந்தித்து அவர்களிடம் பணிவாகப் பேசுவான், 'எனக்கு இந்தக் கருவிகளை நன்றாக வாசிக்கத் தெரியும், தயவுசெய்து ஒரு வாய்ப்புக் கொடுங்கள்' என்று கேட்பான்.

ஆனால், இப்படி ஒரு சின்னப் பையன் கேட்கிறான் என்பதற்காக, எல்லோரும் உடனடியாக ஒப்புக்கொண்டுவிடமாட்டார்கள். சில நாள்கள் வாய்ப்புக் கிடைக்கும், வேறு பல நாள்கள் அதிர்ஷ்டம் இருக்காது,

ஏமாற்றத்துடன் வீடு திரும்புவான்.

ஆர். கே. சேகரின் பழைய நண்பர்கள் சிலர், திலீப் இப்படி வேலை தேடி அலைகிற விஷயத்தைக் கேள்விப்பட்டார்கள். அவர்களுடைய சிபாரிசு காரணமாக, திலீபுக்குத் தொடர்ந்து பல வாய்ப்புகள் கிடைக்க ஆரம்பித்தன.

இசைக் கருவிகளை வாசிப்பதுமட்டுமில்லை, எலக்ட்ரானிக் சாதனங்களைக் கையாள்வது, ஒலிப்பதிவுக் கருவிகளை இயக்குவது, அதில் ஏதாவது பிரச்னை வந்தால் தோண்டித் துருவி ரிப்பேர் பார்த்துச் சரி செய்வது என்று பல விஷயங்களில் திலீப் கில்லாடியாக இருந்தான்.

இந்த விஷயம் வெளியே பரவியதும், பல இசையமைப்பாளர்கள், அவர்களுடைய

நடத்துனர்கள் திலீபை ஆளுக்கு ஒரு பக்கமாக இழுக்க ஆரம்பித்தார்கள். ஒருகாலத்தில் அவன் மற்றவர்களிடம் வாய்ப்புக் கேட்டுக்கொண்டிருந்த நிலைமை மாறி, இப்போது மற்றவர்கள் திலீபுக்காகக் காத்திருந்து பாடல்களைப் பதிவு செய்கிற சூழ்நிலை வந்துவிட்டது.

ஆனால், இப்படி அவன் உயிரைக் கொடுத்து வேலை பார்த்தாலும், கடைசியில் அவனுக்குக் கிடைக்கிற சம்பளம் என்னவோ ஐம்பது ரூபாய், அறுபது ரூபாய்தான். திரைப்படத்துறையில் இசைக் கலைஞர்களுக்கு அதற்குமேல் அள்ளித்தருகிற பழக்கம் இல்லை.

இதனால், வேறு வழியில்லாமல் ஒரே நேரத்தில் பல இசையமைப்பாளர்களுக்கு வாசிக்கத் தொடங்கினான் திலீப். மிஞ்சிய நேரத்தில் இசைக் கச்சேரிகள்,

மேடை நிகழ்ச்சிகளிலும் பங்கு பெற்றுப் பணம் சம்பாதித்தான்.

ஆனால், இப்படி நாள்முழுக்க இசையைக் கட்டிக்கொண்டு திரிந்தால், பள்ளிப் படிப்பு என்ன ஆவது?

ஏற்கெனவே திலீபிற்குப் பாடப் புத்தகங்கள் என்றால் அலர்ஜி. இப்போது அவன் வேலைக்குப் போக ஆரம்பித்துவிட்டதால், படிப்பு ஆர்வம் சுத்தமாக வற்றிப்போய்விட்டது.

எப்படியாவது திலீபைத் தொடர்ந்து படிக்கவைக்கவேண்டும் என்றுதான் அம்மா கஸ்தூரிக்கு ஆசை. ஆனால் அதேசமயம், பன்னிரண்டு, பதினான்கு வயதுப் பையன் ஒருவன் வேலைக்கும் போய்க்கொண்டு, பள்ளிப் படிப்பையும் தொடர்வது என்றால், அது எத்தனை பெரிய சிரமம் என்பதும் அவருக்குப்

புரிந்திருந்தது.

இந்தக் காலகட்டத்தில் திலீப் பள்ளிக்குச் சென்ற நாள்களைவிட, 'கட்' அடித்த நாள்கள்தான் அதிகம். நாலு நாள் ஒழுங்காக வருவான், அப்புறம் பத்து நாள் காணாமல் போய்விடுவான், பதினோன்றாவது நாள் மெல்லத் தலை நீட்டுவான், 'ஏண்டா ஸ்கூலுக்கு வரலை?' என்று ஆசிரியர்கள் அதட்டிக் கேட்டால், பதில் வராது.

அநேகமாக பத்மாசேஷாத்ரி பள்ளி ஆசிரியர்கள் எல்லோருக்குமே, திலீபின் அப்பா இறந்துவிட்டார் என்கிற விவரம் தெரியும், இப்போது அவன் ஒருவனுடைய சம்பாத்தியத்தை நம்பிதான் மொத்தக் குடும்பமும் இருக்கிறது என்பதையும் அவர்கள் நன்றாகப் புரிந்துகொண்டிருந்தார்கள்.

அதற்காக, அவர்கள் திலீப்மீது பரிதாப்படலாம், அனுதாபம் காட்டலாம். ஆனால், அவன் அடிக்கடி வகுப்புக்கு வராமல் போவதை எப்படி அனுமதிக்கமுடியும்? அதனால் அவனுடைய படிப்பு கெட்டுப்போகாதா?

பள்ளி நிர்வாகம் கஸ்தூரியிடம் கண்டிப்பாகச் சொல்லிவிட்டது, ‘உங்க மகன் அட்டெண்டன்ஸ் சரியில்லை, நீங்கதான் இதை உடனடியாக் கவனிக்கணும்’

திலீபின் பள்ளிப் படிப்பைக் காப்பாற்றுவதற்காக, கஸ்தூரி ஒரு சின்ன உபாயம் செய்தார். ராத்திரிமுழுக்க ஸ்டூடியோவில் வேலை பார்த்துவிட்டுக் காலையில் களைத்துப்போய்த் திரும்புகிற மகனை, ‘நீ இனிமே வீட்டுக்கு வரவேண்டாம், நேரடியா ஸ்கூலுக்குப் போயிடு’ என்றார்.

‘என்னம்மா இப்படிச் சொல்றே?’ திலீப் திகைத்தான், ‘எனக்குச் சாப்பாடு? யூனிஃபார்ம்?’

’அதையெல்லாம் நான் பார்த்துக்கறேன்’ என்றார் கஸ்தூரி, ‘நாளையிலேர்ந்து ரெகார்டிங் முடிஞ்சதும் நீ நேரா ஸ்கூலுக்கு வந்துடணும், சரியா?’

மறுநாள் காலை, திலீப் பத்மாசேஷாத்ரி பள்ளிக்கு வந்து நின்றபோது, கேட் பக்கத்திலேயே கஸ்தூரி காத்திருந்தார். அங்கேயே அவனுக்கு உடை மாற்றிவிட்டு, காலை உணவு கொடுத்து, பள்ளிக்குள் அனுப்பிவைத்து ‘டாடா’ காட்டிவிட்டுதான் அவர் வீடு திரும்பினார்.

இப்படிப் பல நாள்கள் ஸ்டூடியோவிலிருந்து நேரடியாகப்

பள்ளிக்குச் சென்றிருக்கிறான் திலீப். அவனுடைய பொறுப்பு உணர்வை ஆசிரியர்கள் எல்லோரும் மனமாரப் பாராட்டினார்கள்.

உண்மையில், அம்மா கட்டாயப்படுத்துகிறார் என்கிற ஒரே காரணத்தால்தான் திலீப் பள்ளிக்குச் சென்றுகொண்டிருந்தான். மற்றபடி அவனுக்குப் பாடங்களிலோ, படிப்பிலோ சுத்தமாக விருப்பம் இல்லை.

இதனால், வாய்ப்புக் கிடைத்தபோதெல்லாம் வகுப்புக்கு மட்டம் போட்டுவிட்டு இசை நிகழ்ச்சிகளுக்கோ, ஒலிப்பதிவுக்கோ ஓடிவிடுவான் திலீப். பள்ளியில் அவனுடைய வருகைப் பதிவேடு 'ஆப்ஸன்ட்' சிவப்புக் கோடுகளால் நிரம்பிக்கொண்டிருந்தது.

ஒருகட்டத்தில், பத்மாசேஷாத்ரி பள்ளி நிர்வாகம் பொறுமை இழந்துவிட்டது, 'இனிமேல் இந்தப் பையனை எங்களால் சகித்துக்கொள்ளமுடியாது' என்று சீட்டைக் கிழித்துக் கையில் கொடுத்துவிட்டார்கள்.

அதன்பிறகு, அம்மாவின் வற்புறுத்தல் காரணமாக இன்னொரு பள்ளியில் சேர்ந்து படித்தான் திலீப். அங்கேயும், பழைய கதைதான் தொடர்ந்துகொண்டிருந்தது.

பள்ளி நாள்களில் திலீப் அனுபவித்த ஒரே சந்தோஷம், அவனுக்குக் கிடைத்த நண்பர்கள். அவர்களும் அவனைப்போலவே மிகுந்த இசை ஆர்வம் கொண்டவர்களாக இருந்தார்கள்.

ஆனால், அப்போது திலீபுக்குத்

தெரிந்ததெல்லாம், திரைப்பட இசை ஒன்றுதான். அதைத்தாண்டி வேறுவிதமான இசை வடிவங்கள் இருக்கின்றன என்பதைக்கூட அவன் அறிந்திருக்கவில்லை.

திலீபின் நண்பர்கள் அவனுக்கு 'ராக்' இசையை அறிமுகப்படுத்திவைத்தார்கள். அதுவரை அவன் கற்றுக்கொண்ட சங்கீத நுணுக்கங்களையெல்லாம் சும்மா ஜஸ்ட் லைக் தட் தூக்கி வீசுவதுபோல் அலட்சியமாக அதிர்ந்த அந்தப் புது இசை, அவனை மிகவும் கவர்ந்துவிட்டது.

அதன்பிறகுதான், Deep Purple, Pink Floyd போன்ற ராக் இசைக் குழுக்களின் பாடல்களைத் தேடிப் பிடித்துக் கேட்க ஆரம்பித்தான் திலீப். அவற்றை மேடையில் இசைக்கவேண்டும், பாடவேண்டும் என்றெல்லாம் அவனுக்குள் ஆர்வம் பிறந்தது.

அப்போது, திலீபின் நண்பர்களுக்கு ஒரு யோசனை, 'நாமெல்லாம் சேர்ந்து ஓர் இசைக் குழு அமைத்தால் என்ன?'

'பிரமாதமான ஐடியா', எல்லோரும் உற்சாகமாக வேலையில் இறங்கினார்கள்.

அடுத்த சில நாள்களில், அவர்களுடைய கத்துக்குட்டி இசைக் குழு உருவாகிவிட்டது. இந்தக் குழுவின் பிரதிநிதியாக, பல பள்ளிகளில் நடைபெற்ற இசை நிகழ்ச்சிகள், போட்டிகளில் கலந்துகொள்ள ஆரம்பித்தான் திலீப்.

ஆனால் இப்போதும், அவன் மற்றவர்களுடைய இசைத் துணுக்குகளைதான் வாசித்துக்கொண்டிருந்தான். சொந்தமாக எதையும் உருவாக்கவில்லை.

திலீப் அப்போது அதைப்பற்றிக் கவலைப்படவில்லை. வருமானத்துக்குச் சினிமா இசை, மேடை நிகழ்ச்சிகள், ஆர்க்கெஸ்ட்ரா சங்கீதம், சொந்தத் திருப்திக்கு நண்பர்களுடன் இசைக் குழு என்று தன்னுடைய வாழ்க்கையை அமைத்துக்கொண்டுவிட்டான்.

இத்தனைக்கும் நடுவே, பாடங்களைக் கவனிப்பதற்கு ஏது நேரம்? சந்தோஷமாகப் பள்ளியிலிருந்து நின்றுவிட்டான் திலீப்.

படிப்பைப் பாதியில் நிறுத்துவது ஒருவிதத்தில் ஜாலிதான். ஆனால் அதேசமயம், இனிமேல் தன்னுடைய எதிர்காலம் என்ன ஆகுமோ என்று யோசிக்கும்போது திலீபுக்கு மிகவும் கவலையாக இருந்தது.

’அந்தக் காலத்தில், ஒவ்வொருவரும் தங்களுடைய பிள்ளை நன்றாகப் படித்து டாக்டராகவோ, எஞ்சினியராகவோ, வழக்கறிஞராகவோ, பேங்க் மேனேஜராகவோ வரவேண்டும் என்றுதான் எதிர்பார்த்தார்கள்’ என்கிறார் ஏ. ஆர். ரஹ்மான், ‘இதனால், நான் ஒரு பெரிய இசைக் கலைஞனாக வருவேன், ராக் பாடகனாவேன், சினிமாவுக்கு இசை அமைப்பேன் என்று சொன்னால், எல்லோரும் என்னை ஒருமாதிரியாகப் பார்த்தார்கள்’

ஆனால், திலீபின் தாய் கஸ்தூரிக்கு இந்த விஷயத்தில் எந்தக் குழப்பமும் இல்லை. அப்பா சேகரின் வேலையை அவன் தொடர்ந்து செய்வதை நினைத்து அவர் பெருமைப்பட்டார், திலீபின் இசை முயற்சிகள் எல்லாவற்றுக்கும் அவருடைய முழு ஆசிர்வாதம் இருந்தது.

அவர் தந்த உற்சாகத்திலேயே, திலீப் இன்னும் முனைப்புடன் உழைக்க ஆரம்பித்தார். புதுப்புது வாத்தியங்களை, எலக்ட்ரானிக் சாதனங்களை இசைக்கப் பழகுவது, மணிக்கணக்காக வாசித்துப் பயிற்சி எடுப்பது என்று பலவிதங்களில் தன்னுடைய திறமையைக் கூர் தீட்டிக்கொண்டார்.

இந்தக் காலகட்டத்தில்தான், திலீபிடம் ஒரு முக்கியமான மாற்றம், அதுவரை இசையை ஒரு சம்பாதிக்கும் சாதனமாகமட்டுமே பார்த்துக்கொண்டிருந்த அவர், முதன்முறையாக அதனை ஒரு கலை வடிவமாகப் புரிந்துகொள்ள ஆரம்பித்தார்.

அதாவது, அடுத்தவர்கள் சொல்லும் இசைத் துணுக்குகளை அப்படியே திரும்ப வாசித்துக் காட்டுவதில் எந்தப்

பெருமையும் இல்லை. அதனால் பணம் கிடைக்கலாம், ஆனால் நம்முடைய அடையாளம் என்று அதில் எதுவும் கிடையாது என்று அவருக்குப் புரிந்தது.

நிஜமான திறமை என்பது, வாசிப்பதில் இல்லை, உருவாக்குவதில்தான் இருக்கிறது. அந்த நிலைக்கு நான் போகவேண்டுமென்றால், அதற்கு என்னவெல்லாம் தேவை? அந்தத் தேவைகளை நான் அடைவது எப்படி?

ஒருபக்கம் ஆர்ப்பாட்டமான இளமை இசையைக் கேட்டபடி, இன்னொருபக்கம் தனக்குள் மூழ்கிப்போக ஆரம்பித்தார் திலீப். தன்னை ஒரு படைப்பாளியாக உருவாக்கிக்கொள்வதற்கான பயிற்சிகளில் ஆர்வம் காட்டத் தொடங்கினார்.

பல வருடங்களுக்குமுன்னால், திலீபின் தந்தை ஆர். கே. சேகருக்கும்

கிட்டத்தட்ட இதேமாதிரியான ஒரு நிலைமை வந்தது. அப்போது அவர் பிரபல இசையமைப்பாளர்களிடம் உதவியாளராகச் சேர்ந்து தனது அனுபவத்தை வளர்த்துக்கொள்ள முடிவெடுத்தார்.

ஆனால், அதே சூழ்நிலையில் திலீப் கொஞ்சம் வித்தியாசமாகச் செயல்பட்டார். சினிமாவுக்கு இசையமைக்கவேண்டும் என்று முட்டி மோதாமல், கொஞ்சம் சுதந்தரமாகச் செயல்படக்கூடிய, தன் மனத்துக்குப் பிடித்ததை உடனடியாகப் பரிசோதனை செய்து பார்க்கும்படியான ஒரு குழு வடிவத்தை அவர் தேர்ந்தெடுத்தார்.

இந்த விஷயம், நம் ஊருக்குக் கொஞ்சம் புதுசு. ஆனால் மேற்கத்திய நாடுகளில் மிகப் பிரபலம். ஆங்கிலத்தில் ‘Band’ என்று சொல்வார்கள்.

‘Band’ என்றால், சில நண்பர்கள், அதாவது இசைக் கலைஞர்கள், பாடகர்கள், பாடல் எழுதுகிற கவிஞர்கள் எல்லோரும் ஒருங்கிணைந்த ஒரு குழு.

இந்தக் குழுவில் இடம்பெற்றிருக்கும் எல்லோருக்கும், ஒரே ஒரு நோக்கம்தான் தங்களுடைய படைப்பு ஆற்றலை வெளிக்காட்டவேண்டும், அதற்கான ஒரு கருவியாகத் தங்களுடைய இசைக் குழுவை, நிகழ்ச்சிகளை நினைத்துக்கொள்வார்கள்.

உதாரணமாக, ஓர் இசைக் குழுவில் இடம் பெற்றிருக்கிற பையன் பாட்டு எழுதுகிறான், இன்னொருவன் அதற்கு ட்யூன் போடுகிறான், ஒரு பெண் அதற்குப் பொருத்தமாக இசை கோர்த்து ஒழுங்குபடுத்துகிறாள், மற்றவர்கள் வெவ்வேறு இசைக் கருவிகளைப்

பயன்படுத்தி அதனை வாசிக்கிறார்கள்.

இப்படி ஒரு குழுவாக இணைந்து உருவாக்கிய பாடலை, அவர்கள் மக்கள் மத்தியில் இசைத்துக் காண்பிப்பார்கள். ரசிகர்கள் அதைக் கேட்டுக் கை தட்ட, அவர்கள் இன்னும் உற்சாகத்துடன் அடுத்த பாடலைத் தயாரிக்க ஆரம்பிப்பார்கள்.

ஒன்றிரண்டு வருடங்கள் கழித்து, அந்தக் குழுவினர் உருவாக்கிய சில பாடல்களைச் சேர்த்து ஓர் ஆல்பம் (இசைத் தொகுதி) வெளியாகும். அதை இன்னும் அதிக மக்கள் ரசித்தால், அந்தக் குழு பிரபலமடையும், அதில் உள்ளவர்களுக்கு மேடை நிகழ்ச்சி, சினிமா வாய்ப்புகள் கிடைக்கும்.

அமெரிக்கா, இங்கிலாந்தின் பிரபலமான பல பாடகர்கள், இசை அமைப்பாளர்கள்,

கவிஞர்கள் இப்படிக் குட்டிக் குட்டி Bandகளில் இருந்து உருவானவர்கள்தான். மேற்கத்திய நாடுகளில் இன்றைக்கும் ஆயிரக்கணக்கான Bandகளில் லட்சக்கணக்கான இளைஞர்கள் கண் நிறையக் கனவோடு உழைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

இந்தியாவில் திலீப் உருவாக்கிய, பங்கு பெற்ற Bandகளைப்பற்றிப் பேசுவதற்குமுன்னால், இந்த முயற்சிகளில் திலீபிற்குத் துணை நின்ற முக்கியமான நண்பர் ஒருவரை அறிமுகம் செய்துகொள்வது நல்லது.

அவர், ’ட்ரம்ஸ்’ சிவமணி!

இன்றைக்கு உலகின் மிகப் பிரபலமான ‘ட்ரம்ஸ்’ கலைஞராகப் புகழ் பெற்றிருக்கும் சிவமணியின் தந்தையும் ஓர் இசைக் கலைஞர்தான். அவர்

பெயர், எஸ். எம். ஆனந்தன். திலீபின் அப்பா ஆர். கே. சேகரும் இவரும் நல்ல நண்பர்கள்.

இதனால், சின்ன வயதிலிருந்தே திலீபும் சிவமணியும் நெருங்கிப் பழகினார்கள். இருவருக்கும் நடுவே ஏழு வயது வித்தியாசம் இருந்தாலும், இசை ஆர்வம் பொதுவாக இருந்ததால், பிரச்னை வரவில்லை.

பின்னர், திலீப் ஓர் இசைக் கலைஞராக வேலை செய்ய ஆரம்பித்த நேரம். எம். கே. அர்ஜுனன் மாஸ்டர் என்ற இசையமைப்பாளரிடம் இவரும் சிவமணியும் ஒன்றாக வேலை பார்த்தார்கள்.

அப்போதுதான், அவர்கள் இருவருக்குமே 'இசைத்துறையில் சொந்தமாக ஏதாவது செய்யவேண்டும்' என்கிற

ஆர்வம் பிறந்திருந்தது. ஆகவே, ஓய்வு நேரங்களில் ஏதாவது புதிதாக வாசித்துப் பார்ப்பது, ஒருவரை ஒருவர் விமர்சனம் செய்து மெருகேற்றிக்கொள்வது என்று மெனக்கெட்டார்கள்.

இந்த ஆர்வம்தான், பின்னர் ஓர் இசைக் குழுவாக உருவெடுத்தது. அதற்கு அவர்கள் சூட்டிய பெயர், ‘ரூட்ஸ்’ (Roots).

’ரூட்ஸ்’ இசைக்குழுவில் திலீப், சிவமணியுடன் இடம் பெற்ற மற்ற நண்பர்கள்: கொச்சினைச் சேர்ந்த கிடார் இசைக் கலைஞர் ஜான் ஆன்டனி மற்றும் கென்யாவைச் சேர்ந்த இசையமைப்பாளர் ஜோஜோ.

இந்த நான்கு நண்பர்களும் சேர்ந்து, ராக், பாப் வடிவங்களைச் சேர்ந்த பாடல்களை அலசிப் பிழிந்து

காயப்போட்டார்கள், பிறகு, இதே அடிப்படையைக் கொண்ட, ஆனால் முழுக்க முழுக்க இந்தியப் பின்னணியில் அமைந்த புதிய பாடல்களைத் தங்களால் உருவாக்கமுடியும் என்று அவர்களுக்கு நம்பிக்கை பிறந்தது.

அதுவரை, மற்றவர்களுடைய மெட்டுகளை வாசிப்பதற்குமட்டும் தன்னுடைய சிந்தஸைஸரைப் பயன்படுத்திக்கொண்டிருந்த திலீப், முதன்முறையாக அதில் சொந்தமாகச் சில விஷயங்களை முயற்சி செய்ய ஆரம்பித்தார். கூடவே நண்பர்களின் பங்களிப்பும் சேர்ந்துகொள்ள, 'ரூட்ஸ்' குழுவின் படைப்புகள் வரிசையாக அரங்கேற ஆரம்பித்தன.

ஆனால், இவையெல்லாம் முழுப் பாடல்கள் இல்லை. சின்னச் சின்ன இசைத் துணுக்குகள்மட்டுமே.

இவற்றுக்கு இசை அமைத்தது திலீப்தான் என்பதுகூட, அப்போது யாருக்கும் தெரிந்திருக்காது, அதைப்பற்றி அவர் பெரிதாகக் கவலைப்படவும் இல்லை.

இங்கே குறிப்பிட்டுச் சொல்லவேண்டிய விஷயம், திலீப் தன்னுடைய படைப்புகளுக்கு மேற்கத்திய இசை வடிவங்களைத் தேர்ந்தெடுத்தாலும், அவற்றில் இந்தியத்தன்மை குறையவில்லை. அதேசமயம், ராக் / பாப் இசை வடிவத்தின் ஆதாரக் கூறுகளையும் அவர் விட்டுக்கொடுக்கவில்லை. இந்த இரண்டையும் சேர்த்து இழைத்துச் செய்யும் 'ஃப்யூஷன்' வடிவம் அவருக்கு மிகவும் பிடித்திருந்தது.

'ரூட்ஸ்' இசைக் குழுவுக்காக திலீப் உருவாக்கிய படைப்புகளை மக்கள் ரசித்தார்களோ இல்லையோ, மற்ற இசைக் கலைஞர்கள் மிகவும்

உன்னிப்பாகக் கவனித்தார்கள், 'இந்தப் புதுப் பையன்கிட்டே என்னவோ விஷயம் இருக்கு!' என்று இசை வட்டாரங்களில் சலசலப்பு எழுந்தது.

அந்த அறிமுகம்தான், திலீபுக்குப் பல புதிய வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொடுத்தது!

# 5

# விடுகதையா, இந்த வாழ்க்கை?

ஒரு பக்கம், பிரபல வயலின் இசைக் கலைஞர் எல். ஷங்கர், இன்னொரு பக்கம், 'தபலா புயல்' உஸ்தாத் ஜாகீர் உசேன், கடம் வித்வான் விக்கு விநாயக் ராம், அவர்களோடு, அதே மேடையில் திலீபும் கீபோர்ட் சகிதம் உட்கார்ந்திருக்கிறார்.

இப்படி ஓர் அபூர்வமான வாய்ப்பு எல்லா இளைஞர்களுக்கும்

கிடைத்துவிடாது. அதுவரை குடிசைத் தொழில்போலத் தனது நண்பர்களுடன் சின்னச் சின்ன நிகழ்ச்சிகளை நடத்திக்கொண்டிருந்த திலீப், இப்போது இந்தியா முழுக்கச் சுற்றிவருகிறார், மிகப் பெரிய கலைஞர்களுடன் மேடையேறுகிறார், அவருடைய வாசிப்பை ரசிகர்கள் கவனித்துக் கை தட்டுகிற காலம் வந்துவிட்டது.

இந்த அங்கீகாரம், சும்மா அதிர்ஷ்டத்தால் வந்தது இல்லை. தொடர்ந்த பயிற்சி, கடின உழைப்பு, எதைச் செய்தாலும் அதில் என்னுடைய தனி முத்திரை இருக்கவேண்டும் என்கிற முனைப்பு, இதெல்லாம்தான் அன்றைக்குப் பலரைக் கவர்ந்திழுத்தது. தங்களுடைய நிகழ்ச்சிகளுக்கு திலீப்தான் வாசிக்கவேண்டும் என்று விரும்பி அழைக்க ஆரம்பித்தார்கள்.

அதேசமயம், கச்சேரிகள், பாடல் பதிவுகள், மேடை நிகழ்ச்சிகள் என்று ஊர் ஊராகச் சுற்றி அலைந்தாலும், திலீப் தன்னுடைய சொந்த இசைக்குழுவைக் கைவிடவில்லை. உள்ளூரில் இருக்கும் நாள்களிலெல்லாம், தனது நண்பர்களுடன் சேர்ந்து மணிக்கணக்காகப் பயிற்சி செய்துகொண்டிருந்தார்.

மெல்லிசை மன்னர் எம். எஸ். விஸ்வநாதனைப்பற்றி, கவிஞர் கண்ணதாசன் ஒரு சுவாரஸ்யமான சம்பவத்தைக் குறிப்பிடுகிறார்:

கடுமையான உழைப்பாளி. தூங்குகிற நேரம் மிகவும் குறைவு. நாள்முழுவதும் உழைப்பு. உழைப்பு. உழைப்பு. இசையைத் தவிர வேறு உலகம் தெரியாது.

பூகோளம், சரித்திரம், இன்றைய

அரசியல்பற்றி அவன் கேட்கும் கேள்விகளை நினைத்தால் சிரிப்பு வரும், ‘ஊமைத்துரையில் ‘துரை’ என்று வருகிறதே அண்ணே, அவன் வெள்ளைக்காரனா?’ என்று ஒருமுறை கேட்டான்.

கண்ணதாசன் சொல்லும் இந்த வர்ணனை, அப்படியே திலீபுக்கும் பொருந்தும். பதினொரு வயதுப் பையனாக இசை வாசிப்பில் இறங்கிய காலம்முதல், அதைத்தவிர அவருக்கு வேறு உலகம் இல்லை. தொடர்ந்து பயிற்சி செய்வதன்மூலம்மட்டுமே தன்னால் ஒரு சிறந்த இசைக் கலைஞனாக வரமுடியும் என்று உறுதியாக நம்பினார் அவர்.

திலீப்மட்டுமில்லை, அவருக்குக் கிடைத்த நண்பர்கள் எல்லோருமே கடின உழைப்பாளிகளாக இருந்தார்கள். இசைக்

கருவிகளைத் தூக்கிக்கொண்டு மாடிப்படி ஏறிவிட்டால், அதன்பிறகு பல மணி நேரத்துக்கு வேறு எதுவும் அவர்கள் காதில் விழாது, வானமே இடிந்து விழுந்தாலும் கீழே வரமாட்டார்கள்.

கஸ்தூரிதான் பாவம், பிள்ளைகள் இப்படி மணிக்கணக்காகப் பயிற்சி செய்கிறார்களே என்று கவலைப்பட்டுக்கொண்டு காத்திருப்பார், 'சாப்பாடு ரெடியாயிடுச்சு, கொஞ்சம் வந்து ஒரு வாய் சாப்டுட்டுப் போய் வாசிங்கப்பா' என்று கெஞ்சுவார்.

ஆனால், அவர் எவ்வளவு முறை கூப்பிட்டாலும் திலீபிடம் ஒரு சின்னச் சலனம்கூட இருக்காது. கையைப் பிடித்து இழுத்தால்கூட, வாசிப்பதைப் பாதியில் நிறுத்திவிட்டுக் கீழே வரமாட்டார்.

இத்தனைக்கும், கஸ்தூரி பிரமாதமாகச்

சமைப்பார். ’அவர் செய்கிற சுவையான மீன் கறியை இப்போது நினைத்தாலும் நாக்கில் எச்சில் ஊறுகிறது’ என்கிறார் சிவமணி.

ஆனால், இசைப் பயிற்சி என்று வந்துவிட்டால், அம்மாவின் அருமையான சாப்பாடுகூட திலீபுக்கு ஓர் இடையூறாகதான் தோன்றியது. மற்ற நண்பர்கள் கீழே இறங்கிச் சென்றாலும்கூட, ’அப்புறம் சாப்பிட்டுக்கொள்ளலாம், என்ன அவசரம்?’ என்று தனியாகத் தொடர்ந்து வாசித்துக்கொண்டிருப்பார்.

’காலை, மதியம், ராத்திரி என்று எப்போதும் ரஹ்மான் ஒழுங்காகச் சாப்பிட்டதே கிடையாது’ என்கிறார் அவருடைய சகோதரி ஃபாத்திமா, ‘எந்நேரமும் அவருக்குப் ப்ராக்டீஸ்தான் முக்கியம், அது

சரியாகச் சாப்பிடமாட்டேங்குதேன்னு எங்கம்மா எப்பவும் கவலைப்பட்டுப் புலம்பிகிட்டிருக்கும்’

திலீபின் நண்பர்கள் எல்லோருக்குமே இசை ஆர்வம் அதிகம்தான். ஆனால் அதற்காகப் பசி, தூக்கத்தை மறந்து பயிற்சி செய்கிற அளவுக்குத் தீவிரமானவர்கள் இல்லை, கஷ்டப்பட்டு வாசிப்பார்கள், நன்றாகச் சாப்பிடுவார்கள், அசந்து தூங்கிவிடுவார்கள்.

அவர்கள் தூங்கியபிறகும்கூட, திலீப்மட்டும் கீபோர்டை மூடிவைக்கமாட்டார். இந்த ஒரு விஷயத்தில் அவருக்கு முழுத் திருப்தி என்பதே கிடையாது. ராத்திரிமுழுக்க வாசித்துப் பயிற்சி எடுத்துவிட்டு, அதிகாலையில் கொஞ்ச நேரம் தூங்குவார், அதன்பிறகு

எழுந்து குளித்துவிட்டு வேலைக்குச் சென்றுவிடுவார்.

வேலை என்றால், ஆஃபீசில் ஃபைல் நகர்த்துகிற உத்யோகமா? அங்கேயும் இசைப் பயிற்சிதான்.

ஒரே வித்தியாசம், வீட்டில் திலீப் தன் இஷ்டம்போல் வாசிக்கலாம், புதுப்புது விஷயங்களை உருவாக்கலாம். ஆனால் இங்கே, மற்றவர்கள் எழுதித் தருகிற இசையை அப்படியே வாசித்துக் காண்பிக்கவேண்டும், அவ்வளவுதான்.

இந்த ‘ரப்பர் ஸ்டாம்ப்’ உத்யோகம் திலீபுக்குச் சுத்தமாகப் பிடிக்கவில்லை. ஆனால், இசைத்துறையில் தனக்கென்று ஒரு நல்ல பெயர், அடையாளம் அமையும்வரை, மாத வருமானத்துக்காக இதுபோன்ற சலிப்பூட்டும் வேலைகளை அவர் தொடர்ந்து

செய்யவேண்டியிருந்தது.

இதனால்தான், திலீப் தனது சொந்த இசைக்குழு முயற்சிகளில் மேலும் அதிக ஆர்வம் காட்ட ஆரம்பித்தார். பகல் நேரங்களில் சுவாரஸ்யமில்லாத வேலைகளைத் தொடர்ந்து செய்வதால் ஏற்படுகிற மனச் சோர்வுக்கெல்லாம், ராத்திரி நேர இசைப் பயிற்சியின்மூலம் மருந்து போட்டுக்கொண்டார் அவர்.

இந்தக் காலகட்டத்தில் 'ரூட்ஸ்'போலவே, திலீப் பங்கேற்ற மற்ற சில இசைக் குழுக்கள்: மேஜிக் (திலீப், தீனா, சிவமணி, ஜான் ஆண்டனி, ஜோஜோ) மற்றும் நெமிஸிஸ் அவென்யு (திலீப், சுரேஷ் பீட்டர்ஸ், சுதின் பிரபாகர், உதய் பாலசுந்தரம், பால் ஜேகப்ஸ், சந்திரன் கிறிஸ்டியன்).

இவைதவிர, வயலின் மேதை எல்.

ஷங்கரின் ‘எபிடெமிக்ஸ்’ போன்ற வெளி இசைக்குழுக்களிலும், குன்னக்குடி வைத்தியநாதன் உள்ளிட்ட பல கலைஞர்களின் மேடை நிகழ்ச்சிகளிலும் வாசித்துக்கொண்டிருந்தார் திலீப். இந்தியாமுழுவதும் பல முக்கியமான அரங்கங்களில் அவர் பங்கேற்ற இசை நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன.

கிட்டத்தட்ட இதே நேரத்தில்தான், திலீபின் கவனம் மேற்கத்தியப் பாரம்பரிய (வெஸ்டர்ன் க்ளாஸிக்கல்) இசையின்பக்கம் திரும்பியது. அதற்குக் காரணமாக அமைந்தவர், திலீபுடைய இசை ஆசிரியர்களில் ஒருவரான ஜான் ஜேக்கப்.

‘திலீப், நீ வெஸ்டர்ன் க்ளாஸிக்கல் இசையை முறைப்படி கத்துக்கணும், அது உனக்கு ரொம்ப உதவியா இருக்கும்’ என்று அறிவுரை சொன்னார் ஜான்

ஜேக்கப், ‘லண்டன் ட்ரினிடி காலேஜ்ல ஒரு நல்ல ம்யூசிக் கோர்ஸ் இருக்கு, நீ அதுல சேர்ந்து படி’

‘ஆனா, அதுக்கு ரொம்ப செலவாகுமே மாஸ்டர்’

‘அதெல்லாம் எந்தப் பிரச்னையும் இல்லை திலீப், உன்னைமாதிரி திறமையான ஸ்டூடன்ட்ஸ்க்கு அவங்களே ஸ்காலர்ஷிப் கொடுத்து உதவி செய்வாங்க’

ஜான் ஜேக்கப் ஆலோசனைப்படி, ட்ரினிடி கல்லூரியில் சேர்ந்து படிக்கவும், அதற்கான கல்வி உதவித்தொகை கேட்டும் விண்ணப்பங்களை அனுப்பிவைத்தார் திலீப். இரண்டும் அவருக்கு உடனடியாகக் கிடைத்துவிட்டது.

இதற்காக, திலீப் லண்டன் போகவில்லை. இங்கேயே சென்னையில்தான் படித்தார். மூன்று வெவ்வேறு ஆசிரியர்கள் அவருக்குப் பாடம் சொல்லிக்கொடுத்தார்கள், அவ்வப்போது பரீட்சை நடத்தி சர்ட்டிஃபிகேட் கொடுப்பதற்குமட்டும் இங்கிலாந்தில் இருந்து யாராவது வருவார்கள்.

ட்ரினிடி கல்லூரியின் பாடங்கள் மிகக் கடினமானவை. அதேசமயம், அவற்றை ஒழுங்காகப் படித்தால் மேற்கத்தியப் பாரம்பரிய இசையின் அடிப்படை நுணுக்கங்களை நன்றாகப் புரிந்துகொண்டுவிடமுடியும்.

இந்த அனுபவம், திலீபுக்குப் பல புதிய கதவுகளைத் திறந்துவிட்டது. அதுவரை அவர் கேட்ட அதே சினிமா இசையை, இப்போது வேறு ஒரு புதுக் கோணத்திலிருந்து

புரிந்துகொள்ளமுடிந்தது.

’ட்ரினிடி’யின் வெஸ்டர்ன் க்ளாஸிக்கல் இசைப் பாடங்கள் பல அடுக்குகளாகப் பிரித்துவைக்கப்பட்டிருந்தன. பள்ளியில் ஒன்றாம் வகுப்பு, இரண்டாம் வகுப்பு என்று சொல்கிறோமில்லையா? அதுபோல, இந்த அடுக்குகளை ‘Grades’ என்று குறிப்பிடுவார்கள்.

அதாவது, முதல் கிரேட் என்பது அடிப்படைப் பாடங்கள், அதைக் கற்றுக்கொண்டு பரீட்சை எழுதி பாஸ் செய்துவிட்டால், அடுத்த கிரேட்க்குச் சென்று இன்னும் அதிக விஷயங்களைக் கற்றுக்கொள்ளலாம். இப்படியே ஒவ்வொரு கிரேடாக முன்னேறிச் செல்லச் செல்ல, மேற்கத்திய இசைபற்றிய திலீபின் ஞானம் விரிவடையத் தொடங்கியது.

திலீப் ஏழு கிரேட்களை முடித்து, எட்டாவது கிரேட் வகுப்புகளுக்குப் போக ஆரம்பித்திருந்த நேரம். அவருக்கு இளையராஜாவிடமிருந்து அழைப்பு வந்தது.

எண்பதுகளில், தென்னிந்தியச் சினிமா இசை மொத்தத்தையும் இளையராஜாதான் ஆட்சி செய்துகொண்டிருந்தார். எல்லா மொழிகளிலும் பெரிய நடிகர்கள், இயக்குனர்கள், தயாரிப்பாளர்கள் தங்கள் படத்துக்கு அவர்தான் இசையமைக்கவேண்டும் என்று காத்திருந்தார்கள். திரைப்பட போஸ்டர்களில், தியேட்டர் வாசல்களிலெல்லாம் கதாநாயகனுக்கு இணையாக ஓர் இசையமைப்பாளரின் கட்அவுட் வைக்கப்பட்டது என்றால், அந்தப் பெருமை ராஜாவுக்குமட்டுமே உண்டு.

ஆகவே, இளையராஜா தன்னை அழைக்கிறார் என்றதும், திலீபுக்குத் தலை, கால் புரியவில்லை. மற்ற வேலைகளையெல்லாம் ஓரங்கட்டிவிட்டு அவரைப் பார்க்க ஓடினார்.

திலீப் அப்போதுதான் முதன்முறையாக இளையராஜாவைச் சந்திக்கிறார். ஆனால் ராஜாவுக்கு திலீபை ஏற்கெனவே நன்றாகத் தெரிந்திருந்தது.

காரணம், பல வருடங்களுக்குமுன்னால், ஆர். கே. சேகர் மலையாளத்தின் புகழ் பெற்ற இசை நடத்துனராக இருந்த நேரத்தில், இளையராஜா அவரிடம் வாத்தியக் கலைஞராகப் பணிபுரிந்திருக்கிறார். இப்போது, அந்த சேகர் மாஸ்டரின் பையன் அவரிடம் வேலை செய்ய வந்திருக்கிறார்.

முக்கியமான விஷயம், சேகர் மாஸ்டரின் மகன் என்கிற காரணத்துக்காக ராஜா திலீபை அழைக்கவில்லை. திலீபின் வாசிப்புத் திறமையைப்பற்றிப் பல இசையமைப்பாளர்கள், வாத்தியக் கலைஞர்கள் அவரிடம் பாராட்டிச் சொல்லியிருந்தார்கள், அதன்பிறகுதான், 'இந்தப் பையன் நம்ம க்ரூப்ல இருந்தா நல்லாயிருக்குமே' என்று யோசித்தார் இளையராஜா.

ஆனால், ராஜா ரொம்பப் பிஸியான இசையமைப்பாளர். அவருடைய குழுவில் திலீப் சேரவேண்டும் என்றால், மற்ற கச்சேரிகள், மேடை நிகழ்ச்சிகளுக்கெல்லாம் போகமுடியாது, வேறு இசையமைப்பாளர்களுக்கு வாசிக்கமுடியாது, ட்ரினிடி கல்லூரி வகுப்புகளுக்குப் போவதுகூட கஷ்டம்தான், எதற்கும் நேரம் இருக்காது.

அதேசமயம், இந்த அபூர்வமான வாய்ப்பை திலீப் தவறவிட விரும்பவில்லை. இளையராஜாவின் குழுவில் சேரச் சம்மதித்துவிட்டார்.

இளையராஜாவிடம் சேர்வதற்கு முன்பாகவும், பின்பாகவும் திலீப் எத்தனையோ இசையமைப்பாளர்களிடம் வேலை பார்த்திருக்கிறார். எம். எஸ். விஸ்வநாதன், எம். கே. அர்ஜுன், டி. ராஜேந்தர், ஷ்யாம் ஜோசஃப், ராஜ் கோட்டி, ரமேஷ் நாயுடு, அவுசப்பச்சன் என்று அந்தப் பட்டியல் மிக நீளமானது.

இந்த இசையமைப்பாளர்கள் ஒவ்வொருவரும், வெவ்வேறு விஷயங்களில் திறமைசாலிகள், அவர்களுக்குக் கீழே வேலை செய்த திலீப், உதவியாளர்கள் சொல்லித்தருகிற இசைத் துணுக்குகளை அப்படியே வாசிப்பதுடன் நிறுத்திக்கொள்ளாமல்,

அந்தக் குறிப்பிட்ட இசையமைப்பாளரின் தனித்திறமை என்ன, அவர்களுடைய வேலை செய்யும் பாணி எப்படிப்பட்டது, அதிலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்ளமுடியும் என்றெல்லாம் யோசிக்க ஆரம்பித்தார்.

அப்போதும், சினிமாவுக்குச் சொந்தமாக இசையமைக்கவேண்டும் என்கிற ஆசையெல்லாம் திலீபுக்கு இல்லை. படிப்பு, பயிற்சியின்மூலம் கற்றுக்கொண்ட சங்கீத நுணுக்கங்களைவிட, இப்படிப் 'ப்ராக்டிக'லாகப் பல விஷயங்களைத் தெரிந்துகொள்வது அவருக்கு மிகவும் பிடித்திருந்தது. பின்னாள்களில் இந்த அனுபவத்தை அவர் தனது இசையமைப்புப் பணிகளுக்குப் பிரமாதமாகப் பயன்படுத்திக்கொண்டார்.

உதாரணமாக, தெலுங்கின் மிகப் பிரபலமான இரட்டை

இசையமைப்பாளர்கள், ராஜ் கோட்டி. அவர்களிடம் திலீப் வேலை பார்த்தபோது, ஒவ்வொரு நாளும் விதவிதமான குத்துப் பாடல்களுக்கு வாசிக்கவேண்டியிருந்தது.

நம் ஊர்க் குத்து வேறு, ஆந்திராக் குத்து வேறு, அங்கே திடும் திடும் ஸ்டெப்புலுகளுக்கு மவுசு ஜாஸ்தி. எந்தக் கதாநாயகன் நடித்தாலும் சரி, எப்பேர்ப்பட்ட இயக்குனருடைய படமாக இருந்தாலும் சரி, ஒவ்வொரு பாட்டும் சும்மா அதிரவேண்டும், மெலடிப் பாட்டில்கூடத் தாளக்கட்டுத் துள்ளிக் குதித்து ஆடவைக்கவேண்டும். இல்லாவிட்டால், மனவாடுகள் கோபப்பட்டுக் கேஸட்டை வீசி எறிந்து உடைத்துவிடுவார்கள்.

இதனால், ராஜ் கோட்டியிடம் திலீப் வாசித்த ஒவ்வொரு பாடலும்,

வித்தியாசமான தாள அமைப்புகளைக் கொண்டிருந்தது. செம டல்லடிக்கும் ஒரு ட்யூனைக்கூட, சரியான பீட் சேர்த்துச் சுவாரஸ்யமாக்கமுடியும் என்கிற சூட்சுமத்தை திலீப் அங்கேதான் பழகிக்கொண்டார்.

அதுபோல, இளையராஜாவிடம் திலீப் கற்றுக்கொண்ட சில முக்கியமான பாடங்கள், மேற்கத்திய இசையை நம்முடைய மண் வாசனையோடு சேர்த்துக் கொடுப்பது, சிக்கலான இசைக் கோர்ப்புகளைக்கூட எல்லோரும் ரசிக்கும்படி ஜனரஞ்சகமாகத் தருவது, அப்புறம், தனி மனித ஒழுக்கம்!

அந்தக் காலத்தில், பெரும்பாலான இசைக் கலைஞர்களுக்கு ஏதாவது ஒரு கெட்ட பழக்கம் இருக்கும். சிகரெட், தண்ணி, போதை மருந்து லெவலுக்குப் போகாவிட்டாலும் வெற்றிலைப் பாக்கு,

புகையிலை என்று ஏதாவது ஒன்றுக்கு அடிமைப்பட்டுக் கிடப்பார்கள், ‘இது இல்லாட்டி என்னால வாசிக்கவே முடியாது’ என்று பெருமையாகச் சொல்லிக்கொள்கிறவர்கள்கூட உண்டு.

வாத்தியக் கலைஞர்களே இப்படி என்றால், இசையமைப்பாளர்களைப்பற்றித் தனியே சொல்லவேண்டியதில்லை. எதையாவது ஊற்றிக்கொண்டால்தான் இவர்களுக்குக் ‘க்ரியேட்டிவிட்டி’ பொங்கி வரும் என்பது சினிமாத்துறையில் எழுதப்படாத ஒரு விதிமுறையாகவே மாறிவிட்டது.

இந்தச் சூழ்நிலையில், இளையராஜா ஒரு வித்தியாசமான மனிதராக இருந்தார். அவரிடம் ஆன்மிக முனைப்பு அதிகம், ஆகவே அவர் எந்தக் கெட்ட பழக்கங்களுக்கும் அடிமைப்படவில்லை, ‘இதைச்

செய்தால்தான் எனக்கு இசையமைக்க வரும்' என்கிற பிடிவாதமோ, அலட்டலோ அவரிடம் கிடையாது, எந்தப் போதை சமாசாரத்தின் துணையும் இல்லாமலேயே, எந்நேரமும் இசை அவரிடமிருந்து ஒரு நீரூற்றைப்போல் பொங்கி வந்துகொண்டிருந்தது.

இதைக் கவனித்த திலீபுக்கு, ஒரு விஷயம் தெளிவாகப் புரிந்தது. இசை என்பதும், படைப்பு ஊக்கமும் நமக்குள் இருந்துதான் வருகிறது, அதற்கு எந்த வெளித் தூண்டுதலும் தேவை இல்லை.

இளையராஜாவிடம் கற்றுக்கொண்ட இந்தப் பாடம், திலீபுக்கு ஒரு முக்கியமான வழிகாட்டியாக இருந்தது. அதன்பிறகு எந்தச் சூழ்நிலையிலும், கெட்ட பழக்கங்கள் தன்னை அடிமைப்படுத்த அவர் அனுமதிக்கவில்லை.

ராஜாவிடம் வேலை செய்த இந்தக் காலகட்டத்தில்தான், திலீப் கம்ப்யூட்டர்மூலம் இசைக் கோர்ப்பு செய்யும் டிஜிட்டல் கலையைக் கற்றுக்கொண்டார். அப்போது வெளியான 'புன்னகை மன்னன்' போன்ற திரைப்படங்களின் ஒலிப்பதிவில் திலீபின் கணிசமான பங்களிப்பு இருந்தது.

ஆனால் அப்போதும், திலீபுக்குத் தன்னுடைய திறமையின்மீது முழு நம்பிக்கை ஏற்பட்டிருக்கவில்லை. திடீரென்று ஒருநாள் தனக்கு யாரும் வேலை தரமாட்டார்களோ, குடும்பத்தோடு நடுத்தெருவில் நிற்கும் நிலை ஏற்பட்டுவிடுமோ என்றெல்லாம் அர்த்தமில்லாத பயங்கள் அவருக்குள் அலைமோதிக்கொண்டிருந்தன.

இதனால், முழுக்க முழுக்க

இசைத்துறையைமட்டும் நம்பியிருப்பது சரியில்லை என்று முடிவு கட்டினார் திலீப். எதற்கும் கைவசம் இன்னொரு தொழில் அல்லது திறமை இருந்தால்தான் நல்லது என்று அவருக்குத் தோன்றிக்கொண்டே இருந்தது.

அதற்காக, திலீப் கார் ஓட்டக் கற்றுக்கொண்டார். ஒருவேளை சினிமாவில் ஏதாவது பிரச்னை வந்துவிட்டால்கூட, டிரைவராக வேலை செய்து பிழைத்துக்கொள்ளலாமே!

இன்றைக்கு இதைக் கேட்கும்போது நமக்குச் சிரிப்பு வருகிறது. ஆனால் அன்றைக்கு திலீப் இருந்த நிலைமையைப் பின்னணியாக வைத்து யோசித்தால், அவருடைய கவலையில் கொஞ்சம் நியாயம் இருப்பது புரியும்.

திலீபை நம்பி ஒரு பெரிய குடும்பம்

இருக்கிறது. மாதாந்திர உப்பு, புளி செலவுகளில் ஆரம்பித்து, சகோதரிகளின் திருமணம்வரை ஏகப்பட்ட கடமைகள். அத்தனையையும் ஒழுங்காகச் செய்து முடிப்பதற்கு, இந்தச் சம்பளம் போதுமா?

ஒருவேளை, திலீப் சொந்தமாக இசையமைக்க ஆரம்பித்தால், ஓரளவு நல்ல வருமானத்தை எதிர்பார்க்கலாம். ஆனால் அதற்கு இன்னும் எத்தனை நாள் ஆகுமோ, எவ்வளவு பேரிடம் முட்டி மோதி வாய்ப்பு வாங்கவேண்டியிருக்குமோ, யாருக்குத் தெரியும்?

திலீப் தன்னுடைய தந்தை ஆர். கே. சேகரை நினைத்துக்கொண்டார். அபாரமான இசை ஞானம் கொண்ட அவருக்கே ஒழுங்காகப் படங்கள் கிடைக்கவில்லை, அவருடைய திறமைக்கு முன்னால் நானெல்லாம்

எந்த மூலை? எனக்கு யார் வாய்ப்புத் தருவார்கள்? இனிமேலும் இந்தச் சினிமா இசையைமட்டும் நம்பியிருப்பது புத்திசாலித்தனம்தானா?

பள்ளியில் திலீபுடன் படித்தவர்கள், இப்போது நல்ல, பெரிய வேலைகளில் கை நிறையச் சம்பாதித்துக்கொண்டிருந்தார்கள். அவர்களோடு ஒப்பிடும்போது, படிப்பைப் பாதியில் நிறுத்திய திலீபின் வருமானம், சமூக அந்தஸ்து எல்லாமே மிக மிகக் குறைவு. இதையெல்லாம் நினைக்கும்போது, திலீபுக்குத் தாழ்வு மனப்பான்மை அதிகரித்தது.

இன்னொருபக்கம், சினிமா இசைத்துறையிலும் அவர் பெரிதாக எதையும் சாதித்துவிடவில்லை. இன்றுவரை, அவருடைய பெயர் சினிமா டைட்டில் கார்ட்களில்கூட வரவில்லை.

எத்தனை நாளைக்குதான் அடுத்தவர்கள் உருவாக்கியதை வாசித்துக் காண்பித்துப் பிழைப்பு நடத்துவது? சொந்தமாக ஏதாவது செய்யவேண்டாமா?

ஆங்கிலத்தில் ‘Catch22’ என்று ஒரு வார்த்தை சொல்வார்கள். இந்தப் பக்கமும் போகமுடியாமல், அந்தப் பக்கமும் வரமுடியாமல் தவிக்கும் தர்ம சங்கடம் அது.

கிட்டத்தட்ட அதே நிலைமையில்தான் அப்போது திலீப் மாட்டிக்கொண்டிருந்தார். ஒருபக்கம் நான் எதையும் சாதிக்கவில்லை என்கிற வருத்தம், இன்னொருபக்கம் சாதிக்கவேண்டும் என்கிற துடிப்பு, அதற்கு யார் வாய்ப்புத் தருவார்கள் என்கிற ஏக்கம். எல்லாமாகச் சேர்ந்து அவரைக் குழப்பியடித்துக்கொண்டிருந்தது.

அந்த நேரத்தில்தான், திலீப் வாழ்க்கையில் இரண்டு முக்கியமான விஷயங்கள் நடந்தன. இரண்டுமே, அவருடைய எதிர்காலத்தைத் தலைகீழாகப் புரட்டிப்போட்டுவிட்ட திருப்புமுனைச் சம்பவங்கள்.

ஒன்று, திலீப் என்கிற இந்து, ஏ. ஆர். ரஹ்மான் என்கிற முஸ்லிமாக மாறுவதற்குக் காரணமாக அமைந்தது. இன்னொன்று, திரைப்பட இசையிலிருந்து அவரை வேறொரு பாதைக்கு அழைத்துச் சென்றது.

அந்த முதல் விஷயத்தைப்பற்றிப் பின்னால் விரிவாகப் பேசப்போகிறோம். அதற்குமுன்பாக, அந்த இரண்டாவது விஷயம், அதாவது திலீப் எப்படிச் சினிமாத்துறையிலிருந்து வெளியேறினார் என்பதைப் பார்த்துவிடலாம்.

திலீப் இளையராஜாவின் குழுவில் இணைந்து பணியாற்றிக்கொண்டிருந்தபோது, அங்கே இருந்த சீனியர் கீபோர்ட் கலைஞர், விஜி மேனுவல். இவர் சினிமா இசைதவிர, விளம்பரப் படங்களை உருவாக்கும் பணியிலும் ஈடுபட்டிருந்தார்.

விஜி மேனுவலுக்கு, திலீபின் வேகம், சுறுசுறுப்பு, வேலை செய்யும் பாணி எல்லாமே ரொம்பப் பிடித்திருந்தது. அவரைத் தன்னுடைய உதவியாளராகச் சேர்த்துக்கொள்ள விரும்பினார்.

அந்த நேரத்தில் திலீபும் சினிமா இசையிலிருந்து வெளியே வரவேண்டும், ஏதாவது புதிதாகச் செய்யவேண்டும் என்று தீவிரமாக யோசித்துக்கொண்டிருந்தார். ஆகவே, விஜி மேனுவல் இப்படிக் கேட்டதும்

உடனடியாகச் சம்மதம் சொல்லிவிட்டார்.

மேலோட்டமாகப் பார்த்தால், சினிமாவும், 'ஜிங்கிள்ஸ்' என்று செல்லமாக அழைக்கப்படுகிற விளம்பரப் படங்களும் முழுக்க முழுக்க வேறுபட்டவை. ஆனால் இசை உருவாக்கம் என்கிற அடிப்படையில், இந்த இரண்டுக்கும் பெரிய வித்தியாசம் எதுவும் இல்லை.

ஆகவே, முன்பின் தெரியாத ஒரு புதிய துறைக்குள் நுழைகிறோமே என்று திலீப் கொஞ்சம்கூடக் கவலைப்படவில்லை. சினிமாவில் ஐந்து நிமிடப் பாட்டுக்கு வாசிக்கிறோம், கம்ப்யூட்டர் ப்ரொக்ராமிங் செய்கிறோம், இங்கே அதே வேலையை முப்பது விநாடிப் படங்களுக்குச் செய்கிறோம், அவ்வளவுதானே? தாராளமாகச் சமாளித்துக்கொள்ளலாம்!

ஆனால், திலீப் அப்போது உணராத ஒரு விஷயம், சினிமாத் துறையுடன் ஒப்பிடுகையில், விளம்பரத் துறையில் வாய்ப்புகளுக்காக அதிகம் முட்டி மோதவேண்டியதில்லை, இசையமைப்பாளர்களுக்குச் சுதந்தரமும் அதிகம்.

ஆகவே, திலீப் வேலை செய்த விளம்பரப் படங்களில், அவரால் பல விஷயங்களைப் புதிதாகச் செய்து பார்க்கமுடிந்தது, அதன் பலன்களைக் கண்ணெதிரே பார்த்துப் பரவசப்படமுடிந்தது, அவருடைய படைப்பூக்கத்துக்கு நல்ல தீனியும் கிடைத்தது!

இந்தச் சந்தோஷம்தான், வெறும் வாத்தியக் கலைஞராக இருந்த திலீபை, ஒரு முழு நேர இசையமைப்பாளராக மாற்றியது!

# 6

# விண்ணைத் தாண்டி வருவாயா?

பவன் ஃபோட்டோ ஸ்டூடியோ.

எர்ணாகுளத்தில் இருக்கும் இந்தப் புகைப்பட நிறுவனம், அப்படியொன்றும் பிரபலமானது அல்ல. ஆனால், பலருக்குத் தெரியாத விஷயம், இந்த ஃபோட்டோ ஸ்டூடியோதான் திலீப் என்கிற ஏ. ஆர். ரஹ்மானை விளம்பரத்துறைக்குள் அழைத்துவந்தது.

வருடம் 1987. பவன் ஃபோட்டோ ஸ்டூடியோவுக்கான ஒரு விளம்பரப் படம் தயாராகியிருந்தது. வெறும் 60 விநாடிகள்மட்டும் ஓடக்கூடிய அந்த விளம்பரத்தை எழுதி, இயக்கித் தயாரித்தவர் பெயர், ஐசக் தாமஸ்.

படப்பிடிப்பு முடிந்ததும், ஐசக் தாமஸ் தன்னுடைய விளம்பரத்துக்குப் பொருத்தமாக இசை அமைக்கக்கூடிய ஒருவரைத் தேட ஆரம்பித்தார். அதுவிஷயமாகச் சென்னை பிரசாத் ஸ்டூடியோவில் அலைந்துகொண்டிருந்தபோதுதான் யாரோ அவரிடம் திலீபைப்பற்றிச் சொன்னார்கள்.

அன்றைக்கே, திலீப் உருவாக்கிய சில இசைத் துணுக்குகளையும் கேட்டுப்பார்த்தார் ஐசக் தாமஸ். உடனடியாக, 'இந்தப் பையனிடம்

ஏதோ விசேஷமாக இருக்கிறது' என்று அவருக்குத் தோன்றிவிட்டது.

ஐசக் தாமஸ், வெறும் விளம்பரப் படத் தயாரிப்பாளர்மட்டுமில்லை. நடிகர், இயக்குனர், கதாசிரியர், புகைப்படக்காரர், இசையமைப்பாளர் என்று அவருக்குப் பல முகங்கள் உண்டு. இதனால், திலீபின் தனித்திறமையை அவரால் உடனடியாக அடையாளம் காண முடிந்தது.

திலீபின் இசைமட்டுமில்லை, அதனை அவர் துல்லியமாகப் பதிவு செய்திருந்த விதமும் ஐசக் தாமஸை வெகுவாகக் கவர்ந்தது, இந்த இளைஞன்தான் தன்னுடைய விளம்பரப் படத்துக்கு இசையமைக்கவேண்டும் என்று முடிவு செய்துவிட்டார்.

உடனடியாக பிரசாத ஸ்டூடியோவுக்கு ஓடிய ஐசக் தாமஸ், திலீபின் முகவரியைக்

கேட்டு வாங்கிக்கொண்டார். மறுநாளே அவரை நேரில் சந்தித்துப் பேசினார், 'நாங்க ஒரு விளம்பரப் படம் தயாரிச்சிருக்கோம், அதுக்கு நீங்கதான் ம்யூசிக் பண்ணணும்'

திலீப் ஏற்கெனவே விஜி மேனுவலுக்கு உதவியாளராகச் சில விளம்பரங்களில் வேலை செய்திருக்கிறார். ஆனால், சொந்தமாக ஒரு விளம்பரத்துக்கு இசையமைப்பது என்றால், சும்மாவா? என்னால் முடியுமா?

'நிச்சயமாக முடியும்' என்று திலீபுக்கு உற்சாகம் கொடுத்தார் ஐசக் தாமஸ், 'உங்க இசையில ஏதோ புதுசா இருக்கு, அதை இன்னும் மெருகேத்திக் கொடுத்தீங்கன்னா நீங்க ரொம்பப் பெரிசா வருவீங்க'

அப்போதும், திலீபுக்கு முழு நம்பிக்கை

வரவில்லை, அரை மனமாகச் சம்மதித்தார்.

மறுநாள், ஐசக் தாமஸ் திலீபை விஜயா கார்டன் ஸ்டூடியோவுக்கு அழைத்துச்சென்றார். தன்னுடைய விளம்பரப் படத்தை அவருக்குத் திரையிட்டுக் காண்பித்தார்.

தயக்கத்தோடு வேலையைத் தொடங்கிய திலீபுக்குக் கொஞ்சம் கொஞ்சமாக நம்பிக்கை அதிகரித்தது. தன்னுடைய சிந்தசைஸரிலேயே மொத்த விளம்பர இசையையும் உருவாக்கிப் பதிவு செய்துவிட்டார்.

திலீப் உருவாக்கிய அந்த முதல் ‘ஜிங்கிள்ஸ்’ இசை, ரொம்பப் புதுசாக ஒலித்தது, அதேசமயம் யார் கேட்டாலும் உடனே பிடித்துப்போகக்கூடியதாக, எளிதில் ஞாபகம்

வைத்துக்கொள்ளக்கூடிய மெட்டாகவும் இருந்தது. ஐசக் தாமஸுக்கு முழுத் திருப்தி.

அவர் சொன்னதுபோலவே, அந்த விளம்பரப் படம் கேரளாவில் சூப்பர் ஹிட். 'அடுத்த பல மாதங்கள், எல்லா மலையாளிகளும் பவன் ஃபோட்டோ ஸ்டூடியோவின் விளம்பரப் பாடலைதான் முணுமுணுத்துக்கொண்டிருந்தார்கள்' என்கிறார் ஐசக் தாமஸ்.

அந்த முதல் விளம்பரம் வெளியாவதற்குள்ளாகவே, திலீபுக்கு அடுத்தடுத்த விளம்பர வாய்ப்புகள் குவிய ஆரம்பித்தன. அதற்குக் காரணம், ஐசக் தாமஸின் தாராள மனசுதான்!

திலீபைப் பாராட்டுவதில் ஐசக் தாமஸ் கஞ்சத்தனமே காட்டவில்லை, 'எழுதிவெச்சுக்கோங்க, இந்தப்

பையன் ரொம்பப் பெரிசா வருவான், இளையராஜாவையெல்லாம் தூக்கிச் சாப்பிட்றுவான்' என்று புகழ்ந்து தள்ளினார், 'திலீபை உங்க விளம்பரத்தில பயன்படுத்திக்கோங்க' என்று தன்னுடைய நண்பர்கள், வாடிக்கையாளர்களிடம் சிபாரிசு செய்தார்.

அந்த முதல் விளம்பரப் படத்தின் வெற்றி, திலீபுக்கும் ஏகப்பட்ட தன்னம்பிக்கையைக் கொடுத்திருந்தது. அதுவரை, 'என்னால் முடியுமா' என்று நினைத்துத் தயங்கிக்கொண்டிருந்தவர், இப்போது தைரியமாக விளம்பரப் படங்களை ஏற்றுக்கொள்ள ஆரம்பித்தார்.

சில நாள்களுக்குள், இந்த விளம்பரத்துறை திலீபுக்கு மிகவும் பிடித்துப்போய்விட்டது. அதற்குப் பல காரணங்கள் இருந்தன.

முதலாவது, இந்தத் துறையில் பெரிய இசையமைப்பாளர், பழம் தின்று கொட்டை போட்டவர் என்றெல்லாம் யாரும் கிடையாது. விளம்பரங்களைத் தயாரிப்பவர்கள் திலீபை நம்பி வாய்ப்புக் கொடுத்தார்கள்.

அடுத்தபடியாக, இந்த விளம்பரத்துக்கு இப்படிதான் இசையமைக்கவேண்டும் என்று திலீபின் படைப்புச் சுதந்தரத்தில் யாரும் தலையிடவில்லை. ஆகவே, பல புதுமையான பரிசோதனை முயற்சிகளை அவரால் செய்து பார்க்கமுடிந்தது.

இதையெல்லாம்விட முக்கியம், அரை நிமிடம் ஓடக்கூடிய ஒரு விளம்பரப் படத்துக்கான இசையை உருவாக்க, மிஞ்சிப்போனால் அரை நாள், ஒரு நாள் ஆகும், அதற்குள் மெட்டுப் போட்டு, பாட்டு எழுதி, இசை கோர்த்து, பதிவு செய்து முடித்துவிடலாம்.

இதனால், விளம்பரப் படங்களில் வேலை செய்வது திலீபுக்கு ஓர் இடையூறாக இல்லை. பகல் நேரத்தில் மற்ற வேலைகளைக் கவனித்துக்கொண்டே, ராத்திரி வேளையில் புதுப்புது விளம்பர இசைகளை உருவாக்க ஆரம்பித்தார்.

திலீபின் விளம்பரங்கள் பிரபலமடையத் தொடங்கவும், பல புதிய தயாரிப்பாளர்கள் அவரைத் தேடி வந்தார்கள். ஒரு நாள், இரண்டு நாள் வேலைக்குப் பத்தாயிரம், பதினைந்தாயிரம் என்று சம்பளம் குவிந்தது.

இப்படி எந்தவிதத்தில் யோசித்தாலும், விளம்பரத்துறை திலீபுக்குக் கச்சிதமாகப் பொருந்திவிட்டது. வாழ்க்கையில் முதன்முறையாக, கை நிறையப் பணம், நெஞ்சு நிறைய நிம்மதியை ஒருசேர

அனுபவித்தார் அவர்.

விளம்பரத்துறையில் இருந்த எல்லோருக்கும், தொடர்ந்து புதுசாக எதையாவது செய்துகொண்டே இருக்கவேண்டிய கட்டாயம். சில விநாடிகளுக்குள் ரசிகர்களைக் கட்டிப்போடவேண்டும் என்பதால், ஒவ்வொரு விளம்பரத்தையும் போரடிக்காதபடி வித்தியாசமாகச் செய்யவேண்டும், ஒன்றுபோல் இன்னொன்று இருக்கக்கூடாது, அதேசமயம் நாம் எந்தப் பொருளை விளம்பரப்படுத்துகிறோமோ அதன் பெயர், பலன் எல்லாம் மக்கள் மனத்தில் அழுந்தப் பதியவேண்டும்.

இப்படி ஒரு சவாலான சூழ்நிலையில் வளையவருகிற விளம்பரத்துறைப் புள்ளிகளுக்கு, இயல்பாகவே க்ரியேட்டிவிட்டி அதிகமாக இருக்கும்,

இருந்தாகவேண்டும், இல்லையென்றால் இங்கே அவர்கள் பிழைக்கமுடியாது.

திலீபுக்கு விளம்பரச் சூழல் மிகவும் பிடித்திருந்தது. ஒவ்வொரு நாளும் தான் சந்திக்கிற வித்தியாசமான மனிதர்களிடமிருந்து பல நல்ல நண்பர்களைப் பெற்றுக்கோண்டார் அவர்.

உதாரணமாக, ராஜீவ் மேனன். இன்றைக்கு இந்தியாவின் 'டாப்' விளம்பரப்பட இயக்குனரான ராஜீவ், அப்போது ஆரம்ப நிலையில் இருந்தார். திலீபும் அவரும் சேர்ந்து பல பிரமாதமான விளம்பரப் படங்களை உருவாக்கியிருக்கிறார்கள்.

இதேபோல், விளம்பரத் துறையில் திலீபுக்குக் கிடைத்த இன்னொரு நல்ல நண்பர், திரிலோக் நாயர்!

அப்போது சென்னையில் திரிலோக், அவருடைய மனைவி சாரதா இருவரும் இணைந்து 'திரிஷ் ப்ரொடக்ஷன்ஸ்' என்கிற பெயரில் ஒரு விளம்பர நிறுவனத்தைத் தொடங்கியிருந்தார்கள். அவர்களுக்குப் போதை மருந்துப் பழக்கத்தைக் கண்டிக்கும்வகையில் ஒரு விளம்பரப் படம் தயாரிப்பதற்கான வாய்ப்புக் கிடைத்திருந்தது.

கமர்ஷியல் விளம்பரம் என்றால், நிறைய பணம் போட்டு பிரம்மாண்டமாக எடுக்கலாம். இது லாப நோக்கம் இல்லாத பொது சேவை விளம்பரம்தானே? திரிஷ் ப்ரொடக்ஷன்ஸுக்குத் தரப்பட்டிருந்த பட்ஜெட் மிக மிகக் குறைவு. அதற்குள் செலவுகளை இழுத்துப் பிடித்து ஒரு நல்ல விளம்பரத்தைக் கொடுத்தாகவேண்டும்.

இதுபோன்ற விளம்பரங்கள் மக்கள் மத்தியில் அழுந்தப் பதியவேண்டுமென்றால், நல்ல இசை தேவை. திரிலோக், சாரதா இருவரும் தங்களுடைய படத்துக்கு ஒரு நல்ல, ஆனால் அதிகம் செலவு பிடிக்காத இசையமைப்பாளரைத் தேடிக்கொண்டிருந்தார்கள்.

அப்போதுதான் அவர்களுடைய நண்பர்கள் திலீபைப்பற்றிச் சொன்னார்கள், ‘இந்தப் பையன் ரொம்ப நல்லாப் பண்றான், நீங்க வேணும்ன்னா அவன்கிட்டே பேசிப் பாருங்களேன்’

பேச்சுவார்த்தைகள் முடிந்தன, மிகக் குறைந்த சம்பளத்துக்கு அவர்களுடைய விளம்பரப் படத்தில் இசையமைக்க ஒப்புக்கொண்டார் திலீப்.

ஆனால், திலீபை முதன்முறையாகச் சந்தித்தபோது திரிலோக், சாரதா இருவருக்குமே அதிர்ச்சி, 'இந்தச் சின்னப் பையனா இசையமைக்கப்போகிறான்? கீபோர்ட் உயரம்கூட இல்லையே, இவனை நம்பி இப்படி ஒரு முக்கியமான ப்ராஜெக்டை ஒப்படைக்கலாமா?'

அப்போது அவர்களுக்கு வேறு வழியில்லை. மிகுந்த தயக்கத்துடன் திலீபிடம் தங்களுடைய விளம்பரத்தைப்பற்றிப் பேச ஆரம்பித்தார்கள். திலீபும் உற்சாகமாகத் தனது யோசனைகளைப் பகிர்ந்துகொண்டார்.

அடுத்த சில மணி நேரங்களுக்குள், அவர்களுக்கு திலீப்மீது இருந்த சந்தேகங்கள், தயக்கங்கள் எல்லாமே விலகிவிட்டன. 'இந்தப் பையனுக்கு நிச்சயமாக விஷயம்

தெரியும், எல்லாவற்றையும் அவனே பார்த்துக்கொள்வான்’ என்று நம்பி, இசைக்கான பொறுப்பை முழுக்க முழுக்க திலீப் கையிலேயே ஒப்படைத்துவிட்டார்கள்.

திரிலோக், சாரதா இருவரும் திலீப்மீது வைத்த நம்பிக்கைக்குப் பிரமாதமான பலன் கிடைத்தது. அந்த போதை ஒழிப்பு விளம்பரம் மிகவும் பிரபலமானது, அதை உருவாக்கிய திரிஷ் ப்ரொடக்ஷன்ஸுக்கும் நல்ல பெயர்.

அதன்பிறகு, திலீப் திரிலோக் சாரதா மூவர் கூட்டணியில் நாற்பதுக்கும் மேற்பட்ட விளம்பரப் படங்கள் உருவாகின. இந்தக் காலகட்டத்தில்தான் திலீபின் விளம்பரங்கள் தமிழகத்தில்மட்டுமின்றி, இந்தியாமுழுக்கப் பிரபலமாக ஆரம்பித்தன.

நீங்களும் நானும் கண்டிப்பாக அந்த விளம்பரங்களைப் பார்த்திருப்போம். ஆனால் அவற்றை உருவாக்கியது திலீப் என்கிற ஏ. ஆர். ரஹ்மான்தான் என்பது தெரிந்திருக்காது, அவ்வளவுதான்.

உதாரணமாக, சச்சின் டெண்டுல்கரும் கபில் தேவும் வந்து ‘பூஸ்ட் ஈஸ் தி சீக்ரெட் ஆஃப் மை எனர்ஜி’ என்று புன்முறுவல் செய்வார்களே, அந்த விளம்பரம் ஞாபகமிருக்கிறதா? அது திலீபின் கைவண்ணம்தான்.

இதேபோல், டைடன் கடிகாரங்களுக்காக திலீப் உருவாக்கிய வயலின் இசை, ஏஷியன் பெயின்ட்ஸ் விளம்பரத்துக்காகச் செய்த தெம்மாங்குப் பாட்டு, ’கார்டன் சாரீஸ்’ புடவைகளுக்காக உருவாக்கிய ‘ஸ்டைலிஷ்’ மேற்கத்திய இசை மெட்டு என்று சொல்லிக்கொண்டே போகலாம்.

சுமார் ஐந்து ஆண்டுகள் விளம்பரத்துறையில் தீவிரமாக இயங்கிய திலீப், கிட்டத்தட்ட முன்னூறு விளம்பரப் படங்களுக்கு இசையமைத்திருக்கிறார். இவற்றில் பெரும்பாலானவை, மற்ற வாத்தியக் கலைஞர்கள் யாருடைய துணையும் இல்லாமல் அனைத்து இசைக் கருவிகளின் ஒலியையும் அவரே டிஜிட்டல் முறையில் வாசித்து உருவாக்கியவை.

இசைக் கருவிகள்மட்டுமில்லை, விளம்பரத்துக்குத் தேவையான வித்தியாசமான ‘சப்த’ங்களையும் கோர்த்துத் தருவதில் திலீப் கில்லாடி.

உதாரணமாக, ஒரு விளம்பரத்தில் காகிதம் கிழிகிற சத்தம் தேவைப்படும், இன்னொரு விளம்பரத்துக்கு கடிகாரத்தின் டிக்டிக்

சத்தத்தைத் துல்லியமாகப் பதிவு செய்யவேண்டியிருக்கும். ஆங்கிலத்தில் ‘சவுண்ட் எஃபெக்ட்ஸ்’ என்று சொல்லப்படும் இந்தச் சமாசாரங்களை திலீப் நிறையச் சேர்த்துவைத்திருந்தார். தேவையான இடத்தில் அவற்றைப் பொருத்தமாகப் பயன்படுத்தி அசத்தினார்.

திலீபின் இன்னொரு சிறப்பு அம்சம், ஒரு விளம்பரத்தை எடுத்து அவரிடம் போட்டுக் காண்பித்துவிட்டால் போதும். அதன்பிறகு இசை அமைப்பது, வாசிப்பது, ஒலிப்பதிவு செய்வது, எடிட் செய்வது என எல்லாவற்றையும் அவரே பார்த்துக்கொண்டுவிடுவார். உதவியாளர், சவுண்ட் எஞ்சினியர், எடிட்டர் என யாரும் அவருக்குத் தேவையில்லை, தனிக்காட்டு ராஜாவாக வேலையை முடித்துத் தயாரிப்பாளர் கையில் ஒப்படைத்துவிடுவார்.

வேகமாக வேலை செய்தாலும், திலீபிடம் அவசரம் இருக்காது. அரை விநாடி ஒலிக்கிற ஒரு சப்தத்தை, மணிக்கணக்காக உட்கார்ந்து இழைத்துக்கொண்டிருப்பார், அவர் கை வைக்கிற விளம்பரம் மிகத் துல்லியமான சத்தம், பொருத்தமான இசையுடன்தான் வெளியே வரும், இந்த விஷயத்தில் எந்தவிதமான சமரசங்களும் செய்துகொள்ளமாட்டார்.

உண்மையில், விளம்பரத்துறையைத் தனது வளர்ச்சிக்கான 'நெட் ப்ராக்டீஸ்'போலப் பயன்படுத்திக்கொண்டிருந்தார் திலீப். பல இளம் பாடகர்கள், இசைக் கலைஞர்கள், நவீன தொழில்நுட்பங்கள் என்று புதுசுபுதுசாக முயற்சி செய்து ஹிட் கொடுக்கும் சூட்சுமம் அவருக்குப் புரிய ஆரம்பித்திருந்தது.

அன்றைய சூழ்நிலையில்,

தமிழகத்தில்மட்டுமின்றி, இந்தியாமுழுவதுமே திலீப் அளவுக்குத் திறமையான, நல்ல அனுபவம் கொண்ட, சமீபத்திய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, இந்திய வாசனை கொண்ட ஓர் இசையைத் தரக்கூடிய விளம்பர இசையமைப்பாளர்கள் இல்லை. அதனால்தான், மற்ற மாநிலங்களில், தேசிய அளவில் ஒளிபரப்பாகும் விளம்பரங்களுக்குக்கூட இசையமைக்கிற பொறுப்பு திலீபைத் தேடி வந்தது. ஒரு விளம்பரம் முடிந்தால் இன்னொன்று எனச் சங்கிலித் தொடர்போல வேலைகள் நடந்துகொண்டிருந்தன.

திலீப் இப்படிக் கஷ்டப்பட்டு உழைப்பதற்குப் பரிசாக, அந்த விளம்பரங்களைத் திரை அரங்குகளில், தொலைக்காட்சிகளில் பார்த்து, வானொலியில் கேட்டு மகிழும் ரசிகர்கள், ‘இந்த ஜிங்கிளுக்கு நீங்கதான்

இசையமைக்கணும்’ என்று காத்திருக்கும் தயாரிப்பாளர்கள், அவ்வப்போது சிறந்த விளம்பர இசைக்கான விருதுகளும் திலீப் வீட்டுக் கதவைத் தட்டிக்கொண்டிருந்தன.

அப்படி ஒரு விருது வழங்கும் விழாவில்தான், திலீப் மணி ரத்னத்தைச் சந்தித்தார். திலீபின் நண்பர், மணி ரத்னத்தின் உறவினரான சாரதா அவர்கள் இருவரையும் அறிமுகப்படுத்திவைத்தார்.

அதன்பிறகும், அடிக்கடி மணி ரத்னத்திடம் திலீபைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார் சாரதா, ‘ரொம்பத் திறமையான பையன், சின்ன வயதில் நிறைய முதிர்ச்சியோடு வேலை செய்கிறான், அவனுடைய இசையை நீங்கள் கேட்கவேண்டும், முடிந்தால் அவனை உங்களுடைய படங்களுக்குப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும்’

திலீபின் திறமைக்கு உதாரணமாக, அப்போது மிகப் பிரபலமாக இருந்த 'லியோ காஃபி' விளம்பரத்தைச் சுட்டிக்காட்டுகிறார் திரிலோக் நாயர், 'வீணை ஒலியை அப்படி நவீனமாகப் பயன்படுத்தமுடியும் என்று வேறு யாரும் யோசித்திருக்கமாட்டார்கள்'

அந்த 'லியோ காஃபி' விளம்பரத்தில்தான், நடிகர் அர்விந்த் சாமி அறிமுகமானார். அவருடைய வசீகரமான முகமும், 'பாரம்பரியத்தை வெல்லும் ரசனை' என்கிற விளம்பர வரியும், அதற்குப் பொருத்தமான திலீபின் இசையும் அந்த விளம்பரத்தை இன்றுவரை 'க்ளாசிக்' வரிசையில் வைத்திருக்கின்றன.

சிறந்த இசை ரசிகரான மணி ரத்னத்துக்கு, நிச்சயமாக திலீபின் இசை பிடித்திருக்கும். சாரதா ஒருவருக்கு

இந்த அளவு சிபாரிசு செய்கிறார் என்றால், அவர் நிச்சயமாக நல்ல திறமைசாலியாகதான் இருக்கவேண்டும் என்று அவர் நம்பினார்.

அதேசமயம், மணி ரத்னம் அப்போது தன்னுடைய படங்களுக்கு இன்னோர் இசையமைப்பாளரைத் தேடும் யோசனையில் இல்லை. இதயக் கோவில், நாயகன், மௌன ராகம், அஞ்சலி, அக்னி நட்சத்திரம், கீதாஞ்சலி (தெலுங்கு) என்று இளையராஜாவுடன் அவர் இணைந்து பணியாற்றிய எல்லாப் படங்களும் 'ம்யூசிக்கல் ஹிட்'கள்.

இதனால், தன்னுடைய முதல் படமான 'பகல் நில'வில் தொடங்கி மணி ரத்னம் வேறு எந்த இசையமைப்பாளருடனும் பணியாற்றவில்லை. இப்போதும் அதற்கான அவசியம் ஏற்படவில்லை.

ஆகவே, சாரதா திலீபைப்பற்றிச் சொன்னபோது, மணி ரத்னம் மௌனமாகக் கேட்டுக்கொண்டார், உடனடியாக எந்த பதிலும் சொல்லவில்லை, எந்த முடிவும் எடுக்கவில்லை, அதைப்பற்றித் தீவிரமாக யோசிக்கக்கூட இல்லை.

அப்போது மணி ரத்னத்தின் அடுத்த படம் 'தளபதி' உருவாகிக்கொண்டிருந்த நேரம். தமிழ் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த், மலையாள மெகா ஸ்டார் மம்முட்டி என இரண்டு பெருந்தலைகளை ஹீரோக்களாக வைத்து மகாபாரதக் கர்ணன் கதையை புது வடிவத்தில் செதுக்கிக்கொண்டிருந்தார் அவர்.

வழக்கம்போல், இந்தப் படத்துக்கும் இளையராஜாதான் இசை. பாடல்கள் வெளியாகித் தமிழ்நாடுமுழுக்கப் பட்டையைக் கிளப்பிக்கொண்டிருந்தன.

1991ம் ஆண்டு இறுதியில், 'தளபதி' படத்தின் முதல் பிரதி தயாராகிவிட்டது. தனது நண்பர்கள், திரைத்துறையைச் சேர்ந்த பிரபலங்களுக்காக ஒரு சிறப்புக் காட்சிக்கு ஏற்பாடு செய்திருந்தார் மணி ரத்னம். இதில் கலந்துகொள்வதற்கான அழைப்பு திரிலோக், சாரதாவுக்கும் வந்திருந்தது.

'தளபதி' சிறப்புக் காட்சி நடைபெற்ற தினத்தன்று, அவர்கள் திலீபுடன் ஒரு விளம்பரத்துக்கான ஒலிப்பதிவில் மூழ்கியிருந்தார்கள். அந்த வேலை முடிந்ததும், திரிலோக், சாரதா இருவரும் அவசரமாகப் புறப்பட்டார்கள்.

பொதுவாக, திலீப் தன்னுடைய வேலை முடிந்தபிறகும், ஸ்டூடியோவிலிருந்து கிளம்பமாட்டார். வேறு எதையாவது இசைத்துப் பார்த்துப் பயிற்சி எடுப்பார்,

அல்லது புதிய இசைத் துணுக்கு ஒன்றைப் பதிவு செய்துகொண்டிருப்பார்.

அன்றைக்கு திரிலோக், சாரதா பரபரப்பாகக் கிளம்புவதைப் பார்த்ததும், எதார்த்தமாக விசாரித்தார் திலீப், ‘எங்கே ரொம்ப அவசரமாப் புறப்பட்டுட்டீங்க?’

’இன்னிக்குத் தளபதி ப்ரிவ்யூ ஷோ’ என்றார் திரிலோக் நாயர், ‘நீயும் வர்றியா?’

அன்றைய தேதிக்குத் தமிழ்நாடு முழுக்கத் ‘தளபதி’ ரிலீஸ் தேதிக்காகதான் ஆவலுடன் காத்துக்கொண்டிருந்தது. ரஜினி, மம்முட்டி ரசிகர்கள் ஒருபக்கம், மணி ரத்னம், இளையராஜாப் பிரியர்கள் இன்னொருபக்கம் என்று அந்தப் படத்துக்கு ஏகப்பட்ட எதிர்பார்ப்பு.

திலீப் சினிமாத்துறையிலேயே வேலை

பார்த்திருந்தாலும்கூட, அவருக்குப் படம் பார்க்கிற ஆசையெல்லாம் அதிகம் இல்லை. அவருடைய ஆர்வம் முழுக்க இசையில்மட்டும்தான்.

ஆனால் அன்றைக்கு ஏனோ, அவருக்குத் 'தளபதி' பார்க்கவேண்டும் என்று தோன்றியிருக்கிறது. திரிலோக், சாரதாவுடன் புறப்பட்டுவிட்டார்.

அந்தச் சிறப்புக் காட்சி முடிந்ததும், மணி ரத்னத்தை மீண்டும் சந்தித்துப் பேசுகிற வாய்ப்பு திலீபுக்குக் கிடைத்தது. ஆனால் இந்தமுறை, மணி ரத்னத்திடம் ஏதோ ஒரு மாற்றம். மற்றவர்களிடம் சம்பிரதாயமாகப் பேசிக் கை குலுக்கிக்கொண்டிருந்தவர், திலீபிடம்மட்டும் கொஞ்சம் அதிக நேரம் செலவிட்டதுபோல் தோன்றியது.

மறுநாள், மணி ரத்னம் சாரதாவை

அழைத்தார், 'நீங்க ஒரு ம்யூசிக் டைரக்டரைப்பத்தி அடிக்கடி சொல்வீங்களே, நேத்திக்குக்கூட உங்களோட ப்ரிவ்யூவுக்கு வந்திருந்தாரே'

'ஆமா, ஏ. எஸ். திலீப் குமார்'

'அவரேதான்' என்றார் மணி ரத்னம், 'நான் கொஞ்சம் அவரோட இசை சாம்பிள்ஸ்ல்லாம் கேட்கணுமே, ஏற்பாடு செய்யமுடியுமா?'

மணி ரத்னமே இப்படி வலிய வந்து கேட்கிறபோது, மறுக்கமுடியுமா? உடனடியாக அவரைத் தன்னுடைய ஸ்டூடியோவுக்கு அழைத்துவந்து, திலீப் இசையமைத்த விளம்பரங்கள், மற்ற இசைத் துணுக்குகளைப் போட்டுக் காண்பித்தார் திரிலோக் நாயர்.

வழக்கம்போல், மணி ரத்னம்

அதிகம் பேசவில்லை. இந்தப் புதிய இளைஞனின் இசை உண்மையிலேயே வித்தியாசமானதுதானா என்பதை மனத்துக்குள் எடை போட்டபடி மௌனமாகக் கேட்டுக்கொண்டிருந்தார். அதன்பிறகு, கிளம்பிச் சென்றுவிட்டார்.

விரைவில், மணி ரத்னம் அலுவலகத்திலிருந்து திலீபுக்கு அழைப்பு வந்தது, 'டைரக்டர் உங்களைச் சந்திக்க விரும்பறார், வரமுடியுமா?'

இரண்டு வருடத்துக்கு ஒரு படம் பண்ணினாலும், தமிழ்த் திரைப்பட இயக்குனர்கள் மத்தியில் மணி ரத்னம் ஒரு சூப்பர் ஸ்டார். அவருடைய படத்தில் தங்களுக்கு ஒரு வாய்ப்புக் கிடைத்துவிடாதா என்று நடிகர், நடிகைகள், கதாசிரியர்கள், இசையமைப்பாளர்கள், கவிஞர்கள், ஒளிப்பதிவாளர்கள் என எல்லோரும்

ஏக்கத்தோடு காத்திருப்பதுதான் வழக்கம்.

ஆனால், அன்றைக்கு திலீப் இருந்த மனோநிலையில், அவர் திரைப்படங்களுக்கு இசையமைப்பதைப்பற்றிக் கனவுகூடக் காணவில்லை. ஒருவேளை வாய்ப்புக் கிடைத்தாலும், அதில் ஈடுபடவேண்டும் என்கிற ஆர்வம் அவருக்கு இல்லை.

காரணம், விளம்பரத் துறையில் அவருக்கு நல்ல வருமானம் வந்துகொண்டிருந்தது. குடும்பச் செலவுகள், சேமிப்புக்குப் பிரச்னையில்லை, விளம்பர இயக்குனர்கள், தயாரிப்பாளர்கள் எல்லோரும் அவரை நன்றாக மதிக்கிறார்கள், திறமைசாலிகளுடன் தொடர்ந்து வேலை செய்யும் வாய்ப்புக் கிடைக்கிறது. பிறகு எதற்கு சினிமா?

பல வருடங்கள் திரைப்பட இசை

வாசித்ததாலோ என்னவோ, திலீபுக்கு அதன்மீது ஒரு சலிப்பு ஏற்பட்டிருந்தது. மாதக்கணக்காகக் கஷ்டப்பட்டு ஐந்து பாடல்களை உருவாக்கினாலும், அவை சரியாகப் படமாக்கப்படாவிட்டால், ரசிகர்கள் ஊதித் தள்ளிவிட்டுப் போய்விடுவார்கள், அத்தனை உழைப்பும் வீணாகிவிடும்.

அதற்குப் பதிலாக, தினம் தினம் புதுப்புது விளம்பரங்களில் வேலை செய்கிற சவால் அவருக்குப் பிடித்திருந்தது. ஓழிந்த நேரத்தில் நண்பர்களுடன் இசைப் பயிற்சி செய்யலாம், மேடை நிகழ்ச்சிகளில் பங்கேற்கலாம், போதாதா?

இப்படி யோசித்த திலீப், திரைப்பட வாய்ப்புகளை நினைத்து ஏங்கவில்லை, ஸ்டூடியோ ஸ்டூடியோவாக ஏறி, இறங்கவில்லை, எப்போதாவது வாய்ப்பு வந்தால் பார்த்துக்கொள்ளலாம் என்று

அலட்சியமாக இருந்துவிட்டார்.

ஒருவேளை, மணி ரத்னத்துக்குப் பதில் வேறொரு தயாரிப்பாளரோ, இயக்குனரோ திலீபை அழைத்திருந்தால், அவர் சினிமாவுக்குள் நுழைந்திருக்க வாய்ப்புகள் மிகக் குறைவு. அந்த அளவுக்கு விளம்பர உலகம் அவரை ஈர்த்திருந்தது.

மணி ரத்னத்தின் கதை சொல்லும் பாணி, படமாக்க உத்திகள் எல்லாமே திலீபுக்கு மிகவும் பிடித்தமானவை. ஒரு நல்ல பாடலை, அவர் தனது காட்சிகளின்மூலம் பலமடங்கு சிறப்பாக்கிக் காண்பித்துவிடுவார் என்பதை திலீப் அனுபவப்பூர்வமாக உணர்ந்திருந்தார்.

ஆகவே, இப்போது மணி ரத்னம் தன்னை அழைக்கிறார் என்றதும்,

திலீபுக்குள் ஒரு புது ஆர்வம். போய்ப் பார்த்தால்தான் என்ன?

திலீப் மணி ரத்னத்தைச் சந்தித்தார், 'என்னுடைய அடுத்த படத்துக்கு ஒரு புதிய இசையமைப்பாளரைத் தேடிக்கொண்டிருக்கிறேன். உங்களுடைய இசையில் இருக்கும் புதிய குணிதணஞ் எனக்குப் பிடித்திருக்கிறது, நாம் சேர்ந்து வேலை செய்வோமா?' என்று கேட்டார் மணி ரத்னம்.

இளையராஜாப் பிரியரான மணி ரத்னம், இப்போது இன்னொரு புது இசையமைப்பாளரைத் தேடத் தொடங்கியதற்குப் பல காரணங்கள் சொல்கிறார்கள். அந்த வதந்திகள், ஊகங்களுக்குள் நாம் போகவேண்டியதில்லை. இப்போதைக்கு, மணி ரத்னம் திலீபைத் தனது படத்தில் பயன்படுத்த விரும்பினார்

என்பதுமட்டும்தான் நமக்கு முக்கியம்.

இந்தப் படம், ‘ரோஜா’ அல்ல. அதற்குமுன்னால் மணி ரத்னம் இன்னொரு படத்தை உருவாக்கத் திட்டமிட்டிருந்தார். அதுவிஷயமாகதான் இப்போது திலீபிடம் பேசிக்கொண்டிருந்தார்.

திலீபுக்கும், மணி ரத்னம் படத்தில் வேலை செய்வது சந்தோஷம்தான். ஆனால், முப்பது செகண்ட் விளம்பரப் படத்துக்கு இசையமைப்பதும், முழு நீள சினிமாவுக்கு இசையமைப்பதும் ஒன்றில்லையே?

மணி ரத்னம் அதைப்பற்றிக் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. திலீபின் இசையில் இருந்த புதுமை அவருக்குப் பிடித்திருந்தது. இதே ஒலி, இதே துல்லியத்தைப்

பாடல்களில், பின்னணி இசையில் கொண்டுவந்துவிட்டால் இந்த இளைஞன் மிகப் பெரிய அளவில் வரமுடியும் என்று அவருக்கு நம்பிக்கை.

இப்படி மணி ரத்னமும் திலீபும் மாறி மாறிப் பேசிக்கொண்டிருந்தார்களேதவிர, அந்தப் படம் தொடங்குவதாகத் தெரியவில்லை. கடைசியில், கே. பாலச்சந்தர் தயாரிப்பில் 'கவிதாலயா'வுக்காக 'ரோஜா' என்கிற புதிய படத்திற்கான வேலைகளில் இறங்கினார் மணி ரத்னம்.

இனிமேல், திலீப் தன்னுடைய முடிவைத் தள்ளிப்போட முடியாது, சினிமாவா, அல்லது விளம்பரப் படங்களா என்று அவர் உடனடியாக ஒரு முடிவெடுத்தாகவேண்டும்.

இத்தனை வருடங்களில், திலீப்

எத்தனையோ விளம்பரப் படங்களுக்கு இசையமைத்திருக்கிறார். இந்தியாமுழுக்கப் பல லட்சம் குழந்தைகள், இளைஞர்கள், முதியவர்கள் அவர் மெட்டுப் போட்ட பாடல்களை ஆனந்தமாகப் பாடி மகிழ்ந்திருக்கிறார்கள். ஆனால், இதையெல்லாம் செய்தது திலீப்தான் என்று அவர்களுக்குத் தெரியாது.

அந்த அங்கீகாரம், சினிமாவில் உடனடியாகக் கிடைக்கும். கேஸட்டில், படத்தின் டைட்டில் கார்டில் பெயர் போடுவார்கள், பாடல்கள் பிரபலமானால், கூடவே திலீபின் பெயரும் பிரபலமடையும்.

ஆனால், திலீப் 'ரோஜா'வுக்கு இசையமைக்க ஒப்புக்கொண்டுவிட்டால், அதன்பிறகு அவரால் விளம்பரப் படங்களில் வேலை செய்யமுடியாது, மற்ற இசையமைப்பாளர்களுக்கு

வாசிக்கமுடியாது, பல மாதங்கள் இந்த ஒரு வேலையில்மட்டுமே முழு கவனம் செலுத்தி உழைக்கவேண்டியிருக்கும்.

இத்தனை கஷ்டப்பட்டபிறகு, ஒருவேளை அந்தப் படம் சரியாக வராவிட்டால்? பாடல்கள் ‘ஹிட்’ ஆகாமல் ரசிகர்கள் திலீபை நிராகரித்துவிட்டால்?

பிரச்னையே இல்லை, திலீப் பழையபடி விளம்பரப் படங்களுக்கு இசையமைக்கச் சென்றுவிடலாம். அங்கே அவருடைய இடத்தை யாராலும் பிடுங்கமுடியாது.

ஆனாலும், சினிமா வாய்ப்பை ஏற்றுக்கொள்வதா, வேண்டாமா என்கிற திலீபின் குழப்பம் தீரவில்லை. அதற்கு ஒரு முக்கியமான காரணம், சம்பள விவகாரம்!

’ரோஜா’ படத்துக்கு

இசையமைப்பதற்காக, அவருக்கு இருபத்தைந்தாயிரம் ரூபாய் சம்பளம் பேசப்பட்டிருந்தது. திலீபின் விளம்பர வருமானத்தோடு ஒப்பிடும்போது, இது மிக மிகக் குறைவு.

அப்போது திலீப் ஒவ்வொரு விளம்பரத்திற்கும் குத்துமதிப்பாகப் பதினைந்தாயிரம் ரூபாய் சம்பாதித்துக்கொண்டிருந்தார். அந்தக் கணக்கின்படி பார்த்தால், இரண்டு, மூன்று நாள் உழைப்பில், இந்த இருபத்தைந்தாயிரம் ரூபாயை அவர் சம்பாதித்துவிடுவார்.

ஆக, சினிமாவுக்குப் போனால், திலீபுக்குப் பண வரவெல்லாம் இல்லை, நஷ்டம்தான்.

என்றாலும், மணி ரத்னத்துடன் இணைந்து வேலை செய்கிற

வாய்ப்புக்காக, இந்தச் சிறிய இழப்பைப் பொருட்படுத்தவேண்டாம் என்று தீர்மானித்தார் திலீப். 'ரோஜா'வுக்கு இசையமைக்க ஒப்புக்கொண்டுவிட்டார்.

இந்த விஷயம் கேள்விப்பட்ட திலீபின் இசை நண்பர்கள் அவருக்கு வாழ்த்துச் சொன்னார்கள், 'என்னப்பா? இனிமே சினிமாதானா?' என்று விசாரித்தார்கள்

'நிச்சயமா இல்லை' என்றார் திலீப், 'கொஞ்ச நாள் அங்கே இருப்பேன், நல்லாச் சம்பாதிச்சுகிட்டு, அப்புறம் இங்கேயே திரும்பி வந்துடுவேன்'

நிஜமாகவே, திலீப் அப்போது அப்படி ஒரு மனோநிலையில்தான் இருந்தார். தன்னுடைய இசை பாணிக்குச் சினிமா ஒத்துவரும் என்று அவருக்குத் தோன்றவில்லை. ஒரு படமோ, இரண்டு படமோ முயற்சி செய்து

பார்ப்பது, ஒத்துவராவிட்டால் மறுபடி விளம்பரப் படங்கள், நண்பர்களோடு இசை நிகழ்ச்சிகள் என்று திரும்பி வந்துவிடலாம் என்பதுதான் அவருடைய திட்டம்.

காலம், அவருக்கு வேறு திட்டங்களைத் தயாரித்துவைத்திருந்தது!

# 7

# சின்னச் சின்ன ஆசை

மணி ரத்னம் திலீபைத் தன்னுடைய படத்தில் வேலை செய்ய அழைத்தபோது, அவர் வைத்த ஒரே நிபந்தனை, ‘உன்னுடைய இசை, மற்ற எல்லோரும் தருவதைப்போல் இருக்கக்கூடாது, அதில் ஏதாவது புதுசாக இருக்கவேண்டும்’

அவருடைய எதிர்பார்ப்பு நியாயமானதுதான் என்று திலீபுக்குப் புரிந்தது. வழக்கமான

இசையைத் தருவதற்குப் பழைய இசையமைப்பாளர்கள் போதுமே. அவர்களால் தரமுடியாத ஒரு புது ஒலியைக் கொடுத்தால்தானே நான் இந்தப் படத்தில் இருப்பதற்கு ஓர் அர்த்தம் கிடைக்கும்?

மற்ற இசையமைப்பாளர்களின் தாக்கம் இல்லாத, புதுமாதிரியான ஓர் இசையைத் தன்னால் வழங்கமுடியும் என்று திலீபுக்கு முழு நம்பிக்கை இருந்தது. ஆனால், அப்படிப்பட்ட ஒரு புதிய இசையை மக்கள் ஏற்றுக்கொள்வார்களா? ஒருவேளை, திலீப் முயற்சி செய்யும் புதிய பாணி இசை அவர்களுக்குப் பிடிக்காமல் போய்விட்டால்?

அந்தப் பயத்தினால்தான், திலீப் தன்னுடைய இரண்டாவது படத்தைப்பற்றிக் கற்பனைகூடச் செய்யவில்லை, ‘என்னுடைய

வாழ்நாளில் இந்த ஒரு படத்துக்குதான் நான் இசையமைக்கப்போகிறேன்’ என்று நினைத்துக்கொண்டு, எந்த மனத்தடைக்கும் இடம் கொடுக்காமல் வேலை செய்ய ஆரம்பித்தார்.

ஆரம்பத்திலேயே மணி ரத்னம் தன்னுடைய எதிர்பார்ப்புகளைத் தெளிவாகச் சொல்லிவிட்டதால், திலீபுக்குத் தைரியமும் தன்னம்பிக்கையும் கூடியிருந்தது. தேர்ந்தெ இசை ரசிகரான மணி ரத்னத்துக்குப் பிடிக்கும்படியான பாடல்களை உருவாக்கவேண்டும் என்கிற சவால் அவருக்கு மிகவும் பிடித்திருந்தது.

‘ரோஜா’வின் கதை மிகவும் உணர்ச்சிபூர்வமானது. ஒரு கிராமத்துப் பெண், தீவிரவாதிகளிடம் சிக்கிக்கொண்ட தன்னுடைய கணவனை மீட்டுவருகிறாள். இந்தச் சீரியஸான கதைக்குள், ஒரு மென்மையான காதலை

ஒளித்துவைத்திருந்தார் மணி ரத்னம்.

திலீபின் ‘லியோ காஃபி’ ஹீரோ அர்விந்த் சாமிதான் இந்தப் படத்தின் கதாநாயகன். அவர் ஏற்கெனவே மணி ரத்னத்தின் ‘தளபதி’ படத்தில் ஒரு சின்ன வேடத்தில் வந்து நல்ல பெயர் வாங்கியிருந்தார். ஆகவே, ரசிகர்கள் மத்தியில் அவர் கதாநாயகனாக அறிமுகமாகும் இந்தப் படத்துக்குப் பெரும் எதிர்பார்ப்பு இருந்தது.

’ரோஜா’ படத்தின் பின்பகுதி, முழுக்க முழுக்க சீரியஸாகச் செல்லக்கூடியது. ஆகவே, முன்பகுதியைத் தன்னுடைய பாணியில் கலகலப்பாகவும் சுவாரஸ்யமாகவும் உருவாக்கியிருந்தார் மணி ரத்னம்.

இந்தக் கதையைப் போரடிக்காமல் நகர்த்திச் செல்வதற்காக, ஆங்காங்கே

பாடல்கள் வேண்டும். அவை சும்மா ஏனோதானோ என்று இருந்துவிடாமல், எல்லோரும் ரசிக்கக்கூடியவகையில் அமையவேண்டும். இங்கேதான், திலீபிடம் மணி ரத்னம் நிறைய எதிர்பார்த்தார்.

இசையமைப்பைப் பொறுத்தவரை, திலீப் சந்தித்த ஒரு மிகப் பெரிய சவால், மணி ரத்னத்தின் முந்தைய படமான ‘தளபதி’யில் பாடல்கள், பின்னணி இசை எல்லாமே முதல் தரமாக அமைந்திருந்தன. இளையராஜாவின் இசை இல்லாமல் அந்தப் படத்தை யாராலும் கற்பனை செய்துகூடப் பார்க்கமுடியாது.

ஆனால், ‘தளபதி’ ரிலீஸுக்குப்பிறகு, மணி ரத்னமும் இளையராஜாவும் பிரிந்துவிட்டார்கள். இந்தச் செய்தியைப் பரபரப்பாக வெளியிட்ட பத்திரிகைகள், ’இளையராஜாவின் இடத்தை யாரால்

நிரப்பமுடியும்?' என்று கேள்வி எழுப்பின. 'இனிமேல் மணி ரத்னத்தின் படங்களில் பாடல்களின் தரம் குறைந்துவிடும்' என்று ரசிகர்களும் வெளிப்படையாகவே பேசினார்கள்.

இதனால், திலீப் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், முதல் படத்திலேயே அவர் இளையராஜாவுடன் நேரடியாக ஒப்பிடப்படும் நிலைமை ஏற்பட்டுவிட்டது. அவருடைய பாடல்கள் ஒவ்வொன்றையும், மக்கள் 'தளபதி'யுடன் ஒப்பிட்டுப் பேசுவார்கள், ஒரு சின்னக் குறை தெரிந்தாலும், பூதாகரமாகப் பெரிதுபடுத்துவார்கள்.

இந்தப் பிரச்னையைத் தவிர்ப்பதற்காகவே, வழக்கமான பாணியிலிருந்து விலகி, வேறுவிதமான ஓர் இசையை உருவாக்க முடிவெடுத்தார் திலீப். மணி ரத்னம் அவரிடம் எதிர்பார்த்ததும் அதைத்தான்.

அதுவரை, மணி ரத்னத்தின் பெரும்பாலான படங்களுக்குக் கவிஞர் வாலிதான் பாடல் எழுதிக்கொண்டிருந்தார். இந்தமுறை அதிலும் ஒரு மாற்றத்தைக் கொண்டுவந்தார் மணி ரத்னம், அனைத்துப் பாடல்களையும் எழுதுவதற்கு வைரமுத்து ஒப்பந்தம் செய்யப்பட்டார்.

உடனடியாக, தயாரிப்பாளர் பாலச்சந்தர் அலுவலகத்தில் இருந்து வைரமுத்துவுக்குத் தொலைபேசி அழைப்பு பறந்தது, ‘மணி ரத்னத்தின் அடுத்த படத்தில் நீங்கள்தான் எல்லாப் பாடல்களையும் எழுதவேண்டும்’

’சரி, ஆனால், இந்தப் படத்துக்கு யார் இசை?’

’புதிதாக ஓர் இசையமைப்பாளரை அறிமுகப்படுத்துகிறோம், நீங்கள் உடனே புறப்பட்டு வந்தால், அவரைச் சந்திக்கலாம்’

பல ஆண்டுகள் முன்பாக, வைரமுத்துவும் இளையராஜாவும் இணைந்து நூற்றுக்கணக்கான அற்புதப் பாடல்களைத் தந்திருக்கிறார்கள். அதன்பிறகு, சில கருத்து வேறுபாடுகள் காரணமாக இருவரும் பிரிந்துவிட்டார்கள்.

ஆகவே, மணி ரத்னத்தின் கோட்டையில் இளையராஜாவுடைய இடத்தைப் பிடித்திருக்கும் அந்தப் புது இளைஞர் யார் என்று தெரிந்துகொள்ள வைரமுத்துவுக்கு ஆவல். உடனடியாக பாலச்சந்தர் அலுவலகத்துக்குப் புறப்பட்டுச் சென்றார்.

வைரமுத்து அந்த அலுவலகத்தினுள் நுழைந்தபோது, முன் அறையிலேயே ஓர் இளைஞர் இசைக் கருவிகளுக்கு மத்தியில் உட்கார்ந்திருந்தார். அவரைப் பார்த்ததும் வைரமுத்துவுக்கு ஆச்சர்யம் தாங்கவில்லை, 'திலீப்?' என்று வியப்போடு அழைத்தார்.

ஏற்கெனவே, 'புன்னகை மன்னன்' திரைப்படத்துக்கான ஒலிப்பதிவு நடைபெற்றபோது வைரமுத்துவுக்கு திலீப் அறிமுகமாகியிருந்தார். அப்போதே திலீபின் இசைத் திறமை, தொழில்நுட்ப ஆர்வத்தையெல்லாம் பார்த்து அசந்துபோயிருந்தார் வைரமுத்து.

அன்றைக்கு இளையராஜாவின் உதவியாளராக இருந்த அதே திலீப்தான், இன்றைக்கு 'ரோஜா'வின் இசையமைப்பாளர் என்று தெரிந்துகொண்டதும், வைரமுத்துவுக்கு

மிகவும் உற்சாகமாக இருந்தது. ’ரோஜா’வுக்காக எழுதவேண்டிய பாடல்களைப்பற்றி விரிவாகப் பேச ஆரம்பித்தார்.

ஒரே பிரச்னை, திலீபின் மெட்டுகளை இன்னும் மணி ரத்னம் ஏற்றுக்கொள்ளவில்லை. திலீப் எதை வாசித்துக் காண்பித்தாலும், அவர் முகத்தில் ஒரு சின்னச் சலனம்கூட இல்லை. மௌனமாகக் கேட்டுக்கொண்டிருப்பார். பிறகு, ‘சரி அடுத்தது?’ என்று வேறொரு மெட்டுக்குத் தாவிச் சென்றுவிடுவார். பழைய மெட்டு ஏற்கப்பட்டதா, அல்லது நிராகரிக்கப்பட்டதா என்று சொல்லவேமாட்டார்.

இதனால், மணி ரத்னத்துக்குப் பல மெட்டுகளை திலீப் இசைத்துக் காண்பித்தபிறகும், இதில் எதை

அடிப்படையாக வைத்துப் பாடல்களை உருவாக்குவது என்கிற விஷயம் இன்னும் முடிவாகவில்லை. வெறுத்துப்போன திலீப், ஒருவேளை மணி ரத்னத்துக்குத் தன்னுடைய இசை பிடிக்கவில்லையோ என்றுகூட யோசிக்க ஆரம்பித்துவிட்டார்.

ஒரு வாரம், இரண்டு வாரம், மணி ரத்னத்திடமிருந்து எந்தப் பதிலும் வரவில்லை. ‘சரி, இந்தப் படம் அவ்வளவுதான்’ என்று முடிவு கட்டிவிட்டார் திலீப்.

கடைசியாக, மணி ரத்னம் திலீபைத் தொடர்பு கொண்டார், ‘ரோஜா பாடல்களைப்பற்றி இன்றைக்கு இறுதி முடிவு எடுத்துவிடலாம், உடனே புறப்பட்டு வாருங்கள்’

அந்தச் சந்திப்பின்போதுதான்,

மணி ரத்னம் எப்பேர்ப்பட்ட இசை ரசிகர் என்பது திலீபுக்குப் புரிந்தது. அதுவரை திலீப் வாசித்துக் காண்பித்த மெட்டுகளிலேயே, பழைய பாணியில் இருந்த அனைத்தையும் தூக்கி வீசிவிட்டு, புதுமையாக, அதுவரை யாரும் கேட்காதவிதமாக இருந்த மெட்டுகளைமட்டும் தேர்ந்தெடுத்துவைத்திருந்தார் மணி ரத்னம்.

இதன்மூலம், திலீபுக்கு இருந்த ஒரு மிகப் பெரிய குழப்பம் தீர்ந்தது: மற்றவர்கள் சொல்கிறார்களே என்பதற்காக, நான் பழைய பாதையையே பின்பற்றவேண்டியதில்லை, இளையராஜா அல்லது பிற இசையமைப்பாளர்களைப்போல் என்னுடைய பாடல்கள் ஒலிக்கவேண்டியதில்லை, இந்தப் படத்துக்கு நான் உருவாக்கும் புதிய

பாணி இசைதான் தேவை, அதை மக்கள் ஏற்றுக்கொள்வார்களா, இல்லையா என்பதைப்பற்றி அப்புறம் பார்த்துக்கொள்ளலாம்!

மணி ரத்னம் தேர்ந்தெடுத்த திலீபின் முதல் மெட்டு, கதாநாயகி ரோஜா தனது கிராமத்தில் உற்சாகமாகத் துள்ளிப் பாடும் தனிப் பாடல். ‘சின்னச் சின்ன ஆசை, சிறகடிக்க ஆசை’ என்று தொடங்கி, நுணுக்கமான இயற்கை வர்ணனையோடு, ஓர் இளம் பெண்ணின் மனோநிலையை அழகாகப் பிரதிபலிக்கும்வகையில் அந்தப் பாடலுக்கான வரிகளை எழுதி முடித்தார் வைரமுத்து.

இன்னொருபக்கம், திலீப் அந்தப் பாடலுக்கான இசைக் கோர்ப்புகளைக் கச்சிதமாக உருவாக்கிவிட்டார். இனிமேல், ஒரு பாடகியை

அழைத்துப் பாட வைத்துப் பதிவு செய்யவேண்டியதுமட்டும்தான் பாக்கி.

இங்கேயும், திலீப் ஒரு புதுமை செய்தார். இந்தப் பாடலுக்குப் பிரபலமான பெண் பாடகிகளைப் பயன்படுத்தாமல், மக்கள் அதிகம் கேட்டிருக்காத ஓர் இனிமையான குரலைத் தேர்ந்தெடுத்தார். அந்தப் பாடகியின் பெயர், மின்மினி!

கேரளாவில் பிறந்து வளர்ந்த மின்மினி, அதற்குமுன் இளையராஜா இசையில் ஒரு சில பாடல்களைப் பாடியிருந்தார். ஆனால், அவருடைய பெயரோ, குரலோ ரசிகர்கள் மத்தியில் அவ்வளவாகப் பிரபலமடையவில்லை.

இதனால், திலீப் தன்னுடைய முதல் பாடலுக்கு மின்மினியின் குரலைத் தேர்ந்தெடுத்தபோது, பலருக்கு ஆச்சர்யம். ஆனால், அந்தப் பாட்டுக்கு அவர்

குரல்தான் பொருந்தும் என்பதில் திலீப் உறுதியாக இருந்தார்.

அடுத்த பிரச்னை, இந்தப் பாடலை எங்கே ரெகார்ட் செய்வது?

அப்போதெல்லாம், சினிமாப் பாடல் பதிவு என்றால் அது ஒரு குட்டித் திருவிழாபோல நடைபெறும். பெரிய ஸ்டூடியோ, ஏகப்பட்ட இசைக் கலைஞர்கள் என்று அமர்க்களப்படுத்துவார்கள்.

சிறிது காலத்துக்குமுன்னால், அந்த இசைக் கலைஞர்களில் ஒருவராகக் கீபோர்ட் வாசித்துக்கொண்டிருந்தவர் திலீப். இப்போது, அவரே இசையமைப்பாளராகிவிட்ட சூழ்நிலையில், ரெகார்டிங் தியேட்டர் திருவிழா தனக்கு வேண்டாம் என்று முடிவு செய்தார் அவர்.

‘பெரிய ஸ்டூடியோ, நிறைய கலைஞர்கள் என்று வருகிறபோது, இசையமைப்பாளர் அவர்களிடம் நெருக்கமாகப் பேசிப் பழகி வேலை செய்யமுடியாது, வாத்தியக் கலைஞர்களுக்கும் போதுமான சுதந்தரம், திருப்தி கிடைக்காது’ என்றார் திலீப், ‘அதற்குப் பதிலாக, என் வீட்டிலேயே ஒரு சின்ன ஸ்டூடியோ இருக்கிறது, அங்கேயே எல்லாப் பாடல் பதிவையும் முடித்துவிடலாம்’

ஆனால், திலீப் வீட்டில் இருக்கும் ’பஞ்சதன்’ ஸ்டூடியோ, விளம்பரப் படங்களுக்கான இசையைப் பதிவு செய்வதற்காக உருவாக்கப்பட்டது. அங்கே போய்ச் சினிமா பாடல்களைப் பதிவு செய்யமுடியுமா? அப்படிச் செய்தால், அந்தப் பாடல்களைத் திரை அரங்குகளில் ரசிகர்கள் மத்தியில் கேட்கிறபோது தேவையான ஒலி,

துல்லியம் இருக்குமா?

‘அதைப்பற்றி நீ கவலைப்படாதே திலீப், எல்லாம் நான் பார்த்துக்கொள்கிறேன்’ என்றார் ஹெச். ஸ்ரீதர். திலீபின் நீண்ட நாள் நண்பரான அவர்தான், ‘ரோஜா’வின் சவுண்ட் எஞ்சினியர்.

ஸ்ரீதர் கொடுத்த ஊக்கத்தில், தனது முதல் சினிமாப் பாடலைத் தன்னுடைய வீட்டிலேயே உள்ள ‘பஞ்சதன்’ ஸ்டூடியோவிலேயே பதிவு செய்வதாக முடிவெடுத்துவிட்டார் திலீப். அந்தப் பாடலில் என்னென்ன இசைக் கருவிகள் தேவை என்று கவனித்து, அவற்றை வாசிக்கக்கூடிய கலைஞர்களுக்குத் தகவல் பறந்தது. ஒலிப்பதிவுக்கான மற்ற ஏற்பாடுகள் மளமளவென்று நடந்துகொண்டிருந்தன.

ஆனால், மறுநாள் காலை, பாடல்

பதிவுக்கு வருவதாக ஒப்புக்கொண்டிருந்த இசைக் கலைஞர்கள் யாரும் அந்தப் பக்கமே எட்டிப்பார்க்கவில்லை. அவர்களுக்காகக் காத்திருந்து காத்திருந்து வெறுத்துப்போனார் திலீப்.

என்ன ஆச்சு? ஏன் யாரும் வரவில்லை?

திலீப் தனது முதல் பாடலைப் பதிவு செய்யத் திட்டமிட்டிருந்த அதே நாளில், வேறொரு புதிய படத்துக்கும் பாடல் பதிவு தொடங்கியது. அங்கே மொத்தம் நான்கு பாடல்களைப் பதிவு செய்வதாக அறிவித்திருந்தார்கள்.

ஆகவே, திலீபின் பாடல் பதிவுக்கு வருவதாக ஒப்புக்கொண்டிருந்த இசைக் கலைஞர்கள் யோசித்தார்கள், இங்கே ஒரு பாட்டுக்கு வாசிப்பதற்குப் பதிலாக, அங்கே போய் நான்கு பாடல்களுக்கு வாசிக்கலாம், நிறையச் சம்பாதிக்கலாம்

என்று முடிவெடுத்துவிட்டார்கள்.

திலீபால் அவர்களுடைய மனோநிலையை நன்றாகப் புரிந்துகொள்ளமுடிந்தது. ஆனால், இப்படி ஒருவரை நம்பவைத்துக் கழுத்தறுப்பது தப்பில்லையா?

இப்போது என்ன செய்வது? பாடல் பதிவை இன்னொரு நாளைக்குத் தள்ளி வைப்பதா? அன்றைக்கும் இந்த இசைக் கலைஞர்களை வேறு யாராவது கொத்திக்கொண்டு போய்விடமாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்?

குழப்பத்தில் இருந்த திலீப், தன்னுடைய தாயிடம் சென்றார், பிரச்னையை விளக்கிச் சொல்லி அவருடைய அறிவுரையைக் கேட்டார்.

திலீபின் அம்மாவுக்கு, இசையைப்பற்றி

அதிகம் தெரியாது. ஆனால், திலீப் இந்தத் துறையில் ஈடுபடவேண்டும் என்று தீர்மானித்தது அவர்தான். ஆகவே, இந்த விஷயத்தில் அவர் ஒரு முடிவெடுத்தால் அது சரியாக இருக்கும் என்று திலீப் நம்பினார்.

விஷயத்தைத் தெரிந்துகொண்ட அவர், 'நீ ஒண்ணும் கவலைப்படாதேப்பா, எல்லாம் நல்லபடியா நடக்கும்' என்றார், 'உனக்கு என்னோட ஆசிர்வாதம் எப்பவும் உண்டு, அதுக்குமேல கடவுள் அருள் இருக்கு, அவர்மேல பாரத்தைப் போட்டுட்டு ரெகார்டிங்கை நடத்து'

'ஆனா, இசைக் கலைஞர்கள் யாரும் வரலையேம்மா'

'எப்பவும் இன்னொருத்தரை நம்பி நீ இருக்கக்கூடாதுப்பா, உன்னால தனியா என்ன செய்யமுடியும்ன்னு யோசி,

அதுதான் உன்னோட இசை’

மிக எளிய வாக்கியங்களில் அவர் சொன்ன இந்த விஷயத்தை, திலீப் எப்போதும் மறக்கவில்லை. இன்றுவரை, தன்னுடைய இசை தொடர்பான விஷயங்களில் அவர் மற்றவர்களின் ஆலோசனைகளை தாராளமாகக் கேட்டுக்கொள்வார், அதில் உள்ள நல்ல விஷயங்களை ஏற்றுக்கொண்டு செயல்படுத்துவார். ஆனால் அதேசமயம், அவர்களை நம்பித் தான் இருக்கும்படியான ஒரு நிலைமை ஏற்பட்டுவிடாதபடி கவனமாகப் பார்த்துக்கொள்வார்.

அன்றைக்கு, திலீபின் முதல் பாடலை இசையமைக்க வாத்தியக் கலைஞர்கள் யாரும் வரவில்லை. ஆகவே, அவர்களுடைய துணை இல்லாமல், அந்தப் பாடலுக்குத் தேவையான எல்லா

இசைத் துணுக்குகளையும் கீபோர்ட், சிந்தசைஸர், கணினி உதவியுடன் அவரே வாசித்து உருவாக்கத் தொடங்கினார். நடுவில் தேவைப்பட்ட ஓர் 'ஏலேலோ' ஹம்மிங்கைக்கூட, திலீபே சொந்தக் குரலில் பாடிவிட்டார்.

கடைசியாக, இப்படிச் சேர்த்த இசை முழுவதையும், மின்மினியின் குரலில் பதிவு செய்யப்பட்ட பாடல் வரிகளோடு இணைத்துப் பார்த்தபோது, மிக மிக வித்தியாசமான ஓர் அனுபவம் கிடைத்தது. அதுவரை தமிழில் அப்படி ஓர் ஒலியை யாரும் கேட்டிருக்கமுடியாது என்கிற அளவுக்குப் புதுமையான ஒரு பாடலை உருவாக்கிமுடித்திருந்தார் திலீப்.

இது ஏதோ ஏ. ஆர். ரஹ்மானைப் புகழ்வதற்காகச் சொல்லப்படுகிற வாசகம் இல்லை. நிஜமாகவே, அத்தனை ஆண்டு காலத் தமிழ்த் திரைப்படப்

பாடல் பதிவு வழிமுறைகளையெல்லாம், ரஹ்மானின் அந்த முதல் பாடல் உடைத்துப்போட்டுவிட்டது. அதற்குமுன் பல படங்களில் 'டிஜிட்டல்' இசை பதிவு செய்யப்பட்டிருந்தாலும்கூட, அதன் முழுப் பரிமாணத்தை வெளிப்படுத்தியது, சிறப்பாகப் பயன்படுத்திக்கொண்டது ரஹ்மான்தான்.

பின்னாள்களில், ஏ. ஆர். ரஹ்மானின் இசையை வெறும் 'கம்ப்யூட்டர் உருவாக்கம்' என்று விமர்சனம் செய்தவர்கள் உண்டு. அவர்கள் கவனிக்கத் தவறிய ஒரு விஷயம், என்னதான் டிஜிட்டல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தினாலும், ரஹ்மானின் பாடல்கள் எப்போதும் 'வெளிநாட்டு இசை'யாக / அந்நியமாக ஒலிக்கவில்லை. அப்படி ஒலித்திருந்தால், மக்கள் அதனை உடனடியாக நிராகரித்திருப்பார்கள்.

கொஞ்சம் புரியும்படியான உதாரணத்தோடு சொல்வதென்றால், மற்றவர்கள் கையில் பேனா பிடித்துக் கவிதை எழுதிக்கொண்டிருந்தபோது, ரஹ்மான் அதனைக் கம்ப்யூட்டரில் தட்டி அழகாக அச்சிட்டுக் கொடுத்தார். 'கண்ணில் ஒத்திக்கிறமாதிரி இருக்கே' என்று மக்கள் விரும்பிப் படித்து ரசித்தார்கள்.

அதுபோல, ரஹ்மான் தமிழ்த் திரைப்பாடல்களின் வடிவத்தில் நிறையப் புதுமைகளைக் கொண்டுவந்தார். அதேசமயம், அந்த இசை எப்பேர்ப்பட்ட உணர்வுகளை உருவாக்கவேண்டும் என்பதற்கான உள்ளடக்கத்தை அவர் சிதைத்துவிடவில்லை.

இதைப்பற்றிப் பின்னால் விரிவாகப் பேசலாம். இப்போது, மீண்டும் திலீபின்

முதல் பாடலுக்குத் திரும்புவோம்.

திலீப் பதிவு செய்து போட்டுக் காண்பித்த அந்தப் பாடல், மணி ரத்னத்துக்கு மிகவும் பிடித்திருந்தது. இதே பாணியில் மற்ற பாடல்களையும் பதிவு செய்யலாம் என்று பச்சைக் கொடி காண்பித்துவிட்டார்.

உற்சாகமான திலீப், ஒவ்வொரு பாடலையும் மணிக்கணக்காக இழைத்து இழைத்து உருவாக்க ஆரம்பித்தார். எந்தப் பாடலும் ரசிகர்கள் ஒதுக்கித் தள்ளிவிடும்படி அமைந்துவிடக்கூடாது என்பதில் அவர் மிகக் கவனமாக இருந்தார்.

'சின்னச் சின்ன ஆசை'யைப் பாட மின்மினியைத் தேர்ந்தெடுத்ததுபோலவே, மற்ற பாடல்களிலும் திலீப் நிறைய ஆச்சர்யங்களை வைத்திருந்தார்.

இன்னும் சரியாகச் சொல்வதென்றால், எஸ். பி. பாலசுப்ரமணியம், சித்ராதவிர, ’ரோஜா’வில் பாடிய மற்ற பாடகர்கள் யாருமே பிரபலமானவர்கள் இல்லை.

‘புது வெள்ளை மழை இங்கு பொழிகின்றது’ என்கிற ‘தேநிலவு’ப் பாடலை உன்னி மேனன், சுஜாதா இணைந்து பாடினார்கள். இவர்கள் இருவருமே, முன்பு இளையராஜா இசையில் சில பாடல்களைப் பாடியவர்கள், ரொம்ப நாளைக்குப்பிறகு திலீப் இசையில்தான் இவர்களுடைய குரல்களை மீண்டும் கேட்க முடிந்தது.

இதேபோல், ‘தமிழா தமிழா’ என்கிற ஒரு பாடலுக்காக, பிரபல கஜல் பாடகர் ஹரிஹரனைத் தமிழுக்கு அழைத்துவந்தார் திலீப். படத்தின் ஒரே துள்ளாட்டப் பாடலான ‘ருக்குமணி’யை எஸ். பி. பாலசுப்ரமணியம், கே. எஸ்.

சித்ரா இணைந்து பாடினார்கள், அந்தக் குரலுக்குக் கொஞ்சமும் சம்பந்தமில்லாமல், ‘காதல் ரோஜாவே’ எனும் உருக்கமான பிரிவுத் துயரப் பாடலை எஸ். பி. பாலசுப்ரமணியம் பாடியிருந்தார்.

’அப்போதெல்லாம், எந்தத் தமிழ்ப் படத்தின் கேஸட்டை வாங்கினாலும், திரும்பத் திரும்ப ஒரேமாதிரியான குரல்களைத்தான் திரும்பத் திரும்பக் கேட்கவேண்டியிருக்கும்’ என்கிறார் ஏ. ஆர். ரஹ்மான், ’நான் இசையமைக்க ஆரம்பித்தபோதும், அதே குரல்களைதான் நான் பயன்படுத்தவேண்டும் என்று நண்பர்கள் அறிவுரை சொன்னார்கள், புது ஆள்களைப் பாடவைத்து ரிஸ்க் எடுக்காதே என்று பயமுறுத்தினார்கள்’

ஆனால், இந்த விஷயத்தில் திலீப்

மிகத் தெளிவாக இருந்தார்: ஒருவர் பிரபலமான பாடகர் என்பதால்மட்டும் அவரிடம் ஒரு பாட்டைத் தூக்கிக் கொடுத்துவிடமுடியாது, அந்தப் பாடலுக்கு யாருடைய குரல் பொருத்தமாக இருக்குமோ அவர்களைதான் பாடவைக்கவேண்டும், அவர்கள் புகழ் பெற்ற பாடகர்களா, புதியவர்களா என்று பார்க்கக்கூடாது.

ஏற்கெனவே, விளம்பரத்துறையில் வேலை பார்த்த காலகட்டத்தில் இந்த விஷயத்தை அனுபவப்பூர்வமாகப் புரிந்துகொண்டிருந்தார் திலீப். அவருடைய விளம்பரங்களில் பாடிய பல பாடகர்களின் பெயர்கூட யாருக்கும் தெரிந்திருக்காது, ஆனால் அந்தக் குரல், அதை எல்லோரும் ஞாபகத்தில் வைத்திருப்பார்கள்.

அதுமட்டுமில்லை. எல்லா

இசையமைப்பாளர்களும் திரும்பத் திரும்ப ஒரே குரல்களைப் பயன்படுத்திக்கொண்டிருந்தால், அப்புறம் புதிய பாடகர்களுக்கு யார் வாய்ப்புக் கொடுப்பார்கள்? மணி ரத்னம் விரும்பிய ‘புதிய ஒலி’க்கு, ‘புதிய குரல்’களும் தேவைப்படுமில்லையா?

இப்படிப் பல கோணங்களில் யோசித்துப் பார்த்தபிறகுதான், ‘ரோஜா’வுக்குப் புதிய பாடகர்கள் பலரைப் பயன்படுத்தி ‘ரிஸ்க்’ எடுக்கத் தீர்மானித்தார் திலீப். அந்தப் படத்தில் அவர் செய்த பல்வேறு சோதனை முயற்சிகளில், இதுவும் ஒன்று!

’ரோஜா’வின் பாடல் பதிவுகள் அனைத்தும் முடிந்துவிட்டன. அடுத்து, இசை வெளியீடுதான்.

அதற்குமுன்னால், மணி ரத்னம் அவரை அழைத்தார், ‘திலீப், கேஸட்டில் உன்

பெயர் எப்படி வரவேண்டும்?'

மணி ரத்னம் இப்படி ஒரு கேள்வியைக் கேட்கக் காரணம் உண்டு. 'ரோஜா' படம் உருவான அதே காலகட்டத்தில்தான், திலீப் முழுமையாக இஸ்லாமிய மதத்துக்கு மாறியிருந்தார்.

ஆகவே, இனிமேல் திலீப் தன்னுடைய சொந்தப் பெயரைப் பயன்படுத்தப்போவதில்லை என்பது உறுதியாகிவிட்டது. அதற்குப் பதிலாக, வேறு எந்தப் பெயரில் அவர் ரசிகர்களுக்கு அறிமுகமாக விரும்புகிறார்?

திலீப் நேராகத் தன்னுடைய குருநாதரிடம் சென்றார். தனக்குப் பொருத்தமான ஒரு பெயரைத் தேர்ந்தெடுத்துத் தரும்படி கேட்டுக்கொண்டார்.

அது சரி, யார் அந்த குருநாதர்? அவருக்கும் திலீபுக்கும் இடையே பழக்கம் ற்பட்டது எப்படி?

# 8

# நேற்று இல்லாத மாற்றம்

பதினொரு வயதில் தந்தையைப் பறிகொடுத்தபோது, திலீபுக்குச் சுத்தமாகக் கடவுள் நம்பிக்கையே போய்விட்டது.

அதன்பிறகு, அவர்களுடைய குடும்பம் பட்ட கஷ்டங்கள், அவமானங்கள் நிறைய, அப்போதெல்லாம் எந்தக் கடவுளும் அவர்களுக்குக் கை கொடுக்கவில்லை.

இதனால், கொஞ்ச நாளைக்கு நாத்திகராகவே சுற்றி அலைந்துகொண்டிருந்தார் திலீப். அப்போதும், அவருக்குள் ஒரு நிச்சயமில்லாத கேள்வி, குழப்பம் சுற்றிக்கொண்டே இருந்தது.

இந்த நேரத்தில்தான், சிறுவன் திலீப் எதேச்சையாக ஓர் இஸ்லாமியப் பெரியவரைச் சந்தித்தார். அவருடைய பெயர், கரிமுல்லா ஷா கதிரி.

திலீபை உற்றுக் கவனித்த கரிமுல்லா, அவருடைய எதிர்காலத்தைப்பற்றிப் பல விஷயங்களைச் சொல்லி ஆசிர்வதித்தார், 'இன்னும் பத்து வருடத்தில் நீ என்னைத் தேடி வருவாய்' என்று சொல்லிவிட்டு, அப்படியே திரும்பிச் சென்றுவிட்டார்.

'அந்தச் சம்பவம்தான், என்னுடைய வாழ்க்கையின் மிகப் பெரிய திருப்பு

முனை’ என்று ஒரு பேட்டியில் குறிப்பிட்டிருக்கிறார் ஏ. ஆர். ரஹ்மான், ‘கரிமுல்லா ஷா சொன்னது அனைத்தும் அப்படியே நடந்தது, அதன்பிறகு, எனக்கு இஸ்லாம் மதத்தின்மீதும், சூஃபியிஸத்தின்மீதும் ஆர்வம் பிறக்க ஆரம்பித்தது’

அப்போதும், திலீப் குடும்பம் முழுவதும் உடனடியாக இஸ்லாமுக்கு மாறிவிடவில்லை. அதற்குக் கிட்டத்தட்ட பத்து வருடங்கள் ஆனது.

இந்தக் காலகட்டத்தில், திலீபும் அவருடைய தாயும் பல தர்காக்கள், மசூதிகளுக்குச் சென்றார்கள். தினமும் மூன்று மணி நேரம் செலவிட்டு அரபி மொழி கற்றுக்கொண்டு, இஸ்லாமிய, சூஃபி இலக்கியங்களை, ஞானிகளின் வாழ்க்கை வரலாறுகளை, அவர்கள் சொன்ன தத்துவங்களையெல்லாம்

தேடிப் பிடித்துப் படிக்க ஆரம்பித்தார் திலீப்.

அதன்பிறகுதான், திலீப் மனத்துக்குள் ஓர் அமைதி வந்தது. எதையும் மேலோட்டமாகப் பார்க்காமல் ஆழ்ந்து யோசிக்கக் கற்றுக்கொண்டார், ஜெயித்தபோது கர்வம் கொள்ளாமலும், தோற்றபோது முடங்கிப்போகாமலும் இருக்கப் பழகிக்கொண்டார், சாதாரணமாகவே அதிகம் பேசாதவர், இப்போது பெரும்பாலான நேரங்களில் மௌனத்தையே தனது மொழியாக ஏற்றுக்கொள்ள ஆரம்பித்தார், அவரிடம் எப்போதாவது எட்டிப்பார்த்த கெட்ட பழக்கங்கள்கூட, இருந்த இடம் தெரியாமல் மறைந்துபோயின.

அதுவரை, தாழ்வு மனப்பான்மையில் தவித்துக்கொண்டிருந்த திலீப், அதன்பிறகுதான் நிஜமாகவே

முன்னேறுவதாக நினைத்தார். அவருடைய வார்த்தைகளிலேயே சொல்வதென்றால், 'மீண்டும் புதிதாகப் பிறந்ததுபோல் உணர்ந்தேன்'

கரிமுல்லா ஷா கதிரி சொன்ன எல்லா விஷயங்களும் திலீப் வாழ்க்கையில் அப்படியே நடந்தன. இசைக் கருவிகளை வாடகைக்கு விடுகிறவராகவும் கீபோர்ட் வாசிப்பவராகவும் திரைத்துறையில் நுழைந்த திலீப், அடுத்த பத்து வருடங்களில் திறமையான இசைக் கலைஞராகவும், விளம்பரத்துறையில் கை தேர்ந்த இசையமைப்பாளராகவும் வளர்ந்தார், நன்றாகச் சம்பாதித்தார்.

இப்படிச் சம்பாதித்த பணத்தை வைத்து, தன்னுடைய வீட்டிலேயே 'பஞ்சதன்' என்கிற பெயரில் ஒரு சிறிய ஒலிப்பதிவுக் கூடத்தை அமைத்தார் திலீப். இதனை அடிக்கல் நாட்டித் தொடங்கிவைத்தவர்,

அதே கரிமுல்லா ஷா கதிரிதான்!

ஒருகட்டத்தில், திலீபும் அவருடைய குடும்பமும் இஸ்லாம் மதத்துக்கு மாறுவதாக முடிவெடுத்துவிட்டார்கள். திலீபுக்கு ‘அப்துல் ரஹ்மான்’ என்கிற புதிய பெயர் சூட்டப்பட்டது. அவருடைய தாய் கஸ்தூரி, ‘கரீமா பேகம்’ ஆனார், தங்கைகள் பாலா, ரேகா இருவரும், தலாத், இஸ்ரத் எனப் பெயர் மாறினார்கள்.

சிறிது காலத்துக்குப்பிறகு, திலீபின் அக்கா காஞ்சனாவும் ‘ரெஹானா’ என்று பெயர் மாற்றிக்கொண்டு இஸ்லாம் மதத்தைத் தழுவினார். பின்னாள்களில் ஏ. ஆர். ரஹ்மானைப்போலவே ரெஹானாவும், அவருடைய மகன் ஜி. வி. பிரகாஷ்குமாரும் திரையிசைத்துறையில் நுழைந்து புகழ் பெற்றிருக்கிறார்கள்.

1980களின் இறுதியில், தனிப்பட்டமுறையில் திலீப் தன்னுடைய பெயரை மாற்றிக்கொண்டுவிட்டார். ஆனால், வெளியே மற்றவர்களுக்கு அவருடைய புதிய (இஸ்லாமியப்) பெயர் இன்னும் அறிமுகமாகியிருக்கவில்லை.

குறிப்பாக, சினிமா, விளம்பரத்துறை வட்டாரங்களில் பலர் அவரை இன்னும் 'திலீப்' என்றுதான் அழைத்துக்கொண்டிருந்தார்கள். இந்தக் காலகட்டத்தில் வெளியான ஓர் இசை ஒலிநாடாவில்கூட, 'கீபோர்ட்: ஏ. எஸ். திலீப் குமார்' என்றுதான் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

'ரோஜா' படத்தின் இசை வெளியாகும்போது, தன்னுடைய புதிய பெயரை உலகத்திற்குத் தெளிவுபடுத்திவிடவேண்டும் என்று நினைத்தார் திலீப். அதற்காகதான் அவர்

தன்னுடைய ஞான குருவான கரிமுல்லா ஷா கதிரியைத் தேடிச் சென்றார்.

திலீபுக்காக, மொத்தம் ஏழு பெயர்களைத் தேர்ந்தெடுத்தார் கரிமுல்லா ஷா கதிரி, 'இதில் ஏதாவது ஒன்றை நீயே தேர்ந்தெடுத்துக்கொள்!'

ஏழு பெயர்களையும் படித்துப் பார்த்த திலீப், கடைசியாக ஒன்றைத் தேர்ந்தெடுத்தார்: அல்லா ரக்கா ரஹ்மான்!

அந்தப் பெயர், மணி ரத்னத்துக்கும் பிடித்திருந்தது. ரசிகர்கள் மனத்தில் சட்டென்று பதியவேண்டும் என்பதற்காக, 'அல்லா ரக்கா'வை இன்ஷியல்களாகச் சுருக்கினார், 'ஏ. ஆர். ரஹ்மான்' என்று மாற்றினார். அந்தப் பெயரில்தான், 'ரோஜா'வின் இசை ஒலிநாடாக்கள் அச்சிடப்பட்டன.

ரகசியப் பிரியரான மணி ரத்னம், தன்னுடைய படத்தின் தயாரிப்பு நிலையில் இருக்கும்போது, அதுபற்றி எந்தக் காட்சிகளோ, புகைப்படங்களோ, விவரங்களோ வெளிவராதபடி பார்த்துக்கொள்வார். படம் முழுக்க முடிவடைந்து வெளியீட்டுக்குத் தயாராகும்போதுதான், பத்திரிகையாளர்களைச் சந்தித்துப் பேசுவார்.

இதனால், மணி ரத்னம் படங்களின் பாடல்கள் வெளியாகும்போது, அதுவே ஒரு தனிப் பரபரப்பைக் கிளப்பிவிடும். பாடல் வரிகளைக் கேட்டு, அதன்மூலம் கதையை ஊகிக்கலாமே என்று ஒரு பெரிய கோஷ்டியே கிளம்பும்.

'ரோஜா' பாடல்களையும், மக்கள் அதேமாதிரியான பரப்பரப்புடன்தான்

அணுகினார்கள். இந்தமுறை அவர்களுடைய வாய்க்கு அவல் போடுவதுபோல, ஒரு புதிய இசையமைப்பாளர், ‘இளையராஜாவையே வெளியே அனுப்புற அளவுக்கு இந்தப் பையன் அப்படி என்னதான் செஞ்சிருக்கான், பார்த்துடலாமே’ என்கிற குறுகுறுப்பில், பலர் கேஸட் வாங்கினார்கள்.

அந்த ஆரம்பப் பரபரப்புக்குப்பிறகு, ‘ரோஜா’ ஒலிநாடாக்கள் அனைத்தும் ரஹ்மானின் இசைக்காகமட்டுமே விற்றன. கேட்டவர்களெல்லாம் ‘புதுசா இருக்குப்பா, நல்லாவும் இருக்கு’ என்று ஒரேமாதிரியாகப் பாராட்ட, அதுவரை கேஸட் வாங்காதவர்கள்கூடக் கடைக்கு ஓடினார்கள்.

அப்போது தமிழகத்தில் ஒரிஜினல் ஆடியோ கேஸட்களை வாங்குகிற

பழக்கம் குறைவு. பெரும்பாலானோர், ஒரே கேஸட்டில் இந்தப் படத்திலிருந்து இரண்டு பாட்டு, அந்தப் படத்திலிருந்து மூன்று பாட்டு என்று ஒருமாதிரியாகக் கலந்துகட்டிப் பதிவு செய்துகொள்வதுதான் வழக்கம்.

இப்படி 'ரோஜா'வின் ஒன்றிரண்டு பாடல்களைக் கேட்டவர்கள்கூட, கிறங்கிப்போனார்கள். 'இதற்குமுன் இப்படி ஒரு புதுசான இசையை, இனிமை கலந்த துல்லியத்தைக் கேட்டதே இல்லையே' என்று வியந்தார்கள், அதன்மூலம் படத்தின் பாடல் கேஸட் விற்பனை மேலும் அதிகரித்தது.

அந்த வருடம் ஆகஸ்ட் 15 சுதந்தர தினத்துக்கு, 'ரோஜா' திரைப்படம் வெளியானது. அன்று காலை தூர்தர்ஷன் புதுப்பாடல் நிகழ்ச்சியில் 'சின்னச் சின்ன ஆசை' ஒளிபரப்பப்பட்டபோது, அந்த

இசையும், மெட்டும், தனித்துவமான வாத்திய அமைப்பும், மணி ரத்னத்தின் அற்புதமான படமாக்கமும் மக்களை அப்படியே கட்டிப்போட்டுவிட்டது.

ரஹ்மான் நினைத்ததுபோலவே, அவருடைய ஒவ்வொரு பாடலையும் மணி ரத்னம் பலமடங்கு உயரத்துக்குக் கொண்டுசென்றிருந்தார். குக்கிராமத்து ரசிகர்கள்கூட, வைரமுத்துவின் வரிகளைக் கவனித்துக் கைதட்டினார்கள்.

அந்த முதல் படத்திலேயே, அதற்குமுன் தமிழில் வந்த எல்லாப் பாடல்களையும் ‘பழைய இசை’யாகத் தோன்றச் செய்துவிட்டார் ஏ. ஆர். ரஹ்மான். அதன்பிறகு, ஒவ்வோர் இசையமைப்பாளரும் இதேமாதிரியான நவீன ஒலியைக் கொடுத்தாகவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுவிட்டது.

முக்கியமாக, இளையராஜா ஏ. ஆர். ரஹ்மான் இவர்களில் யார் பெரியவர் என்கிற சர்ச்சை அப்போதே தொடங்கிவிட்டது. இன்றுவரை, ரஹ்மான் எவ்வளவுதான் முயன்றாலும், ரசிகர்கள் அவரை இளையராஜாவுடன் ஒப்பிட்டுப் பேசுவதை அவரால் தவிர்க்கமுடியவில்லை.

உண்மையில், 'ரோஜா' வெளியான புதிதில், அந்தப் படத்துடன் எந்தச் சம்பந்தமும் இல்லாத இளையராஜாவின் பெயர்தான் மீடியாக்களில் அதிகம் அடிபட்டது. அவரைப்போல இசையமைக்க இன்னொருவர் வரவே முடியாது என்று கற்பூரம் அணைத்துச் சத்தியம் செய்தவர்கள்கூட, இப்போது ரஹ்மானைத் திகைப்போடு பார்க்கவேண்டியதாயிற்று.

வேடிக்கையான விஷயம், ரஹ்மான்

இளையராஜாவைப்’போல’
இசையமைக்கவே இல்லை. அவருடைய பாணியிலிருந்து முற்றிலும் மாறுபட்டு ஒரு புதுவிதமான இசையைக் கொடுத்தார், அதுதான் அவருடைய வெற்றிக்கு முக்கியமான காரணம்.

ஒருவேளை, இந்த இசை ஒரு புதுமுக இயக்குனரின் படத்தில் வெளியாகியிருந்தால், யாரும் அதிகம் உணர்ச்சிவயப்பட்டிருக்கமாட்டார்கள். அதுவரை இளையராஜாவுடன்மட்டும் வேலை செய்த மணி ரத்னம், இப்போது ஒரு புது இளைஞரை அறிமுகப்படுத்துகிறார் எனும்போது, அவருடைய இசை இளையராஜாவுக்கு இணையாக, அல்லது அதனை மிஞ்சும் அளவுக்கு இருக்கிறதா என்று தெரிந்துகொள்ள எல்லோருக்கும் ஆவலாக இருந்தது.

ராஜா ரசிகர்களில் சிலராவது, நிச்சயமாக ரஹ்மானின் இசையை ரசித்திருப்பார்கள். ஆனால், தங்களுடைய பிரியத்துக்குரிய இசையமைப்பாளரை இன்னொருவர் மிஞ்சமுடியும் என்கிற எண்ணத்தைக்கூட அவர்களால் பொறுத்துக்கொள்ளமுடியவில்லை.

ஆனால் அதற்காக, 'ரஹ்மானின் இசை சுமாரானதுதான்' என்றும் அவர்களால் சொல்லமுடியவில்லை. குக்கிராமங்கள் தொடங்கி பெருநகரங்கள்வரை எல்லா இடங்களிலும் 'சின்னச் சின்ன ஆசை' ஒலித்துக்கொண்டிருக்கிறது.

ஆகவே, ராஜா ரசிகர்கள் ரஹ்மானை அலட்சியப்படுத்த முடிவு செய்தார்கள், 'இதெல்லாம் பிளாஸ்டிக் சங்கீதம், ரெண்டு மாசத்தில அழிஞ்சுபோயிடும், ஆத்மார்த்தமான (அதாவது இளையராஜாவுடைய) இசைதான்

நிலைத்து நிற்கும்' என்றார்கள்.

'ரோஜா' பாடல்களைக் கேட்ட எல்லோருக்குமே, மனத்தின் ஒரு மூலையில் இந்தக் கேள்வி இருந்தது, 'இவ்வளவு புதுசாக ஓர் இசையா' என்று ஆச்சர்யப்படுகிற அதே நேரத்தில், இந்த இளைஞரால் தொடர்ந்து இதேமாதிரியான நவீன இசையைக் கொடுத்துக்கொண்டிருக்கமுடியுமா, அல்லது கொஞ்ச நாள் பிரகாசமாக எரிந்துவிட்டு அணைந்து காணாமல் போய்விடுவாரா என்று அவர்களுக்குச் சந்தேகம்.

இதற்கும், இளையராஜாவின் பிரம்மாண்டமான ஆளுமைதான் காரணம். எண்பதுகளில் தமிழ் சினிமாவின் நிஜமான ராஜாவாகக் கொடி நாட்டியிருந்த அவருக்குப் போட்டியாகப் பல

இசையமைப்பாளர்கள் வந்தார்கள், போனார்கள், யாராலும் ராஜாவின் கோட்டையில் ஒரு சின்ன விரிசலைக்கூட உண்டாக்கமுடியவில்லை.

அதனால்தான், ரஹ்மான்மீது ரசிகர்களுடைய எதிர்பார்ப்பு அதிகமாகிவிட்டது. இனி வரும் ஒவ்வொரு படத்திற்கும் 'ரோஜா'வுக்கு இணையாக, அல்லது அதைவிட ஒரு படி மேலாக அவர் இசையமைக்காவிட்டால் போச்சு, 'நான் அப்பவே சொன்னேன்ல? இதெல்லாம் சும்மா நேத்திக்குப் பெஞ்ச மழையில முளைச்ச காளான், நாளைக்கே அழிஞ்சிடும்' என்று விமர்சனம் செய்ய ஆரம்பித்துவிடுவார்கள்.

உண்மையில், இதுபோன்ற ஒப்பீடுகள், விமர்சனங்களைப்பற்றி ரஹ்மான் அவ்வளவாகக் கவலைப்படவில்லை. அவர் தன்னுடைய இசையில்மட்டுமே

முழு கவனம் செலுத்த விரும்பினார்.

’ரோஜா’வின் மகா வெற்றியைத் தொடர்ந்து, ஏ. ஆர். ரஹ்மான் ‘ஹாட்’ இசையமைப்பாளர் ஆகிவிட்டார். அவரைத் தங்களுடைய படத்திற்கு ஒப்பந்தம் செய்யவேண்டும் என்று தயாரிப்பாளர்களும் இயக்குனர்களும் அலைமோதினார்கள். அவர் எவ்வளவு சம்பளம் கேட்டாலும் அள்ளித் தருவதற்கு அவர்கள் தயாராக இருந்தார்கள்.

அப்போது ரஹ்மான் நினைத்திருந்தால், இஷ்டம்போல் அட்வான்ஸை வாங்கிப் போட்டுக்கொண்டு நன்றாகக் கல்லா கட்டியிருக்கலாம். வருடத்துக்குப் பத்து படம், பதினைந்து படம் என்று உயரத்துக்குப் போயிருக்கலாம்.

ஆனால், இப்படி ஒரே

நேரத்தில் நிறையப் படங்களை ஒப்புக்கொள்கிறபோது, ஒவ்வொரு பாடலுக்கும் சிறப்புக் கவனம் செலுத்த முடியாது. இங்கே ஒரு காதல் பாட்டு, அங்கே ஒரு டிஸ்கோ டான்ஸ் என்று இயந்திரத்தனமாகப் பாடல்களை வெளியே தள்ளவேண்டியிருக்கும்.

அதற்குப் பதிலாக, நல்ல கதை, நல்ல இயக்குனர் என்று சில படங்களைமட்டும் தேர்ந்தெடுத்து ஒப்புக்கொண்டால், ரஹ்மானின் உழைப்புக்கு ஒரு மரியாதை இருக்கும். அவர் கஷ்டப்பட்டு உருவாக்குகிற பாடல்களை இன்னும் சிறப்பாக மக்களிடம் சென்று சேர்க்கமுடியும்.

’உண்மையில், நான் சினிமாவில் என்னவெல்லாம் சாதிக்கவேண்டும் என்று நினைத்தேனோ, அதெல்லாம் என்னுடைய முதல் படத்திலேயே

கிடைத்துவிட்டது’ என்கிறார் ஏ. ஆர். ரஹ்மான்.

அப்படி என்ன கிடைத்தது?

ரஹ்மான் மேடை நிகழ்ச்சிகள், விளம்பரப் படங்களில் பிஸியாக இருந்தபோது, தனது நண்பர்களிடம் அடிக்கடி சொல்கிற விஷயம், ‘நான் உருவாக்குகிற இசை, எல்லோருக்கும் பிடிக்கவேண்டும், எல்லாவிதமான எல்லைகளையும் தாண்டிப் போகவேண்டும், அதுதான் என்னுடைய மிகப் பெரிய கனவு, லட்சியம், எல்லாமே!’

’ரோஜா’வும், ‘சின்னச் சின்ன ஆசை’யும் ரஹ்மானின் அந்தப் ’பெரிய ஆசை’யைத் தீர்த்துவைத்தன. அந்தப் படமும் பாடல்களும் பல மொழிகளில் வெளியாகி, இந்தியாமுழுக்க ’சூப்பர் ஹிட்’ ஆனது. குறிப்பாக, ‘ரோஜா’வின்

ஹிந்திப் பாடல்கள் பல லட்சம் பிரதிகள் விற்பனையாகி சாதனை படைத்தன.

இன்றைக்கும் ‘தில் ஹை சோடா ஸா, சோட்டீ ஸீ ஆஷா’ என்று தொடங்கிற ‘சின்னச் சின்ன ஆசை’யின் ஹிந்தி வடிவம் மிகப் பிரபலமானது. அது ஒரு தமிழ்ப் பாடலின் டப்பிங் அவதாரம் என்று சொன்னால், பெரும்பாலானோர் நம்புவதில்லை.

’ரோஜா’ திரைப்படம், ஏ. ஆர். ரஹ்மானுக்குமட்டுமில்லை, மணி ரத்னம், வைரமுத்து இருவருக்குமே மிகப் பெரிய திருப்பு முனையாக அமைந்தது.

அதுவரை, மணி ரத்னத்தின் படங்கள் தமிழ், தெலுங்கு ஆகிய மொழிகளில்தான் பிரபலமாக இருந்தன. விந்திய மலை தாண்டிவிட்டால் அவரை அதிகப் பேருக்குத் தெரிந்திருக்கவில்லை.

அதற்காகதான், மிகக் கவனமாக 'ரோஜா' என்கிற ஓர் இந்தியப் படத்தைத் திட்டமிட்டு எடுத்தார் மணி ரத்னம். காஷ்மிர் தொடங்கிக் கன்னியாக்குமரிவரை யார் அந்தப் படத்தைப் பார்த்தாலும், அதன் உணர்வுகளோடு ஒன்றிப்போகமுடியும். இந்தப் பொதுத்தன்மை, மணி ரத்னத்தை ஒரு தென்னிந்திய இயக்குனர் என்கிற நிலைமையிலிருந்து உயர்த்தி, தேசிய அளவில் கவனம் பெறும் ஒருவராக மாற்றியது.

இதற்கு அடையாளமாக, 'ரோஜா'வின் வெற்றியைத் தொடர்ந்து, மணி ரத்னத்தின் முந்தைய படங்களில் பெரும்பாலானவை ஹிந்தியில் டப் செய்யப்பட்டன. நாயகன், அஞ் சலி, தளபதி போன்ற படங்கள் ஹிந்தி பேசியபோது பெரிய வெற்றி

அடையாவிட்டாலும், மணி ரத்னத்தின் அடுத்தடுத்த படங்கள் இந்தியாமுழுவதும் ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்டன.

ஹிந்தி பேசும் மக்களிடையே மணி ரத்னத்தைக் கொண்டுசென்றது, ‘ரோஜா’வின் கதை மற்றும் ரஹ்மானின் இசை. அதன்பிறகு, அவருடைய அடுத்தடுத்த படங்களும் ‘இந்திய’த் தன்மையோடு உருவாக ஆரம்பித்தன. ஒருகட்டத்தில், மணி ரத்னம் முழுக்க முழுக்க ஹிந்திப் படங்களிலேயே கவனம் செலுத்த ஆரம்பித்துவிட்டார்.

அதேபோல், இளையராஜாவிடமிருந்து பிரிந்தபின்னர் வைரமுத்துவின் வளர்ச்சியில் ஒரு சின்ன சுணக்கம் ஏற்பட்டிருந்தது. அவருடைய கவிதை வரிகளுக்கு மரியாதை தந்து ரசிகர்களிடம் கொண்டுசெல்லக்கூடிய இன்னொரு திறமையான

இசையமைப்பாளர் அவருக்குக் கிடைக்கவே இல்லை.

‘ரோஜா’வின் வெற்றியைத் தொடர்ந்து, ஏ. ஆர். ரஹ்மான் வைரமுத்து இருவரும் தமிழின் முக்கியமான இசைக் கூட்டணியாகிவிட்டார்கள். மற்ற இசையமைப்பாளர்களும் வைரமுத்துவை அதிகம் பயன்படுத்தத் தொடங்கினார்கள். இதன்மூலம், அவருடைய பாடல் வாழ்க்கையில் இரண்டாவது அத்தியாயம் தொடங்கியது.

இன்றைக்கும், ரஹ்மான் இசையில் அதிகப் பாடல்களை எழுதியிருப்பவர் வைரமுத்துதான். வாலி, பா. விஜய் போன்ற மற்ற கவிஞர்களுடன் அவர் இணைந்து பணியாற்றியிருந்தாலும், வைரமுத்துவின் கூட்டணியில்தான் அவருடைய ‘பெஸ்ட்’ பாடல்கள் வெளியாகியிருக்கின்றன.

'ரோஜா' திரைப்படத்துக்கு ரசிகர்கள் கொடுத்த ஆதரவோடு இரட்டிப்பு சந்தோஷமாக, அந்த ஆண்டு சிறந்த இசைக்கான தேசிய விருதும் ஏ. ஆர். ரஹ்மானுக்குக் கிடைத்தது. தன்னுடைய அறிமுகப் படத்துக்காகவே தேசிய விருது பெற்ற முதல் இசையமைப்பாளர் ரஹ்மான்தான்.

அதன்பிறகு, பல வருடங்கள் கழித்து, 2005ம் ஆண்டில் இதைவிடப் பெரிய ஒரு கௌரவம் 'ரோஜா'வுக்கும் ரஹ்மானுக்கும் கிடைத்தது. அதனை வழங்கியது, உலகப் புகழ் பெற்ற 'டைம்' பத்திரிகை.

1923ல் தொடங்கப்பட்ட 'டைம்' பத்திரிகை, அதன்பிறகு வெளியான திரைப்படங்களில் மிகச் சிறந்த நூறு படங்களைத் தேர்ந்தெடுத்துக்

கௌரவப்படுத்தியது. கூடவே, பத்து அற்புதமான இசைத் தொகுப்புகளையும் குறிப்பிட்டுப் பாராட்டினார்கள்.

பெருமைக்குரிய இந்தப் பட்டியலில் இடம் பெற்ற ஒரே இந்திய இசை, ஏ. ஆர். ரஹ்மானின் 'ரோஜா'!

இப்படி முதல் படத்திலேயே ஏகப்பட்ட மீடியா வெளிச்சம், ரசிகர்களின் பாராட்டுகள், விருதுகளையெல்லாம் வாங்கிக் குவித்துவிட்டபிறகு, ரஹ்மானிடம் ஓர் அமைதி வந்துவிட்டது. அடுத்தடுத்த படங்களைத் தேர்ந்தெடுப்பதற்குத் தனக்குத் தானே சில ஒழுங்கு விதிகளை ஏற்படுத்திக்கொண்டார் அவர்.

முதலாவதாக, ஒரு படத்தின் கதை, எனக்குப் பிடிக்கவேண்டும், அது சொல்கிற கொள்கைகளுடன் நான்

ஒத்துப்போகவேண்டும் என்பதெல்லாம் முக்கியம் இல்லை. ஆனால், அந்தப் படத்திற்கு என்னுடைய இசை தேவைப்படவேண்டும். நான் தரும் பாடல்களின்மூலம் படத்தின் தரம் சிறிதளவாவது உயரவேண்டும்.

அடுத்தபடியாக, அந்த இயக்குனர், அவர் எப்படிக் கதை சொல்கிறார், எப்படிப் பாடல்களைப் படமாக்குவார் என்பதைப் பார்க்கவேண்டும், நாள்கணக்காக உட்கார்ந்து செதுக்கிச் செதுக்கி உருவாக்கிய ஒரு பாடலை அவர்கள் கண்றாவியாகப் படமாக்கிக் குப்பைத் தொட்டிக்கு அனுப்பினால், வீணாவது என்னுடைய உழைப்புதானே?

அதேசமயம், நான் ‘உன்னத’மான படங்களைமட்டும்தான் ஒப்புக்கொள்வேன் என்று ரஹ்மான் பிடிவாதம் பிடிக்கவில்லை. ‘ரோஜா’

மாதிரியான சீரியஸ் படங்களும் வேண்டும், ரசிகர்கள் மனம் விட்டுச் சிரித்து மகிழ்ச்சியாகப் பார்க்கக்கூடிய 'மசாலா' படங்களும் தேவை, எதுவானாலும் என்னுடைய இசை அந்தப் படத்துக்குப் பொருத்தமாக, மக்களுக்குப் பிடிக்கும்விதமாக இருக்கவேண்டும், அவ்வளவுதான்.

இப்படி யோசித்த ஏ. ஆர். ரஹ்மான், தேர்ந்தெடுத்த ஒரு சில படங்களைமட்டுமே ஏற்றுக்கொண்டார். அவருடைய இரண்டாவது படம், நடிகை ரேவதியின் கணவர் சுரேஷ் மேனன் இயக்கி நடித்த 'புதிய முகம்'.

'சின்னச் சின்ன ஆசை'போலவே, இந்தப் படத்திலும் ஓர் அழகான 'பட்டியல்' பாட்டை எழுதினார் வைரமுத்து, 'கண்ணுக்கு மை அழகு' என்கிற அந்தப் பாடலைப் பாடியவர்கள் உன்னி மேனன்

மற்றும் பி. சுசீலா.

’ரோஜா’வில் விசேஷமாகத் தெரிந்த ரஹ்மானின் தனித்துவமான இசை, ‘புதிய முகம்’ பாடல்களிலும் சிறப்பாக வெளிப்பட்டிருந்தது. ’நேற்று இல்லாத மாற்றம்’, ‘ஜூலை மாதம் வந்தால்’ போன்ற பாடல்கள் இளைஞர்களின் இதயத்தைக் கவர்ந்தன.

ஆனால் இப்போதும், ஏ. ஆர். ரஹ்மான் ஒரு ‘க்ளாஸ்’ இசையமைப்பாளராகவே பெயர் வாங்கியிருந்தார், ‘ருக்குமணி, ருக்குமணி’, ‘பக்திப் பாடல் பாடட்டுமா’ போன்ற துள்ளாட்டப் பாடல்களுக்கு இசை அமைத்திருந்தாலும், ஒரு முழுமையான ‘மாஸ் அப்பீல்’ அவருடைய பாடல்களுக்கு இன்னும் கிடைத்திருக்கவில்லை.

அந்தக் குறையைத் தீர்ப்பதற்காகவே,

அவருடைய மூன்றாவது படம் வந்தது: கே. டி. குஞ்சுமோன் தயாரிப்பில், 'ஷங்கர்' என்கிற புதியவர் இயக்கிய 'ஜென்டில்மேன்'.

இந்தப் படத்தின் கதையில், அப்படியொன்றும் புதுமை இல்லை. வழக்கமாக எல்லோரும் அரைத்த அதே மாவுதான், பணக்காரர்களிடம் திருடி ஏழைகளுக்குக் கொடுக்கும் கதாநாயகன், பகலில் நல்லவனாகவும், ராத்திரியில் கெட்டவனாகவும் இரட்டை முகம் கொண்ட சூப்பர் ஹீரோ.

சாதாரணமான இந்தக் கதையை, ஷங்கர் காட்சிப்படுத்தியிருந்த விதம் மிகச் சுவாரஸ்யமாக இருந்தது. விறுவிறுப்பான திரைக்கதை, அதில் தொய்வு ஏற்படக்கூடிய இடங்களிலெல்லாம், அட்டகாசமான பாடல்களை வைத்து ஒட்டுப்போட்டிருந்தார், கூடவே

போதுமான அளவுக்குக் கவர்ச்சித் தூவல், கவுண்டமணி செந்தில் நகைச்சுவை, ஃப்ளாஷ்பேக்கில் நெகிழவைக்கும் சென்டிமென்ட், பாலகுமாரனின் வசனம் என்று சர்வ நிச்சயமான வெற்றி ஃபார்முலா.

ஷங்கர் கதை சொன்ன விதம், ரஹ்மானுக்குப் பிடித்திருந்தது. இந்தப் படம் நிச்சயமாகத் தன்னை வேறொரு தளத்துக்குக் கொண்டுசெல்லும் என்று நம்பினார்.

ஆனால், ஒரே பிரச்னை, படத்தில் 'மெலடி'களுக்கு இடமே இல்லை. ஷங்கர் யோசித்துவைத்திருந்த பாடல்களில் ஒன்றைத்தவிர பாக்கி எல்லாமே, தரை டிக்கெட் ரசிகர்களின் ஆர்வத்துக்குத் தீனி போடுகிற அட்டகாசமான ஆர்ப்பாட்டங்கள்தான்.

தன்னுடைய முதல் இரு படங்களில் நவீனமான மென்மை ‘மெலடி’களுக்காகவே பெயர் வாங்கியிருந்தவர் ஏ. ஆர். ரஹ்மான். ஆகவே, இப்படி முழுக்க முழுக்க கமர்ஷியலான மசாலாப் படம் ஒன்றில் தன்னுடைய இசை எடுபடுமா என்று யோசித்துத் தயங்கினார்.

ஷங்கரும் தன்னுடைய முடிவில் உறுதியாக இருந்தார், ‘இது சீரியஸ் படம், இதில பாட்டெல்லாம் ஜாலியா இருந்தாமட்டும்தான் எடுபடும்’

கடைசியாக, ஷங்கரின் திறமையில் நம்பிக்கை வைத்து, ஒரு பெரிய ரிஸ்க் எடுக்கத் தீர்மானித்துவிட்டார் ரஹ்மான். ’ஜென்டில் மேன்’ பாடல் பதிவுகள் முழு வேகத்தில் தொடங்கின.

இந்தப் படத்தில், ஒரு சாதாரணமான

பாடல் சூழ்நிலை, ஏ. ஆர். ரஹ்மானைச் செமத்தியாக வேலை வாங்கிவிட்டது.

விஷயம் இதுதான் ரயில் நிலையத்தில் ஒரு பையனும் பெண்ணும் குழுவினருடன் நடனம் ஆடுகிறார்கள், அந்தப் பாடலின் இறுதியில் கதாநாயகனும் கதாநாயகியும் எதேச்சையாக ஒருவரை ஒருவர் பார்த்துக்கொள்கிறார்கள். அந்த இருபது விநாடிக் காட்சிக்காக, நான்கு நிமிடங்கள் ரசிகர்களைக் கவர்ந்து இழுத்து உட்காரவைக்கவேண்டும்.

இந்தப் பாடலில் ரஹ்மான் சந்தித்த முக்கியமான சவால், இதற்கு நடனம் அமைத்து ஆடப்போகிறவர், பிரபு தேவா. ஏற்கெனவே பல படங்களுக்கு நடன இயக்குனராகப் புகழ் பெற்றிருந்த அவர், சில ‘ஒற்றை’ப் பாடல்களுக்குத் திரையில் தோன்றி நடனம் ஆடியும்

பிரபலமாகியிருந்தார்.

ஆனால், அதற்குமுன்னால் பிரபு தேவா ஆடிய பாடல்களெல்லாம், கிராமியத் தெம்மாங்குகளைப்போலவோ, கானாப் பாடல்களைப்போலவோதான் அமைந்திருந்தன. எதையும் வித்தியாசமாகச் செய்யவேண்டும் என்று விரும்பும் ஷங்கர், அதிலிருந்து மாறுபட்டு, மேற்கத்திய இசைக்குப் பிரபு தேவாவை ஆட்டுவிக்கத் தீர்மானித்தார்.

இன்னொரு வித்தியாசம், அதுவரை ரஹ்மான் இசையில் எல்லாப் பாடல்களையும் வைரமுத்துதான் எழுதிவந்தார், இந்தமுறை கவிஞர் வாலியுடன் இணைந்து பணியாற்றினார் ரஹ்மான்.

இப்படிப் பலவிதங்களில் பரபரப்பைக் கிளப்பிய அந்தப் பாடலுக்கு, ரஹ்மான்

அமைத்த மெட்டு மிகச் சாதாரணமாக அமைந்துவிட்டது. ஏதோ ‘நர்ஸரி ரைம்ஸ்’போல ஒலித்த அந்த மெட்டுக்கு, வாலியின் ஜாலியான பாடல் வரிகளைச் சேர்த்துப் பார்த்தபிறகும்கூட, உரைநடைமாதிரிதான் தோன்றியது.

அதன்பிறகுதான், ஏ. ஆர். ரஹ்மான் மேஜிக் ஆரம்பம். மென்மையான தாளக் கட்டில் தொடங்கி, படிப்படியாக வேகம் கூட்டி, சிக்கலான பல ஒலித் துணுக்குகளைச் சேர்த்து அந்தப் பாடலுக்கு ஒரு புது வண்ணம் பூசிவிட்டது இசை.

அதுமட்டுமில்லை, இந்தப் பாடலுக்கு ரஹ்மான் தேர்ந்தெடுத்த குரல்களும் மிகப் புதுமையாக இருந்தன. ’சிக்குபுக்கு சிக்குபுக்கு ரயிலே’ என்று ரஹ்மானின் சகோதரி மகன் ஜி. வி. பிரகாஷ் மழலை மொழியில் எடுத்துக் கொடுக்க,

அவருடைய இளம் வயது நண்பர் சுரேஷ் பீட்டர்ஸின் வித்தியாசமான குரலில் பாடல் தொடர்ந்தது.

இத்தனைக்குப்பிறகும், இந்தப் பாடலைக் கேட்டவர்கள் சிலர் உதடு பிதுக்கினார்கள். 'ம்ஹூம், தேறாது' என்று உடனடியாக நிராகரித்துவிட்டார்கள்.

அவர்களெல்லாம் ஆச்சர்யப்படும் அளவுக்கு, ஷங்கரின் படமாக்கம் மிகத் திறமையுடன் வெளிப்பட்டது. பிரபு தேவா, கௌதமி, ராஜூ சுந்தரம் மூவரும் இணைந்து ஆடிய அந்தப் பாடலில், கம்ப்யூட்டர் கிராஃபிக்ஸையும் சிறப்பாகப் பயன்படுத்தி அசத்தியிருந்தார் ஷங்கர்.

இந்தப் பாடல் வெளியாகிப் பிரபலமடைந்தபிறகு, தமிழ் சினிமாவில் 'பிரபு தேவா  ஏ. ஆர். ரஹ்மான்' என்கிற விநோதமான வெற்றிக்

கூட்டணி உருவானது. அதற்குமுன் எப்போதும், இந்த நடிகருக்கு அந்த இசையமைப்பாளர்தான் பாட்டுப் போடவேண்டும் என்று ரசிகர்கள் எதிர்பார்த்துக் காத்திருந்தது கிடையாது.

‘ஜென்டில் மேன்’ படத்தில் மற்ற பாடல்களும், ரஹ்மானின் கைவண்ணத்தில் மிகச் சிறப்பாக அமைந்திருந்தன. ’என் வீட்டுத் தோட்டத்தில், பூவெல்லாம் கேட்டுப்பார்’ என்கிற மெலடியை எஸ். பி. பாலசுப்ரமணியம், சுஜாதா பாடினார்கள், ’உசிலம்பட்டிப் பெண்குட்டி, முத்துப்பேச்சி’ எனும் இன்னொரு பாடலில் ஷாகுல் ஹமீது என்கிற வித்தியாசமான ஒரு குரலை அறிமுகப்படுத்தினார் ரஹ்மான்.

ஆனால், அந்தப் படத்தின் மிகப் பெரிய ஹிட் என்று பார்த்தால், ‘ஒட்டகத்தைக்

கட்டிக்கோ'தான். ரஹ்மானின் இசையில் வைரமுத்து எழுதிய அந்தப் பாடலை, எஸ். பி. பாலசுப்ரமணியம், எஸ். ஜானகி இருவரும் அற்புதமாகப் பாடியிருந்தார்கள்.

'ஜென்டில் மேன்' படத்தின் பிரம்மாண்டமான வெற்றிக்கு முக்கியமான காரணம், கேட்டவுடன் ஆடவைக்கிற இந்தப் பாடல்கள்தான். அவற்றைக் கதையோட்டத்துடன் சிறப்பாகப் பயன்படுத்திக்கொண்டது ஷங்கரின் சாமர்த்தியம்.

பின்னர், 'ஜென்டில் மேன்' ஹிந்தியிலும் தயாரிக்கப்பட்டது. சிரஞ்சீவி கதாநாயகனாக நடித்த அந்தப் படத்துக்கு இசையமைத்தவர், அனு மாலிக். ஆனால் அதில் இடம்பெற்ற பாடல்களில் பெரும்பாலானவை, ரஹ்மானின் தமிழ் மெட்டுகள்தான்.

‘ஜென்டில் மேன்’ பாடல்களின் வெற்றி, ரஹ்மானை ஒரு கமர்ஷியல் இசையமைப்பாளராகவும் நிலைநிறுத்தியது. இதன்மூலம், ஒரு படத்தின் வெற்றிக்கு அவருடைய பாடல்கள் எந்த அளவு துணைபுரியமுடியும் என்பது சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபணமாகிவிட்டது.

ஆனால், அதே ‘ஜென்டில் மேன்’தான் ரஹ்மானுக்கு ஒரு பெரிய பிரச்னையையும் கொண்டுவந்தான். அதன்பிறகு ரஹ்மானைத் தேடி வந்த தயாரிப்பாளர்கள், இயக்குனர்கள் எல்லோரும் ‘சிக்கு புக்கு சிக்கு புக்கு ரயிலேமாதிரி, ஒட்டகத்தைக் கட்டிக்கோமாதிரி ஒரு சூப்பர் டான்ஸ் பாட்டுப் போடுங்க சார்’ என்று நச்சரிக்க ஆரம்பித்தார்கள்.

ரஹ்மான் பதறிப்போனார். இந்த நிலைமை தொடர்ந்தால், இவர்கள் நம்மை வெறும் ‘டான்ஸ் பாட்டு மெஷின்’ஆக மாற்றிவிடுவார்கள், உடனே ஏதாவது செய்யவேண்டும்.

கிட்டத்தட்ட இதே நேரத்தில், ரஹ்மான்மீது இன்னொரு விமர்சனமும் எழுந்தது, ‘மூன்றே படங்களுக்குள், ரஹ்மானின் இசை ஒரேமாதிரி ஒலிக்க ஆரம்பித்துவிட்டது, அவர் தொடர்ந்து இதேபோல் இசை அமைத்துக்கொண்டிருந்தால், பத்து படங்களில் காணாமல் போய்விடுவார்’

இன்னும் சிலர், ‘அவருடைய இசை முழுக்க முழுக்க மேற்கத்திய பாணியில் அமைந்திருக்கிறது’ என்று குறைபட்டுக்கொண்டார்கள், ‘சும்மா பொழுதுபோக்குப் பாடல்களுக்குதான்

அவரால் இசையமைக்கமுடியும், நம்முடைய மண்ணின் கலாசாரத்தைப் பிரதிபலிக்கும்படியான கிராமியப் படங்களுக்கு ரஹ்மான் சரிப்படமாட்டார்'

இந்த விமர்சனங்களுக்கெல்லாம் ரஹ்மான் எந்தப் பதிலோ, விளக்கமோ சொல்லவில்லை. ஆனால், அவருடைய அடுத்தடுத்த படங்கள், பாடல்கள், அவர்மீது சந்தேகப்பட்ட எல்லோரையும் வாயடைக்கச் செய்துவிட்டன!

# 9

# ஓர் அழகைக் கண்டேனே

தமிழ் சினிமாவில் முதன்முறையாக நிஜமான கிராமத்தை எதார்த்தமாகக் காட்சிப்படுத்தியவர் என்கிற பெருமை, இயக்குனர் பாரதிராஜாவுக்குச் சொந்தமானது.

அவருடைய ‘பதினாறு வயதினிலே’ வெளியாகும்வரை, தமிழ்த் திரைப்படங்களில் கிராமங்கள் ஒரு காட்சிப் பின்னணிக்காகமட்டுமே

பயன்படுத்தப்பட்டுவந்தன.
வயலைக் காட்டுவார்கள், நிலத்தைக் காட்டுவார்கள், ஆனால் அங்குள்ள மனிதர்களின் வாழ்க்கையை ரத்தமும் சதையுமாகக் காண்பித்தவர் பாரதிராஜாதான்.

அந்த முதல் படத்தில் தொடங்கி, பாரதிராஜாவின் ஒவ்வொரு படத்துக்கும் அவருடைய இளவயதுத் தோழர் இளையராஜாதான் இசை அமைத்துக்கொண்டிருந்தார். இந்தக் கூட்டணியுடன் வைரமுத்துவும் இணைந்தபிறகு அவர்கள் கொடுத்த பாடல்கள் என்றென்றும் மறக்கமுடியாதவை.

அதன்பிறகு, பாரதிராஜாவுக்கும் இளையராஜாவுக்கும் இடையே ஏதோ பிரச்னை. அவர் வேறு இசையமைப்பாளர்களைப் பயன்படுத்த

முயன்றார், பெரிதாக வெற்றி எதுவும் கிடைக்கவில்லை.

’ரோஜா’வின் வெற்றியைத் தொடர்ந்து, தமிழ் சினிமாவின் முக்கியமான இயக்குனர்கள் எல்லோரும் ஏ. ஆர். ரஹ்மானுடன் இணைந்து பணியாற்ற விரும்பினார்கள். அந்த வரிசையில் பாரதிராஜாவும் சேர்ந்துகொண்டது பலருக்கு ஆச்சர்யம்.

ஏனெனில், ‘நவீன இசை’ என்கிற ஒரே காரணத்துக்காகப் புகழ் பெற்றிருக்கிறவர் ரஹ்மான். அவருடைய பாடல்கள், பாரதிராஜா படங்களுக்கு ஒத்துப்போகுமா?

மற்றவர்கள் இப்படிச் சந்தேகம் எழுப்பினாலும், பாரதிராஜாவுக்கு ரஹ்மான்மீது நம்பிக்கை இருந்தது. தன்னுடைய அடுத்த படமான ‘கிழக்குச்

சீமையிலே'வுக்கு அவரை ஒப்பந்தம் செய்துவிட்டார்.

'கிழக்குச் சீமையிலே' ஓர் உணர்ச்சிமயமான படம். பிழியப் பிழிய அழவைக்கிற அண்ணன் தங்கைக் கதை. அதை எதார்த்தமாகக் காண்பித்து வெற்றி பெற்றிருந்தார் பாரதிராஜா.

பாடல்களைப் பொறுத்தவரை, இந்தப் படம் ஏ. ஆர். ரஹ்மானின் இன்னொரு பரிமாணத்தை ரசிகர்களுக்குக் காண்பித்தது. அவருடைய 'புதிய இசை'யைக் கிராமிய மெட்டுகளோடும் கலந்து தரமுடியும் என்று நிரூபித்திருந்தார் அவர்.

ரஹ்மானின் நவீன கீதங்கள், ஒரு பக்கா கிராமத்துக் கதையில் உறுத்திக்கொண்டு தனியே தெரியாமல் கச்சிதமாகப் பொருந்தியதுதான் பெரிய

ஆச்சர்யம். வித்தியாசமான இந்த முயற்சியை ரசிகர்கள் உடனடியாக ஏற்றுக்கொண்டது அதைவிடப் பெரிய அதிசயம்!

இந்தப் படத்தில் குறிப்பிட்டுச் சொல்லவேண்டிய பாடல்கள்: ‘தென்கிழக்குச் சீமையிலே’ (மலேசியா வாசுதேவன், சித்ரா), ‘கத்தாழங்காட்டு வழி’ (ஜெயச்சந்திரன், எஸ். ஜானகி), ‘ஆத்தங்கரை மரமே’ (மனோ, சுஜாதா) மற்றும் ‘மானூத்து மந்தையிலே’ (எஸ். பி. பாலசுப்ரமணியம்).

’கிழக்குச் சீமையிலே’ பாடல்கள், காலம் கடந்து இன்றைக்கும் ரசிகர்கள் மனத்தில் நிற்கின்றன. ’ஜென்டில் மேன்’ போன்ற பொழுதுபோக்கு மசாலாக்களுக்குமட்டுமின்றி, ‘கிழக்குச் சீமையிலே’ மாதிரியான உணர்வுபூர்வமான திரைப்படங்களுக்கும்

தன்னால் இசையமைக்கமுடியும் என்று ரஹ்மான் நிரூபித்துவிட்டார்.

கிட்டத்தட்ட இதே காலகட்டத்தில், ஏ. ஆர். ரஹ்மான் இன்னொரு கிராமத்துப் படத்துக்கும் இசையமைத்தார்: இயக்குனர் கதிரின் ‘உழவன்’.

ரஹ்மானின் மற்ற படங்களோடு ஒப்பிடுகையில், ‘உழவன்’ பாடல்களும் சரி, படமும் சரி, அவ்வளவாக வெற்றி பெறவில்லை. என்றாலும், ’பெண்ணல்ல பெண்ணல்ல ஊதாப்பூ’ (எஸ். பி. பாலசுப்ரமணியம்), ‘மாரி மழை பெய்யாதோ’ (ஷாகுல் ஹமீது), ‘கண்களில் என்ன ஈரமோ?’ (எஸ். பி. பாலசுப்ரமணியம், சித்ரா), ‘ராக்கோழி ரெண்டு’ (கே. ஜே. யேசுதாஸ், ஸ்வர்ணலதா) ஆகிய பாடல்கள் நன்கு பிரபலமடைந்தன.

‘ரோஜா’வைத் தொடர்ந்து மணி ரத்னம் தொடங்கிய அடுத்த படம், ‘திருடா திருடா’. இந்தமுறை சீரியஸான விஷயம் எதையும் தொடாமல், இரண்டு திருடர்களின் கதையை ரொம்ப ஸ்டைலாக, ஹாலிவுட் பாணியில் எடுத்திருந்தார் மணி ரத்னம்.

இந்தப் படத்தில், மீண்டும் மணி ரத்னம் ஏ. ஆர். ரகுமான் வைரமுத்து கூட்டணி அசத்தியது. ’கண்ணும் கண்ணும் கொள்ளையடித்தால்’ (மனோ), ‘புத்தம் புது பூமி வேண்டும்’ (மனோ, சித்ரா), ’வீரபாண்டிக் கோட்டையிலே’ (மனோ, உன்னி மேனன், சித்ரா) ஆகிய பாடல்கள் மிகப் பெரிய ஹிட்.

ஆனால், அந்தப் படத்தின் ‘ஹிட்’ வரிசையைவிட, மற்ற மூன்று பாடல்களில் ரஹ்மான் செய்த பரிசோதனை முயற்சிகள்தான்

மிக முக்கியமானவை. மற்ற இசையமைப்பாளர்களில் இருந்து அவர் எப்படி வித்தியாசப்படுகிறார் என்பதை இந்தப் பாடல்கள் புரியவைத்தன.

உதாரணமாக, 'ராசாத்தி என்னுசுரு என்னுதில்ல' என்கிற சோகப் பாடலை ஷாகுல் ஹமீது பாட, வேறு எந்த இசைக் கருவிகளும் இல்லாமல் முழுக்க முழுக்கக் கோரஸ் குரல்களைமட்டும் பயன்படுத்தியிருந்தார் ரஹ்மான். ஆனால், அந்தப் பாட்டைக் கேட்கிறவர்களுக்கு எதுவும் உறுத்தலாகத் தெரியாது.

இதேபோல், அனுபமா பாடிய 'கொஞ்சம் நிலவு, கொஞ்சம் நெருப்பு', கரோலின் பாடிய, 'தீ தீ தித்திக்கும் தீ' ஆகிய பாடல்களின் தாளக் கட்டு, மெட்டு அமைப்பு, வாத்தியக் கோர்ப்பு எல்லாமே தமிழுக்குப் புத்தம் புதுசு. அவற்றில் தமிழ்

வார்த்தைகளை உட்காரவைப்பதற்கு ரஹ்மானும் வைரமுத்துவும் பட்ட பாடு கொஞ்சநஞ்சமில்லை.

’ஆனால், இந்தக் கஷ்டமெல்லாம், அந்தப் பாட்டைக் கேட்டு ரசிகர்கள் பாராட்டும்போது காணாமல் போய்விடும்’ என்கிறார் ஏ. ஆர். ரஹ்மான், ‘இந்த ஒரு காரணத்துக்காகதான், நான் வழக்கமான பாடல்களைத் தருவது இல்லை, தொடர்ந்து புதுசான விஷயங்களையே தேடிக்கொண்டிருக்கிறேன்’

‘எனக்கு எல்லாம் தெரியும் என்கிற மனோநிலையோடு ஒரு பாடலை உருவாக்க உட்கார்ந்தால், அதே பழைய விஷயங்களைதான் திரும்பத் திரும்பச் செய்துகொண்டிருப்போம்’ என்பது ஏ. ஆர். ரஹ்மானின் கொள்கை, ‘அதற்குப் பதிலாக, நான்

எனக்கு எதுவுமே தெரியாது என்று நினைத்துக்கொள்கிறேன், அதனால், புதிய விஷயங்களைக் கற்றுக்கொண்டு முயற்சி செய்து பார்க்கிற முனைப்பு வருகிறது'

'திருடா திருடா' போன்ற படங்களில், அதற்குமுன் யாரும் கேட்டிருக்காத புதுமை முயற்சிகளைக்கூட, எல்லோரும் ரசிக்கும்படி ஜனரஞ்சகமாகக் கொடுக்கிற விதம் ரஹ்மானின் திறமைக்குச் சாட்சியம் சொன்னது. அடுத்தடுத்த படங்களில் அவர் என்னவெல்லாம் புதுசாகச் செய்யப்போகிறார் என்கிற பரபரப்பே அவருக்குப் பல புதிய ரசிகர்களைத் தேடிக் கொடுத்தது.

முதல் இரண்டு ஆண்டுகள் (1992, 1993) தேர்ந்தெடுத்த சில படங்களுக்குமட்டும் இசையமைத்த ரஹ்மான், 1994ல் ஏகப்பட்ட படங்களை ஒப்புக்கொண்டுவிட்டார்.

இப்படி வரிசையாகப் பாடல்கள் வெளியாகிக்கொண்டிருந்ததால்தானோ என்னவோ, அந்த ஆண்டு ரஹ்மானின் தோல்விப் படங்கள் அதிகம்.

ரஹ்மானின் 'திருடா திருடா' உண்டாக்கிய பரபரப்போடு ஒப்பிடும்போது, அவருடைய அடுத்த படமான 'வண்டிச்சோலை சின்ராசு' படுமோசமான தோல்வியைச் சந்தித்தது. இத்தனைக்கும் அந்தப் படத்தில் 'எது சுகம் சுகம் அது' (எஸ். பி. பாலசுப்ரமணியம், வாணி ஜெயராம்), 'சித்திரை நிலவு சேலையில் வந்தது பெண்ணே' (ஜெயச்சந்திரன், மின்மினி) என்கிற இரண்டு அருமையான மெலடி பாடல்கள் இருந்தன.

ரசிகர்கள் 'வண்டிச்சோலை சின்ராசு'வை ஒட்டுமொத்தமாக நிராகரித்தாலும்கூட, அந்தப் படத்தில் ஒரே ஒரு

பாட்டுமட்டும் நம் ஊரில் நிரந்தரப் பிரபலம்: ஷாகுல் ஹமீது பாடிய 'செந்தமிழ் நாட்டுத் தமிழச்சியே!'

இதே வருடம், மணி ரத்னத்தின் அண்ணன் ஜி. வி. தயாரித்த 'மே மாதம்' படத்திற்காக ஓர் அருமையான இசைத் தொகுப்பைத் தந்திருந்தார் ரஹ்மான். 'மார்கழிப் பூவே' (அறிமுகப் பாடகி ஷோபா ஷங்கர்), 'என் மேல் விழுந்த மழைத்துளியே' (ஜெயச்சந்திரன், சித்ரா), 'மின்னலே' (எஸ். பி. பாலசுப்ரமணியம்) உள்ளிட்ட பல நல்ல பாடல்கள் இருந்தும்கூட, கதை, படமாக்கம் சரியில்லாமல் அந்தப் படம் தோல்வியைத் தழுவியது.

'பவித்ரா' என்கிற இன்னொரு படத்தின் கதையும் இதேதான். எஸ். பி. பாலசுப்ரமணியத்தின் மகள் பல்லவி பாடகியாக அறிமுகமாகி, மனோவுடன்

இணைந்து பாடிய ‘செவ்வானம்’ பாடல் உள்பட, இந்தப் படத்திலும் ரஹ்மானின் உழைப்பு வீணாகப் போனது.

தன்னுடைய படங்களில் ஏகப்பட்ட மெலடிப் பாடல்களை வைத்துப் புகழ் பெற்ற இயக்குனர் ‘புது வசந்தம்’ விக்ரமன். அவர் தனது ஆஸ்தான இசையமைப்பாளரான எஸ். ஏ. ராஜ்குமாரை விட்டு ஏ. ஆர். ரஹ்மானிடம் வந்தார்.

’புதிய மன்னர்கள்’ என்கிற அந்தப் படம், இளைஞர்களின் கதை. ரஹ்மானும் புதுக் கவிஞர் பழநிபாரதியுடன் இணைந்து உற்சாகமாகப் பல நல்ல பாடல்களை அமைத்துக் கொடுத்தார்: ’வானில் ஏணி போட்டு’ (மனோ), ’நீ கட்டும் சேலை மடிப்பிலே’ (டி. எல். மகாராஜன், சுஜாதா), ’எடுடா அந்தச் சூரிய மேளம்’ (எஸ். பி. பாலசுப்ரமணியம்).

ஆனால், இந்தப் படமும் ரசிகர்கள் மத்தியில் வெற்றியடையவில்லை. எதார்த்தத்துக்குப் பொருந்தாத கதை என்று மக்கள் நிராகரித்துவிட்டார்கள், பாடல்களும் அவ்வளவாகப் பிரபலமடையவில்லை.

இதுபோன்ற தோல்விகள், ரஹ்மானுக்குச் சலிப்பூட்டின. கஷ்டப்பட்டு ஒரு பாடலை உருவாக்கி, அது மக்கள் மனத்தில் பதியாமல் மறைந்து போவது எத்தனை பெரிய சோகம்!

இந்தப் பிரச்னையைத் தவிர்ப்பதற்காகவே, அடுத்த வருடம்முதல் அவர் மிகச் சில படங்களைமட்டும் ஒப்புக்கொள்ள ஆரம்பித்தார். இதனால் அவர் இசையமைக்கிற படங்களின் எண்ணிக்கை குறைந்தாலும், வெற்றி சதவிகிதம் அதிகரித்தது, ஒருவேளை

படம் தோல்வியடைந்தாலும், ரஹ்மானின் இசைமட்டும் தனித்துப் பேசப்படுகிற நிலைமை ஏற்பட்டது.

1994ம் ஆண்டு வெளிவந்த ரஹ்மானின் வெற்றிப் படங்கள் என்று பார்த்தால், அதில் முக்கியமானது ஷங்கரின் இரண்டாவது படம், ‘காதலன்’.

தனது முதல் படத்தில் பிரபு தேவாவை ஒரு பாடலில்மட்டும் ஆட வைத்து அசத்தியிருந்த ஷங்கர், இந்தமுறை அவரையே தனது கதாநாயகனாகத் தேர்ந்தெடுத்தார். ஒல்லிக்குச்சி நடனப் புயலான அவருக்கு ஏற்ற கதை, இசைப் புயலின் பாடல்கள், பிரம்மாண்டமான படமாக்கம் என்று எல்லாமே அமர்க்களமாக அமைந்துபோன படம் அது.

இந்தப் படத்தில்தான், கர்நாடக

இசைப் பாடகர் உன்னி கிருஷ்ணனைத் திரையுலகிற்கு அறிமுகப்படுத்தினார் ஏ. ஆர். ரஹ்மான். ‘என்னவளே அடி என்னவளே’ என்று ஓர் அழகான தனிப் பாடலைப் பாடித் தேசிய விருது பெற்றார் அவர்.

உன்னி கிருஷ்ணனைத் தொடர்ந்து, ஏ. ஆர். ரஹ்மான் 1998ல் ‘ஜீன்ஸ்’ படத்தின்மூலம் நித்யஸ்ரீயையும் பின்னணிப் பாடகியாக அறிமுகப்படுத்தினார். அவர் உண்டாக்கிய இந்தப் பழக்கம் இன்றைக்கும் தொடர்ந்துகொண்டிருக்கிறது. ஓ. எஸ். அருண், சுதா ரகுநாதன், சௌம்யா உள்ளிட்ட பல கர்நாடக இசைப் பாடகர், பாடகிகள் சினிமாவில் தொடர்ந்து பாடிவருகிறார்கள்.

காதலனில் ரஹ்மான் தந்த மற்ற

முக்கியமான பாடல்கள்: ’காதலிக்கும் பெண்ணின் கைகள்’ (எஸ். பி. பாலசுப்ரமணியம், உதித் நாராயண்), ’முக்காலா முக்காபுலா’ (மனோ, ஸ்வர்ணலதா), ’கோழிக்குஞ்சு தேடி வந்த கோபாலா’ (எஸ். பி. பாலசுப்ரமணியம், எஸ். ஜானகி). எல்லாப் பாடல்களுக்கும் நடனம், படமாக்கம் அற்புதமாக அமைந்திருந்தது, படமும் சூப்பர் ஹிட்.

இதே வருடம், பாரதிராஜாவுடன் மீண்டும் இணைந்தார் ஏ. ஆர். ரஹ்மான். ‘கிழக்குச் சீமையிலே’ மேஜிக் ‘கருத்தம்மா’விலும் தொடர்ந்தது. ‘போறாளே பொன்னுத்தாயி’ சோகப் பாடலுக்காக ஸ்வர்ணலதாவுக்கு தேசிய விருது கிடைத்தது, ‘காடு, பொட்டக்காடு’ பாடலில் பாரதிராஜா பாடகர் அவதாரம் எடுத்திருந்தார், அந்தப் பாடலில் காட்சிப்படுகிற வறட்சியைக் கேலி செய்வதுபோல், ‘தென்மேற்குப்

பருவக்காற்று தேனிப்பக்கம் வீசும் ஒரு சாரல்' என்கிற மழைப் பாடலை உன்னி கிருஷ்ணன், சித்ரா இணைந்து பாடியிருந்தார்கள்.

தமிழில் குறிப்பிடத்தக்க இசையமைப்பாளராகப் பெயர் வாங்கிவிட்ட ரஹ்மான், இந்த வருடம் தெலுங்கிலும் அறிமுகமானார். அந்தப் படம், வெங்கடேஷ் நடித்த 'சூப்பர் போலீஸ்'.

தெலுங்கு மசாலாவுக்கு இசையமைத்துக் கைதட்டல் வாங்குகிற அதே நேரத்தில், தமிழில் ரஹ்மான் வேறொரு தளத்துக்கு நகர்ந்துகொண்டிருந்தார். இதை உறுதி செய்வதுபோல், பிரபல இயக்குனர் கே. பாலச்சந்தர் தனது அடுத்த படத்துக்கு ஏ. ஆர். ரஹ்மானை ஒப்பந்தம் செய்தார்.

மணி ரத்னம், பாரதிராஜாவைப்போலவே,

இளையராஜாவுடன் இணைந்து நிறைய நல்ல பாடல்களைத் தந்திருப்பவர் கே. பாலச்சந்தர். அவரும் ரஹ்மானும் முதன்முறையாக இணைகிறார்கள் என்றதும், ரசிகர்களின் எதிர்பார்ப்பு அதிகரித்தது.

‘டூயட்’ என்கிற அந்தப் படத்தின் கதாநாயகன், சாக்ஸஃபோன் இசைக் கலைஞன். வழக்கமான முக்கோணக் காதல் கதைதான். ஆனால், பாடல்களுக்கும் பின்னணி இசைக்கும் நல்ல முக்கியத்துவம் தரப்பட்டிருந்தது.

இந்தப் படத்துக்காக, பிரபல சாக்ஸ் இசைக் கலைஞர் கத்ரி கோபால்நாத்தைச் சினிமாவுக்கு அழைத்துவந்தார் ஏ. ஆர். ரஹ்மான். ’அஞ்சலி அஞ்சலி புஷ்பாஞ்சலி’ (எஸ். பி. பாலசுப்ரமணியம், சித்ரா), ’என் காதலே என் காதலி’ (எஸ். பி. பாலசுப்ரமணியம்),

’மெட்டுப்போடு, மெட்டுப்போடு’ (எஸ். பி. பாலசுப்ரமணியம், பி. சுசீலா) ஆகிய பாடல்களில் அவருடைய இசையும், வைரமுத்துவின் தமிழும் ஆனந்த நர்த்தனம் ஆடியது.

பின்னணி இசையிலும், கத்ரி கோபால்நாத்தின் சாக்ஸ் ராஜ்ஜியம்தான். இசை ரசிகர்களுக்கு முழுமையான திருப்தியைக் கொடுத்த ஒரு படமாக இது அமைந்தது.

அதுவரை தமிழில் இசைப் பின்னணியிலான ஒரு படம் என்றாலே அதற்கு இளையராஜாவால்மட்டும்தான் இசையமைக்கமுடியும் என்கிற பொதுவான ஓர் எண்ணம் இருந்துவந்தது. இப்போது அங்கேயும் ரஹ்மான் அழுத்தமான ஒரு தாக்கத்தை ஏற்படுத்திவிட்டதால், மீண்டும் இளையராஜா   ஏ. ஆர். ரஹ்மான்

ஒப்பீடுகளும் சர்ச்சைகளும் சூடு பிடித்தன.

ஒருகாலத்தில் இளையராஜாவுடன் இணைந்து பணியாற்றிய பெரும்பாலான நல்ல இயக்குனர்கள் இப்போது ஏ. ஆர். ரஹ்மானுடன் இணைந்திருந்தார்கள், அல்லது அவரைத் தேடி வந்துகொண்டிருந்தார்கள். இந்தச் சூழ்நிலையில் தமிழ்த் திரையிசையில் இளையராஜாவின் இடத்தை ரஹ்மான் பிடித்துவிட்டாரா என்று பலர் கேள்வி எழுப்பினார்கள்.

ராஜாவைப்போலவே, ரஹ்மானுக்கும் வெறித்தனமான ரசிகர் கூட்டம் உருவாக ஆரம்பித்திருந்த காலகட்டம் இது. இவர்களில் பெரும்பாலானோர் இளைஞர்கள், ஏ. ஆர். ரஹ்மானை வெறும் இசையமைப்பாளராக அன்றி, ஒரு ரோல் மாடல் / லட்சிய

பிம்பமாகவே ஏற்றுக்கொண்டவர்கள்.

இசை ரசிகர்கள்மட்டுமின்றி, பொதுமக்கள் எல்லோரையும் ரஹ்மானின் இசை வசீகரித்தது. அவருடைய ஒவ்வொரு ஒலி நாடாவும் முந்தைய படங்களின் விற்பனைச் சாதனைகளை முறியடித்துக்கொண்டிருந்தது.

தயாரிப்பாளர்கள், இயக்குனர்கள், நடிகர்கள் எல்லோர் மத்தியிலும், ரஹ்மானுக்கு ஏகப்பட்ட டிமாண்ட். பெரிய பட்ஜெட் படம் எதைத் தொடங்கினாலும், 'ம்யூசிக் ரஹ்மான்தானே?' என்கிற கேள்வி தவறாமல் கேட்கப்பட்டது. 'இல்லை' என்றால் உடனே அந்தப் படத்தின் மதிப்பு ஒரு படி இறங்கிவிட்டதுபோன்ற ஒரு பிரம்மை.

இதையெல்லாம் வைத்துப் பார்க்கும்போது, அன்றைய தமிழ்த் திரையிசையின் நிஜமான ‘ராஜா’, ஏ. ஆர். ரஹ்மான்தான். மற்ற எல்லா இசையமைப்பாளர்களையும்விட அவர் சில படி மேலேறிச் சென்றுவிட்டதாகவும், இன்னும் வேகமாக முன்னேறிக்கொண்டிருப்பதாகவும் தோன்றியது.

இந்தச் சமயத்தில்தான், தனது குருநாதர் அறிவுரைப்படி ரஹ்மான் திருமணம் செய்துகொள்ள முடிவெடுத்தார். அம்மா கரீமா பேகம் ரஹ்மானுக்குப் பொருத்தமான ஒரு பெண்ணைத் தேடும் முயற்சியில் இறங்கினார்.

வழக்கமாக ரஹ்மான் குடும்பத்தார் பிரார்த்தனைக்குச் செல்கிற அதே சூஃபி ஆலயத்தில், சாய்ரா என்கிற பெண்ணைச் சந்தித்தார் கரீமா பேகம்.

பார்த்தவுடன் அவருக்குப் பிடித்துப் போய்விட்டது.

சாய்ராவின் பெற்றோர், குஜராத்தைச் சேர்ந்தவர்கள், ’கட்ச்சி’ என்கிற மொழி பேசக்கூடியவர்கள்.

’நானும் சாய்ராவும் முதன்முறை சந்தித்தபோது, அவர் அதிகம் பேசவே இல்லை, ரொம்ப அமைதியாக இருந்தார்’ என்கிறார் ஏ. ஆர். ரஹ்மான், ‘ஆனால் எப்படியோ, நாங்கள் கிட்டத்தட்ட மூன்று மணி நேரத்துக்குத் தொடர்ந்து பேசிக்கொண்டிருந்தோம்!’

1995 மார்ச் 12ம் தேதி, ரஹ்மான் சாய்ரா திருமணம் நடைபெற்றது. இந்தத் தம்பதிக்கு இப்போது கதீஜா, ரஹீமா என்ற இரண்டு மகள்களும், ரூமி என்கிற மகனும் இருக்கிறார்கள்.

தன்னுடைய பிரபலத்தின் வெளிச்சம் அநாவசியமாகத் தனது குடும்பத்தினர்மீது விழுவதை ரஹ்மான் விரும்புவதில்லை. அதனால்தான் தன்னுடைய மனைவி, குழந்தைகளைப்பற்றிய தகவல்களோ, புகைப்படங்களோ பத்திரிகைகளில், தொலைக்காட்சிகளில் வெளியாகாதபடி பார்த்துக்கொள்கிறார்.

ரஹ்மானின் திருமணம் நடைபெறுவதற்குச் சில தினங்கள் முன்னதாக, மணி ரத்னத்துடன் அவர் இணைந்த மூன்றாவது படம், ‘பம்பாய்’ வெளியானது. ’ரோஜா’வில் தீவிரவாத ஒழிப்பைத் தொட்டிருந்த மணி ரத்னம், இந்தமுறை இந்து முஸ்லிம் மத ஒற்றுமையைக் கையில் எடுத்துக்கொண்டிருந்தார்.

இந்தப் படம், பம்பாய் நகரப் பின்னணியில் நகர்வதால்,

இசையில் வெகுவாக வித்தியாசம் காண்பித்திருந்தார் ஏ. ஆர். ரஹ்மான். அதனாலேயே, ‘பம்பாய்’ பாடல்கள் தமிழில்மட்டுமின்றி ஹிந்தியிலும் மிகப் பெரிய வெற்றி பெற்றன.

அதற்குமுன் சில படங்களில் ரஹ்மான் ஒன்றிரண்டு வரிகள் பின்னணி பாடியிருந்தாலும், ‘பம்பாய்’ல்தான் அவர் முழுப் பாடகராக அறிமுகமானார். அந்தப் பாடல், ‘அந்த அரபிக் கடலோரம், ஓர் அழகைக் கண்டேனே’.

இந்தப் படத்தின் குறிப்பிடத்தக்க மற்ற பாடல்கள்: ‘கண்ணாளனே, எனது கண்ணை நேற்றோடு காணவில்லை’ (சித்ரா), ‘உயிரே, உயிரே’ (ஹரிஹரன், சித்ரா), ‘குச்சிக் குச்சி ராக்கம்மா’ (ஹரிஹரன், ஸ்வர்ணலதா). இந்த ‘ஹிட்’ பாடல்களையெல்லாம்விட, ‘மலரோடு மலர் இங்கு மகிழ்ந்தாடும்போது’

என்கிற மென்மையான பின்னணிப் பாடலுக்குதான் ரசிகர்கள் மகிழ்ந்து கை தட்டினார்கள்.

’பம்பாய்’ படத்தின் பின்னணி இசையும் மிகச் சிறப்பாக அமைந்திருந்தது. கதாபாத்திரங்களின் உயிரோட்டமான உணர்வுகளை அப்படியே இசைமூலம் வெளிக்கொண்டுவந்து காட்சிகளை மேம்படுத்துவதில் வெற்றி பெற்றிருந்தார் ஏ. ஆர். ரஹ்மான்.

தன்னுடைய திரை வாழ்க்கையின் மிகப் பெரிய திருப்பு முனைப் படங்களில் ஒன்றாக, ’பம்பாய்’ஐக் குறிப்பிடுகிறார் ஏ. ஆர். ரஹ்மான். ஏற்கெனவே ‘ரோஜா’மூலம் அவர் இந்தியப் புகழ் பெற்றிருந்தாலும், இந்தப் படம் ரஹ்மானை ஹிந்தி ரசிகர்களுக்கு மேலும் நெருக்கமாகக் கொண்டுசென்றது.

ஆனால், வடக்கத்தி இசைப் பிரியர்கள், ரஹ்மானை இன்னும் ஒரு தமிழ் இசையமைப்பாளராகவே பார்த்துக்கொண்டிருந்தார்கள். காரணம், அதுவரை அவர்களுக்குக் கேட்கக் கிடைத்த ரஹ்மான் பாடல்கள் அனைத்துமே, தமிழிலிருந்து ‘டப்’ செய்யப்பட்டவைதான்.

ரஹ்மானுக்குமுன்பாக, ஹிந்தி ரசிகர்களுக்கு அறிமுகமான தமிழ் இசையமைப்பாளர் என்று பார்த்தால், இளையராஜாமட்டும்தான். அவர்கூட, ஹிந்தியில் விரல் விட்டு எண்ணும்படியான மிகச் சில படங்களுக்குதான் இசையமைத்திருந்தார். அவையும் பெரிய அளவில் வெற்றியடைந்ததாகச் சொல்லமுடியாது.

ராஜாமட்டுமில்லை, தென்னிந்தியாவைச் சேர்ந்த இசையமைப்பாளர்கள்

யாருமே விந்திய மலையைத் தாண்டி அந்தப் பக்கம் ஜெயித்தது கிடையாது என்பதுதான் உண்மை. இதற்கு முக்கியமான காரணம், ஹிந்திப் பாடல்களின் தன்மை, அங்குள்ள ரசிகர்களின் எதிர்பார்ப்புகள் எல்லாமே கொஞ்சம் வித்தியாசமானவை, நம்மவர்கள் அவற்றைப் புரிந்துகொண்டு அவர்கள் ரசிக்கும்படியான பாடல்களைக் கொடுப்பது சிரமம்.

’ரோஜா’, ‘பம்பாய்’ போன்ற படங்களில், ரஹ்மான் அந்த இடைவெளியைச் சுலபமாகக் கடந்து சென்றிருந்தார். இந்தப் படங்களின் பாடல்கள் ஹிந்தி வடிவத்தில் மிகப் பெரிய விற்பனை சாதனைகளை நிகழ்த்தியிருந்தன.

இவைமட்டுமல்ல, ரஹ்மான் இசையமைத்த மற்ற படங்களின் பாடல்கள்கூட, ஹிந்தியில் குறிப்பிடத்தக்க

வெற்றியை அடைந்திருந்தன. பல வடக்கத்தி இசையமைப்பாளர்கள் ரஹ்மானை ஈயடிச்சான் காப்பி அடித்து ஹிட் கொடுத்த விநோதமும் நடந்தது.

ஆனால், இத்தனைக்குப்பிறகும், ஏ. ஆர். ரஹ்மானை நேரடி ஹிந்திப் படங்களுக்கு இசையமைக்க யாரும் அழைக்கவில்லை. என்ன காரணம்?

அது ஒரு விநோதமான அரசியல். 'நல்ல இசையமைப்பாளர்' என்று நாடுமுழுக்கப் பெயர் வாங்கியபிறகும்கூட, இந்தப் பெரிய வேகத்தடையை ரஹ்மான் மிகவும் சிரமப்பட்டுதான் தாண்டவேண்டியிருந்தது.

ஆனால், அப்படித் தாண்டியபிறகு, அவருடைய வளர்ச்சி வேகத்தை யாராலும் கட்டுப்படுத்தமுடியவில்லை!

10

# ரங்கீலா ரே

ரஹ்மான் ‘ரோஜா’வில் அறிமுகமாவதற்குக் கொஞ்சகாலம் முன்பாக நிகழ்ந்த சம்பவம் இது.

ஆந்திராவில் ‘ஷணா ஷணம்’ என்கிற திரைப்படத்தின் பாடல் பதிவு நடைபெற்றுக்கொண்டிருந்தது. வெங்கடேஷ், ஸ்ரீதேவி இணைந்து நடித்த இந்தப் படத்தின் இயக்குனர், ராம் கோபால் வர்மா.

முந்தின வருடம்தான், ராம் கோபால் வர்மா 'ஷிவா' என்கிற மெகா ஹிட் படத்தைக் கொடுத்திருந்தார். தமிழில்கூட 'உதயம்' என்ற பெயரில் டப் செய்யப்பட்டு கலெக்ஷனை அள்ளியது அந்தப் படம்.

வணிக ரீதியிலான வெற்றியைவிட, திரைப்படம் என்கிற காட்சி ஊடகத்தை ராம் கோபால் வர்மா அருமையாகப் பயன்படுத்திக்கொண்ட விதம் ரசிகர்களை வெகுவாகக் கவர்ந்தது. இதனால், அவருடைய அடுத்தடுத்த படங்களுக்கான எதிர்பார்ப்பு பெரிய அளவில் எகிறியிருந்தது.

ராம் கோபால் வர்மாவின் 'சிவா'வுக்கு இளையராஜா இசையமைத்திருந்தார். அடுத்து வந்த 'ஷணா ஷணம்' படத்தில் கீரவாணி என்கிற ஓர்

இளம் இசையமைப்பாளரை ஒப்பந்தம் செய்திருந்தார் அவர்.

இந்தக் கீரவாணி, பின்னாள்களில் தெலுங்கின் முன்னணி இசையமைப்பாளராக உயர்ந்தார், தமிழிலும் ‘மரகதமணி’ என்ற பெயரில் பல படங்களுக்கு இசையமைத்துப் பிரபலமானார்.

‘ஷணா ஷணம்’ படத்தின்போது, கீரவாணியிடம் பணியாற்றிய உதவியாளர்களில் ஒருவர், ரிக்கி. இவர் ஏ. ஆர். ரஹ்மான் (அதாவது, அப்போதைய திலீப்) இசையமைத்த சில விளம்பரப் படங்களைப் பார்த்திருக்கிறார், அவரைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறார்.

ஒருநாள், இயக்குனர் ராம் கோபால் வர்மாவும் ரிக்கியும் ஒன்றாகச்

சாப்பிட்டுக்கொண்டிருந்தார்கள். அப்போது அவரிடம் திலீபைப்பற்றிக் குறிப்பிட்டார் ரிக்கி.

'யார் இந்த திலீப் குமார்?'

'ரொம்பத் திறமையான கீபோர்ட் ப்ளேயர், நிறைய விளம்பரப் படங்களுக்கு இசையமைத்திருக்கிறார்' என்றார் ரிக்கி, 'நீங்கள் அவரை உங்களுடைய படங்களில் பயன்படுத்திக்கொள்ளவேண்டும்'

அப்போது ராம் கோபால் வர்மா இதைப்பற்றிப் பெரிதாக நினைக்கவில்லை. 'சரி, பார்க்கலாம்' என்று சொல்லிவிட்டுச் சும்மா இருந்துவிட்டார்.

சில வாரங்கள் கழித்து, ராம் கோபால் வர்மா மணி ரத்னத்தை அவருடைய

வீட்டில் சந்தித்துப் பேச நேர்ந்தது. அப்போது அவர்கள் இருவரும் தங்களுடைய அடுத்த படங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

‘நான் இப்போ ரோஜான்னு ஒரு படம் பண்ணிகிட்டிருக்கேன், அதுல திலீப் குமார்ன்னு ஒருத்தரை ம்யூசிக் டைரக்டரா அறிமுகப்படுத்தறோம்’ என்றார் மணி ரத்னம், ’சின்ன வயசுதான், ஆனா, ரொம்பப் பிரமாதமா வொர்க் பண்ணியிருக்கார்’

உடனடியாக, ராம் கோபால் வர்மா ரிக்கியை நினைத்துக்கொண்டார், ‘அந்த திலீப் குமார் கம்போஸ் பண்ணின பாட்டுகளை நான் கேட்கலாமா?’

‘ஓ, தாராளமா’ என்றார் மணி ரத்னம். ’ரோஜா’வுக்காக அதுவரை பதிவு செய்யப்பட்டிருந்த பாடல்களை ராம்

கோபால் வர்மாவுக்குப் போட்டுக் காண்பித்தார்.

அடுத்த சில நிமிடங்களுக்குள், ரஹ்மானின் இசை ராம் கோபால் வர்மாவை ஈர்த்துவிட்டது. மெட்டுகள், வாத்திய அமைப்பு, ஒலித் துல்லியம் என எல்லாவற்றிலும் அவர் காண்பித்திருந்த தனித்துவம் அவருக்குப் பிரம்மிப்பூட்டியது.

அப்போதே, தன்னுடைய படங்களில் இந்த இளைஞரின் திறமையைப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும் என்று முடிவு செய்துவிட்டார் ராம் கோபால் வர்மா. ஆனால், அதற்கான சந்தர்ப்பம் உடனடியாக அமையவில்லை.

இதற்குள், 'ரோஜா' ரிலீஸாகிவிட்டது. பாடல்கள், படம் இரண்டுமே தமிழ் நாட்டிலும், அதற்கு வெளியிலும் சூப்பர்

ஹிட். ஏ. ஆர். ரஹ்மானின் இசை மேதைமை சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுவிட்டது.

அப்போது ராம் கோபால் வர்மா தெலுங்கிலிருந்து ஹிந்திக்குத் தாவும் முயற்சியில் இருந்தார். ஒரே நேரத்தில் இரண்டு ஹிந்திப் படங்களை இயக்க ஒப்புக்கொண்டிருந்தார் அவர்: நாயக் மற்றும் ரங்கீலா.

இதில், ‘நாயக்’ படத்தின் கதாநாயகன் சஞ்சய் தத். ‘ரங்கீலா’வின் கதாநாயகன் ஆமிர் கான்.

இங்கே ‘நாயக்’கின் பெயரை முதலில் குறிப்பிட்டு, அதன்பிறகு ‘ரங்கீலா’வைச் சொல்லக் காரணம் இருக்கிறது. அன்றைய பாலிவுட் நிலவரப்படி, சஞ்சய் தத் ஒரு சூப்பர் ஸ்டார் ரேஞ்சில் இருந்தார், அவரோடு ஒப்பிடும்போது

ஆமிர் கான் வளர்ந்து வருகிற இளம் ஹீரோ, அவ்வளவுதான்.

இதனால், ராம் கோபால் வர்மாவின் படங்களுக்கு முதலீடு செய்கிறவர்கள் எல்லோரும், அவர் ‘நாயக்’கில்தான் முழு கவனம் செலுத்தவேண்டும் என்று வற்புறுத்தினார்கள். ‘ரங்கீலா’வை அப்புறமாகப் பார்த்துக்கொள்ளலாம் என்று ஒதுக்கிவைத்தார்கள்.

அது சரி, இந்தப் படங்களுக்கு யார் இசையமைப்பது?

‘ஏ. ஆர். ரஹ்மான்’ என்றார் ராம் கோபால் வர்மா, ‘இரண்டு படங்களுக்கும் நான் அவரைதான் இசையமைப்பாளராக ஒப்பந்தம் செய்யப்போகிறேன், உங்களுக்கு ஓகேயா?’

’ஐயோ வேண்டாம்’, முதலீட்டாளர்கள்

அலறிவிட்டார்கள், ‘ரஹ்மானெல்லாம் தேறமாட்டார், நீங்கள் அனு மாலிக்கைப் பிடியுங்கள், அவரை இசையமைப்பாளராகப் போட்டால்தான் நமக்கு நல்லது’

ராம் கோபால் வர்மாவுக்கு ஆச்சர்யம், ரஹ்மானுக்கு என்ன குறைச்சல்? ரோஜா பாடல்கள் சூப்பர் ஹிட் ஆனபிறகுமா இப்படிப் பேசுகிறார்கள்?

அவர் எவ்வளவோ சொல்லியும், ஹிந்தி முதலீட்டாளர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை, ‘ரோஜாவெல்லாம் சும்மா குருட்டு அதிர்ஷ்டம், இந்த ரஹ்மான் பாச்சா ஹிந்தியில பலிக்காது’ என்றார்கள்.

அப்போதுதான், ராம் கோபால் வர்மாவுக்குப் பல விஷயங்கள் புரிய ஆரம்பித்தன. தென்னிந்தியாவிலிருந்து

ஒருவர் இங்கே வந்து பிரபலமடைவது இவர்களுக்குப் பிடிக்கவில்லை, அவர் நிஜமாகவே திறமைசாலியாக இருந்தால்கூட, அதிர்ஷ்டம் என்று சொல்லி முடக்கிவிடப் பார்க்கிறார்கள். அதனால்தால், ரஹ்மானை எந்த ஹிந்தித் தயாரிப்பாளரோ, இயக்குனரோ தங்கள் படத்தில் ஒப்பந்தம் செய்யவே இல்லை.

அவர்கள் எக்கேடோ கெடட்டும், ராம் கோபால் வர்மா ரஹ்மானை விட்டுக்கொடுக்க விரும்பவில்லை. தன்னுடைய படங்களுக்கு அவர்தான் இசையமைக்கவேண்டும் என்று பிடிவாதம் பிடித்தார்.

ஆனால், முதலீட்டாளர்கள் உச்சாணிக் கொம்பிலிருந்து இறங்கி வர மறுத்தார்கள், 'அனு மாலிக்கைதான் இசையமைப்பாளராகப் போடவேண்டும்' என்று வற்புறுத்தினார்கள்.

இப்போது, ராம் கோபால் வர்மாவின் நிலைமை தர்ம சங்கடமாகிவிட்டது. இந்த விஷயத்தில் ரொம்பச் சண்டை போட்டுப் பிரச்னையாகிவிட்டால், 'நாயக்' மற்றும் 'ரங்கீலா'வுக்குத் தேவையான முதலீடுகள் கிடைக்காமலேயே போய்விடுகிற அபாயம் இருக்கிறது. ஆனால் அதற்காக, ரஹ்மானை ஹிந்தியில் அறிமுகப்படுத்துகிற வாய்ப்பையும் அவர் தவறவிட விரும்பவில்லை.

சரி, உனக்கும் வேண்டாம், எனக்கும் வேண்டாம், ஒரு படத்துக்கு அனு மாலிக், இன்னொரு படத்துக்கு ஏ. ஆர். ரஹ்மான், ஓகேயா?

முதலீட்டாளர்கள் உடனடியாகச் சம்மதித்தார்கள், 'சரி, ஆனால் நாயக்கிற்கு அனு மாலிக்தான்

இசையமைக்கவேண்டும்’

அப்போதுதான், அவர்களுடைய திட்டம் ராம் கோபால் வர்மாவுக்குப் புரிந்தது. ஆமிர் கான் நடிக்கும் ‘ரங்கீலா’வில் அவர்களுக்குச் சுத்தமாக ஆர்வம் இல்லை. அந்தப் படம் எக்கேடு கெட்டால் என்ன என்கிற எண்ணத்தில்தான், அதற்கு ஏ. ஆர். ரஹ்மானை இசையமைப்பாளராகப் போட ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், அதைப்பற்றிக் கவலைப்பட்டுக்கொண்டிருக்க ராம் கோபால் வர்மாவுக்கு நேரம் இல்லை. அவர் உடனடியாக ‘நாயக்’கின் தயாரிப்பு வேலைகளைத் தொடங்கவேண்டியிருந்தது.

அடுத்த சில நாள்களில், ‘நாயக்’கிற்கு பூஜை போட்டுப் படப்பிடிப்பு

தொடங்கியது. முதலீட்டாளர்களின் விருப்பப்படி, இந்தப் படத்துக்கு அனு மாலிக்தான் இசையமைத்தார்.

ஆனால், படப்பிடிப்பு ஆரம்பித்து இருபது நாள் கழித்து, திடீரென்று சஞ் சய் தத் கைது செய்யப்பட்டார். மும்பை தொடர் குண்டுவெடிப்புச் சம்பவத்தில் அவருக்குத் தொடர்பு இருப்பதாகக் குற்றம் சாட்டப்பட்டு, வழக்கு நீதிமன்றத்துக்குச் சென்றது.

அவ்வளவுதான். 'நாயக்' படம் அப்படியே பெட்டிக்குள் முடங்கிவிட்டது. வேறுவழியில்லாமல், 'ரங்கீலா'வைக் கையில் எடுத்தார் ராம் கோபால் வர்மா.

அதுவரை தமிழ், தெலுங்கு, மலையாளம் எனத் தென்னாட்டு மொழிகளில்மட்டும் இசையமைத்துப் புகழ் பெற்றிருந்த ஏ. ஆர். ரஹ்மானுக்கு,

ரங்கீலாதான் முதல் ஹிந்திப் படம். இந்த வாய்ப்பை நன்றாகப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும் என்று முடிவெடுத்தார் அவர்.

இத்தனைக்கும், ரஹ்மானுக்கு ஹிந்தி ஒழுங்காகப் பேசக்கூடத் தெரியாது. ஆனால், எல்லைகளைக் கடந்த ஓர் இசையை உருவாக்கவேண்டும் என்று கனவு கண்ட அவருக்கு, இந்த மொழிப் பிரச்னையைத் தாண்டுவது அப்படியொன்றும் பெரிய விஷயமாக இருக்காது.

'ரங்கீலா' ஒரு பக்கா மசாலாப் படம். ஆனால், அதற்குமுன் ஹிந்தி சினிமாவில் யாரும் முயற்சி செய்திருக்காதபடி அதனை ஒரு பிரமாதமான 'விஷுவல் ட்ரீட்'டாக யோசித்துவைத்திருந்தார் ராம் கோபால் வர்மா.

இந்த ‘ட்ரீட்’டின் முக்கியமான அம்சம், ஊர்மிளா மடோன்கர். அவருடைய இளமை ஆளுமைக்குமுன்னால், கதாநாயகன் ஆமிர் கான், இன்னொரு கதாநாயகன் ஜாக்கி ஷெராஃப் எல்லோரும் இரண்டாம்பட்சம்தான்!

’ரங்கீலா’வுக்காக ராம் கோபால் வர்மா தேர்வு செய்திருந்த பாடல் சூழ்நிலைகள், அப்படியொன்றும் சவாலானவை அல்ல. ஆனால், அந்தப் பாடல்கள் ஒவ்வொன்றையும் எப்படிப் படமாக்கவேண்டும் என்கிற தன்னுடைய கற்பனையை அப்படியே விவரித்து, அதற்குப் பொருத்தமான ஓர் இசையை ரஹ்மானிடம் எதிர்பார்த்தார் அவர்.

ரஹ்மானின் அதிர்ஷ்டம், முதல் படத்தில் தொடங்கி அவருக்குக் கிடைத்தை இயக்குனர்கள் எல்லோருமே, காட்சிப்பூர்வமான

அழகை நம்புகிறவர்கள். ‘ரங்கீலா’விலும் தன்னுடைய உழைப்புக்கு முழுமையான மரியாதை கிடைக்கும் என்கிற உறுதியான எண்ணம் அவருக்குத் தோன்றியது.

வழக்கமான ரஹ்மான் ஸ்டைலில், மெட்டுகளும் சரி, இசைக் கோர்ப்புகளும் சரி, கொஞ்சம் கொஞ்சமாக உருவாகி மெருகேற்றப்பட்டன. பாடல்களில் சுவாரஸ்யம், தரம் இரண்டுமே குறைந்துவிடாதபடி கவனமாகப் பார்த்துக்கொண்டார் ரஹ்மான். எல்லாப் பாடல்களையும் மெஹ்பூப் எழுதியிருந்தார்.

’ரங்கீலா’வுக்கு முன்பாகவே, கிட்டத்தட்ட பதினைந்து தமிழ்ப் படங்களுக்கு இசையமைத்துவிட்டார் ரஹ்மான். அவர் நினைத்திருந்தால், அவற்றிலிருந்து நல்ல ஹிட் பாடல்கள் ஐந்தாறைத்

தேர்ந்தெடுத்து ஹிந்தி சாயம் பூசி ‘ரங்கீலா’வில் இணைத்திருக்கலாம்.

ஆனால், வேண்டுமென்றே ரஹ்மான் அதைச் செய்யாமல் தவிர்த்துவிட்டார். எந்தவிதத்திலும் பாடல்களில் தென்னாட்டு வாசனை அடித்துவிடக்கூடாது என்பதில் அவர் மிகக் கவனமாக இருந்தார்.

‘சூப்பர் போலீஸ்’ படத்தில் இடம் பெற்ற ஒரே ஒரு தெலுங்குப் பாடல்மட்டும் ’ரங்கீலா’வில் ஹிந்தி அவதாரம் எடுத்தது. மற்ற பாடல்கள் அனைத்தும் அந்தப் படத்துக்காகப் புதிதாக உருவாக்கப்பட்டவைதான்.

’ரங்கீலா’வின் மிக முக்கியமான சிறப்பம்சமாக ராம் கோபால் வர்மா நினைத்தது, ஊர்மிளா மடோன்கர் ஆடிப் பாடுகிற இரண்டு தனிப்

பாடல்களைதான். இந்த இரண்டுக்கும் மிகப் பிரம்மாண்டமான வாத்திய அமைப்பைச் செய்திருந்த ஏ. ஆர். ரஹ்மான், அவற்றைப் பாடுவதற்கு ஆஷா போன்ஸ்லேவைத் தேர்ந்தெடுத்தார்.

ஒருகாலத்தில் ஹிந்தியின் முன்னணிப் பாடகிகளில் ஒருவராக இருந்த ஆஷா போன்ஸ்லேவுக்கு அப்போது வயது அறுபது. கிட்டத்தட்ட ரிடையராகிவிட்ட நேரம்.

இருபது வயது இளம் புயல் ஊர்மிளாவுக்கு, அறுபது வயது ஆஷா போன்ஸ்லேயின் குரல் பொருந்துமா? ரஹ்மானுக்கு என்ன பைத்தியம் பிடித்துவிட்டதா?

இந்த விஷயத்தில் ரஹ்மான் மிகவும் நம்பிக்கையோடு இருந்தார். 'ரங்கீலா'வின் குரல், ஆஷா போன்ஸ்லேவாகதான்

இருக்கமுடியும் என்பது அவருடைய உறுதியான எண்ணம்.

பாடல் பதிவுகள் முடிந்தன. ‘ரங்கீலா ரே’, மற்றும் ‘தன்ஹா தன்ஹா’ என்கிற அந்த இரண்டு பாடல்களையும் கேட்டவர்கள், ரஹ்மானின் கணிப்பு சரியானதுதான் என்பதை ஒப்புக்கொண்டார்கள். அந்த அளவுக்கு ஆஷாவின் குரலில் இளமை துள்ளியது. காரணம், ரஹ்மானின் இசை மேஜிக்தான்!

’ரங்கீலா’வுக்குப்பிறகு, ஆஷா போன்ஸ்லே ஹிந்தித் திரைப்பாடல்களில் இன்னொரு ‘ரவுண்ட்’ வந்தார். தமிழிலும் ரஹ்மான் இசையில் ஐஷ்வர்யா ராய்க்குப் பின்னணி பாடினார். (’வெண்ணிலா வெண்ணிலா வெண்ணிலாவே’ இருவர் 1997)

’ரஹ்மானின் முதல் நேரடி ஹிந்திப்

படம்’ என்கிற முத்திரையுடன் வெளியான ‘ரங்கீலா’ இசை நாடாக்கள், மிகப் பெரிய விற்பனைச் சாதனை படைத்தன. இந்தமுறை ரஹ்மானின் வெற்றியை யாரும் ‘குருட்டு அதிர்ஷ்டம்’ என்று ஒதுக்கித் தள்ளிவிடமுடியாது.

ஹிந்தி ‘ரங்கீலா’வில் சில தென்னாட்டுக் குரல்களும் ஒலித்தன. ‘ஹாய் ராமா’வில் ஸ்வர்ணலதா, ‘யாரோ சுன் லோ ஜரா’வில் சித்ராவை ஹிந்திக்குக் கொண்டுசென்ற ரஹ்மான், ’மாங்க்தா ஹை க்யா’ என்கிற வித்தியாசமான பாடலை அவரே பாடியிருந்தார்.

’ரங்கீலா’ பாடல்களின் வெற்றியைத் தொடர்ந்து, படத்துக்குப் பெரும் எதிர்பார்ப்பு கிளம்பியது. ஊர்மிளாவின் ஆ(ஓ)ட்டத்துக்கு ரஹ்மான் அமைத்த தீம் இசை நாடுமுழுக்க ஒலித்துப் பரபரப்பை அதிகப்படுத்தியது.

பல விதங்களில், ஹிந்தித் திரையுலகில் ஒரு புதிய மாற்றத்தைக் கொண்டுவந்த படம் ரங்கீலா. ஏ. ஆர். ரஹ்மானை வடக்கத்தி ரசிகர்கள் ஏற்றுக்கொண்டது, ஆஷா போன்ஸ்லேயின் இரண்டாவது இன்னிங்ஸ்தவிர, இந்தப் படம் சூப்பர் ஹிட் ஆனதன்மூலம் ராம் கோபால் வர்மாவும் பாலிவுட்டின் மிக முக்கியமான ஓர் இயக்குனராக மாறினார்.

'ரங்கீலா'வுக்குப்பிறகு, அநேகமாக எல்லா ஹிந்திப் படங்களும் 'New Age Story Telling' எனப்படும் புதிய பாணியில், அதாவது காட்சிப்பூர்வமாகக் கதை சொல்வது அவசியமாவிட்டது. இசையைப் பொறுத்தவரை, ரஹ்மானின் 'நவீன ஒலி' இந்தியாமுழுக்க எல்லா இசையமைப்பாளர்களிடமும் எதிர்பார்க்கப்படுகிற ஒரு கட்டாயத்

தேவை / தகுதி(Default Standard)யாகவே மாறிவிட்டது.

ஹிந்தியில் 'ரங்கீலா' பெரும் அதிர்வுகளைக் கிளப்பிக்கொண்டிருந்த அதே நேரத்தில், தமிழிலும் இரண்டு முக்கியமான படங்களுக்கு இசையமைத்தார் ஏ. ஆர். ரஹ்மான். ஒன்று, மணி ரத்னத்தின் மனைவி சுஹாசினி இயக்கிய 'இந்திரா', இன்னொன்று, சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்தின் 'முத்து'.

இதற்குள், ஷங்கர் தனது அடுத்த படத்தைத் தொடங்கியிருந்தார், கமலஹாசன் நடிப்பில் தயாரான அந்தப் படத்திற்கு 'இந்தியன்' என்று பெயரிடப்பட்டிருந்தது.

பெயர் கிடக்கட்டும், படத்துக்கு இசை யார்?

ஷங்கர் படத்துக்கு வேறு யார் இசையமைக்கமுடியும்? ஏ. ஆர். ரஹ்மான்தான்.

ஆனால், கமலஹாசன் இளையராஜா பக்தர் ஆச்சே. அவர் எப்படி ரஹ்மானை ஏற்றுக்கொள்வார்? ரசிகர்கள்முதல் விமர்சகர்கள்வரை எல்லோரும் தவிப்போடு கேட்ட கேள்வி இது.

அவர்களுடைய ஆச்சர்யத்தில் நியாயம் இருந்தது. கமலஹாசன் தமிழ்த் திரையுலகின் முக்கியமான ஆளுமையாக உயர ஆரம்பித்த காலத்திலிருந்து, இளையராஜாதான் அவருடைய இசை ஆதாரமாக இருந்தார். அந்தக் காலகட்டத்தில் இளையராஜா இசையமைக்காத கமல் படங்களை விரல் விட்டு எண்ணிவிடலாம்.

இதனால், ஷங்கர் படத்தில்
கமல் நடிக்கிறார் என்கிற செய்தி
வெளியானவுடனேயே பலர் அதனை
நம்ப மறுத்தார்கள். ஒருவேளை
கமல் அந்தப் படத்தில் நடிக்க
ஒப்புக்கொண்டாலும், இளையராஜாதான்
இசையமைக்கவேண்டும் என்று
வற்புறுத்துகிறார், பதிலுக்கு ஷங்கர்
ரஹ்மான்தான் வேண்டும் என்று
பிடிவாதம் பிடிக்கிறார், இரண்டு பேரும்
குடுமிபிடிச் சண்டை என்றெல்லாம்
பத்திரிகைகள் கிசுகிசுத்துத் தள்ளின.

ஆனால், அவர்கள் எதிர்பார்த்ததுபோல்
'இந்தியன்'க்கு எந்தப் பிரச்னையும்
வரவில்லை. ஏ. ஆர். ரஹ்மான்
இசையில் அந்தப் படம் ஜோராகத்
தொடங்கிவிட்டது.

லஞ்சம் வாங்குகிறவர்களைப்
பழிவாங்கும் ஒரு முன்னாள் சுதந்தரப்

போராட்ட வீரர் என்கிற ஒரு வரிக் கதையை வைத்துக்கொண்டு, தனது வழக்கமான பிரம்மாண்டத்தை அள்ளித் தெளித்திருந்தார் ஷங்கர். ‘ரங்கீலா’ கதாநாயகி ஊர்மிளா இந்தப் படத்தின்மூலம் தமிழில் அறிமுகமானார்.

‘இந்தியன்’ல் ரஹ்மான் தந்த முக்கியமான பாடல்கள், ‘பச்சைக் கிளிகள் தோளோடு’ (கே. ஜே. யேசுதாஸ்), ‘டெலிஃபோன் மணிபோல் சிரிப்பவள் இவளா?’ (ஹரிஹரன், ஹரிணி) மற்றும் ‘கப்பலேறிப் போயாச்சு’ (எஸ். பி. பாலசுப்ரமணியம், பி. சுசீலா).

கிட்டத்தட்ட இதே நேரத்தில் வெளிவந்த ரஹ்மானின் ‘காதல் தேசம்’ படத்தின் பாடல்களும் மிகப் பிரபலமாயின. கவிஞர் வாலி எழுதி, ஏ. ஆர். ரஹ்மான் சொந்தக் குரலில் பாடிய ‘முஸ்தஃபா முஸ்தஃபா’ தமிழ் இளைஞர்களின் நட்பு

கீதமாகப் புகழ் பெற்றது.

இந்த வருடம் (1996), பிரபு தேவாவுக்காக ‘லவ் பேர்ட்ஸ்’ மற்றும் ‘மிஸ்டர் ரோமியோ’ என்கிற இரண்டு படங்களுக்கு இசையமைத்தார் ஏ. ஆர். ரஹ்மான். இவை இரண்டிலுமே சில அருமையான மெலடிப் பாடல்கள் இடம்பெற்றிருந்தன ‘மலர்களே, மலர்களே’ (ஹரிஹரன், சித்ரா), ’நாளை உலகம் இல்லையென்றால்’ (உன்னி கிருஷ்ணன், சுஜாதா), ‘தண்ணீரைக் காதலிக்கும் மீன்களா இல்லை?’ (சங்கீதா சஜித்), ‘மெல்லிசையே’ (உன்னி மேனன், ஸ்வர்ணலதா).

ஆனால், இந்தப் பாடல்களையெல்லாம்விட, பிரபு தேவா ரப்பர்போல் கையைக் காலை வளைத்து ஆடுகிற ஆர்ப்பாட்டங்களைதான் ரசிகர்கள் விரும்பி ரசித்தார்கள். ஆகவே,

ரஹ்மான் அதுமாதிரியான துள்ளாட்டப் பாடல்களை அதிகம் தரவேண்டும் என்று இயக்குனர்கள், தயாரிப்பாளர்கள் எதிர்பார்த்தார்கள்.

ரஹ்மானைப் பொறுத்தவரை, என்னதான் ரசிகர்களின் விருப்பம் என்பது முக்கியமாக இருந்தாலும், ஒரேமாதிரியான பாடல்களைத் தொடர்ந்து கொடுத்துக்கொண்டிருக்க அவர் விரும்பவில்லை. இந்த வலையிலிருந்து வெளியே வருவதற்கான ஒரு நல்ல வாய்ப்பை அவர் தேடிக்கொண்டிருந்தார்.

அப்போதுதான், ரஹ்மானின் விளம்பரத்துறை நண்பர் ராஜீவ் மேனன் திரை இயக்குனராக அறிமுகமானார். அவருடைய முதல் படம், ஏவி. எம். நிறுவனத்தின் பொன்விழாத் தயாரிப்பான 'மின்சாரக் கனவு'.

ராஜீவ் மேனனுடன் மீண்டும் இணைந்து பணியாற்றுவதில் ஏ. ஆர். ரஹ்மானுக்கு மிகுந்த உற்சாகம். அதைவிடப் பெரிய சந்தோஷம், அந்தப் படத்தின் கதாநாயகர்கள், அர்விந்த் சாமி மற்றும் பிரபு தேவா.

மற்ற இயக்குனர்களைப்போல, ராஜீவ் மேனன் பிரபு தேவாவை வெறும் நடன இயந்திரமாகப் பயன்படுத்தப்போவதில்லை. ஆகவே, பிரபு தேவா என்றாலே 'டான்ஸ்' இசைதான் என்கிற பிம்பத்தை உடைப்பதற்கு இந்தப் படத்தைப் பயன்படுத்திக்கொள்ளத் தீர்மானித்தார் ரஹ்மான்.

தவிர, இது ராஜீவ் மேனனின் முதல் படம். இது வெற்றி அடைந்தால், அவருக்குத் திரையுலகில் ஒரு நல்ல

இடம் கிடைத்துவிடும். அந்தக் காரணத்துக்காகவும், ஏ. ஆர். ரஹ்மான் ‘மின்சாரக் கனவு’ பாடல்களுக்காக விசேஷமாக உழைத்தார்.

பிரபல ஹிந்திக் கதாநாயகி கஜோல் தமிழில் அறிமுகமான படம் அது. படத்தின் மொத்தக் கதையும் அவருடைய கதாபாத்திரத்தைச் சுற்றிதான் அமைந்திருந்தது.

கஜோலின் அறிமுகப் பாடலான ‘பூப்பூக்கும் ஓசை’யைச் சுஜாதா பாடினார். அந்தப் பாட்டின் இடையில் கால் நிமிடம்மட்டும் வருகிற இரண்டு வரி கோரஸைப் பாடுவதற்காக, மலேசியா வாசுதேவனை அழைத்திருந்தார் ஏ. ஆர். ரஹ்மான்.

’மின்சாரக் கன’வின் இன்னொரு கொண்டாட்டச் சூழ்நிலையில்,

‘ஊ லலல்லா’ என்று தொடங்கும் வித்தியாசமான நடனப் பாடல் இடம்பெற்றது. உன்னி மேனன், சித்ரா, ஸ்ரீனிவாஸ் இணைந்து பாடிய இந்தப் பாடலுக்காக, சித்ரா தேசிய விருது பெற்றார், நடனம் அமைத்த பிரபு தேவாவுக்கும் தேசிய விருது கிடைத்தது.

இதே படத்துக்காக தேசிய விருது பெற்ற இன்னொருவர், எஸ். பி. பாலசுப்ரமணியம். பாடல், ‘தங்கத் தாமரை மகளே’.

அதற்குமுன் எஸ். பி. பாலசுப்ரமணியம் ஐந்து முறை சிறந்த பாடகருக்கான தேசிய விருதுகளை வென்றிருக்கிறார். ஆனால் அவை எல்லாமே தெலுங்கு, கன்னடம், ஹிந்திப் பாடல்களுக்காகக் கிடைத்தவை. முதன்முறையாக இப்போதுதான் ஒரு தமிழ்ப் பாடலுக்காக தேசிய விருது பெறுகிறார் அவர்.

இத்தனை பேருக்கு விருது வாங்கித் தந்த ‘மின்சாரக் கனவு’, ஏ. ஆர். ரஹ்மானைமட்டும் விட்டுவைக்குமா? அந்த ஆண்டுக்கான சிறந்த இசையமைப்பாளர் எனும் தேசிய விருது அவருக்கு வழங்கப்பட்டது. ’ரோஜா’வுக்குப்பிறகு அவர் பெறுகிற இரண்டாவது தேசிய விருது இது.

அப்போது ஏ. ஆர். ரஹ்மானுக்கு வயது முப்பதுதான். அவருடைய முதல் படமான ‘ரோஜா’ வெளியாகி இன்னும் ஐந்து ஆண்டுகள்கூட முழுசாக முடியவில்லை. அதற்குள் பணம், புகழ், இந்தியா முழுக்க ரசிகர் கூட்டம், விருதுகள், பாராட்டுகள், வீட்டு வாசலில் தயாரிப்பாளர்கள், இயக்குனர்கள் கூட்டம், அடுத்தடுத்த படங்களால் நிரம்பிக் கிடக்கும் டைரி என்று எல்லாவற்றையும் சாதித்துவிட்டார்.

ஆனால், இத்தனைக்குப்பிறகும் அவருடைய மனத்தில் முழுமையான நிறைவு இல்லை. ஏதோ ஒரு குறை, என்னவோ புதிதாகச் செய்யவேண்டும் என்கிற துடிப்பு, அதை எப்படித் தீர்ப்பது என்பதுதான் புரியவில்லை.

தொடர்ந்து அடுத்தடுத்த திரைப்படங்களில் வேலை பார்த்தபடி, மனத்தின் ஒரு மூலையில் இந்தக் கேள்வியைத் தொடர்ந்து கேட்டுக்கொண்டிருந்தார் ஏ. ஆர். ரஹ்மான்: சினிமாவுக்கு இசையமைப்பதுதான் என்னுடைய வாழ்க்கையின் லட்சியமா? இதுதான் நான் செய்யக்கூடிய அதிகபட்சச் சாதனையா? இதற்குமேல் நான் சாதிக்கவேண்டியது எதுவுமே இல்லையா? எனக்குள் ஓர் ஆத்மார்த்தமான திருப்தி

கிடைக்கவேண்டுமென்றால், அதற்கு நான் என்ன செய்யவேண்டும்?

இந்தக் குழப்பத்துக்கான பதில் கிடைத்தபோது, ஏ. ஆர். ரஹ்மானின் இசை வாழ்க்கை அடுத்த தளத்துக்கு நகர்ந்தது!

# 11

# தாய் மண்ணே வணக்கம்

’ஏதாவது புதுசாச் செய்யணும்ப்பா’

நூறாவது முறையாக ரஹ்மான் அதையே சொன்னார். ஆனால், அந்த ‘ஏதாவது’ என்ன என்பதுதான் அவருக்கும் புரியவில்லை, எதிரில் உட்கார்ந்திருந்த பரத் பாலாவுக்கும் புரியவில்லை.

ரஹ்மான் திலீபாக விளம்பரத்துறையில் கால் ஊன்றத் தொடங்கிய

காலத்திலிருந்து, பரத் பாலா அவருடைய நல்ல நண்பர். இருவரும் ஒரே அலைவரிசையில் சிந்திக்கக்கூடியவர்கள்.

அதனால்தான், தன்னுடைய இந்தத் ‘தனிப்பட்ட’ ப்ராஜெக்டுக்காக பரத் பாலாவிடம் அவ்வப்போது பேசிக்கொண்டிருந்தார் ஏ. ஆர். ரஹ்மான். புதுசாக என்ன செய்யலாம், எப்படிச் செய்யலாம் என்பதுபற்றி இருவரும் மணிக்கணக்காகப் பேசி மாய்ந்தார்கள்.

நாள்கள், வாரங்கள், மாதங்கள், கிட்டத்தட்ட அரை வருடம் தாண்டியும், உருப்படியாக ஒரு யோசனைகூட அவர்களுக்குக் கிடைக்கவில்லை.

பரத் பாலாவின் தந்தை அந்தக் கால விடுதலைப் போராட்ட வீரர். அவர் இந்த விஷயத்தைக் கேள்விப்பட்டதும்,

சட்டென்று ஒரு நல்ல யோசனையைச் சொன்னார், ‘இந்த வருஷம் சுதந்தரப் பொன்விழா வருதில்ல? அதை அடிப்படையா வெச்சு ஏதாவது முயற்சி செஞ்சு பாருங்களேன்’

நிச்சயமாகச் செய்யலாம். ஆனால், சுதந்தரத்தை வைத்து என்ன செய்வது? எப்படிச் செய்வது? மறுபடியும் ரஹ்மான், பரத் பாலா தீவிரச் சிந்தனையில் மூழ்கினார்கள்.

இப்படி யோசித்து யோசித்துக் களைத்துப்போய் தூங்கிய ஒருநாள். நள்ளிரவு தாண்டிக் கொஞ்ச நேரம் கழித்து, ரஹ்மானுக்கு ஒரு யோசனை தோன்றியது.

சட்டென்று விழித்துக்கொண்ட அவர், பரத் பாலாவைத் தேடிப் பிடித்தார், ‘ஷிவா எங்கே?’

ஷிவா, ஏ. ஆர். ரஹ்மானின் சவுண்ட் எஞ்சினியர். வழக்கமாக ராத்திரி முழுக்க ஸ்டூடியோவில் இருக்கிறவர், அன்றைக்குப் பாடல் பதிவு எதுவும் இல்லை என்பதால் சீக்கிரமாக வீட்டுக்குத் திரும்பிவிட்டார்.

'என்னாச்சு ரஹ்மான்?' பதற்றத்துடன் கேட்டார் பரத் பாலா, 'ஷிவா வீட்டுக்குப் போய்ட்டார், என்ன விஷயம்?'

'எனக்கு ஒரு நல்ல ஐடியா கிடைச்சிருக்கு' என்றார் ரஹ்மான், 'உடனடியா அதைக் கம்போஸ் செஞ்சு, பாடிப் பதிவு செய்யணும்ன்னு தோணுது'

பல மாத முயற்சிக்குப்பிறகு கிடைத்த அந்த அபூர்வமான யோசனையை, ரஹ்மான் தவறவிட விரும்பவில்லை. ஷிவா இல்லாவிட்டாலும்கூட,

அப்போதே அந்தப் பாடலின் ஓர் அடிப்படை வடிவத்தை உருவாக்கிவிடவேண்டும் என்று துடித்தார்.

சட்டென்று அந்த அறையில் ஒரு சின்ன மெழுகுவர்த்தியை ஏற்றிவைத்தார் ரஹ்மான், 'இப்போ நான் பாடப்போறேன், ஷிவாவுக்குப் பதிலா நீதான் அதைப் பதிவு செய்யணும், சரியா?'

அந்த அதிகாலை நேரத்தில் ரஹ்மான் பாடிய அந்தப் பாடல், 'மா துஜே சலாம்', தமிழில் சொல்வதென்றால், 'தாய் மண்ணே வணக்கம்'!

பெங்காலி, சமஸ்கிருதத்தில் பக்கிம்சந்திர சாட்டர்ஜி எழுதிப் புகழ் பெற்ற 'வந்தே மாதரம்' தேசியப் பாடலின் நவீன வடிவம்தான் அது. சுதந்தரப்

பொன்விழாவை முன்னிட்டு, தேசிய ஒற்றுமையை வலியுறுத்தும்வகையில் இந்தப் பழைய பாடலுக்கு இன்றைய இளைஞர்கள் விரும்பக்கூடிய ஒரு வடிவத்தைத் தரத் தீர்மானித்திருந்தார் ஏ. ஆர். ரஹ்மான்.

இதே நேரத்தில், உலகப் புகழ் பெற்ற ‘சோனி ம்யூசிக்’ நிறுவனம் இந்தியாவில் கால் பதிக்கத் தீர்மானித்திருந்தது. தங்களுடைய பிராண்ட் பெயரைப் பிரபலப்படுத்துவதற்காக, அவர்கள் ரஹ்மானின் ‘வந்தே மாதரம்’ ஆல்பத்தைத் தயாரிக்க முன்வந்தார்கள்.

கதை, காட்சி அமைப்பு, நடிகர்களின் இமேஜைப்பற்றியெல்லாம் கவலைப்படாமல், சுதந்தரமாக இப்படி ஓர் ஆல்பம் செய்வது ரஹ்மானுக்கும் உற்சாகம்தான். ’மா துஜே சலாம்’, அதன் தமிழ் வடிவம் ‘தாய் மண்ணே வணக்கம்’

உள்பட, வரிசையாகப் பல தனிப் பாடல்களை உருவாக்க ஆரம்பித்தார்.

ஆனால், ஒரே பிரச்னை, பெரும்பாலான இந்திய ரசிகர்களுக்கு இசை என்றாலே அது சினிமாப் பாடல்கள்தான், 'ஆல்பம்' என்கிற தனிப்பட்ட இசைத் தொகுப்புகள் நம்மவர்களுக்கு அவ்வளவாகப் பரிச்சயம் இல்லை. ஆனானப்பட்ட ரஹ்மானே ஆல்பம் செய்தாலும், அவர்கள் கண்டுகொள்வார்களா என்பது சந்தேகம்தான்.

கஷ்டப்பட்டு வேலை செய்துவிட்டு அந்த ஆல்பம் பிரபலமாகாமல் போனால், அத்தனை உழைப்பும் வீண்தானே? இந்தப் புதிய 'வந்தே மாதர'த்தை எல்லோரிடமும் கொண்டு சேர்க்க என்ன செய்யலாம் என்று ரஹ்மானும், பரத் பாலாவும் தீவிரமாக யோசித்தார்கள்.

அப்போதுதான், ‘விஷுவல்’ மனிதரான பரத் பாலாவுக்கு ஒரு நல்ல யோசனை கிடைத்தது. ’வந்தே மாதரம்’ ஆல்பத்தின் முக்கியப் பாடலான ’மா துஜே சலாம்’ஐ வீடியோவாக எடுத்து வெளியிட்டால் என்ன?

ரஹ்மானின் திரையிசைப் பாடல்கள் ஒவ்வொன்றும் அதிவேகமாகப் பிரபலமடைய முக்கியமான காரணம், அவற்றின் புதுமையான வடிவம், ஒலிப்பதிவுத் தரம், அழகான காட்சியமைப்புகள், கடைசியாக, அவை அடிக்கடி தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டதுதான்.

தொண்ணூறுகளின் தொடக்கத்தில், அதாவது, ரஹ்மான் ‘ரோஜா’ மூலம் அறிமுகமான அதே காலகட்டத்தில்தான் இந்தியாவில் சாடிலைட் சானல்களின் ஆதிக்கம் தொடங்கியது. அதுவரை

‘தூர்தர்ஷன்’ ஒன்றுதான் கதி என்று கிடந்த இந்திய ரசிகர்கள், இப்போது ஏகப்பட்ட பொழுதுபோக்கு அம்சங்களில் திளைத்து எழுந்தார்கள், புதுப்புது சினிமாப் பாடல்களெல்லாம் அடுத்த நாளே அவர்கள் வீட்டு வரவேற்பறைகளை ஆக்கிரமித்தன.

தொலைக்காட்சிமூலம் திரைப்படப் பாடல்கள் ‘ஹிட்’ ஆகுமென்றால், தனிப் பாடல்களையும் ஏன் பிரபலப்படுத்தமுடியாது? அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் ஆல்பம் வெளியிடுகிறவர்கள் அப்படிதானே செய்கிறார்கள்?

ஒரே பிரச்னை, ‘மா துஜே சலாம்’ வீடியோ வடிவத்தில், அதைப் பாடிய ஏ. ஆர். ரஹ்மான் தோன்றி நடிக்கவேண்டும் என்றார் பரத் பாலா.

ரஹ்மான் அதுவரை கேமெராமுன் தோன்றி நடித்ததே கிடையாது. பத்திரிகை, தொலைக்காட்சிப் பேட்டிகளின்போதுகூட, கேட்ட கேள்விக்குப் பதில் சொல்வார், அவரிடமிருந்து வார்த்தையைப் பிடுங்குவது ரொம்பக் கஷ்டம்.

இதனால், இந்த வீடியோ யோசனை சரிப்படுமா, மக்கள் தன்னைத் திரையில் பார்த்தால் ஏற்றுக்கொள்வார்களா, அல்லது காமெடியாகிவிடுமா என்று ரொம்பவும் தயங்கினார் ரஹ்மான்.

அவரை உற்சாகப்படுத்துவதற்காக, பரத் பாலா ஒரு விஷயம் சொன்னார், ‘நீங்க நடிக்கவே வேண்டாம் ரஹ்மான், உங்க ஸ்டூடியோவிலே மைக் முன்னாடி இந்தப் பாட்டைப் பாடினா என்ன செய்வீங்களோ அதையே கேமெரா முன்னாடி செய்ங்க, அதை நான்

அப்படியே படம் பிடிச்சுக்கறேன்’

கடைசியில், ரஹ்மான் அதைத்தான் செய்தார். ஒரே வித்தியாசம், ’சவுண்ட் ப்ரூஃப்’ செய்யப்பட்ட நான்கு சுவர்களுக்கு நடுவே பாடுவதற்குப் பதிலாகப் பாலைவனச் சூழல், சுற்றிலும் சுழன்றடிக்கிற காற்று, ரஹ்மானின் தலை முடியும் உடையும் பின்னோக்கிப் பறக்க, ’ஹை பிட்ச்’சில் அவர் உணர்ச்சிமயமாகப் பாட, பரத் பாலாவும் அவர் மனைவி கனிகாவும் அந்தக் காட்சிகளைப் பதிவு செய்துகொண்டார்கள்.

பலர் கவனிக்காத விஷயம், அந்த வீடியோவில் ரஹ்மான் ‘தோன்றுவது’ மிகச் சில காட்சிகளில்தான். மிச்சமுள்ள எல்லாக் காட்சிகளும் எளிய மனிதர்களின் முகங்கள், அவர்களுடைய உலகம், துள்ளியோடும் குழந்தைகள், அவ்வப்போது தேசியக் கொடி.

வழக்கமான சுதந்தர கீதங்களைப்போல் போரடித்துவிடாமல் மிகக் கவனமாக உருவாக்கப்பட்ட வீடியோ படம் அது.

‘மா துஜே சலாம்’ உருவாகிக்கொண்டிருந்தபோதே, இந்தப் பாடலைத் தமிழிலும் கொண்டுவரவேண்டும் என்று விரும்பினார் ஏ. ஆர். ரஹ்மான். ஹிந்தியில் மஹ்பூப் எழுதிய பாடல் வரிகளைத் தமிழில் தரவேண்டிய பொறுப்பு, ரஹ்மானின் ஃபேவரிட் பாடலாசிரியர் வைரமுத்துவிடம் வந்து சேர்ந்தது.

இதுபற்றி வைரமுத்துவிடம் பேசிய ரஹ்மான், ஒரே ஒரு விஷயத்தைதான் வலியுறுத்திச் சொன்னார், ‘அந்த முதல் வரி, மா துஜே சலாம் என்பதுதான் வந்தே மாதரத்தின் எளிமையான ஹிந்தி வடிவம், தமிழுக்காக அதை

மாற்றிவிட்டால், அந்தப் பாட்டின் ஜீவனே போய்விடும்’

‘அதனால், தமிழிலும் மா துஜே சலாம் என்கிற வரிகளின் அர்த்தம் அப்படியே வரவேண்டும், அதேசமயம் அது மெட்டுக்குப் பொருத்தமாகவும் இருக்கவேண்டும்’ என்றார் ரஹ்மான்.

வைரமுத்து ரஹ்மானின் வீட்டிலேயே புல் தரையில் அமர்ந்தபடி அந்தப் பாடலை எழுதிக்கொண்டிருந்தார். மொத்தப் பாடலும் சிறப்பாக அமைந்தும்கூட, அந்த முதல் வரி, அதுமட்டும் அவருக்குத் திருப்தியாக வரவில்லை.

சிறிது நேரத்துக்குப்பிறகு, கவிஞருக்கு யாரோ தேநீர் கொண்டுவந்தார்கள். சரியாக அதே நேரத்தில்தான், ‘தாய் மண்ணே வணக்கம்’ என்கிற அந்த முதல்

வரியை எழுதி முடித்திருந்தார் அவர்.

இந்த வரியைக் கேட்ட தேநீர்ப் பையன், நேராக ரஹ்மானிடம் ஓடினான். ’மா துஜே சலாம்’க்குப் பொருத்தமாக அதே மெட்டில், அதே அர்த்தத்தில் ஓர் அழகான வாசகம் அமைந்துவிட்டது என்று தெரிந்துகொண்ட ரஹ்மான், உற்சாகத்துடன் வைரமுத்துவைத் தேடி வந்து பாராட்டினார்.

‘மா துஜே சலாம்’, ‘தாய் மண்ணே வணக்கம்’தவிர, ‘வந்தே மாதரம்’ ஆல்பத்தில் இன்னும் பல நல்ல பாடல்கள் இடம்பெற்றிருந்தன, அவற்றில் குறிப்பிட்டுச் சொல்லவேண்டிய ஒன்று, ‘Gurus Of Peace’.

இந்தப் பாடலின் மெட்டு, தமிழர்களுக்கு நன்கு அறிமுகமானதுதான். முன்பு ’கருத்தம்மா’ படத்தில் இடம்

பெற்ற ‘போறாளே பொன்னுத்தாயி’ பாடலுக்குதான், இப்போது நவீன இசை கோர்த்து அற்புதமாக உருவாக்கியிருந்தார் ரஹ்மான்.

‘Gurus Of Peace’ பாடலின் இன்னொரு விசேஷம், இதனை ஏ. ஆர். ரஹ்மானுடன் இணைந்து பாடியவர், பாகிஸ்தானைச் சேர்ந்த சூஃபி இசை மேதை நுஸ்ரத் ஃபதே அலி கான்.

நுஸ்ரத் சாஹேபின் மிகப் பெரிய ரசிகரான ரஹ்மானுக்கு, அவரைத் தன்னுடைய இசையில் பாடவைக்கிற, அவரோடு சேர்ந்து பாடுகிற அனுபவம் மிகவும் மகிழ்ச்சியளித்தது. கூடுதல் சந்தோஷமாக, இந்தியா பாகிஸ்தான் ஐம்பதாவது சுதந்தர தினத்தில், இந்த இரு நாடுகளுக்கு இடையிலான நட்புறவை வலியுறுத்துவதுபோல் இவர்களின் இசைக் கூட்டணி அமைந்துவிட்டது.

இந்தப் பாடல் பதிவுக்காக நுஸ்ரத் ஃபதே அலி கானை நேரில் சந்தித்தபோது, அவரிடம் ஒரு கோரிக்கை வைத்தார் ரஹ்மான், ‘நீங்கள் எனக்குக் கவ்வாலி இசையைக் கற்றுத்தருவீர்களா?’

’ஷேஹன்ஷா–எ–கவ்வாலி’ அதாவது, ’கவ்வாலி இசையின் மஹாராஜா’ என்று அழைக்கப்பட்ட நுஸ்ரத் ஃபதே அலி கான், உடனடியாகச் சம்மதித்தார், ‘இப்போதே பாடத்தை ஆரம்பித்துவிடலாமா?’

’இப்போதா?’ ரஹ்மானுக்குத் தயக்கம், ‘நடு ராத்திரி தாண்டிவிட்டதே, இந்த நேரத்தில் எப்படி?’

‘இதற்கெல்லாம் நேரம் காலம் பார்க்கக்கூடாது’ என்று சொன்ன நுஸ்ரத் சாஹேப்,

தூங்கிக்கொண்டிருந்த அவருடைய இசை உதவியாளர்களையெல்லாம் எழுப்பிவிட்டார். அங்கேயே ரஹ்மானுக்குக் கவ்வாலி வகுப்பு தொடங்கிவிட்டது.

முதல் பத்து நிமிடங்களுக்கு மற்றவர்கள் பாடுவதைக் கேட்டுக்கொண்டிருந்த ரஹ்மான், பின்னர் அவரும் சேர்ந்து பாடத் தொடங்கினார். அந்த நடு ராத்திரி நேரத்தில் அவர் கற்றுக்கொண்ட இசை நுணுக்கங்களை, பின்னர் அவருடைய திரைப் பாடல்களில் நிறையப் பார்க்கமுடிகிறது.

அப்போது ரஹ்மானுக்குத் தெரியாத விஷயம், அவர்தான் நுஸ்ரத் சாஹேபின் கடைசி மாணவர். ‘Gurus Of Peace’ பாடல் பதிவு செய்யப்பட்டு சில நாள்களுக்குள், நுஸ்ரத் ஃபதே அலி கான் மரணமடைந்துவிட்டார்.

அவருடைய நினைவுக்கு மரியாதை செலுத்துவதுபோல், ஏ. ஆர். ரஹ்மானின் 'வந்தே மாதரம்' இசை ஆல்பம் இந்தியாவில் வெளியாகி மிகப் பெரிய வெற்றியடைந்தது. அதற்குமுன் வேறு எந்தத் தனி இசைத் தொகுப்பும் இந்த அளவுக்கு விற்பனையானதில்லை என்கிற அளவுக்குச் சாதனை படைத்தது.

அதைவிட முக்கியமாக, 'மா துஜே சலாம்' / 'தாய் மண்ணே வணக்கம்' இசை வீடியோ அநேகமாக அனைத்துத் தொலைக்காட்சி சானல்களிலும் திரும்பத் திரும்ப ஒளிபரப்பப்பட்டது. இன்றைக்கும் சுதந்தர தினம், குடியரசு தினம், காந்தி பிறந்தநாள் போன்ற தேசியக் கொண்டாட்டங்களின்போது 'வந்தே மாதரம்' ரஹ்மானைப் பார்க்காமல் இருக்கமுடியாது.

’வந்தே மாதரம்’ வீடியோ, ரஹ்மானின் முகத்தை இந்தியாவின் மூலை முடுக்கெல்லாம் கொண்டு சேர்த்தது. தமிழகத்தில்மட்டுமின்றி, இந்தியாமுழுக்கக் குக்கிராமவாசிகள்கூட, ‘அட, நம்ம ரஹ்மான்’ என்று சொல்லும்படியான ஒரு நெருக்கத்தை உருவாக்கியது ’மா துஜே சலாம்’தான்.

மூன்று ஆண்டுகள் கழித்து (2000) இந்தியக் குடியரசு தினத்தின் பொன்விழா கொண்டாடப்பட்டது. அதையொட்டி ஏ. ஆர். ரஹ்மான் மீண்டும் பரத் பாலாவுடன் கூட்டணி சேர்ந்து ‘ஜன கன மண’ என்கிற ஆல்பத்தை உருவாக்கினார்.

ரஹ்மானின் இந்த முயற்சிகள், இசை ரசிகர்களின் பரவலான பாராட்டுகளைப் பெற்றிருந்தபோதும், இதே காரணத்துக்காக அவர்மீது பலவிதமான

குற்றச்சாட்டுகளை முன்வைக்கிறவர்களும் உண்டு. அதில் முக்கியமானது, இந்தியர்களின் நாட்டுப்பற்று / தேசிய உணர்வை ரஹ்மான் வணிக நோக்கங்களுக்காகப் பயன்படுத்துகிறார் என்பது.

இதேபோல், ஒரு குறிப்பிட்ட முறையில்மட்டுமே பாடப்படவேண்டிய தேசியப் பாடல்களை, மாடர்ன் மெட்டில் உட்காரவைத்து ரஹ்மான் அவமானப்படுத்துகிறார், அவற்றுக்குக் கிடைக்கவேண்டிய மரியாதையைச் சிதைத்து வெறும் 'பாப்' பாடல்களாக மாற்றுகிறார் என்று கோபப்படுகிறவர்களும் உண்டு.

இந்தக் குற்றச்சாட்டுகள் எந்த அளவு உண்மையானவை என்பது அவரவர்களுடைய பார்வைக் கோணத்தில் இருக்கிறது. ரஹ்மானைப்

பொறுத்தவரை, தேசியப் பாடல்களும் காலத்துக்கு ஏற்பப் புதிய வடிவம் பெறவேண்டும். அப்போதுதான் அவை இந்தத் தலைமுறை இளைஞர்களின் மனத்தில் பதியும். அவ்வளவுதான் விஷயம்!

# 12

# இனி அச்சம், அச்சம் இல்லை

’ரோஜா’வில் ரஹ்மானுடன் ஹிந்தி ரசிகர்களுக்கு அறிமுகமானவர் மணி ரத்னம். அதன்பிறகு, அவருடைய ஒவ்வொரு படமும் (’இருவர்’தவிர) ஹிந்தியில் வெளியாகி வெற்றி பெற்றது.

அதேசமயம், இந்தப் படங்கள் எல்லாமே, மொழிபெயர்ப்பு வடிவங்கள்தான். ஹிந்தியில் நேரடியாக ஒரு படத்தை அவர் இன்னும் இயக்கியிருக்கவில்லை.

மணி ரத்னம்போல் விஷுவலாகப் படம் எடுக்கிற இயக்குனர்களுக்கு, செலவு அதிகம் பிடிக்கும். அவ்வளவு பணத்தைத் திரும்ப எடுக்கவேண்டுமென்றால், மிகப் பெரிய எண்ணிக்கையிலான ரசிகர்கள் அந்தப் படத்தைப் பார்க்கவேண்டும். இல்லையென்றால், படம் ஓடினாலும் தயாரிப்பாளருக்குப் பிரயோஜனம் இருக்காது.

அந்த விதத்தில் பார்க்கிறபோது, தமிழ் பேசும் சினிமா ரசிகர்களைவிட, ஹிந்தி பேசுகிறவர்கள் அதிகம். ஏற்கெனவே அவர்கள் மத்தியில் நல்ல புகழ் பெற்றிருக்கும் மணி ரத்னம், ஒரு நேரடி ஹிந்திப் படம் எடுத்தால், வணிகரீதியிலான வெற்றிக்குச் சாத்தியங்கள் கூடுதலாக இருக்கும்.

இப்படி யோசித்த மணி ரத்னம், 'தில்

ஸே' என்கிற நேரடி ஹிந்திப் படத்துக்குப் பூஜை போட்டார். பின்னர் இந்தப் படம் 'உயிரே' என்ற பெயரில் தமிழிலும் டப்பிங் செய்யப்பட்டது.

'ரோஜா', 'பம்பாய்'போல் ஒரு தீவிரமான பிரச்னையைத் தொட்டுச் சென்ற இந்தக் கதையில், நாயகி மனிஷா கொய்ராலா மனித வெடிகுண்டுப் பெண்ணாக நடித்தார், அவருடைய காதலராக ஷாருக் கான், இசை ஏ. ஆர். ரஹ்மான்.

'ரோஜா'வில் தொடங்கி, மணி ரத்னத்தின் ஒவ்வொரு படமும் ஏதோ ஒருவிதத்தில் ரஹ்மானின் புதுப்புதுத் திறமைகளை வெளிக்காட்டுவதாக அமைந்திருக்கிறது. அந்தவிதத்தில் 'தில் ஸே'யின் சிறப்பு அம்சம், 'ச்சையன் ச்சையான்' (தமிழில் 'தைய தையா') என்கிற பாடல்.

உண்மையில், இந்தப் பாடல் 'தில் ஸே'

படத்துக்காகப் பதிவு செய்யப்பட்டது அல்ல. அதற்குச் சில ஆண்டுகள் முன்பாக, ரஹ்மானின் ‘வந்தே மாதரம்’ ஆல்பத்துக்காக உருவாக்கப்பட்டு, கொஞ்ச நாள் பெட்டியில் தூங்கி, பின்னர் வேறொரு படத்துக்காக அதை வெளியில் எடுத்து தூசு தட்டி, கடைசியாக அது ‘தில் ஸே’யில்தான் பயன்படுத்தப்பட்டது.

பஞ்சாபி வாசனையில் அந்தப் பாடலின் ட்யூன் உருவானபோதே, இதில் ஏதோ ஒரு விசேஷத்தன்மை பொதிந்திருப்பதை ரஹ்மானால் உணரமுடிந்தது, ‘இதைப் பாடுவதற்கு நுஸ்ரத் ஃபதே அலி கான்போல ஒரு குரல் தேவைப்படும்’ என்று தன் நண்பர்களிடம் சொன்னார், ‘அப்படி யாராவது ஒரு பாடகர் உங்களுக்குக் கிடைத்தால், என்னிடம் அறிமுகப்படுத்தி வையுங்கள்’

அதன்பிறகு, ரஹ்மான் பல பாடகர்களின் குரல்களைக் கேட்டுவிட்டார். ஆனால் எதுவும் அந்தப் பாடலுக்குப் பொருத்தமாகத் தோன்றவில்லை. சரியான பாடகர் கிடைக்கும்வரை அதைப் பதிவு செய்வதில்லை என்று பிடிவாதமாக இருந்தார் அவர்.

அப்போதுதான், பம்பாயிலிருந்து ப்ரிஜ்பூஷண் என்கிற நண்பர் ரஹ்மானை அழைத்தார், ‘நீங்கள் கேட்டதுபோன்ற ஒரு குரலைக் கண்டுபிடித்துவிட்டேன்’

சட்டென்று உற்சாகமானார் ரஹ்மான், ‘அப்படியா? யார் அந்தப் பாடகர்?’

’அவர் பெயர் மிஸ்டர் சிங். நாளைக்கு அவரே உங்களை நேரில் வந்து சந்திப்பார்’

’சிங்’ என்றதும், பெரிய தாடி,

தலைப்பாகை என்று கற்பனை செய்துவைத்திருந்தார் ரஹ்மான். ஆனால், மறுநாள் அவரைச் சந்தித்த சுக்விந்தர் சிங் மிக இளமையாக இருந்தார், கலகலப்பாகப் பேசினார்.

அதைவிட முக்கியம், அவருடைய குரல் இந்தப் பாட்டுக்காகவே செய்ததுபோல் கச்சிதமாகப் பொருந்தியது. ரஹ்மானுக்கு முழுத் திருப்தி.

சுக்விந்தர் சிங், ரஹ்மான் இருவரும் இணைந்து, அந்தப் மெட்டுக்குப் பொருத்தமான வரிகளையும் எழுதிமுடித்தார்கள். அப்போது அந்தப் பாடல் 'த்தையன் த்தையான்' என்று தொடங்கியது.

ஆனால், பாடல்முழுவதும் பதிவு செய்தபிறகு பார்த்தால், 'வந்தே மாதரம்' ஆல்பத்தின் மற்ற பாடல்களுக்கும்,

இந்த ‘த்தையன் த்தையான்’க்கும் பொருந்திப்போகவில்லை. எதோடும் ஒட்டாமல் அதுமட்டும் தனியே துருத்திக்கொண்டு நின்றது. ஆகவே, இந்தப் பாடலை இப்போது பயன்படுத்தவேண்டாம் என்று தீர்மானித்துவிட்டார் ரஹ்மான்.

அதன்பிறகு, பல நாள் கழித்து, மணி ரத்னம் ரஹ்மானிடம் ஒரு காதல் கதையைச் சொன்னார். அந்தப் படத்தில், இரண்டு பேர் ரயிலில் ஆடிப் பாடுவதுபோல் ஒரு பாடல் வேண்டும் என்று கேட்டார்.

மணி ரத்னம் இப்படிச் சொன்னதும், சட்டென்று ‘த்தையன் த்தையான்’ பாடலை நினைத்துக்கொண்டார் ஏ. ஆர். ரஹ்மான். அந்தப் பாட்டின் தாளக் கட்டு ஓடுகிற ரயிலின் சத்தத்தைப்போலவே இருப்பதால்,

அது இந்தச் சூழ்நிலைக்கு மிகவும் பொருத்தமாக இருக்கும் என்று அவருக்குத் தோன்றியது.

உடனடியாக, ரஹ்மான் மணி ரத்னத்துக்கு அந்தப் பாடலைப் போட்டுக் காண்பித்தார். அங்கேயே ‘டபுள் ஓகே’ சொல்லிவிட்டார் மணி ரத்னம்.

அதன்பிறகு, கவிஞர் குல்ஸார் அந்தப் பாடலின் முதல் வரியை ‘ச்சையன் ச்சையான்’ என்று மாற்றினார். அதனுடன் பல கூடுதல் இசை அடுக்குகளைச் சேர்த்து இன்னும் மெருகேற்றி மறுபதிவு செய்தார் ரஹ்மான்.

அதற்குள், மணி ரத்னம் அந்தக் காதல் கதையை ஒத்திப்போட்டுவிட்டு, ‘தில் ஸே’ படத்தைத் தொடங்கிவிட்டார். ஆனால்,

ரயில் பாட்டுமட்டும் மாறவில்லை.

இப்படியாக, எங்கேயோ தொடங்கி எங்கேயோ வந்து சேர்ந்த ‘ச்சையன் ச்சையான்’ பாடல் ரஹ்மானுக்கு மிகப் பெரிய பாராட்டுகளைப் பெற்றுத்தந்தது. அந்தப் பாடலில் இருக்கும் பஞ்சாபி வாசனையும், ’சூஃபி’ இசைக்கூறுகளும் அதனை இந்தியாமுழுக்கப் பிரபலமான ஒரு பாடலாக மாற்றியது.

பின்னாள்களில், இதே பாடலைத் தனது ’பாம்பே ட்ரீம்ஸ்’ நாடக ஆக்கத்திலும் பயன்படுத்தினார் ரஹ்மான். ‘Inside Man’ என்கிற ஹாலிவுட் படத்திலும் இந்தப் பாடல் இடம்பெற்றது.

’தில் ஸே’யில் ரஹ்மானுக்குப் பெயர் வாங்கித்தந்த மற்ற இரு பாடல்கள், உதித் நாராயண் பாடிய ‘ஹே அஜ்னபி’ (தமிழில் ‘பூங்காற்றிலே’), மற்றும், அவரே

சொந்தக் குரலில் பாடிய ‘தில் ஸே ரே’ (தமிழில் ‘சந்தோஷக் கண்ணீரே’).

‘ரோஜா’வுக்கு முன்பாக, ரஹ்மானுக்கு ஹிந்தி இசை அவ்வளவாக அறிமுகமாகியிருக்கவில்லை. அந்தப் படம் பெரிய அளவில் பிரபலமடைந்து, ‘ரங்கீலா’மூலம் அவர் நேரடி ஹிந்திப் படங்களில் பணிபுரியத் தொடங்கியபிறகுதான், நிறைய ஹிந்திப் பாடல்கலைக் கேட்க ஆரம்பித்தார். அந்த மண்ணின் இசை அவருக்குப் புரியத் தொடங்கியது.

அந்தப் பின்னணியில் பார்க்கும்போது, ‘தில் ஸே ரே’ போன்ற ஒரு மென்மையான, அதேசமயம் உள்ளுக்குள் ஆக்ரோஷம் பொங்கும் ஒரு பாடலை அவரால் பாடமுடிந்தது பெரிய ஆச்சர்யம்தான். இன்றைக்கும் ரஹ்மானின் மிகச் சிறந்த ‘டாப்

10’ பாடல்களுக்குள் ‘தில் ஸே ரே’ நிச்சயமாக இடம்பெறும்.

’ஆரம்ப காலத்தில், என்னுடைய மெலடிப் பாடல்களிலும் சரி, முக்காலா முக்காபுலா, ஹம்மா ஹம்மா போன்ற துள்ளாட்டப் பாடல்களிலும் சரி, தென்னிந்தியத் தாக்கம் ரொம்ப அதிகமாக இருந்தது’ என்கிறார் ஏ. ஆர். ரஹ்மான், ‘ஹிந்தி சினிமாவில் ஜெயிக்கவேண்டுமென்றால், அதற்கு நான் பஞ்சாபி வாசனையைப் பழகவேண்டும் என்று முடிவு செய்தேன்’

இந்த நேரத்தில், பிரபல ஹிந்தி இயக்குனர் சுபாஷ் கை அலுவலகத்திலிருந்து ரஹ்மானுக்கு ஒரு கடிதம் வந்தது, ‘சுபாஷ் கை உங்களைச் சந்திக்க விரும்புகிறார்’

ரோஜா, பம்பாய், ரங்கீலா என்று

ரஹ்மான் வடக்கே கால் பதிக்கத் தொடங்கிய நேரத்தில், அங்குள்ள பல நண்பர்கள் அவரிடம் திரும்பத் திரும்பச் சொன்ன ஒரு விஷயம், 'ஹிந்தியில் நீங்கள் நல்ல பாடல்களைக் கொடுத்துப் பெயர் வாங்கவேண்டுமென்றால், சுபாஷ் கைமாதிரியான இயக்குனர்களிடம் பணிபுரியவேண்டும்'

அப்போது ரஹ்மானுக்கு சுபாஷ் கை யார் என்றே தெரிந்திருக்கவில்லை. ஆகவே, சும்மா வெறுமனே தலையாட்டிவைத்தார், அதைப்பற்றித் தீவிரமாக எதுவும் நினைத்துப்பார்க்கவில்லை.

ஆனால், அவருக்குத் தெரியாத விஷயம், 'ரோஜா' பாடல்கள் சுபாஷ் கைக்கு மிகவும் பிடித்துப்போயிருந்தன, 'யார் இந்த இசையமைப்பாளர்?' என்று விசாரித்துத் தெரிந்துகொண்டார்.

அதன்பிறகு பல ஆண்டுகள் கழித்து, அவர் ‘தால்’ என்கிற படத்தைத் தொடங்கினார். இதற்கு ஏ. ஆர். ரஹ்மானின் இசை பொருத்தமாக இருக்கும் என்று அவருக்குத் தோன்றியது.

விரைவில், சுபாஷ் கை ஏ. ஆர். ரஹ்மான் சந்தித்தார்கள், ‘தால் என்கிற தலைப்பு மிகவும் அழகாக இருக்கிறது’ என்று பாராட்டினார் ரஹ்மான்.

சுபாஷ் கை நேராக விஷயத்துக்கு வந்தார், ‘ரஹ்மான், நீங்கள் தென்னிந்திய இசையில் மிகப் பெரிய திறமைசாலி, மேற்கத்திய இசையும் உங்களுக்கு நன்றாகத் தெரிந்திருக்கிறது. ஆனால், நம்முடைய இந்தப் படத்துக்குத் தேவை, தென்னிந்திய இசையும் அல்ல, மேற்கத்திய இசையும் அல்ல’

ரஹ்மான் நிமிர்ந்து உட்கார்ந்தார். கன்னாபின்னாவென்று முகஸ்துதி செய்து பாட்டுக் கேட்கிற இயக்குனர்களுக்குமத்தியில், சுபாஷ் கை இப்படி நேரடியாக, எதார்த்தமாகப் பேசுவது அவருக்கு மிகவும் பிடித்திருந்தது.

‘இந்தப் படத்தின் பாடல்களில், பின்னணி இசையிலெல்லாம், ஹிமாசலி, பஞ்சாபி இசையின் அழுத்தமான தாக்கம் இருக்கவேண்டும்’ என்றார் சுபாஷ் கை, ‘அது உங்களால் நிச்சயமாக முடியும் என்று நான் நம்புகிறேன்’

பெரிய சவால்தான். ஆனால் ரஹ்மான் கற்றுக்கொள்ளத் தயாராக இருந்தார். சுபாஷ் கை படத்துக்கு இசையமைக்கும் இந்த வாய்ப்பை முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ளத் தீர்மானித்துவிட்டார் அவர்.

ஐஷ்வர்யா ராய் நடிப்பில் வெளியான 'தால்', ரஹ்மானின் பன்முகத்தன்மையை வெளிச்சம் போட்டுக் காண்பித்தது. ஒவ்வொரு பாடலுக்கும் கடுமையாக உழைத்து சுபாஷ் கை எதிர்பார்த்ததைவிட ஒரு படி மேலான தரத்தில் பாடல்களை உருவாக்கியிருந்தார் அவர்.

இதே காலகட்டத்தில், தமிழிலும் ரஹ்மானின் இசை உன்னதமான தரத்தை எட்டிப்பிடித்திருந்தது. என் சுவாசக் காற்றே, சங்கமம், முதல்வன், தாஜ் மஹால், அலை பாயுதே, கண்டுகொண்டேன் கண்டுகொண்டேன், ரிதம் என ரஹ்மான் தொட்டதெல்லாம் சூப்பர் ஹிட்.

இந்தத் தொடர் வெற்றிக்குப்பிறகு, ரஹ்மானை மக்கள் பார்க்கிற

விதமே மாறிப்போனது. ஹிந்தியில் எப்போதாவது இசை அமைக்கிற தமிழர் என்கிற அடையாளம் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து, அவர் ஓர் இந்திய இசையமைப்பாளராகவே அறியப்பட்டார்.

அதன்பிறகு, அவருடைய உழைப்பு ரஜினி, கமல், ஷாருக் கான், ஆமிர் கான் போன்ற நடிகர்களின் வெளிச்சத்துக்குக் கீழே வெளிவரவேண்டிய சூழல் மாறியது. அவர் உருவாக்கிய படைப்புகள், 'இது ரஹ்மான் பாட்டு' என்கிற தனித்துவமான அடையாளத்துடன் நிற்கத் தொடங்கியது.

இதனால், ரஹ்மானும் மற்றவர்களுடைய நிர்ப்பந்தங்களுக்குப் பணியாமல் தன்னுடைய படைப்புத்திறனை முழுமையாக வெளிப்படுத்தும் முயற்சிகளில் இறங்கினார். இதன்மூலம், தான் வேலை செய்கிற படங்களை

இன்னொரு தளத்துக்கு அவரால் கொண்டுசெல்லமுடிந்தது.

இதற்கு நல்ல உதாரணம், 2001ம் ஆண்டு வெளிவந்த 'லகான்'!

மிகச் சுவாரஸ்யமான கதை, விறுவிறுவென்று ஓடும் திரைக்கதை, நட்சத்திர பலம், லேசாகத் தூவப்பட்ட தேசப்பற்று மசாலா, ரசிகர்களின் இதயத் துடிப்பை எகிறவைக்கும் க்ளைமாக்ஸ் என எல்லாவிதத்திலும் சிறப்பாக அமைந்த இந்தப் படத்துக்கு, இசை, பாடல்கள் எல்லாமே இரண்டாம்பட்சம்தான். நியாயப்படி சொல்வதென்றால், ரஹ்மான் போன்ற ஒரு 'டாப்' இசையமைப்பாளர் இந்தப் படத்துக்குத் தேவையே இல்லை, அவர் இல்லாமலும்கூட 'லகான்' பெரிய வெற்றி பெற்றிருக்கும்.

ஆனால், அந்தப் படத்தின் தயாரிப்பாளர் ஆமிர் கான், ரஹ்மானைத் தேடி வந்து ஒப்பந்தம் செய்தார். தனது பாடல்கள், அற்புதமான பின்னணி இசையின்மூலம் அந்தப் படத்தை மெருகேற்றி வேறொரு தளத்துக்கு நகர்த்திச் சென்றார் ஏ. ஆர். ரஹ்மான். இன்றைக்கு ரஹ்மான் இல்லாமல் அந்தப் படத்தை யாராலும் கற்பனை செய்து பார்க்கக்கூட முடியாது.

ஒரு திரைப்படத்தில் இசையமைப்பாளரின் பங்கு வெறுமனே பாடல்கள் போடுவது, பின்னணி இசை வாசிப்பதுமட்டுமல்ல, இசைமூலம் அந்தப் படத்துக்கு ஒரு ‘National Appeal’ (சில சமயங்களில் ‘International Appeal’) உருவாக்கித் தரமுடியும் என்பதைப் பலமுறை அழுத்தம் திருத்தமாக நிரூபித்தவர் ரஹ்மான்.

’லகான்’ படத்தின் இசை, ரஹ்மானுக்கு

மூன்றாவது தேசிய விருதைப் பெற்றுக்கொடுத்தது. ஆனால் அதே 'லகான்'தான், அவருக்கு வேறு ஒரு புதிய பிரச்னையையும் கொண்டுவந்தது.

காரணம், 'லகான்' கதை இந்தியச் சுதந்தரப் போராட்ட காலத்தின் நிகழ்வதாக அமைக்கப்பட்டிருந்தது. அதற்கு ரஹ்மான் அமைத்த இசையும், அந்தக் காலகட்டத்தைப் பிரதிபலிப்பதாக அமைந்து கச்சிதமாகப் பொருந்தியிருந்தது.

இதனால், 'லகான்'க்குப்பிறகு வரிசையாகச் சரித்திரப் பின்னணியில் அமைந்த படங்கள் ரஹ்மானைத் தேடி வர ஆரம்பித்தன. உதாரணமாக, தி லெஜண்ட் ஆஃப் பகத் சிங், நேதாஜி சுபாஷ் சந்திர போஸ், மங்கள் பாண்டே, ஜோதா அக்பர் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

இந்தப் படங்கள் ஒவ்வொன்றுக்காகவும், ரஹ்மான் கூடுதலாக உழைக்கவேண்டியிருந்தது. அந்தக் காலகட்டத்தின் இசையை நவீன ஒலியுடன் கொண்டுவருவதற்கு மிகவும் மெனக்கெட்டார் அவர்.

ஆனால், அவருடைய இந்த உழைப்பை இயக்குனர்கள், தயாரிப்பாளர்கள் புரிந்துகொண்டதாகத் தெரியவில்லை. இந்தப் படங்களுக்காக ரஹ்மான் உருவாக்கிய பல பாடல்கள், சரியாகப் படமாக்கப்படவில்லை, அல்லது பின்னணியில் ஒன்றிரண்டு வரிகள்மட்டும் ஒலிப்பதுபோல் வீணடிக்கப்பட்டன.

ரஹ்மானுக்குச் சரித்திரப் படங்களில் வேலை செய்வது பிடித்தமானதுதான். ஆனால் அதற்காக, ஒரேமாதிரியான பாடல்களைத் தொடர்ச்சியாகத் தந்து

போரடிக்க அவர் விரும்பவில்லை.

மறுபடியும், ‘ஏதாவது புதுசாகச் செய்யவேண்டும்’ என்கிற எண்ணம் ரஹ்மானை அரிக்க ஆரம்பித்தது. அதற்கு வசதியாக, ஒரு பிரமாதமான வாய்ப்பு அவரைத் தேடி வந்தது!

# 13

# பூவுக்கென்ன பூட்டு

நம் ஊரில் மேடை நாடகம் என்றாலே, அசட்டு நகைச்சுவைத் தோரணங்கள்தான்.

எப்போதாவது, மற்றவிதமான நாடகங்களும் மேடையேறும். ஆனால் அங்கேயும், நீள நீள வசனங்களாக நிரப்பிவைத்து போரடிப்பார்கள்.

இதோடு ஒப்பிடும்போது, இங்கிலாந்தில்

மேடை நாடகங்கள் மிகவும் வித்தியாசப்படுகின்றன. கிட்டத்தட்ட நம் ஊர்த் திரைப்படங்களுக்கு இணையாக, ஏகப்பட்ட திருப்பு முனைகள், மர்ம முடிச்சுகள் அடங்கிய விஸ்தாரமான கதை, வசனம், இசை, பாடல்கள், நடனம், பிரம்மாண்டமான காட்சி அமைப்புகள் என்று அசத்துவார்கள்.

இந்த நாடகங்களின் மிக முக்கியமான சிறப்பு அம்சம், அவற்றின் இசை. சாதாரணமாக ஒரு சினிமாவுக்கு இசை அமைக்க எவ்வளவு தூரம் மெனக்கெடுவார்களோ, அதைப்போலப் பல மடங்கு உழைப்பு, கவனத்துடன் மேடை நாடகங்களுக்கான இசை தயாராகும். அதனாலேயே, இவற்றை 'இசை நாடகங்கள்' 'ம்யூசிக்கல் தியேட்டர்' என்று அழைப்பார்கள். செல்லமாக, 'ம்யூசிக்கல்ஸ்' என்று சொல்வதும் உண்டு.

தொண்ணூறுகளின் பிற்பகுதியில், ஏ. ஆர். ரஹ்மான் ஹிந்தித் திரையுலகின் 'நம்பர் 1' இசையமைப்பாளராகப் புகழ் பெற்றுக்கொண்டிருந்த நேரம், அவரை வைத்து ஒரு 'ம்யூசிக்கல்' தயாரிக்கவேண்டும் என்று திட்டமிட்டார் பிரபல இயக்குனர் ஷேகர் கபூர்.

எப்போதும் புது முயற்சிகளுக்குத் தயாராக இருக்கும் ரஹ்மான், இந்தச் சவாலையும் புன்னகையோடு ஏற்றுக்கொண்டார். இசை நாடகத்தின் தன்மை, தேவைகளைப் புரிந்துகொண்டு, ஒவ்வொன்றாக அதற்கு ஏற்ற பாடல்களை உருவாக்க ஆரம்பித்தார்.

அடுத்த இரண்டு ஆண்டுகளில், ஷேகர் கபூருக்காகக் கிட்டத்தட்ட பத்து பாடல்கள் தயாரித்து வைத்துவிட்டார் ரஹ்மான். ஆனால், 'தர ரம் பம் பம்'

என்று பெயர் சூட்டப்பட்டிருந்த அந்த இசை நாடகம், தொடங்குகிற வழியைக் காணோம்.

இதற்குக் காரணம், அப்போது ஷேகர் கபூருக்கு 'எலிஸபெத்' என்கிற ஆங்கிலப் படத்தை இயக்கும் வாய்ப்புக் கிடைத்திருந்தது. அந்த வேலைகளில் அவர் பிஸியாகிவிட்டதால், 'தர ரம் பம் பம்' இசை நாடகம் பெட்டிக்குள் தூங்கத் தொடங்கிவிட்டது.

ரஹ்மானுக்கு ஏமாற்றம்தான். ஆனால், ஷேகர் கபூரின் நிலைமையை அவரால் நன்றாகப் புரிந்துகொள்ள முடிந்தது. ஆகவே, அதுவரை அந்த இசை நாடகத்துக்காக உருவாக்கிய பத்து பாடல்களையும் அப்படியே மூடி வைத்துவிட்டு, வேறு வேலையைப் பார்க்கச் சென்றுவிட்டார்.

இதைக் கேள்விப்பட்ட ஷேகர் கபூருக்கு மிகவும் குற்றவுணர்ச்சியாக இருந்தது. ரஹ்மானின் உழைப்பை இப்படி வீணடித்துவிட்டோமே என்று அவர் வருந்தினார்.

இந்த நேரத்தில்தான், இங்கிலாந்தில் ஷேகர் கபூர் ஒரு மிகப் பெரிய இசை நாடக மேதையைச் சந்தித்தார். அவர் பெயர், ஆண்ட்ரூ லாய்ட் வெப்பர்.

ஆறு வயதில் இசையமைக்கத் தொடங்கிய ஆண்ட்ரூ வெப்பர், பத்துக்கும் மேற்பட்ட இசை நாடகங்களை எழுதித் தயாரித்து மேடையேற்றியிருக்கிறார். இவை ஒவ்வொன்றும் பல நூறு முறை மேடையேறி பிரம்மாண்டமான வெற்றி கண்டவை.

ஷேகர் கபூர் வெப்பரைச் சந்தித்தபோது,

அவர் இந்தியப் பின்னணியில் ஓர் இசை நாடகம் தயாரிக்கும் யோசனையில் இருந்தார். அதற்கு அவர் சூட்டியிருந்த பெயர் ‘பாம்பே ட்ரீம்ஸ்’.

அதுவரை, வெப்பர் தன்னுடைய எல்லா நாடகங்களுக்கும் தானே இசையமைத்துக்கொள்வதுதான் வழக்கம். ஆனால் இந்தமுறை, இந்தியாவைப்பற்றிய கதை என்பதால், ஓர் இந்திய இசையமைப்பாளரைப் பயன்படுத்தினால் பொருத்தமாக இருக்கும் என்று யோசித்துக்கொண்டிருந்தார்.

இந்த விஷயத்தைக் கேள்விப்பட்ட ஷேகர் கபூர், வெப்பருக்கு ஏ. ஆர். ரஹ்மானைப்பற்றிச் சொன்னார், ‘பாம்பே ட்ரீம்ஸ் நாடகத்தின் ஜீவனை இந்திய இசையில் கொண்டுவருவதற்கு அவரால்மட்டும்தான் முடியும்’ என்று சிபாரிசு செய்தார்.

ரஹ்மானின் இசையைக் கேட்டுப்பார்த்த வெப்பருக்கு, மிகவும் பிடித்துப்போய்விட்டது. அவரையே தனது ‘பாம்பே ட்ரீம்ஸ்’க்கு இசையமைப்பாளராக ஒப்பந்தம் செய்ய முடிவெடுத்துவிட்டார்.

’பாம்பே ட்ரீம்ஸ்’ன் கதை, பம்பாயில் இருக்கும் சேரி இளைஞன் ஒருவனைச் சுற்றிவருகிறது. அவனுக்குச் சினிமாவில் நடித்துப் பெரிய ஆளாக வரவேண்டும் என்று ஆசை. எதார்த்தத்துக்குப் பொருந்தாத அவனுடைய கனவு நிறைவேறுகிறதா, இல்லையா என்பதை இசையோடு கலந்து தரத் திட்டமிட்டிருந்தார் ஆண்ட்ரூ வெப்பர்.

ரஹ்மானுக்குப் பொருத்தமான கதைதான். தன்னுடைய பிரபலமான திரைப் பாடல்கள் சிலவற்றை

எடுத்துக்கொண்டு, மேடை நாடகத்துக்குப் பொருந்தும்வகையில் அவற்றை மெருகேற்றி உருமாற்றுவதாக முடிவெடுத்தார் அவர்.

ஒரே பிரச்னை, இதெல்லாம் ஒரு நாள், இரண்டு நாளில் செய்து முடிக்கிற விஷயம் இல்லை. ஆண்ட்ரூ வெப்பர் போன்ற இசை மேதைகளிடம் உப்புமா இசையைக் கொடுத்துச் சமாளிக்கமுடியாது, அவரோடு வாரக்கணக்கில், மாதக்கணக்கில் உட்கார்ந்து இசையமைக்கவேண்டும், எல்லாம் கச்சிதமாக அமைந்து இறுதிப் பிரதி தயாராகும்வரை விடமாட்டார். அதற்குக் குறைந்தபட்சம் இரண்டு முதல் மூன்று ஆண்டுகள்வரை தேவைப்படும்.

ரஹ்மானுக்கு இந்தப் புதிய முயற்சி மிகவும் பிடித்திருந்தது. தைரியமாக அதில் இறங்குவது என்று

தீர்மானித்துவிட்டார்.

அவர் இந்த விஷயத்தைச் சொன்னதும், சுற்றியிருந்த எல்லோரும் அலறிவிட்டார்கள், ‘ரெண்டு, மூணு வருஷம் நீங்க அங்கே போய் உட்கார்ந்துட்டா, இங்கே உங்க இடத்தை மத்தவங்க பிடிச்சுடுவாங்க, வேணாம் ரஹ்மான்’ என்று அறிவுரை சொன்னார்கள்.

ஆனால், ரஹ்மான் அதைப்பற்றிக் கவலைப்படவே இல்லை, ‘என்னோட இடம் எதுன்னு தீர்மானிக்கிறவர் கடவுள்மட்டும்தான்’ என்று தெளிவாகச் சொல்லிவிட்டார்.

அடுத்த சில மாதங்கள், ஏ. ஆர். ரஹ்மான் ஆண்ட்ரூ வெப்பருடன் ‘பாம்பே ட்ரீம்ஸ்’க்கான இசையமைப்பு வேலைகளில் தீவிரமாக இறங்கியிருந்த

நேரம். இங்கே உள்ளூர்ப் பத்திரிகைகள், தொலைக்காட்சிகளில் அவரைப்பற்றி ஏகப்பட்ட வதந்திகள் உலா வரத் தொடங்கிவிட்டன.

முக்கியமாக, 'ரஹ்மான் இனிமேல் இந்தியாவுக்குத் திரும்பி வரமாட்டார்' என்று பலர் வெளிப்படையாகவே பேசினார்கள், இசை நாடகத்திலிருந்து அவர் அப்படியே ஆங்கில சினிமா, ஹாலிவுட் என்று தாவிச் சென்றுவிடுவார் என்பதுதான் பலருடைய கணிப்பாக இருந்தது.

ஆனால், இப்படி ஊகங்கள், வதந்திகளை வெளியிட்ட பலருக்கு, ரஹ்மான் இங்கே திரும்பி வரக்கூடாது என்கிற உள்நோக்கம்தான் இருந்தது. இவர்கள் ரஹ்மானின் தொழில்முறைப் போட்டியாளர்களாகவோ, அவருடைய வளர்ச்சியைப் பொறுக்காத

மற்றவர்களாகவோ இருக்கலாம்.

ரஹ்மான் அதைப்பற்றிப் பெரிதாக அலட்டிக்கொள்ளவில்லை. எப்போதும்போல், தன்னுடைய கையில் இருக்கிற அந்த ஒரு விஷயத்தின்மீதுமட்டும் முழு கவனம் செலுத்தப் பழகியிருந்தார் அவர்.

’பாம்பே ட்ரீம்ஸ்’ நாடகத்தில் சுமார் இருபது பாடல்கள், இசைத் தொகுப்புகள் இடம்பெற்றன. இவற்றில் பெரும்பாலானவை ரஹ்மானின் ‘ஹிட்’ பாடல்களுடைய மறு வடிவங்களே!

உதாரணமாக, அவருடைய ’ரங்கீலா ரே’ பாடல், நாடகத்தில் ‘Happy Endings’ என்ற பெயரில் மாற்றம் பெற்றது, ‘ஷகலக்க பேபி’, ‘ஊ லலல்லா’, ’ச்சையன் ச்சையான்’ போன்ற பாடல்கள் சிறிய மாற்றங்களுடன் ரீமிக்ஸ் செய்யப்பட்டன.

‘ரீமிக்ஸ்’ என்றால், சும்மா இசையை மாற்றி, தாளத்தை மாற்றி அப்படியே திரும்பப் பயன்படுத்துவது அல்ல. ஒவ்வொரு பழைய பாடலையும் நாடகத்தின் தன்மைக்கு ஏற்ப ரஹ்மான் மறு உருவாக்கம் செய்யவேண்டியிருந்தது.

வழக்கமாக, ரஹ்மானுக்குச் செய்ததையே திரும்பச் செய்யப் பிடிக்காது. ஆனால் இந்தமுறை, ஆண்ட்ரூ வெப்பருடன் இணைந்து பணிபுரியும் அனுபவம் அவருக்கு மிகவும் பிடித்திருந்தது.

இந்த விஷயத்தில் ரஹ்மான் சந்தித்த மிகப் பெரிய சவால், இந்தியர் அல்லாத வெப்பருக்கு, ‘பாம்பே ட்ரீம்ஸ்’ பாடல்களும் இசையும் உணர்வுபூர்வமாகச் சென்று சேரவேண்டும். அப்போதுதான், நாளைக்கு நாடகத்தைப் பார்க்க வருகிற

வெள்ளைக்கார ரசிகர்கள் அதை விரும்பி, ரசித்து ஏற்றுக்கொள்வார்கள்.

’பாம்பே ட்ரீம்’ஸ் இசை நாடகம் 2002ம் ஆண்டு அரங்கேறியது. வெப்பரின் மற்ற நாடகங்களைப்போலவே இதுவும் பல நூறு முறை மேடையேறி, மிகப் பெரிய வெற்றி கண்டது.

இதன்மூலம், இந்தியாவுக்கு வெளியே உள்ள ரசிகர்களும் ஏ. ஆர். ரஹ்மானின் இசையைக் கேட்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. அதனால் கிடைத்த பாராட்டுகள் ஒருபக்கமிருக்க, சர்வதேச ரசனைக்கு ஏற்பத் தனது பாடல்களை, இசையைக் கட்டமைப்பது எப்படி என்பதை அனுபவப்பூர்வமாகப் புரிந்துகொண்டார் ரஹ்மான்.

இதனால், ’பாம்பே ட்ரீம்ஸ்’க்குப்பிறகு ரஹ்மான் தொடர்ந்து ஹிந்தி, தமிழ்த்

திரையுலகில் இயங்கிவந்தாலும், இன்னொருபக்கம் வெளிநாட்டுப் படங்களுக்கு இசையமைக்கும் முயற்சிகளில் இறங்கினார். அப்போது அவருடைய முழு கவனமும் அந்தத் தளத்துக்கு எப்படி நகர்வது என்பதில்தான் குவிந்திருந்தது.

அதேசமயம், வெளிநாட்டுப் படம் என்கிற முத்திரைக்காக, எதை வேண்டுமானாலும் ஒப்புக்கொள்ளலாம் என்கிற வலையில் ரஹ்மான் விழவில்லை. இந்த விஷயத்தில் அவருடைய கொள்கை, 'எந்த நாட்டு, எந்த மொழிப் படமானாலும், அதில் என்னுடைய பங்களிப்பு, என் இசைக்கு முக்கியத்துவம் இருக்கவேண்டும், என்னால் அந்தப் படத்துக்கு ஏதேனும் விசேஷமாகச் செய்யமுடியவேண்டும், அப்படியில்லாமல், சும்மா பேருக்கு நான் அங்கே போய் வருவதால் நேரம்தான் வீணாகும்!'

இந்த வரையறையின்படி, ரஹ்மான் ஒப்புக்கொண்ட முதல் வெளிநாட்டுப் படம், 'Warriers Of Heaver And Earth'. சீன மொழியில் தயாரிக்கப்பட்ட ஆக்ஷன் படம் இது.

'Warriers Of Heaver And Earth'க்கு இசையமைப்பதற்காக, சீன மற்றும் ஜப்பான் பாரம்பரிய இசையைப்பற்றி நிறையப் படித்துத் தெரிந்துகொண்டார் ஏ. ஆர். ரஹ்மான். அதில் தனது பாணியைக் கலந்து அவர் உருவாக்கிய பாடல்கள் மற்றும் இசை நல்ல வரவேற்பைப் பெற்றது.

அடுத்தபடியாக, ஜே. ஆர். ஆர். டால்கியான் எழுதிப் புகழ் பெற்ற 'The Lord Of The Rings' நாவலின் நாடக வடிவத்துக்கு இசை அமைக்கும் வாய்ப்பு ஏ. ஆர். ரஹ்மானுக்குக் கிடைத்தது.

2006ம் ஆண்டு கனடாவில் அரங்கேறிய இந்த இசை நாடகம் தோல்வியைத் தழுவியது.

முன்பு ரஹ்மானின் ‘தர ரம் பம் பம்’ இசை நாடகத்தை ஓரங்கட்டிவிட்டு, ஷேகர் கபூர் ஓர் ஆங்கிலப் படம் எடுக்கப் போனாரே, ஞாபகம் இருக்கிறதா? அந்த ‘எலிஸபெத்’ (Elizabeth: The Golden Age) படத்துக்கு இசையமைக்க அழைக்கப்பட்டார் ஏ. ஆர். ரஹ்மான்.

இந்தமுறை, அவர் க்ரெய்க் ஆர்ம்ஸ்ட்ராங் என்கிற இன்னோர் இசையமைப்பாளருடன் இணைந்து பணியாற்றினார். 2007ம் ஆண்டு இந்தப் படம் வெளியானது.

இந்தியாவில் ரஹ்மானின் இசைக்குக் கிடைத்த மகா வரவேற்புடன்

ஒப்பிடும்போது, அவருடைய ஆரம்ப கால 'வெளி' முயற்சிகள் பெரிய அளவில் வெற்றியடையவில்லை. அதேசமயம் அவர் தோற்றுப்போய்விட்டார் என்றும் சொல்லமுடியாது.

முக்கியமான விஷயம், இந்த முயற்சிகள் ஒவ்வொன்றின்போதும் கிடைத்த அனுபவங்கள், ரஹ்மானுக்கு மிகப் பெரிய வரவாக இருந்தன. ஒவ்வொருமுறையும் முன்பைவிடக் கொஞ்சமாவது உயரமாக வளர்ந்துவிடவேண்டும் என்பதில் அவர் கவனமாக இருந்தார்.

அந்தத் தளர்வில்லாத முனைப்புதான், அவரை ஆஸ்கர்வரை கொண்டு சேர்த்தது!

# 14

# ஆயிரத்தில் நான் ஒருவன்

வருடம் 2008. ஏ. ஆர். ரஹ்மான் ஒரே நேரத்தில் எட்டு படங்களுக்கு இசையமைத்துக்கொண்டிருந்தார்.

வழக்கமாக ரஹ்மான் இப்படி ஏகப்பட்ட படங்களை ஒப்புக்கொள்வதில்லை. ஆனால் இந்தமுறை, தவிர்க்கமுடியாமல் அப்படி அமைந்துவிட்டது. இந்த எட்டு படங்களுக்கும் நேரம் ஒதுக்கி வேலை செய்வதற்காகச்

சிரமப்பட்டுக்கொண்டிருந்தார் அவர்.

அந்த நேரத்தில், ரஹ்மானுக்கு ஓர் ஈமெயில் வந்தது. அனுப்பியிருந்தவர், இங்கிலாந்தைச் சேர்ந்த திரைப்பட இயக்குனர், பெயர், டானி பாயில்.

அப்போது டானி பாயில் இந்தியப் பின்னணியில் ஓர் ஆங்கிலத் திரைப்படத்தை இயக்கிக்கொண்டிருந்தார். அதற்கு ஏ. ஆர். ரஹ்மான் இசையமைக்கவேண்டும் என்பது அவருடைய விருப்பம்.

டானி பாயிலின் ஈமெயிலைப் படித்ததும், ரஹ்மானுக்கு என்ன பதில் அனுப்புவது என்றே தெரியவில்லை. அவர் எடுப்பது என்னமாதிரியான படம், அதில் இசைக்கு என்ன பங்கு, அதை என்னால் சரியாகச் செய்யமுடியுமா என்றெல்லாம் தெரிந்துகொள்ளாமல் எப்படிப் பதில்

சொல்வது?

சிறிது நேரம் யோசித்தபிறகு, ரஹ்மான் ஒரு முடிவுக்கு வந்தார். டானி பாயிலிடம் அவருடைய படத்தைப்பற்றிக் கூடுதல் விவரங்களைக் கேட்டு எழுதினார்.

உடனடியாக, பதில் வந்தது. 'ஸ்லம்டாக் மில்லியனர்' என்கிற தன்னுடைய லேட்டஸ்ட் திரைப்படத்தைப்பற்றியும், அதில் எப்படிப்பட்ட இசை தேவைப்படுகிறது என்பதுபற்றியும் விரிவாகப் பதில் எழுதியிருந்தார் டானி பாயில்.

அப்போதும், ரஹ்மானுக்கு முழுத் திருப்தி ஏற்படவில்லை. இன்னும் சில விவரங்களைக் கேட்டுப் பதில் அனுப்பினார்.

இந்த விஷயத்தில் ரஹ்மான் ரொம்பவும் தயங்கக் காரணம், டானி பாயில்மீது அவநம்பிக்கை இல்லை. ஏற்கெனவே அவர் கையில் எட்டு படங்கள் இருக்கிற சூழ்நிலையில், அவர் இன்னொன்றை ஒப்புக்கொண்டு நேரம் ஒதுக்குவது என்றால் மிகவும் சிரமம்.

அதுமட்டுமில்லை. ரஹ்மான் இந்தியாவில் எந்த மொழிப் படத்திற்கு இசையமைத்தாலும், அதன் இயக்குனர்கள், தயாரிப்பாளர்கள், பாடகர்கள் இங்கே சென்னைக்கு அவரைத் தேடி வந்துவிடுவார்கள். மெட்டுப் போடுவதில் ஆரம்பித்துப் பாடல் பதிவு, மிக்ஸிங், சவுண்ட் எஞ்சினியரிங் என்று சகலமும் இங்கேயேதான் நடக்கும், ரஹ்மான் அவருடைய வீட்டை விட்டு எங்கேயும் நகரவேண்டியதில்லை.

இதனால், சென்னை கோடம்பாக்கத்தில் ரஹ்மான் தங்கியிருக்கும் வீடு, பகல் நேரத்தைவிட ராத்திரியில்தான் நன்றாக விழித்திருக்கும். சுற்றியிருக்கிற மொத்த உலகமும் அசந்து தூங்கிக்கொண்டிருக்கிற அந்த நேரத்தில், ரஹ்மானும் அவருடைய குழுவினரும்மட்டும் சுறுசுறுப்பாக இயங்கிக்கொண்டிருப்பார்கள்.

ஆனால், ரஹ்மான் வெளிநாட்டுப் படங்கள், நாடகங்களுக்கு இசையமைக்கத் தொடங்கியபிறகு, இந்த ஒழுங்கு குலைந்துவிட்டது. அவர் அடிக்கடி வெளிநாடுகளுக்குப் பறந்து சென்று அங்கேயே வாரக்கணக்காகத் தங்கி கம்போஸிங் முடித்துவிட்டுத் திரும்புவது கட்டாயமாகிவிட்டது.

இப்போது டானி பாயிலின் இந்தப் படத்தை ரஹ்மான் ஒப்புக்கொண்டால், அதற்கு இன்னொரு வெளிநாட்டுப்

பயணம் தேவைப்படும். அப்போது அவர் ஏற்கெனவே ஒத்துக்கொண்டிருக்கிற (உள்நாட்டுப்) படங்களுக்கான வேலை தாமதப்படும்.

பொதுவாகவே, ரஹ்மான் தனது பாடல்கள், பின்னணி இசைக்கு ரொம்பவும் தாமதப்படுத்துகிறார் என்று அவர்மீது ஒரு பெரிய குற்றச்சாட்டு உண்டு. பல சமயங்களில், அவரது படங்களின் ரிலீஸ் தேதி ஏதோ ஒரு காரணத்துக்காகத் தள்ளிப்போனால்கூட, அந்தப் பழி ரஹ்மான்மீதுதான் விழும்.

இந்தப் பிரச்னைக்கு முக்கியமான காரணம், ரஹ்மான் சுலபத்தில் திருப்தியடையாத பேர்வழி. தான் உருவாக்கிய இசை ஒரு குறிப்பிட்ட தரத்தை எட்டியதும், ‘இது போதும்’ என்று வெளியே தள்ளிவிட்டு, அடுத்ததைக் கையில் எடுத்துக்கொள்கிற

பழக்கம் அவரிடம் இல்லை.

அதற்குப் பதிலாக, அவர் ஒரு சின்ன சிந்தனைப் பொறியில் தொடங்குவார். பிறகு அதில் இன்னும் எதையெல்லாம் சேர்த்தால் அழகாக, பொருத்தமாக இருக்கும் என்று யோசித்து ஒவ்வொரு விஷயமாகச் சேர்த்துக்கொண்டே வருவார். ஒலிப்பதிவு முடிந்தபிறகும்கூட, தனது பாடல்களில் புதுப்புது விஷயங்களைச் சேர்த்துக்கொண்டே இருப்பதுதான் அவருடைய சிறப்பம்சம்.

அதேபோல், தன்னுடைய இசையில் வாசிக்கிற வாத்தியக் கலைஞர்கள், பாடகர்கள், பாடகிகள் யாருடைய கற்பனையையும் அவர் கட்டுப்படுத்துவது கிடையாது. அவர்களுக்கு முழுச் சுதந்தரம் கொடுக்கிறார், 'இப்படிதான் பாடவேண்டும்' என்று கட்டாயப்படுத்தாமல், அவர்களுக்கு

ஒரு சின்ன யோசனையைக் கொடுத்து, அதனை அவர்கள் தங்கள் விருப்பம், திறமைக்கு ஏற்ப விரிவுபடுத்த அனுமதிக்கிறார்.

ஆனால், இப்படி யார் வேண்டுமானாலும், எதை வேண்டுமானாலும் வாசிக்கலாம், எப்படி வேண்டுமானாலும் பாடலாம் என்று ரஹ்மான் சும்மா உட்கார்ந்திருந்தால், கடைசியில் அவருடைய பாடலின் தரம் குறைந்துவிடாதா?

அங்கேதான் ரஹ்மானின் மேதைமை வெளிப்படுகிறது. வாத்தியக் கலைஞர்கள் வாசித்த பல்வேறு இசை வடிவங்களில் இருந்து தனக்கு எது தேவையோ அதைமட்டும்தான் அவர் பயன்படுத்திக்கொள்கிறார், அது அவர் கொடுத்த ஒரிஜினல் இசையாகவும் இருக்கலாம், அல்லது வாசித்தவர் அதை

இன்னும் மேம்படுத்திய வடிவமாகக்கூட இருக்கலாம்.

இதே இடத்தில் இன்னோர் இசையமைப்பாளராக இருந்திருந்தால், ’நான் எழுதியதை அப்படியே வாசிப்பதுதானே அவர்களுடைய வேலை? அவர்கள் செய்த மாற்றங்களை நான் ஏற்றுக்கொண்டால், அதன்பிறகு என்னுடைய கௌரவம் போய்விடுமே!’ என்றெல்லாம் ஈகோ பார்த்திருப்பார்கள். ரஹ்மானிடம் அந்தப் பழக்கமே கிடையாது.

அதனால்தான், தன்னுடைய முதல் படத்தில் தொடங்கி, கேஸட் / சிடி உறையில் தன்னுடன் பணியாற்றிய இசைக் கலைஞர்கள், தொழில்நுட்ப நிபுணர்களின் பெயர்களை அச்சிட்டு கௌரவப்படுத்துகிறார் ரஹ்மான். அவர் இந்தப் பழக்கத்தைத்

தொடங்கிவைத்தபிறகுதான், இன்றைக்கு எல்லோரும் அதனைப் பின்பற்றுவது கட்டாயமாகிவிட்டது.

பாடகர்கள் விஷயத்திலும், ரஹ்மான் சீனியர் ஜூனியர் என்று பார்ப்பது கிடையாது. பாடலுக்குப் பொருந்துகிற குரல் அமைந்துவிட்டால், பின்னர் எல்லாவற்றையும் அவர்களுடைய சுதந்தரத்துக்கே விட்டு, அதில் சிறந்ததை எடுத்துப் பயன்படுத்திக்கொள்கிறார்.

குறிப்பாக, புதிய பாடகர்களை அறிமுகப்படுத்துவதில் ரஹ்மானுக்கு ஆர்வம் அதிகம். அநேகமாகத் தனது ஒவ்வொரு படத்திலும் ஒன்றிரண்டு புதியவர்களையாவது வெளிச்சத்துக்குக் கொண்டுவருவதை ஒரு கட்டாய வழக்கமாகவே வைத்திருக்கிறார் ரஹ்மான்.

கடந்த பதினைந்து ஆண்டுகளில், ரஹ்மான் எத்தனை படங்களுக்கு இசையமைத்திருக்கிறார் என்கிற புள்ளி விவரத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, அவர் திரையுலகிற்கு அறிமுகப்படுத்திய பாடகர்கள், பாடகிகளின் எண்ணிக்கை மிக மிக அதிகம். அநேகமாக இந்திய இசையமைப்பாளர்களில் வேறு யாரும் அவர் அளவுக்குப் புதுமுகங்களுக்கு வாய்ப்புத் தந்திருக்கமாட்டார்கள்.

ரஹ்மான் அதிக அளவில் புதிய பாடகர்களைப் பயன்படுத்த முக்கியமான காரணம், இதன்மூலம் அவருக்கு ஒவ்வொரு பாடலையும் வித்தியாசமாகத் தோன்றச் செய்வதற்கான புதுப்புது குரல்கள் கிடைக்கின்றன. அந்த இளம் பாடகர்களுக்கும் இது ஒரு நல்ல அறிமுகமாக அமைந்துவிடுகிறது.

இன்னொரு விசேஷம், ரஹ்மான்

அறிமுகப்படுத்தும் புதுக் குரல்களெல்லாம், ஒரு படத்தில் பாடிவிட்டுக் காணாமல் போய்விடுகிறவர்களாக இருக்கமாட்டார்கள். அவர் ஒருவருக்கு வாய்ப்புத் தருகிறார் என்றால், அந்தப் பாடகர் / பாடகி நிச்சயமாகத் திறமைசாலியாகதான் இருக்கவேண்டும் என்கிற நம்பிக்கையில், மற்ற இசையமைப்பாளர்களும் அவர்களைத் தாராளமாகப் பயன்படுத்துவார்கள், இதன்மூலம் அந்தப் புதிய பாடகர்கள் விரைவில் பிரபலமான குரல்களாக வெற்றி பெற்றுவிடுவார்கள்.

இப்படி ரஹ்மானால் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னணிப் பாடகர்களின் சுருக்கமான ஒரு பட்டியல் இங்கே: சுரேஷ் பீட்டர்ஸ், ஷாகுல் ஹமீது, ஸ்ரீனிவாஸ், கார்த்திக், ஹரிணி, அனுராதா ஸ்ரீராம், நரேஷ் ஐயர், ஜி. வி. பிரகாஷ்

குமார், ப்ளேஸ், உன்னி கிருஷ்ணன், நித்யஸ்ரீ, ஓ. எஸ். அருண், ஸ்ரீராம், சின்மயி, அனுபமா, கரோலின், பென்னி தயாள், பலராம், முகேஷ், பல்லவி, வசுந்தரா தாஸ், அஸ்லாம் முஸ்தஃபா, சித்ரா சிவராமன், தேனி குஞ்சரம்மா, ஷோபா ஷங்கர்.

இதுதவிர, இன்னொரு முக்கியமான பட்டியலும் இருக்கிறது. ஹரிஹரன், சாதனா சர்கம், சுஜாதா, மின்மினி, உன்னி மேனன், பாம்பே ஜெயஸ்ரீ, ஷங்கர் மஹாதேவன், உதித் நாராயண், சுக்விந்தர் சிங், கேகே உள்ளிட்ட பல பாடகர்களைத் தமிழில் பெரும் வெளிச்சத்துக்குக் கொண்டுவந்த பெருமை ரஹ்மானுக்கு உண்டு.

இதனால், இன்றைக்கும் தமிழிலோ, ஹிந்தியிலோ பாடிக்கொண்டிருக்கிற, அல்லது வாய்ப்புத் தேடிக்கொண்டிருக்கிற

பாடகர்களின் பெரிய கனவு, ரஹ்மான் இசையில் நாலே நாலு வரி கோரஸ் பாடினால்கூடப் போதும். அந்த வெளிச்சத்தை வைத்து மளமளவென்று முன்னேறிச் சென்றுவிடலாம்.

இப்படி ரஹ்மானைத் தேடி வருகிற பாடகர், பாடகிகள் ஒருபக்கமிருக்க, அவரும் தொடர்ந்து புதுக் குரல்களைத் தேடிக்கொண்டிருக்கிறார். திறமைசாலிகள் எங்கே தென்பட்டாலும் அவர் விட்டுவைப்பதில்லை.

உதாரணமாக, பல ஆண்டுகளுக்குமுன்னால் ஒரு கல்லூரி விழாவுக்கு நடுவராகச் சென்றிருந்தார் ஏ. ஆர். ரஹ்மான். அங்கே பாடிய ஓர் இளம் பாடகியின் குரல் அவரை மிகவும் ஈர்த்தது.

உடனடியாக, அந்தப் பெண்ணைத்

தன்னுடைய ஸ்டூடியோவுக்கு அழைத்துக் குரல் பரிசோதனை செய்தார் ரஹ்மான். விரைவில், அவர் ஏ. ஆர். ரஹ்மான் இசையில் கர்நாடக சங்கீத அடிப்படையில் அமைந்த ஒரு நல்ல பாடலைப் பாடி அறிமுகமானார்.

அந்தப் பாடல், 'நிலாக் காய்கிறது' (இந்திரா). ரஹ்மானால் அறிமுகப்படுத்தப்பட்டுப் பின்னர் மிகப் பெரிய வெற்றி பெற்ற அந்தப் பாடகி, ஹரிணி!

இதேபோல், வெவ்வேறு தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் பாடி, அதன்மூலம் ரஹ்மானால் அடையாளம் காணப்பட்டுத் திரையிசைக்கு அறிமுகமான இரண்டு பேர், இன்றைக்குத் தமிழிலும் ஹிந்தியிலும் பிரபலமான பாடகர்களாக இருக்கிறார்கள்: நரேஷ் ஐயர் மற்றும் சின்மயி!

இப்படி இன்னும் பல உதாரணங்களை அடுக்கிக்கொண்டே போகலாம். ஒருகாலத்தில், தமிழ்ப் பாடல்களில் ஏழெட்டுக் குரல்கள்மட்டும் மாறி மாறிக் கேட்டுக்கொண்டிருந்த நிலைமை இன்றைக்கு மாறியிருக்கிறது, இசையமைப்பாளர்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் புதுப்புதுக் குரல்களைத் தேடிப் பிடித்து அறிமுகப்படுத்தவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள் என்றால் அதற்கு ரஹ்மான்தான் முன்னோடி என்பதை யாரும் மறுக்கமுடியாது.

இதே காரணத்துக்காக, ரஹ்மான்மீது ஒரு குற்றச்சாட்டும் முன்வைக்கப்படுகிறது: புதுக் குரல்களை அறிமுகப்படுத்துகிறேன் பேர்வழி என்று, சில சமயங்களில் தமிழ் தெரியாத பாடகர்களைக்கூடப் பிரபலப்படுத்திவிடுகிறார். அவரைப்

பார்த்து மற்ற இசையமைப்பாளர்களும் இதே தவறைச் செய்கிறார்கள். இதனால் நடக்கிற தமிழ்க் கொலைக்கெல்லாம் ரஹ்மான்தானே பொறுப்பு?
இந்தக் கேள்விக்கு இன்றுவரை ஏ. ஆர். ரஹ்மான் சரியான பதில் சொல்லவில்லை.

தமிழ்த் திரைப் பாடல்களில் நல்ல கவிதை வரிகளுக்கு மரியாதை கொடுத்தவர் என்பதற்காக ரஹ்மானை நிச்சயம் பாராட்டவேண்டும். ஆனால் அதேசமயம், தொண்ணூறுகளின் மத்தியில் தொடங்கி, தமிழ்ப் பாடல்களின் உச்சரிப்புத் தரம் மிக மோசமாகப் போனதற்கும் அவரே முக்கியக் காரணமாக இருந்திருக்கிறார் என்பதும் கசப்பான உண்மை.

போகட்டும். நாம் எங்கேயோ தொடங்கி, வேறு எங்கேயோ வந்து

சேர்ந்துவிட்டோம். இப்போது மறுபடியும் டானி பாயிலின் ’ஸ்லம்டாக் மில்லியனர்’க்குத் திரும்பிப் போகலாமா?

டானி பாயிலின் அந்த முதல் மின்னஞ்சலில் தொடங்கி, ஏ. ஆர். ரஹ்மானும் அவரும் மாறி மாறி ஈமெயில் அனுப்பிக்கொண்டிருந்தார்களேதவிர, ரஹ்மான் அந்தப் படத்துக்கு இசையமைக்கப்போகிறாரா, இல்லையா என்பது இன்னும் முடிவாகவில்லை.

கடைசியாக, அவர்கள் இருவரும் நேரில் சந்தித்துப் பேசுவதாக முடிவெடுத்தார்கள். இதற்காக அவர்கள் தேர்ந்தெடுத்த இடம், மும்பை.

’ஸ்லம்டாக் மில்லியனர்’ படத்தின் மூலக் கதையே, மும்பையைப் பின்னணியாகக் கொண்டதுதான். அங்குள்ள சேரிப் பகுதியைச் சேர்ந்த ஓர் இளைஞன்,

‘கௌன் பனேகா க்ரோர்பதி’மாதிரியான ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சியில் கலந்துகொள்கிறான், எல்லாக் கேள்விகளுக்கும் சரியான பதில் சொல்லி ஜெயித்துவிடுகிறான்.

வழக்கமாக, நிறையப் படித்தவர்கள், அதிபுத்திசாலிகள்கூட, அந்த நிகழ்ச்சியில் கேட்கப்படுகிற கேள்விகளைச் சந்திக்கமுடியாமல் திணறுவார்கள். ஆனால், ஒரு சேரிப் பையன் இப்படி அநாயாசமாக ஜெயிக்கிறான் என்றால், இதில் ஏதோ தில்லுமுல்லு நடந்திருக்கிறது என்று நிகழ்ச்சித் தயாரிப்பாளர்களுக்குச் சந்தேகம், நேராகப் போலீஸுக்குச் சென்றுவிடுகிறார்கள்.

போலீஸ் அந்தப் பையனை அடித்து உதைத்து விசாரிக்கிறது. ஆனால் அவன், ‘நான் எந்த ஏமாத்து வேலையும்

செய்யலை’ என்று பிடிவாதம் பிடிக்கிறான்.

அப்படியென்றால், அவனுக்கு எப்படி எல்லாக் கேள்விகளுக்கும் பதில் தெரிந்தது? இந்தப் புதிருக்கான விடை தேடி, அவனுடைய வாழ்க்கையை விவரிக்கிற படம்தான் ‘ஸ்லம்டாக் மில்லியனர்’.

விகாஸ் ஸ்வரூப் எழுதிய ‘Q & A’ என்கிற நாவலின் மைய முடிச்சைமட்டும் எடுத்துக்கொண்டு, அதற்குப் பிரமாதமான ஒரு திரைக்கதை அமைத்திருந்தார் சைமன் ப்யூஃபாய். ஏற்கெனவே பெரும்பகுதிப் படப்பிடிப்பு முடிந்துவிட்டது.

இதையெல்லாம் இயக்குனர் டானி பாயில் பொறுமையாக விவரித்தபோது, முதன்முறையாக ஏ. ஆர். ரஹ்மானுக்குச்

சுவாரஸ்யம் பிறந்தது. இந்தப் படம்முழுக்க இசை ஒரு முக்கியக் கதாபாத்திரமாக இருக்கும், அதற்குத் தன்னால் நல்ல பங்களிப்பை வழங்கமுடியும் என்று அவருக்குத் தோன்றியது.

’நீங்க இதுவரைக்கும் எடுத்த படத்தை நான் பார்க்கலாமா?’ ஆவலுடன் கேட்டார் ரஹ்மான்.

’ஓ, தாராளமா’ என்றார் டானி பாயில். உடனடியாக, ரஹ்மான் படத்தைப் பார்க்க ஏற்பாடு செய்யப்பட்டது.

அந்த முதல் பார்வையிலேயே, டானி பாயிலின் திரை மொழி ரஹ்மானை மிகவும் கவர்ந்துவிட்டது. ‘ஸ்லம்டாக் மில்லியனர்’க்கு இசையமைக்க ஒப்புக்கொண்டுவிட்டார்.

அப்படியானால், ஏற்கெனவே ரஹ்மான் கையில் இருக்கும் அந்த எட்டு படங்கள்?

வேறு வழியே இல்லை. அந்த எட்டில் ஆரம்ப நிலையில் இருந்த ஒரு படத்தை நிராகரித்துவிட்டு, டானி பாயிலின் படத்துக்காக நேரம் ஒதுக்கினார் ரஹ்மான்.

’ஸ்லம்டாக் மில்லியனர்’ படத்தில், ஃப்ளாஷ்பேக் உத்தி மிகச் சிறப்பாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது. ஜமால் மாலிக் என்கிற கதாநாயகனுடைய வாழ்க்கையின் வெவ்வேறு பருவங்களை, சிறு சிறு காட்சித் துண்டுகளாகக் காண்பித்து, ஒரு வலுவான இழையில் அத்தனையையும் இணைத்துத் தந்ததுதான் அந்தத் திரைக்கதையின் வெற்றி.

இதனால், படத்தின் வெவ்வேறு பகுதிகளுக்கு, ரஹ்மானும்

வெவ்வேறுவிதமான இசையைத் தரவேண்டியிருந்தது. ஆங்கிலப் படம்தானே என்பதற்காக முழுக்க முழுக்க மேற்கத்திய இசையைத் தராமல், அதில் இந்தியத்தன்மையும், தன்னுடைய முத்திரையும் இருக்கும்படி பார்த்துக்கொள்வது கூடுதல் சவால்.

முதலாவதாக, படத்தில் வருகிற ஒவ்வொரு பாடல், பின்னணி இசையும் எப்படி அமையவேண்டும் என்பதைத் தானே இசையமைத்துப் பாடிப் பதிவு செய்துகொண்டார் ரஹ்மான். இந்தப் பாடல் வடிவங்களை ஒவ்வொன்றாக இயக்குனர் டானி பாயிலுக்கு ஈமெயில்மூலம் அனுப்பிவைத்தார்.

டானி பாயிலுக்குத் தன்னுடைய படத்தின் இசை எப்படி அமையவேண்டும் என்பதுபற்றித் தெளிவான ஒரு கற்பனை இருந்தது.

அந்தக் கற்பனையுடன் ரஹ்மானின் படைப்புகள் பொருந்திப்போகிறதா என்பதைமட்டுமே அவர் கவனித்தார். இந்த அடிப்படையில் அவர் சொன்ன விமர்சனங்கள், தேர்ந்தெடுத்த யோசனைகளைத் தனியே தொகுத்துவைத்தார் ரஹ்மான்.

இப்படி மொத்தப் படத்தின் இசையையும் ஈமெயில்வழியே அலசி ஆராய்ந்தபிறகு, ரஹ்மான் இங்கிலாந்து புறப்பட்டார். அங்கே அடுத்த மூன்று வாரங்களுக்கு அவரும் டானி பாயிலும் 'ஸ்லம்டாக் மில்லியனர்'க்கான பாடல்கள், பின்னணி இசையை இறுதி வடிவத்துக்குக் கொண்டுவந்தார்கள்.

ரஹ்மானைப் பொறுத்தவரை, அதோடு அந்தப் படத்தில் அவருடைய பங்கு முடிவடைந்துவிட்டது. அவர் தனது மற்ற படங்களைக் கவனிக்கச் சென்றுவிட்டார்.

2008 ஆகஸ்ட் 30ம் தேதி, டெலுரைட் திரைப்பட விழாவில் 'ஸ்லம்டாக் மில்லியனர்' முதன்முறையாகத் திரையிடப்பட்டது. படம் பார்த்துவிட்டு வெளியே வந்தவர்கள், 'நல்லா இருக்கு' என்கிற ஒற்றை வரி விமர்சனத்தோடு நிறுத்திக்கொண்டார்கள்.

ஒரு வாரம் கழித்து, கனடாவின் டொரன்டோ திரைப்பட விழாவில் 'ஸ்லம்டாக் மில்லியனர்' திரையிடப்பட்டது. அங்கேதான், இந்தப் படத்தைப்பற்றிய பரபரப்பான பேச்சுகள் தொடங்கின.

டொரன்டோ திரைப்பட விழாவுக்கு வந்த பார்வையாளர்கள், அங்கே திரையிடப்பட்ட படங்களிலேயே மிகச் சிறந்ததாக 'ஸ்லம்டாக் மில்லியனர்'ரைத் தேர்ந்தெடுத்தார்கள். இந்தச் செய்தி

ஊடகங்களில் பரவலாக வெளியாகவும் ரசிகர்களிடையே படத்துக்கான எதிர்பார்ப்பு அதிகரித்தது.

ஒரு மாதம் கழித்து, 'ஸ்லம்டாக் மில்லியனர்' அமெரிக்கத் தியேட்டர்களில் வெளியானது. ஒரு பிரிட்டிஷ்காரரால் எடுக்கப்பட்ட இந்த இந்தியக் கதையை, அமெரிக்கர்கள் ரசித்துப் பார்த்தார்கள்.

ஆனால், இந்தப் படத்தின் வணிகரீதியிலான வெற்றியைவிட, எல்லாத் தரப்பு விமர்சகர்களிடமும் அது பெற்ற பாராட்டுதான் மிக முக்கியமானது. 'இந்த வருடத்துக்கு இதுதான் படம், இனிமேல் வரப்போகிற எல்லா விருதுகளும் இந்தப் படத்துக்குதான்' என்று ரசிகர்களும் நிபுணர்களும் ஒருமனதாகத் தீர்ப்பு வழங்கிவிட்டார்கள்.

இதற்கு முக்கியமான காரணம், ‘ஸ்லம்டாக் மில்லியனர்’ படத்தின் கதையில் ஏகப்பட்ட சோகம், துயரம், வறுமை நிரம்பிக் கிடந்தாலும், அந்தப் படம் சொல்கிற செய்தி, டானி பாயில் அதனைக் காட்சிப்படுத்தியிருந்த விதம், பாடல்கள் என எல்லாமே தன்னம்பிக்கை உணர்வைத் தூண்டுவதாக இருந்தது. இதுபோன்ற ‘Feel Good’ படங்கள் எல்லோருக்கும் பிடித்துப்போவதில் ஆச்சர்யம் இல்லை.

முதலில் அமெரிக்கா, பிறகு ஆஸ்திரேலியா, இங்கிலாந்து என ‘ஸ்லம்டாக் மில்லியனர்’ படம் திரையிட்ட இடங்களிலெல்லாம் நல்ல வரவேற்பைப் பெற்றது. பல சர்வதேச விருதுகளுக்குப் பரிந்துரைக்கப்பட்டது.

இந்தியப் பின்னணியில் அமைந்த ஒரு கதை, நம் ஊர்க் கலைஞர்களின்

நடிப்பு, தொழில்நுட்பப் பங்களிப்புடன் சர்வதேச அளவில் அதிர்வுகளை எழுப்பிக்கொண்டிருக்கிறது. அதன்பிறகு, நம் ஊர் மீடியாக்கள் சும்மா இருக்குமா? இங்கேயும் ‘ஸ்லம்டாக் மில்லியனர்’ பரபரப்பு தொற்றிக்கொண்டது.

ஆரம்பத்தில் இந்தப் படத்தை வெகுவாகப் புகழ்ந்த வட இந்தியப் பத்திரிகைகளும் தொலைக்காட்சிகளும், சட்டென்று நிறம் மாறி, இதுதொடர்பான பல புதிய சர்ச்சைகளுக்கு முக்கியத்துவம் தர ஆரம்பித்தன. ‘ஸ்லம்டாக் மில்லியனர் இந்தியர்களை அசிங்கப்படுத்துகிறதா? நம்முடைய வறுமையை உலகத்திற்குக் காட்சிப்படுத்திக் காசு பண்ணுகிறதா?’ என்கிற கேள்விகள், விவாதங்கள் நாடுமுழுக்க எழுந்தன.

வேடிக்கையான விஷயம், இந்த விவாதங்களில் பங்கு பெற்ற பலர்,

இந்தப் படத்தைப் பார்த்திருக்கவே வாய்ப்பில்லை. காரணம், ‘ஸ்லம்டாக் மில்லியனர்’ இன்னும் இந்தியாவில் வெளியாகியிருக்கவில்லை.

ஒருபக்கம் ‘ஸ்லம்டாக் மில்லியனர்’ காட்சிப்படுத்தும் இந்தியா உண்மையானதுதானா, அல்லது மிகைப்படுத்தப்பட்டதா என்று எல்லோரும் குழம்பிக்கொண்டிருக்கையில், இன்னொருபக்கம் நிஜமாகவே இந்தப் படத்தின்மூலம் இந்தியர்கள் பெருமைப்படுவதற்கான வாய்ப்புகள் வர ஆரம்பித்தன.

காரணம், சர்வதேசத் திரையுலகின் மிக முக்கியமான கௌரவங்களில் ஒன்றான ‘கோல்டன் க்ளோப்’ விருதுக்கு ’ஸ்லம்டாக் மில்லியனர்’ படம் பரிந்துரைக்கப்பட்டது. அதுவும், ஒன்றுக்கு நான்கு பிரிவுகளில்:

சிறந்த படம், சிறந்த இயக்கம், சிறந்த திரைக்கதை, சிறந்த இசை.

மற்ற மூன்று விருதுகளைவிட, 'சிறந்த இசை'யில்தான் இந்திய மீடியாவின் கவனம் குவிந்தது. காரணம், ஏ. ஆர். ரஹ்மான் கோல்டன் க்ளோப் விருதை வென்றுவிட்டால், இந்த கௌரவத்தைப் பெறும் முதல் இந்தியர் என்கிற சாதனையைப் படைப்பார்.

உடனடியாக, ரஹ்மானால் இந்த விருதைப் பெறமுடியுமா என்கிற விவாதங்கள் நம் ஊர் மீடியாக்களில் தொடங்கிவிட்டன. அதுவரை 'ஸ்லம்டாக் மில்லியனர்' பாடல்களைக் கேட்டிருக்காதவர்கள்கூட, கேஸட், சிடி தேடி அலைய ஆரம்பித்தார்கள்.

2009 ஜனவரி 11ம் தேதி, கோல்டன் க்ளோப் விருதுகள் அறிவிக்கப்பட்டன.

பரிந்துரை செய்யப்பட்ட நான்கு பிரிவுகளிலும் 'ஸ்லம்டாக் மில்லியனர்' வெற்றி பெற்றது.

ஏ. ஆர். ரஹ்மானுக்குக் கிடைக்கிற முதல் பெரிய சர்வதேச கௌரவம் இது. 'கோல்டன் க்ளோப்' பெறும் முதலாவது இந்தியர் என்பது அவருக்குக் கூடுதல் பெருமை.

கோல்டன் க்ளோப் விருதுச் செய்தி வெளியானதுமே, இந்தியாவில் ரஹ்மானுக்கு வாழ்த்துகள் குவிய ஆரம்பித்தன, அவருடைய குடும்பத்தினர், அவரோடு பணிபுரிந்தவர்கள், நண்பர்கள் தொடங்கி, திரைத்துறைப் பிரபலங்கள், அரசியல்வாதிகள்கூட அவரைப் பாராட்டில் நனைத்தார்கள்.

அதோடு நிறுத்தவில்லை, 'ரஹ்மானின் திறமைக்கு கோல்டன் க்ளோபெல்லாம்

சாதாரணம், அடுத்து ஆஸ்கர் வாங்கப்போகிறார், பாருங்கள்' என்று பலரும் கருத்துத் தெரிவித்திருந்தார்கள்.

அதற்குமுன்னால், 'பாஃப்டா' என்று செல்லமாக அழைக்கப்படுகிற 'British Academy Of Film And Television Arts' விருதுகள் அறிவிக்கப்பட்டன. அங்கேயும் 'ஸ்லம்டாக் மில்லியனர்'க்காகச் சிறந்த இசையமைப்பாளர் விருது பெற்றார் ஏ. ஆர். ரஹ்மான்.

இதைத் தொடர்ந்து, ஏ. ஆர். ரஹ்மானுக்கு ஆஸ்கர் கிடைக்குமா என்கிற கேள்வி இன்னும் தீவிரமடைந்தது. தமிழர்கள்மட்டுமின்றி, ஒட்டுமொத்த இந்தியாவும் ரஹ்மானுக்காகப் பிரார்த்தனை செய்ய ஆரம்பித்தது.

அந்த ஆண்டு ஆஸ்கர் விருதுக்கான

பரிந்துரைப் பட்டியல் வெளியானபோது, ‘ஸ்லம்டாக் மில்லியனர்’ மொத்தம் பத்து பரிந்துரைகளை வென்றிருந்தது. அதில் மூன்று ஏ. ஆர். ரஹ்மானுக்கு:

- சிறந்த இசையமைப்பாளர்
- சிறந்த பாடல் – ஜெய் ஹோ
- சிறந்த பாடல் – ஓ, சாயா

அடுத்த சில நாள்களுக்கு, அனைத்து மொழி இந்தியத் தொலைக்காட்சிகளிலும் ரஹ்மானின் ‘ஜெய் ஹோ’தான் திரும்பத் திரும்ப ஒலித்துக்கொண்டிருந்தது. இந்தியர்களின் பல ஆண்டுக் கனவான ஆஸ்கர், இந்தமுறை ரஹ்மானின் கைக்கு எட்டிவிடவேண்டும் என்கிற எதிர்பார்ப்பில் அட்வான்ஸ் வாழ்த்துகள் குவிந்தன.

அந்தக் கனவு, 2009 பிப்ரவரி 22ம் தேதி நிஜமானது. சிறந்த இசையமைப்பாளர்,

சிறந்த பாடல் (ஜெய் ஹோ) என இரண்டு ஆஸ்கர் விருதுகளை வென்று சாதனை படைத்தார் ஏ. ஆர். ரஹ்மான்.

'ஸ்லம்டாக் மில்லியனர்' நிச்சயமாக ரஹ்மானின் அதிஉன்னதமான படைப்பு அல்ல. அந்தப் படத்தில் இடம்பெற்றதைவிடச் சிறந்த பாடல்களை, பின்னணி இசையை வேறு பல இந்தியப் படங்களுக்காக அவர் கொடுத்திருக்கிறார். ஆனால், அந்தப் படங்கள் எவையும் ஆஸ்கருக்குத் தகுதி பெற முடியாதவை.

இதனால், ரஹ்மானுக்குக் கிடைத்த இரட்டை ஆஸ்கர் விருதுகளை, அவருடைய இத்தனை வருடத் தேடலுக்குத் தரப்பட்ட கௌரவமாகவே கருதவேண்டும். எதிலும் திருப்தியடையாமல், மேலே மேலே போய்க்கொண்டிருக்கவேண்டும், பழையதையே தொடர்ந்து

செய்துகொண்டிருக்காமல் வாழ்நாள்முழுக்க மாணவனாக இருக்கவேண்டும், வெற்றி, தோல்வியைப்பற்றிக் கவலைப்படாமல் வித்தியாசமான உத்திகளை முயன்று பார்க்கவேண்டும் என்று அவர் தனக்குத் தானே வகுத்துக்கொண்ட ஒழுக்க நெறிகள்தான், அவரை இந்த உயரத்துக்கு அழைத்துவந்திருக்கின்றன!

முக்கியமாக, இந்தியச் சூழலில் ரஹ்மானின் வெற்றிக் கதை மிக முக்கியமானது. ஒரு நடுத்தரக் குடும்பத்தில் பிறந்தவர், சூழ்நிலை காரணமாக ஏழைமையில் தள்ளப்பட்டவர், மிக இளம் வயதிலேயே குடும்பப் பொறுப்பைத் தலையில் சுமக்க நேர்ந்தவர், படிப்பைப் பாதியில் நிறுத்தியவர், உழைப்பு ஒன்றைமட்டும் தனது முதலீடாக நினைத்தவர், மதம் மாறியவர், அதுவும் பெரும்பான்மை

மதத்திலிருந்து சிறுபான்மை மதத்துக்கு மாறியவர், நல்ல சம்பளத்தில் செழிப்பாக வாழ்ந்துகொண்டிருந்தபோது, அதைவிடக் குறைந்த வருமானம் கொண்ட, ஆனால் நல்ல முன்னேற்றச் சாத்தியம் உள்ள இன்னொரு துறைக்குத் தைரியமாக மாறியவர், சேணம் கட்டிய குதிரைபோலத் தனது தொழில்தவிர வேறெதிலும் கவனம் செலுத்தாமல் முழு முனைப்போடு பணிபுரிந்தவர், தனது துறையில் மற்ற எல்லோரையும்விட வித்தியாசமாகச் சிந்தித்து முன்னேறியவர் … இப்படிப் பலவிதங்களில் ரஹ்மான் புதிய தலைமுறை இந்தியர்களின் பிரதிநிதியாகவே தோன்றுகிறார்.

ரஹ்மானின் வெற்றி, கிட்டத்தட்ட இதே சூழ்நிலையில் வாழ்ந்துகொண்டிருக்கிற பல லட்சம் இந்திய இளைஞர்களுக்குப் பெரும் ஊக்கமாக அமையப்போகிறது. அவர் பெற்ற இரட்டை ஆஸ்கர்

விருதுகளால் இந்தியாவுக்குக் கிடைக்கப்போகும் மிகப் பெரிய நன்மை, இதுதான்!

‘ஸ்லம்டாக் மில்லியனர்’ படம், ‘Feel Good Story Of The Decade’ என்று பாராட்டப்பட்டது. அந்த வாசகம், ஏ. ஆர். ரஹ்மானின் வாழ்க்கைக்கும்கூடப் பொருந்தும்!

முன்னோர் பதிப்பகம்

